www.padippakam.com

# குமாரனுக்குக் கடிதங்கள்




செ. கணேசலிங்கன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இரு சிந்தனைக் கடிதங்கள்

## குமரனுக்குக் கடிதங்கள்
## அறிவுக் கடிதங்கள்

செ. கணேசலிங்கன்

விற்பனை உரிமை :

பாரிநிலையம்
184, பிராட்வே - சென்னை - 600108

படிப்பகம்

www.padippakam.com

இரு சிந்தனைக் கடிதங்கள்
குமரன் முதற்பதிப்பு : டிசம்பர் 1995
(C)

விலை ரூ. 32-00

Title : TWO LETTERS For THOUGHT
by SE. Ganesalingan.
Paper : 10.5 Kg. Creamwove,
Cover : Duplex Board.
Price : Rs. 32-00

KUMARAN PUBLISHERS, 79, 1st Street,
Kumaran Colony, Vadapalani, Madras-26.

வெளியீடு : குமரன் பதிப்பகம், 79, 1-வது தெரு,
குமரன் காலனி, வடபழநி, சென்னை-26.

அச்சிட்டோர் : சித்ரா பிரிண்டோ கிராபி,
24, பொன்னுசாமி தெரு, சென்னை-14.

படிப்பகம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | சில சிந்தனைகள் | 5 |
| 1. | பள்ளியில் இருமுனைகள் | 17 |
| 2. | உற்பத்திச் சாதனங்களின் மறு உற்பத்தி | 20 |
| 3. | உற்பத்திச் சக்தியின் மறு உற்பத்தி | 23 |
| 4. | ஒடுக்குமுறையின் ஆரம்பம் | 26 |
| 5. | கருத்தியல் என்றால் என்ன? | 29 |
| 6. | மேல்மட்ட அமைப்பு | 31 |
| 7. | அரசியல் ஆதிக்கமும் அரசுயந்திரமும் | 34 |
| 8. | அரசுயந்திரம் | 37 |
| 9. | கல்வி | 40 |
| 10. | மதம் | 43 |
| 11. | அரசியல் | 46 |
| 12. | சட்டம் | 49 |
| 13. | குடும்பம் | 52 |
| 14. | மக்கள் தொடர்புச் சாதனங்கள் | 56 |
| 15. | கலை, இலக்கியம் | 59 |
| 16. | விளையாட்டு | 62 |
| 17. | தொழிசங்கம் | 65 |
| 18. | சாதியமைப்பு | 68 |
| 19. | சித்தாந்தம் | 72 |
| 20. | விஞ்ஞானப் பார்வை | 76 |

www.padippakam.com

இளமைக் காலப் போராட்டங்
களில் என்னோடு தோளோடு
தோளாக நின்றுதவி மறைந்த
நண்பர் குலவீரசிங்கம் அவர்கட்டு

படிப்பகம்

www.padippakam.com

# கடிதங்களைக் கற்றவர்களுக்குச் சில சிந்தனைகள்

தொழிலாளிகள், விவசாயிகள், மாணவர்களுக்கு விஞ்ஞான சோசலிசம் பற்றிச் சொல்லித்தரும் பணியில் நீண்ட காலமாக ஈடுபட்டுள்ளேன். பெரும்பாலும் தொடர்ந்து பல வகுப்புகளில் பாடம் சொல்லித்தரும் வாய்ப்பு கிட்டுவதில்லை. ஒரே தடவையில், சில மணி நேரங்களில் பயிற்ற வேண்டிய நிலையே பெரும்பாலும் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் தொடர்ந்து கற்பதற்கு ஆர்வமூட்டும் வகையில் சொல்லித் தருதல் வேண்டும்.

இதற்கு மார்க்சியத்தின் பிரதானப் பகுதிகளைத் தேர்ந்தெடுப்பது, அவற்றை எளிமையாகக் கூறுவது, ஆர்வமூட்டும் வகையில் சுவைபடச் சொல்வது அத்தியாவசியமாகிறது.

'குந்தவிக்குக் கடிதங்கள்' என்ற தலைப்பில் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தைச் சென்ற ஆண்டில் அறிமுகம் செய்தேன். மார்க்ஸ் நூற்றாண்டு நினைவு நூலாக அதை வெளியிட்டேன். அந்நூல் தந்த வரவேற்பே இச்சிறு நூலையும் எழுதத் தூண்டியது. இந்நூலையும் அறிஞர் மார்க்சின் நூற்றாண்டு நினைவின் இரண்டாவது படைப்பாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மனித வரலாறு ஓரளவு சுவையான பாடமே. இந்நூலில் கூற முனைந்த வன்முறை அரசு, கருத்தியல்கள் சார்ந்த அரசு யந்திரம், மறு உற்பத்தி ஆகியவற்றை ஆரம்பத்தில் கிரகிப்பதில் சிறிது சிரமம் ஏற்படலாம். சிந்தனை, திரும்பக் கற்றல், மார்க்சியம் கற்றவர்களோடு

www.padippakam.com



கலந்து பேசுதல், விவாதித்தல், மார்க்சியக் கருத்துகள் சார்ந்த நூல்களைத் தேடிக் கற்றல் ஆகியன தெளிவு பெறப் பயன்தரும். கற்கக் கற்கச் சிந்தனை மேலும் புத்தொளி பெறும். 'குந்தவிக்குக் கடிதங்கள்' என்ற நூலையும் கற்ற பின் இந்நூலைப் படிக்க முயல்வது நல்லது என்று கருது கிறேன்.

இந்நூலிலுள்ள கடிதங்கள் யாவையும் படித்த பின்னரே இம்முன்னுரையைத் தொடர்ந்து படிக்கும்படியும் வேண்டு கிறேன்.

கருத்தியல்கள் **(Ideologies)** எமது சிந்தனையில் எத்தனை ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதைக் கடிதங் களைப் படித்த பின்னரே நன்கு அறிந்து கொள்வீர்கள்.

புராதன சமுதாயத்தில் உற்பத்தி குன்றியிருந்தது, கருத்தியல்கள் சிந்தனையைச் சிறைப்பிடித்து ஆதிக்கம் செலுத்தின. சுதந்திரமற்ற சிந்தனையில் பொய்மைகள் படர்ந்தன. ஆயினும் மனிதனது பொருளாதாரத் தேவை களே கருத்தியல்களை மீறி உற்பத்தியை உயர்த்தி வந்தன என ஏங்கெல்ஸ் கூறியுள்ளார்.

இங்கு மேலும் ஒன்றை நாம் உன்னிப்பாக எண்ணிப் பார்க்க வேண்டும். மனிதன் இத்தனைக் கருத்தியல்களின் தாக்கத்திலிருந்தும் விடுபட்டுப் புரட்சிகரச் சிந்தனையை, சுதந்திரச் சிந்தனையைக் கடைப்பிடித்திருப்பின் இன்னும் எத்தனை வேக வளர்ச்சி பெற்றிருக்க முடியும்?

உலகின் பெரும்பாலான மக்கள் உணவு, நீர், உடை, இருப்பிடம் போன்ற அத்தியாவசிய அடிப்படைத் தேவை களுக்காக அல்லற்படும் போதும் உலகத்தை அழிக்கவல்ல குண்டுகளும், யுத்தத் தளவாடங்களும், கோள் ஆராய்ச்சி களுமே அவசியம் என உற்பத்தி நடைபெறுகிறது. துன்பப் படுபவர்களுக்கு மதமும் முன்பிறப்பும் பாவங்களும் சோம்ப லும் காரணம் எனக் கருத்தியல் காரணங்கள் கூறப்படுகின்

படிப்பகம்

www.padippakam.com



றன. நீர், நிலம், சில உற்பத்திக் கருவிகளும் பெரும் பாலான மக்களுக்குக் கிடைக்காத வகையில் அரசுகள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு விஞ்ஞானப் பூர்வமற்ற கருத்தியல் விளக்கங்களைக் கூறிக்கொண்டிருக்கின்றன. உயிரற்ற மூலதனமே மக்களை ஆட்சி செலுத்துவதாக உள்ளது. அது வளர்ச்சியடைவதற்கே உற்பத்தி. மறு உற்பத்தி நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. மனிதனது புரட்சிகர அரசியல் சிந்தனை தலைமை தாங்கும் வரை மனித இனம் மூலதனத்தை ஆளும் சிறுபான்மையினருக் காக உழைத்துக்கொண்டேயிருக்கும், இதைக் கருத்திற் கொண்டுபோலும்.

''புரட்சிகர அரசியல், பொருளாதாரத்திற்கு முன்னோடியாக இருத்தல் வேண்டும். வேறுவிதமாக விவாதிப்பது மார்க்சியத்தின் முதலெழுத்துகளையே மறுப்பதாகும்'' என ஏங்கெல்ஸ் விஞ்ஞான சோசலிசம் பற்றிக் கூறும்போது குறிப்பிட்டுள்ளார்.

**மா**ர்க்ஸ் பொருளியல் வாழ்வைத் தீர்மானிக்கும் மேல் மட்ட அமைப்புபற்றிக் கூறும்போது 'அரசியல்' சட்டம் சார்ந்தவையும் கருத்திலும் என்று கூறினார். பின்னர் ஏங்கெல்ஸ் கருத்தியலை விரிக்கும்போது 'சித்தாந்தம், மதம், இலக்கியம், கலை முதலியன' என விவரித்தார். ஸ்டாலினும் இவற்றை மட்டுமே குறிப்பிட்டார். 'முதலியன' என்பவற்றில் கல்வி, குடும்பம், தொடர்புச் சாதனங்கள், விளையாட்டுகள், தொழிற்சங்கம், சாதி ஆகியன இக்கடிதங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

அடிப்படை அமைப்பு, மேல்மட்ட அமைப்பு ஆகிய இரண்டுக்கும் இடையில் உள்ள தன்னியக்கத் தொடர்பு பற்றி நீண்ட காலமாகவே மார்க்சிய ஆரம்பப் பாடங்களில் சொல்லி வந்தேன். விபரமாக, இவற்றை எளிமையாக விளங்கக் கூடிய முறையில் சிறு நூலொன்று வெளியிடும் எண்ணம் நெடுங்காலமாகவே என்னுள் இருந்தது. அதற்காகப் பல மார்க்சிய அறிஞர்களது விளக்க நூல்

படிப்பகம்

www.padippakam.com



களை, கட்டுரைகளைப் படித்தேன். பலருடன் கலந்து பேசியுள்ளேன். ஆயினும் பிரெஞ்சுப் பேராசிரியர் அல்தூசர் என்பவர் எழுதிய 'கருத்தியலும் அரசும்' என்ற கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. அவர் கூறிய கருத்தியல்கள், அரசு, மறு உற்பத்தி ஆகியவற்றை ஒட்டியே இக்கடிதங் களையும் எழுதியுள்ளேன்.

மார்க்ஸ் கண்ட இயங்கியல் என்பது இயற்கை, சமூகம், சிந்தனைகளின் தொடர்ந்த இயக்கத்தையும் அவற்றிடை ஏற்படும் முரண்பாடுகளையும் அடிப்படை யாகக் கொண்டது. சமூக மாற்றம் ஏற்படும்போது சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவற்றை மறுப்பவர்கள் மார்க்சின் இயக்கவியல் பொருள்முதல் வாதத்தை மறுப்பவர்களாவர்.

இன்று பத்திரிகைகள், ரேடியோ, டி. வி. ஆகிய மக்கள் தொடர்புச் சாதனங்கள் கருத்தியலாக, அரசின் ஊதுகுழல் களாக மக்கள் சிந்தனையில் செலுத்தும் ஆதிக்கத்தை நாம் நடைமுறை மூலம் காண்கிறோம். இதே போலவே புதிதாகச் சிலவற்றை இன்றைய மார்க்சிய அறிஞர்கள் கூறுபவற்றைக் கடிதங்களில் விரித்துள்ளேன்.

புரட்சிகள் நடைபெற்ற நாடுகளில் அக்காலங்களில் மார்க்சியம் பற்றிய பல்வேறு நூல்களில் வாதப் பிரதி வாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததைக் காண் கிறோம். மாஸ்கோ பதிப்பக மொழி பெயர்ப்பு நூல்கள் தவிர, தமிழ் மொழியில் எழுதப்படும் நூல்கள், சஞ்சிகைகள் அரிதாகவே உள்ளன. இதுவும் எமது அரசியல் தேக்க நிலையையே காட்டுகிறது. இது போன்ற பல நூல்கள். மார்க்சிய விமர்சனக் கட்டுரைகள், கலை இலக்கியப் படைப்புகள் தமிழில் வெளிவரவேண்டும். இன்று ஏற்பட்டு வரும் விழிப்புணர்வைப் பார்க்கும்போது நிச்சயம் வெளிவரும் என எதிர்ப்பார்க்கிறேன்.

கருத்தியல் என்பது கருத்துகளின் அடிப்படையில் தோன்றியது; வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் நிலைத் துள்ளது. அதனால் விஞ்ஞானப் பூர்வமற்றது.

www.padippakam.com



'கருத்தியல் மனிதனது அல்லது சமூகக் குழுவினது சிந்தனையை ஆக்கிரமிப்பதன் பிரதிபதிப்பு' என்றார் மார்க்ஸ்.

கருத்தியல் பொய்மையில் பிறந்தது; வெறும் கனவு போன்றது; கற்பனையில் எழுந்தது; பயனற்ற வெறுமை.

'கனவினிலே ஒரு நினைவாகி, நினைவினிலே ஒரு கனவாகி' என்றோர் பாடல் உள்ளது. கருத்தியலும் இது போன்றதே.

கருத்தியல்கள் உடைமை வர்க்கத்தால், உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட ஆதிக்க வர்க்கத்தால் உற்பத்தி செய்யப்படுகின்றன. மனித உழைப்பை அந்நியப்படுத்தி அபகரிக்கச் செய்யும் முயற்சியே இதுவாகும்.

இன்று, பாவ புண்ணியங்கள், சட்டங்களுக்குக் கீழ்ப் பட்டு உழைத்து அடங்கி வாழ், அடுத்த பிறவியில் நீயும் உடைமை வர்க்கமாக மாறலாம் என்ற மதப்பிரச்சாரங்களை நாம் பிறந்த நாள் தொடக்கம் பல்வேறு வழிகளில் சமூகத் தில் கேட்டுக் கொண்டேயிருக்கிறோம்.

வாழ்க்கையின் யதார்த்த நிலைப்பாடுகளுக்குக் கருத் தியல்கள் கற்பனையான உறவுகளை, விளக்கங்களைத் தருகின்றன. தொழிலாளி உழைக்கின்றான். காலம் பூராவும் தன் உழைப்புச் சக்தியை விற்கின்றான். மற்றொருவன் இவ்வுழைப்பைக் கூலிக்கு வாங்கி வாய்ப்பாக வாழ்கின்றான்.

மதம் முற்பிறவிப் பாவ, புண்ணியம் எனக் காரணம் கூறி நம்பவைக்கிறது. 'முதலாளியே சோறு போடுகிறான். எதிர்க்காதே' எனச் சமூக ஒழுக்க வரம்புகள் கூறுகின்றன. தொழிலாளி, தன் வியர்வையாலும் இரத்தத்தாலும் உழைத் துக் கொடுத்த உடைமையில் கைவைத்தால் முதலாளியின் சட்டங்கள் அவனைச் சிறையில் தள்ளி 'நீதி'யைப் போதிக் கின்றன. அதிகாரம் பெற்ற அரசியல் கட்சிகள் உடைமை வர்க்கத்திற்காகச் சட்ட விதிகளை ஆக்குகின்றன. இவ்வாறு

படிப்பகம்

www.padippakam.com



மனித நீதியற்ற கருத்தியல்கள்; கற்பனைக் கருத்துகள் மனிதச் சமூகத்தையே ஆளுகின்றன.

நிலப்பிரபுக்கள், மன்னர்கள், முதலாளிகள் ஆகிய சிறு பான்மையினர், உழைக்கும் பெரும்பான்மை வர்க்கத்தின் சிந்தனையைத் தமது கற்பனையைக் கொண்டு அடிமைப் படுத்தினர். உழைக்கும் வர்க்கத்தின் பொருளாதார நிலையை, அவர்களது பசியை, உயிர் வாழ்வை வைத்தே கற்பனையான கருத்தியல்கள் மூலம் யதார்த்த வாழ்வி லிருந்து அவர்கள் அந்நியப்படுத்தப்பட்டனர். முழு உழைப்பும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. உழைப்பின் ஒரு பகுதியே கிடைத்தது. உற்பத்தி செய்த பண்டங்களே அவர்களுக்குக் கிட்டாது அந்நியப்படுத்தப்பட்டனர். போட்டாபோட்டிகளை ஏற்படுத்தி அவர்களது விடிவிற்குப் பொய்மை வழிகளைக் காட்டினான் முதலாளி. உழைப்பவர் களைப் பிரித்து உழைப்பிலிருந்து அந்நியப்படுத்தியும் ஆண்டான்.

சிறுவயதிலிருந்தே என் சிந்தனைகள் பெற்றோராலும் சமூகத்தவராலும் எத்தனை தவறான கருத்துகள் மூலம் வளர்க்கப்பட்டன என்பதை இன்று திரும்பிப் பார்க்கிறேன். பின்னர்ப் பள்ளி சென்றதும் எத்தகைய கல்வி கற்பிக்கப் பட்டது? உழைப்புச் சக்தியை விற்கச் சென்றதும் எத்தனைக் கட்டுப்பாடுகள்? என் சிந்தனையைச் சிறைப் பிடித்து வைத் திருந்த தவறான கருத்துகளை, இன்றே கருத்தியல்களாக எண்ணிப் பிரித்துப் பார்க்கிறேன். மார்க்சியம் தந்த விஞ்ஞானப் பார்வையே அதற்குத் துணை நின்றது.

தவறான சிந்தனையைத் தரவல்ல கருத்தியல் களிலிருந்து புதிய சமுதாயம் விடுதலை பெற வேண்டும். அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றிய பின்னரும் பாட்டாளி வர்க்கம் சமூகத்திலிருந்து பரம்பரை பரம்பரையாக ஊறிவந்த கருத்தியல்களை விரட்டியடிப்பதில் ஏற்படக் கூடிய சிரமங்களை எண்ணிப் பார்க்கிறேன். சோசலிசச்

படிப்பகம்

www.padippakam.com



சமூகத்தைக் கட்டுவதற்கு முயல்பவர்களது சிரமங்களையும் தற்போதே தெளிவாக எண்ணிப் பார்க்க முடிகிறது. ஆயுதம் கொண்டு சொத்துகளைக் கைப்பற்றி விடலாம். மக்களது சிந்தனையைக் கைப்பற்றுவது, கருத்தியல்களிலிருந்து அவர்களை விடுவிப்பது எத்தனை சிரமமானது. இதற்கு வழிகிடையாதா?

தொடர்ந்த வர்க்கப் போராட்டத்தின் மூலமே இன்றைய கருத்தியல்கள் அகற்றப்பட்டு விஞ்ஞானப் பூர்வமான கோட்பாடுகளை மனித இனம் நிலைநாட்டிக் கொள்ள முடியும். பாட்டாளிகள் அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றிய பின்னரும் மக்கள் சிந்தனையைக் கைப்பற்றும் காலம் மிக நீண்டதாகவும் இருக்கலாம்.

புரட்சிநடை பெற்றதும் கருத்தியல்கள் யாவற்றையும் மாற்றிவிட முடியும் என்று எண்ணுவது தவறு. இதற்காகச் சீனாவில் மாவோ ஒரு கலாச்சாரப் புரட்சியை நடத்தியும் தோல்வியே காண முடிந்தது. சோவியத் புரட்சியின் தோல்வி பற்றி மாவோ குறிப்பிடும்போது பின்வருமாறு கூறியுள்ளார்:

''பொருளாதாரப் புரட்சி மட்டும் போதாது. அரசியல் கருத்தியல்களிலும் முழுமையான சோசலிசப் புரட்சி ஏற்பட வேண்டும். சோசலித்திற்கும் முதலாளித்துவத்திற்குமிடையில் நடைபெறும் போராட்டத்தில் யார் வெற்றி பெறுவர் என்பதைத் தீர்மானிக்க நீண்ட காலம் வேண்டும்''

சீனாவையும் நினைவில் கொண்டே மாவோ கூறியிருக்க வேண்டும்.

மூடப்பழக்க வழக்கங்கள் எனப் பலவற்றை நீங்கள் இன்று கூறலாம். கருத்தியலாக எத்தனை மூடக் கருத்துகள் எம் சிந்தனையை இன்றும் ஆக்கிரமித்துள்ளன என்பதையும் இச்சிறு நூல் மூலம் நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



அவற்றிலிருந்து விடுபடும் வழியையும் இறுதியில் கூறியுள்ளேன்.

வாழ்நிலையே சிந்தனையைத் தீர்மானிக்கிறது. ஆயினும் இன்றைய ஆளும் வர்க்கத்தின் அரசு யந்திரம் உழைப்பவனைத் தொடர்ந்து பரம்பரையாக, உடைமை வர்க்கத்திற்கு உழைப்பதற்காகக் கருத்தியல்களையும் பேணி வளர்க்கிறது என்பதையே எளிமையாகக் கடிதங்கள் மூலம் கூற முன் வந்தேன்.

தொடர்ந்து சுரண்டப்படும் பாட்டாளி வர்க்கம் ஒன்றுபட்டு, வர்க்க உணர்வு பெற்றுப் போராடி, அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றும். ஆயினும் லெனின் கூறியதுபோன்று அரசு யந்திரத்தை உடைத்தெறிவதில் ஏற்படப் போகும் சிரமத்தையும் பாட்டாளிகளுக்குக் கூறி வைப்பதும் இந் நூலின் ஒரு குறிக்கோளாகும்.

ஏகாதிபத்திய, முதலாளித்துவ வர்க்க நாடுகளைப் பாருங்கள். இக்கருத்தியல்களோடு அரசுயந்திரம் எவ்வாறு பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் காண்பீர்கள்.

'பொருள் முதல்வாத அடிப்படையில் வரலாற்றைக் காணும்போது, மனித வரலாற்றில் இறுதியாகத் தீர்மானிக்கும் அடிப்படை அம்சம் யதார்த்த வாழ்வின் உற்பத்தியும் என ஏங்கெல்ஸ் புளொச் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மார்க்ஸ் பொருளையே அடிப்படையாக வைத்து எல்லாவற்றையும் பார்க்கிறார் என்ற குற்றச்சாட்டிற்கே இவ்வாறு ஏங்கெல்ஸ் பதிலளித்தார். இக் குற்றச்சாட்டு அர்த்தமற்றது, சிந்தனையற்றது என்றும் ஏங்கெல்ஸ் சாடியுள்ளார்.

உற்பத்தியும் மறு உற்பத்தியும் மனிதனது யதார்த்த வாழ்வின் தேவையை ஒட்டியல்லாது மற்றோர் சிறு

www.padippakam.com



பான்மையினரான, உற்பத்திச் சாதனங்களை உடைமை யாக்கி வைத்திருப்பவர்களுக்கே இன்று பயன்படுகிறது. அதற்குச் சுரண்டும் வர்க்கத்தால் ஆக்கப்பட்டு உடைமை வர்க்கத்திற்குச் சேவகம் செய்யும் அரசும் பயன்படுகிறது. இவ்வர்க்கம் சார்ந்த அரசு வன்முறையுடனும் கருத்தியல் களுடனும் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதையும் இக்கடிதங்கள் மூலம் ஓரளவு விளக்க முனைந்தேன்.

இன்றும் நிலப்பிரபுத்துவக் கருத்தியல்களில் மூழ்கி யிருக்கும் பவருக்கு உற்பத்திச் சக்தியின் மறு உற்பத்தியைப் புரிந்துகொள்வது சிரமமாயிருக்கலாம். அவர்களை இன்றைய முதலாளித்துவ நாடுகளின் குடித்தொகைப் பிரச்சனைகளை அறிந்து கொள்ளும்படி வேண்டுகிறேன். கூலியடிமைகளாகப் பொருளியல் வாழ்வே பெரும்பான்மையானோர் வாழ் கின்றனர். பாலுறவுகளில் அங்குக் கட்டுப்பாடுகள் குறைவு. பிந்திய திருமணமாயினும் குழந்தைகளைப் பெற்று வளர்ப்ப தைப் பெரிய தொல்லையாகக் கருதுகின்றனர். தம்பதிகளாக உழைத்துக் கிடைக்கும் கூலிக்குள் வாழவேண்டிய நிலை, குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதில் உள்ள சிரமம், உழைப்பு, செலவினம் அவர்களை அச்சுறுத்துகின்றன. இதனாலேயே அரசு உழைப்புச் சக்தியின் மறு உற்பத்திக் காகப் பணம் உட்படப் பல சலுகைகளைச் செய்கிறது. இதுவும் பயன் தராததினாலேயே மூன்றாம் உலக நாடுகளி லிருந்து கூலி அடிமைகளை இறக்குமதி செய்கிறது. முதலாளித்துவம் இயங்க ஒரு பகுதியினர் வேலையற்றவர் களாகவும் இருக்க வேண்டும். முதலாளித்துவ உற்பத்தி தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். இக்கருத்து களை முன் வைத்துப் பொருள் முதல்வாத முறையில் அணுகின் மறு உற்பத்தி பற்றிய மயக்கம் தெளிவாகும்.

அரசின் வன்முறைப் பங்கைப் பற்றி யாவரும் ஓரளவு அறிவர். வன்முறையற்றதாகப் பரம்பரையாகவும்

www.padippakam.com



முதலாளித்துவத்தின் பின்னரும் தோற்றப்பட்ட கருத்தியல் களை இனங்காட்டுவதே என் பிரதான நோக்கமாகும்.

மதம் என்ற கருத்தியல் பல ஆயிரக்கணக்கான ஆண்டு களாகத் தொடர்ந்து சிந்தனையைப் பயனற்ற கற்பனை யாகச் சிறைப்பிடித்து வந்துள்ளது. இயற்கையை வெல்ல முடியாத காலத்தில் மனிதன் இயற்கையையே வழி பட்டான். வர்க்கச் சமுதாயம் தோன்றியதும் வானத்தில் அறிய முடியாத உலகம் ஒன்று இருப்பதாக உடைமை வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தை நம்பச் செய்தது; அடிமையைத் தெய்வம், பேய், பிசாசுகள் அதிசயங்களுக்கு அடிமைப் படுத்தின.

குடும்பம், கல்வி, சட்டம், ஒழுக்கங்கள், கலை, இலக்கியம் ஆகிய அனைத்தின் மூலமும் மதம் மனிதனது மனச்சாட்சியைச் சிறைப்பிடிகிறது. இசை, நடனம், ஓவியம். கூத்து அனைத்துமே மதம் சார்ந்ததாகப் படைக்கப்படுகிறது.

'அடிமைக்கும் ஆன்மா உண்டு. எல்லோரும் தெய்வம் முன் சமம்' இன்றைய சமூகத்தில் கிடைக்காத நீதி, சமத் துவம், சகோதரத்துவம், நலன்தருபவை யாவும் அடுத்த உலகில் கிடைக்கும்' என மதவாதி துன்பப்படுபவனுக்கு ஆறுதல் கூறி வெல்கிறான்.

'துன்பம் தவிர்க்க முடியாதது. கிறித்துவே சிலுவையில் அறையப்பட்டுத் துன்பப்பட்டார். நல்லவர்கள் இவ்வுலகில் துன்பப்படுவது இயல்பு. பாவிகள் நிறைந்த உலகம் இது.' கிறித்துவ மதம் மரணத்தின் பின் இன்பம் எனக்காட்டியது. துன்பம். முதுமை, நோய், மரணம் தவிர்க்க முடியாதது எனப் புத்த மதம் போதிக்கிறது.

இவ்வாறு தவறான பொய்மைகள் உழைக்கும் வர்க் கத்தை ஏமாற்றுவதற்காகப் படைக்கப்பட்டன.

அடிமைக்குப் புரட்சி வழியைக் கூறாது பொய்மைகளைக் கூறி ஆறுதல்தர முயல்பவர் அடிமைத்தனத்தைக் காப்பவரே என லெனின் கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com



மனிதனின் பிறப்பிலிருந்து மரணம் வரை மதச் சடங்குகள் அவனை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

மதத்தால் நிலைநாட்டப்பட்ட மிக மோசமான வெறி பிற மதத்தவரை எதிரியாகக் காண்பதாகும். இவற்றை வரலாற்றில் சிலுவைப் போர், இஸ்லாமியப் போர்களில் என்று மட்டுமல்ல இன்றும் காண்கிறோம்.

எல்லா அரசுகளுமே பெரும்பான்மையான மக்களின் மதம் சார்ந்தவையாக இருப்பதைக் காணலாம். அகிம்சை பேசும் புத்தமதம் சார்ந்த அரசின் வன்முறைகளை அண்மையில் இலங்கையில் கண்டோம்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஜனாதிபதியான றீகனிடம் கிறித்துவ மதப் போதனையைப் பார்க்கலாம். ஒரு கையில் பைபிளையும் மறு கரத்தில் அணுகுண்டையும் வைத்துக்கொண்டு உலகைப் பங்குபோட முன் நிற்கிறான். இன்றும் பைபிளையே நம்பும் அவன் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை எதிர்ப்பவன். விஞ்ஞானத்தையே மறுத்துக் கருத்தியலில் கட்டுப்பட்டிருப்பவனே ஏகாதிபத்தியத்திற்குத் தலைமை தாங்குகிறான். எத்தனை ஆபத்து. இவர்கள் இன்றைய சமூக அமைப்பு என்றும் மாறாது என நம்புகிறவர்கள். எசமானர்களும் நிலப் பிரபுக்களும் முன்னர் நம்பியதையே இன்று முதலாளிகளும் நம்புகிறார்கள். மனித வரலாற்றின் இயங்கியல் போக்கை ஏற்காதவர்களே இப் பிற்போக்குவாதிகள். இவர்கள் அழிவது திண்ணம் என்பதை விஞ்ஞானப் பூர்வமாக நிருபித்தவரே மார்க்ஸ் ஆவார்.

மிக ஆழமான சிந்தனைகளை என் மகனை நினைவில் வைத்து ஓரளவு எளிதாக எழுத முயன்றேன். இக்கடிதங்கள் உங்கள் சிந்தனையை ஓரளவாவது தூண்டிவிடுமாயின் என் உழைப்பு பயன்பட்டதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



இச்சிறு நூலை அச்சிடுவதில் உதவிய நண்பர் சீதாராமன், அச்சகத் தொழிலாளர்களுக்கு என் நன்றி. எழுத்துப் படிகளைத் திருத்துவதோடு புருப் பார்ப்பதிலும் உதவிய நண்பர் அரணமுறுவலுக்கு என் அன்பு.

வேண்டிய வேளையெல்லாம் என் நூல்களுக்குச் சிறப்பாக ஓவியம் வரைந்து வழங்கியதோடு இச்சிறு நூலின் முன் அட்டையையும் அழகுபடுத்தித் தந்த இனிய நண்பர் மணியன் செல்வனுக்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றி.

கருத்தியல் பற்றிய விளக்கத்தைக் கூறும் இச்சிறு நூல் மக்களிடை நல்ல வரவேற்புப் பெற்றது மகிழ்ச்சி தருகிறது. புதிய சிந்தனைகள் மேல் அவர்களுக்கு உள்ள ஆர்வத்தை அறிய முடிந்தது. இந்நூல் இரண்டாவது பதிப்பாக வெளி வருகிறது. ஆங்காங்கே சில குறிப்புகள் மட்டும் சேர்க்கப் பட்டுள்ளன. இரண்டாம் பதிப்பை அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த சித்ரா பிரிட்டோ கிராபி அச்சகத்தார்க்கு என் நன்றி.

சென்னை **செ. கணேசலிங்கன்**

படிப்பகம்

www.padippakam.com

# 1. பள்ளியில் இரு முனைகள்

அன்பு மகன் குமரனுக்கு,

நீ பத்தாவது வகுப்புப் பரீட்சை எழுதுவது அறிந்து மகிழ்ச்சி. பரீட்சையில் சித்தியடைய என் வாழ்த்துகள்.

நீ கற்கும் பள்ளி கல்விக்குப் பெயர் போனது. அங்குக் கற்றவர்களே அரசிலும், தனியார் நிலையங்களிலும் பெரிய பதவிகளை வகிப்பவர்கள். அங்குப் படைப்பயிற்சி யாளராக (Cadet) இருந்தவர்களே இராணுவத்திலும் பொலிசிலும் உயர் பதவியில் உள்ளனர். நீதிபதிகளாக, பிரபல வழக்கறிஞர்களாக விளங்குகின்றனர். அம்மா அடிக் கடி புகழ்வார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா அங்கேயே கற்றவர் ஆண்டு தோறும் உங்கள் கல்லூரி விழாவிற்கு வருவதாகக் கூறுவாய். கிரிக்கெட் விளையாட்டுப் பேட்டிகளைப் பார்க்க வருவதாகப் புகழ்வாய்.

உங்கள் பள்ளி ஆரம்பித்து நூறு வருடங்களுக்கு மேலாகி விட்டது. ஆங்கிலேயர் ஆட்சியின் போதே ஆரம்பிக்கப்பட்ட சிறந்த பள்ளி! ஆங்கிலக் கல்வியிலும், விளையாட்டிலும், பழக்க வழக்கங்களிலும் சிறப்புப் பெற்றதாகக் கூறப்படும் பள்ளி. அங்குக் கற்றால் நல்ல பதவி நிச்சயம் என்று எல்லோரும் வழமையாகக் கூறுவர். காரணம், நேர்முகப் பரீட்சையின் போது இருக்கும் அதிகாரிகள் பெரும்பாலும் அங்கேயே கற்றவர்களாக இருப்பர். கிராமத்துப் பள்ளியிலிருந்து வந்தவனிலும் பார்க்க உங்கள் பள்ளிக்கு வாய்ப்பு அதிகம் இருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

சி. கு—2

படிப்பகம்

www.padippakam.com



இங்கு ஒரு விஷயத்தை உனக்கு வலியுறுத்தி நினைவூட்ட விரும்புகிறேன். சென்ற நூறு ஆண்டுக் காலமாகவே தொடர்ந்து அரசு அதிகாரிகள், இராணுவப் பொலிஸ் உத்தியோகத்தர், நீதிபதிகள், வக்கீல்கள் முதலியோரை உங்கள் பள்ளி உற்பத்தி செய்து வந்திருக்கின்றது என்று கூறுவதில் தவறில்லை. இவர்களே இன்றைய சமூக அமைப்பின் கட்டுக் கோப்பையும் காப்பாற்றி வந்துள்ளனர்; பாதுகாத்து வருகின்றனர்.

நமது அச்சகம் உள்ள பகுதியிலுள்ள பள்ளியிலேயே தொடர்ந்து நீ படிப்பதை நான் விரும்பினேன். பெரும்பாலும் தொழிலாளர்களது பிள்ளைகள் கற்கும் பள்ளி அது. அப்பிள்ளைகளோடு பழகிப் படித்து; விளையாடி அவர்கள் துன்பத்தையும் அறிந்து நீ வளரவேண்டும் என விரும்பினேன். ஏனெனில் சமுதாயத்தில் பெரும்பகுதி மக்கள் இவர்களே. ஆனால் நான் இல்லாத வேளை செல்வர்கள் வாழும் பகுதியிலுள்ள தற்போதைய பள்ளியில் அம்மா உன்னைச் சேர்த்துவிட்டார்.

முன்னர்ப் பள்ளியிலிருந்து திரும்பியதும் ஏழைகளான பள்ளித் தோழர்களுக்காக இரங்கிப் பேசுவாய். எனக்கு இன்றும் நினைவிருக்கிறது. ஒருநாள் பள்ளியால் வந்ததும் என்னிடம் ஓடிவந்து வியப்போடு சொன்னாய்:

''குணராசன் வகுப்பில் மயங்கி விழுந்து விட்டான். அவன் நேற்றுந் தொடக்கம் சாப்பிடவில்லையாம். என் சாப்பாட்டுக் காசை அவனிடம் கொடுத்துவிட்டேன்.''

அங்குப் படிக்கும் போதிருந்த சமூக உணர்வுகளைத் தற்போது உன்னிடம் காணமுடியவில்லை. புதிய காலணிகள், உடைகள், கார், சினிமா, டி.வி. நிகழ்ச்சிகள், வீடியோ விளையாட்டுகள், வீடியோ படங்கள் பற்றியே பேசுகிறாய். அம்மாவைப் பொறுத்தவரை தற்போது நீ நல்ல பழக்கங்கள் பழகியிருக்கிறாய்; முன்னேற்றமடைந்திருக்கிறாய். ஆனால் நான் மட்டும் அவ்வாறு கருதவில்லை.

www.padippakam.com



உன் முன்னைய ஆரம்பப் பள்ளியும் தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அங்கிருந்து இளமையிலேயே வெளியேறுபவர்கள் தொழிற்சாலை களிலும், துறைமுகத்திலும், வாணிப நிலையங்களிலும் பெரும்பாலும் தொழிலாளர்களாகவே உழைக்கின்றனர். ஒரு பகுதியினர் சிற்றூழியர்களாக ஆங்காங்கே சேர்ந்து முன்னேற முயல்கின்றனர். ஒரு சிறு பகுதியினர் உயர் பதவிப் பேட்டியில் வெற்றிபெறப் போராடுகின்றனர்.

உன்னைப் பொறுத்தவரை உயர்பதவிகள் அல்லது தொழிலாளர் நிலையிலிருந்து மாதக் கூலிக்காகப் போராடும் நிலை ஏற்படமாட்டாது. இதை நாம் கூலி அடிமை நிலை என்று கூறுவோம்; மாதக் கூலியோடு உழைப்பு நேரத்தை, அல்லது வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் நிலை இது. கூலி அடிமைச் சமுதாயம் என்றும் இன்றைய சமுதாய அமைப் பைக் கூறுவர். அவை பற்றிப் பின்னர் நீ விரிவாக அறிந்து கொள்வாய்.

பள்ளிகளிலேயே போட்டா போட்டிகளை மாணவரிடை ஏற்படுத்தி விடுகின்றனர். வகுப்பில் பாடங்களில் போட்டி, புள்ளிகள் பெறுவதில் போட்டி, விளையாட்டில் போட்டி, தராதரத்தில் போட்டி என இளம் வயதிலேயே போட்டிகளை ஏற்படுத்தி மாணவர்களைப் பிரிக்கின்றனர், இதனால் ஐக்கியப்பட வேண்டிய மாணவரிடை பொறாமையும் பொச் சரிப்பும் ஏற்பட்டு விடுகிறது. பகைமை உணர்வும் வளர்க்கப் படுகிறது. இது தவறான கல்வி முறை. பின்னர் இப் போட்டா போட்டியும் பகைமையும் சமூகத்திலேயே ஊடுருவி விடுகிறது. அமைதியான சமூகத்தைக் காணமுடிவதில்லை.

அன்பான,

அப்பா.

www.padippakam.com

# 2. உற்பத்திச் சாதனங்களின் மறு உற்பத்தி

அன்புமிக்க குமரனுக்கு,

நீ கூலி உழைப்புக்குப் போக வேண்டியதில்லை. மேலும் இரண்டு ஆண்டுகள் கற்றபின் நமது அச்சகத்தை நீயே நிர்வகிக்கலாம்.

அச்சகத்துக்கு வேண்டிய யந்திர சாதனங்கள் எம்மிடம் உள்ளன. மின் வசதி உண்டு. அச்சிடும் தாள், மை ஆகிய வையும் உண்டு. இவற்றை உற்பத்திச் சாதனங்கள் என்று ஒரே சொல்லில் கூறிவிடலாம்.

இவை மட்டும் அச்சிடும் வேலையைத் தாமாகவே செய்து விடுவதில்லை என்பதை நீ அறிவாய். அச்சகத்தில் தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களே எழுத்துகளை அடுக்குகின்றனர். அச்சிடும் தாளைத் தேர்ந்து வெட்டு கின்றனர். யந்திரங்களை இயக்குகின்றனர். இவர்கள் என் கடிதத்தில் குறிப்பிட்ட கூலி உழைப்பாளரே. தமது உழைப்புச் சக்தியை எமக்கு விற்பவர்கள். குறிப்பிட்ட வேலையைக் குறிப்பிட்ட நேரம் செய்து கூலி பெறுபவர். இவர்களுக்கும் எமக்கும் உள்ள தொடர்பை உற்பத்தி உறவு என்பர்.

மேலே கூறிய இவ்விரண்டும் (உற்பத்தி சாதனங்களும் உற்பத்தி உறவுகளும்) எம்முடைய அச்சகத்திற்கு மட்டும் பொருந்தியவை யல்ல. எல்லாத் தொழிற்சாலைகளுக்கும், உற்பத்திகளுக்கும் பொருந்தியவையாகும். சீமெந்து தொழிற் சாலையா, கடதாசித் தொழிற்சாலையா, இரசாயன உற் பத்தித் தொழிற்சாலையா யாவற்றுக்கும் பொருந்தக் கூடியவையே.

www.padippakam.com



பெரிய தொழிற்சாலைகளை ஒட்டித் தனிச் சமூக அமைப்பே ஏற்பட்டிருப்பதையும் காணலாம்.

சமூக அமைப்பு தொடர்ந்து நிலவுவதற்கு உற்பத்தி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

நமது அச்சகத்தை நாம் தொடர்ந்து நடத்திக்கொண்டே இருக்கிறோம். மாதத்தில் சில நாட்களே ஓய்வு. யந்திரங்கள் ஓடுகின்றன. தொழிலாளர் இயக்குகின்றனர்.

அச்சகம் தொடர்ந்து இயங்குவதற்கு அச்சிடும் தாள், லெட் எழுத்துகள், மை. மின்சாரம் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். மை உருளைகள், யந்திரங்கள் தொடர்ந்து தேய்ந்து கொண்டிருக்கும். தேய்ந்து போகிற வற்றிற்கு நாம் மீள உறுப்புகள் பொருத்த வேண்டும்.

ஒரு உண்மையை வலியுறுத்தி உன் மனத்தில் பதியப் படுத்துவதற்காகவே இவற்றை விரிவாகக் கூறுகிறேன். உன் பேனாவில் எழுதும் மை முடிந்ததும் மீண்டும் கேட்பாய் என்பதற்காக வேறோர் இடத்தில் மை உற்பத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதே போல நமது அச்சகம் தொடர்ந்து நடைபெற வேறு இடங்களில் அச்சிடும் தாள், மை, லெட் எழுத்துகள், உருளைகள், மாற்று உறுப்புகள் மட்டுமல்ல, அச்சு யந்திரங்கள்கூட உற்பத்தி செய்யப்படுகின்றன.

இச்சங்கிலித் தொடரான உற்பத்தியை **மறு உற்பத்தி (Reproduction)** என்பர்.

**உற்பத்தி நியதிகளை அதே வேளை மறு உற்பத்தி செய்யாத எந்தச் சமூக அமைப்பும் ஓராண்டு கூட நிலைக்காது என்பதை ஒவ்வொரு குழந்தையும் அறியும் என்று கார்ல் மார்க்ஸ் என்ற அறிஞர் கூறியுள்ளார்.** இன்று நீ குழந்தையல்ல. ஆயினும் நான் விரிவாக இந்த உற்பத்தி நிகழ்ச்சியைக் கூறியுள்ளேன். நிச்சயமாக நீ

www.padippakam.com



கிரகித்திருப்பாய் என்று நம்புகிறேன். பெரியவர்கள் கூட இந்தத் தொடர் நிகழ்ச்சியைப் பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணினால் சமுதாயம் பற்றிய பல உண்மைகள் இதன் அடியில் மறைந்திருப்பதைக் காண்பர்.

என்னப்பா, யந்திரத்தோடு ஒட்டியவற்றை உற்பத்திச் சாதனங்களோடு சேர்ந்தவற்றை மட்டுமே கூறினாய், அவற்றை இயக்கும் தொழிலாளரின் உற்பத்தி பற்றி எதுவும் சொல்லவில்லையே என்று கேட்கிறாயா?

தொழிலாளரின் உற்பத்தி என்று கூறுவதில்லை. இதை உழைப்புச் சக்தியின் மறு உற்பத்தி என்றே கூறுவோம். அது மிகவும் சிக்கலானது; ஆழமானது. அதை விரிவாகக் கூறுவதற்காகவே தொடர்ந்து கடிதங்கள் எழுத உள்ளேன்.

அன்பான,

அப்பா.

படிப்பகம்

www.padippakam.com

# 3. உற்பத்திச் சக்தியின் மறு உற்பத்தி

அருமை மகனுக்கு,

நமது அச்சகத்தில் சில தொழிலாளர் ஓய்வு பெற வேறு தொழிலாளர்களை வேலைக்கு நியமிக்கிறோமல்லவா? அது போலவே எல்லாத் தொழிற்சாலைகளிலும் நிறுவனங்களிலும் அலுவலகங்களிலும் நடைபெறுகிறது. ஆகவே தொழிலாளர்கள், தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியின் உற்பத்தி தொடர்ந்து நடைபெறத் தேவையிருக்கிறது.

தொழிலாளர்கள் குழந்தைகளைப் பெறுகிறார்கள். அவர்கள் வயதானதும் தமது உழைப்புச் சக்தியைச் சந்தையில் விற்கத் தயாராகின்றனர்.

ஆனால் இங்கு ஒன்றை நினைவூட்ட வேண்டும். உழைப்புச் சக்தியின் மறு உற்பத்தி தொழிற்சாலைகளிலோ, அலுவலகங்களிலோ நடைபெறுவதில்லை; அவற்றிற்கு வெளியே நடைபெறுகிறது.

யந்திரங்களை மீள நிறுவும்போது மூலதனம் தேவைப் படுகிறது. ஆனால் உழைப்புச் சக்தியின் மறு உற்பத்தி எவ்வாறு உறுதிப்படுத்தப்படுகிறது. எங்கிருந்து மூலதனம் வருகிறது: என்றெல்லாம் கேட்கிறாயா?

தொழிலாளருக்கு வழங்கும் கூலியிலேயே உழைப்புச் சக்தியின் மறு உற்பத்திக்கு உரிய மூலதனமும் அடங்கியுள்ளது என்றே கூறவேண்டும் (மார்க்ஸ் இதை மாறுதல் மூலதனம் என்றார்). தொழிலாளர் தமக்குக் கிடைக்கும் கூலியைக் கொண்டு உணவு, வீட்டு வாடகை, உடை மட்டுமல்ல; திருமணம் செய்து, குடும்பமாக வாழ்த்து, குழந்தைகளைப் பெற்று வளர்த்துக் கல்வியும் அளிக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளி உற்பத்தி தொடர்ந்து நடைபெறத் தேவைப் படும் பல்வேறு ரகமான உழைப்புச் சக்தியை மறு உற்பத்தி செய்கிறான். உழைப்பின் தேவைகள் பலரகமல்லவா? உழைப்போரின் தேவைகளுக்காக முதலாளிகள் மிகக் குறைந்த கூலியையே வழங்குவர். ஆயினும் தொழிலாவர் உயர்ந்த கூலிக்காகவும் வேலை நேரத்தைக் குறைப்பதற் காகவும், தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்பர் என்பதை மறந்து விடாதே.

தாமரைக்குளத்தில் ஓரளவு தண்ணீர் இருக்கும் வரை யிலேயே தாமரைக் கொடியும் உயிர் வாழ முடியும். தண்ணீர் இல்லாவிடின் கொடியும் அழிந்துவிடும். எந்த அரசும் தொழிலாளர்மேல் கவனம் செலுத்துவதையும் கவனித்திருப்பாய். உழைப்பாளி வர்க்கத்தையும் சுரண்டும் வர்க்கத்தையும் சமரசப்படுத்தி வைப்பதற்கே அரசு என்ற ஓர் அமைப்பு தோன்றியது. இன்றும் நிலவுகிறது. ஆனால் ஒரு முக்கிய விஷயம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். இந்த அரசு எப்பொழுதும் உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட சுரண்டும் வர்க்கத்தைச் சார்ந்ததாகவே இருக்கும். நடுநிலைமை போலக் காட்டுவது வெறும் பொய்மையே என்பதை மறந்துவிட வேண்டாம்.

ஒரு தொழிற்சாலையை அல்லது ஒரு நிறுவனத்தை நடாத்துவதற்குப் பல்வேறு வகைப்பட்ட உழைப்பாளர்கள் தேவைப்படுவர். நமது அச்சகத்தில் மெஷின்களை ஓட்டு வோர், அச்சுக்கோர்ப்போர். பைண்டிங் செய்பவர், மானேஜர் என்று இருக்கவில்லையா? அதேபோல் தொழிற்சாலைகளில் இஞ்சினியர், தொழில் நுட்பம் அறிந்தோர், யந்திர இயக்குநர், உடலுழைப்பாளர், கணக்காளர், குமாஸ்தாக்கள், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், வர்கனம் ஓட்டுநர், முகாமையாளர் எனப் பலதரப்பட்டவர்கள் பணியாற்றுவர். இவர்க ளெல்லோரும் ஒரே நாளில் தம் திறமைகளை மந்திர சக்தி யால் பெற்றவர்காலல்லர்.

படிப்பகம்

www.padippakam.com



முதலாளித்துவம் தனக்கு வேண்டிய கல்வி அமைப்பு மூலம் இத்துறைகளில் பயிற்சியளிக்கிறது. ஆரம்பப்பயிற்சி, பின்னர் இதன் துணையுடன் தன் தொழிற்சாலைக்கோ அலுவலகத்திற்கோ வேண்டியபடி மேலதிக பயிற்சியளித்து அவர்களின் உழைப்பைப் பயன்படுத்திக் கொள்கிறது.

எல்லாப் பிள்ளைகளுக்கும் தேவையான ஆரம்பக் கல்வி உற்பத்தியில் ஈடுபடுவதற்கு அவர்களுக்குப் பயன் படுகிறது. முதலாளிகள் படியாத முட்டாள்களை விரும்பு வார்கள் என எண்ணிவிடாதே. ஓரளவு கல்வியறிவுள்ள விவேகமானவர்களையே வேலையில் அமர்த்த விரும்பு வார்கள். ஏனெனில் அவர்களிடமிருந்தே அதிக, வாய்ப் பான உழைப்பைப் பெற முடியும். வேலைகளை மட்டுமல்ல, நிர்வாக ஒழுங்கு விதிகளையும் கற்று அவர்களே ஒழுங்காக உழைப்பர். இவற்றைப் பின்னர் விபரமாக அறிந்துக் கொள்வாய். முதலாளித்துவம் ஒரு பகுதி மக்களை வேலை யின்றியும் வைத்துக் கொள்ளும், காரணம்: வேலை தேடும் போட்டியில் குறைந்த கூலியில் உழைப்புச் சக்தியை வாங்க முடியும். வேலையில் இருப்போர் அங்கேயே ஒட்டி இருப்பர். வேலையற்றோரின் வறுமை, பட்டினி நிலையைக் காட்டிப் பிற தொழிலாளரை அடிமைப்படுத்தி வைக்க முடியும்.

அன்பான,
அப்பா

www.padippakam.com

# 4. ஒடுக்கு முறையின் ஆரம்பம்

அன்பு மகனே,

பள்ளிக்குச் செல்வது வெறும் புத்தகப் பாடங்களைப் படிப்பதற்கு மட்டுமல்ல; அறிவு பெறுவதற்காக மட்டுமல்ல. வேறு எதற்காக என்று கேட்கிறாயா?

இன்றைய சமூக விதிகள், ஒழுங்குமுறைகளையும் அங்குக் கற்றுத் தருகிறார்கள். பின்னர் உற்பத்தியில் ஈடுபட்டுச் சட்ட ஒழுங்குகளுக்குக் கீழ்ப்பட்டு உழைப்பதற்கு வேண்டிய நியதிகளை — கட்டுப்பாடுகளை — ஒழுக்க விதிகளைப் பள்ளிகளிலேயே பயிற்றுவிக்கிறார்கள்.

பள்ளிக்கு நேரத்திற்குச் செல்ல வேண்டும் என்று நீ அடிப்பாயே. ஆரம்பப் பள்ளியில் படிக்கும்போது நீ அத்தனை அவசரப்பட மாட்டாய். தற்போது சாப்பாடு பிந்தின் சாப்பிடாமலேயே ஓடிவிடுகிறாய். சீருடை, சப்பாத்து யாவும் சிறப்பாக இருக்கவேண்டும் என அம்மாவோடு சீறுகிறாய்.

வகுப்பிலே ஒழுங்கு முறைகளைச் சிறிது மீறிச் சத்தம் போட்டாலோ, குழப்படி செய்தாலோ தண்டிக்கிறார்கள். பிரம்பால் அடிக்கிறார்கள். மேசைமேல் வகுப்பு முடியும் வரை நிற்கச் செய்கிறார்கள். பள்ளி முடிந்த பின்னரும் தங்கச் செய்து வேலை தருகிறார்கள். சில வகுப்புகளில் குற்றத்திற்குப் பணமாகவும் அறவிடுகிறார்கள். பள்ளி அதிபரிடம் தெரிவித்து மாணவர் முன்னிலையில் தண்டனையளிக்கின்றனர். பள்ளியிலிருந்து சில வேளை வெளியேற்றியும் விடுகின்றனர். பள்ளிகளைப்

www.padippakam.com



பொறுத்து வெவ்வேறு விதமாகத் தண்டனை வழங்கப் படுகிறது.

பலதடவை நீயே இத்தண்டனைகளைப் பெற்றதை நான் அறிவேன். அவற்றை எதிர்த்து நீ போராடவில்லை. ஒரு தடவை வகுப்பில் சத்தமிட்டதற்காக வகுப்பு மாணவர் அனைவரையும் மாலையில் நிற்கும்படித் தண்டனை வழங்கப்பட்டது என்றாய். எவரும் எதிர்க்காது கீழ்ப்படிந்த னர் என்றும் சொன்னாய்.

பள்ளியை விட்டு வெளியேறிய பின்னரும் கட்டுப் பாடாக, இன்றைய சமூகச் சட்ட விதிமுறைகளுக்கமைய கீழ்ப் படிந்து நடக்க வேண்டும். தவறினால் பள்ளியில் கிடைக்கும் தண்டனைகள் வேறு வடிவத்தில் வழங்கப் படும். பொலிசாரின் குண்டாந்தடிகள், பூட்ஸ்கால்கள், விலங்குகள், அதன் மேல் நீதி மன்றங்கள், சிறைச்சாலை கள் தண்டனைகளை வழங்கும்.

மேலே கூறியவற்றைச் சுருக்கிக் கூறிவிடலாம். உழைப்புச் சக்தியின் மறு உற்பத்தி பற்றி முன் கடிதத்தில் கூறினேனல்லவா? மறு உற்பத்திக்கு வேண்டியவை தொழில் நுட்பம், செயலாற்றும் திறன், உடலுழைப்பு மட்டுமல்ல; இன்று நடைமுறையிலுள்ள சட்டவிதிகள், ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்பட்டும் தொழிலாளர்கள் நடக்க வேண்டும், இவையும் பள்ளிகள் மூலம் பயிற்றப் படுகின்றன. அதனாலேயே பள்ளிகளில் புத்தகப் பாடங்கள் மட்டுமல்ல; சமூக உற்பத்தி ஒழுங்காக நடைபெறுவதற்கு வேண்டிய விதி முறைகளும் கற்பிக்கப்படுகின்றன என்று கூறினேன்.

இக்கல்வி முறையையும் இரண்டாகப் பிரித்துப் பார்க்க வேண்டும்.

பெரும்பாலான மக்களே உழைப்பவர்கள். அவர்கள் இன்றுள்ள சட்ட விதிமுறைகளுக்கு அடங்கி நடக்க

www.padippakam.com



வேண்டியவர்கள். மற்றொரு சிறுபான்மையினர் இச்சட்ட விதிகளின் காவல்காரர்கள். அடக்கி ஒடுக்குபவரின் ஏஜெண்டுகள். இவர்களும் அதற்கேற்ற ஆரம்பக் கல்வியைக் கற்றுவிட்டே வெளி வருகின்றனர்.

பள்ளியில் அதிபர், ஆசிரியர், மொனிட்டர் என்றெல்லாம் மாணவரின் ஒழுங்கு விதிகள், கட்டுப்பாடுகளைக் கவனிக்க இருக்கிறார்களல்லவா? இவர்களும் அரசுயந்திரத்தின் பொய்மைகளே.

இன்றைய சமூக அமைப்பு இருக்கும் வரை இளம் வயதில் மாணவர்களை அடக்கி ஒடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்.

ஆயினும் கல்லூரி மாணவர் அடங்கி, ஒடுங்கி விடப் போவதில்லை. அவர்கள் உலகில் நடைபெறும் எழுச்சிகள், கிளர்ச்சிகள், புரட்சிகள் பற்றியெல்லாம் கற்கநேரிடுகிறது. அவர்களது எதிர் கால நிலைமைகள், வேலையில்லாத் திண்டாட்டம், அடக்கி ஒடுக்கப்படுவதையும் கண்டு கொதித்து எழுவதையும் காண்கிறோம்.

இவற்றை நீ புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே எளிமையாகக் கூற முயல்கிறேன். கசப்பான பாடங்களைப் பரீட்சைக்காக நீ மனனம் பண்ணுவதைப் பார்த்து நான் வருந்துவதுண்டு. நான் கூறியவை புரியாவிட்டால் மீண்டும் ஒரு தடவை இக்கடிதத்தைப் படி; சமுகத்தின் நடைமுறைகளை ஊன்றிக் கவனி; புரிந்து கொள்வாய்.

அன்பான,

அப்பா

# 5. கருத்தியல் என்றால் என்ன?

அன்பு நிறைந்த மகனே,

குந்தவிக்கு எழுதிய கடிதங்களையும் நீ படித்தா யல்லவா? அதன் மூலமும் இன்றைய சமூக அமைப்பு நீதி யானது அல்ல என்பதை நீ உணர்ந்திருப்பாய். ஏனெனில் 'நீதி' பற்றிய பல கருத்துகள் பரம்பரையாக வந்து சமூகத்திலும் நிலைபெற்றுவிட்டன.

இந்நிலைபெற்ற கருத்துகளைக் கருத்தியல் Ideology) என்று அழைப்பதே நன்று. (சிலர் கருத்துருவம், கருத்து நிலை என்றும் தமிழில் எழுதுவர்). கருத்தியல்கள் பெரும் பாலும்விஞ்ஞானப்பூர்வ மற்றவை. ஏனெனில் அவை வெறும் கருத்துகளாலானவை. இவை பற்றி விரிவாகப் பின்னர் எழுதுவேன்.

தற்போது உதாரணத்திற்காக ஒன்றைக் கூறுகிறேன். மதம் ஒரு கருத்தியல். பலகோடி ஆண்டுகள் கொண்ட மனித இன வரலாற்றில் சில ஆயிரம் ஆண்டுகளின் முன்னரே மதங்கள் தோன்றின. மத நம்பிக்கைகள் விஞ்ஞானப் பூர்வமான அடிப்படையில் எழுந்தவையல்ல.

விஞ்ஞானப்பூர்வமான அடிப்படை உண்மைகளைக் கொண்டவற்றை நாம் கோட்பாடு (Theory)கள் என்கிறோம் விஞ்ஞானப் பாடத்தின்போது நீ பல கோட்பாடுகளைப் படித்திருப்பாய். அவற்றைப் பரீட்சித்தும் பார்த்திருப்பாய். ஆகவே பரீட்சித்து நிருபிக்கக் கூடியவற்றையே நாம் கோட்பாடுகள் என்கிறோம்.

பைதோகிரஸ் கோட்பாட்டைக் கேத்திர கணிதத்தில் படித்திருப்பாய். ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங் களின் அளவு 180 பாகை என்று அளந்து பார்த்திருப்பாய். மனித வரலாற்றில் கணிதத்தை விஞ்ஞானப்பூர்வமாக்கியதில் பைதோகிரஸ் என்ற கிரேக்க அறிஞருக்கும் பங்குண்டு.

www.padippakam.com



நடைமுறையிலுள்ள கருத்தியல்களாலேயே பல்வேறு ஒடுக்குமுறைகளும் சுரண்டல்களும் நினைவுப் பூர்வமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; முதலாளிகளும், அவர்களது அனுமதி பெற்ற நிர்வாகிகளும், முதலாளிகளின் பணியாளர்களாகிய மதகுருமாரும் தொழிலாளர்களின் உபரி உழைப்பை அபகரித்து வாய்ப்பாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கருத்தியல்கள் கற்பனையானவை; கனவு போன்றவை; அநாதியானவை. அவற்றிற்கு வரலாறு காண்பது சிரமம்.

உழைப்புச் சக்தியை மறு உற்பத்தி செய்யும் வேளை அதனுடன் ஒன்றிய திறமை, தொழில் நுட்பம் மட்டும் மறு உற்பத்தி செய்யப்படுவதில்லை. நடைமுறையிலுள்ள கருத்தியல்களுக்கும் அடங்கியே மறு உற்பத்தி நடைபெறுகிறது. சிறையிலுள்ள கைதி தொழில் நுட்பத்தைக் கற்றுக் கொள்வதில் எத்தனை சிரமம் இருக்கும் என்பதை எண்ணிப்பார். சுதந்திரமாகத் தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொள்ள, பயிற்சி பெற முடியாத நிலைக்குக் கருத்தியல்களின் கம்பிகளுள் தொழிலாளர் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கருத்தியல்கள் பற்றி மேலும் விரிவாக அறிந்த பின்னரே உழைப்பாளர் அகப்பட்டிருக்கும் இக்கொடிய சிந்தனைச் சிறைபற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்வாய்.

இக்கருத்தியல்கள் அரசு யந்திரத்துடன் எவ்வாறு பிணைக்கப்பட்டிருக்கிறது. உழைப்பாளர்களைச் சுரண்டுவதை எவ்வாறு நியாயப்படுத்துகிறது என்பவற்றையே உனக்கு ஓரளவு விரிவாக எழுத எண்ணியுள்ளேன். இவற்றை உடன்புரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படலாம். ஆயினும் காலப் போக்கில் தெளிவாக அறிந்துகொள்வாய் என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கை உண்டு.

அன்பான,
அப்பா.

www.padippakam.com

# 6. மேல்மட்ட அமைப்பு

அன்பிற்கினிய குமரா,

ஒரு மாடிக் கட்டிடம் எவ்வாறு நிற்கிறது. புயல், காற்று, மழைக்காலம் மட்டுமல்ல. பூமி அதிரும் போதும் பெரும்பாலும் விழுந்துவிடாது நிலைக்கிறது. காரணம் அதன் அத்திவாரம், அடித்தளம் அல்லது அடிப்படை அமைப்பு என்றும் கூறலாம்.

இந்த அடித்தளத்தின் உறுதியிலேயே மேற்கட்டுமான அல்லதுமேல் மட்ட அமைப்பான வீடு நிலையாக நிற்கிறது.

இந்த உவமானத்தை வைத்து மார்க்ஸ் சமூக அமைப்பு பற்றிய ஒரு பெரிய உண்மையை விளக்கியுள்ளார்.

சமூக அமைப்பை இறுதியாகத் தீர்மானிப்பது அதன் அடித்தளமாகிய பொருளாதாரம்: அதாவது சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளுமாகும், இவையே சமூகத்தின் அடித்தளமாகும்.

இந்த அடித்தளம் மேல்மட்ட அமைப்பாக அரசியல்—சட்டம் சார்ந்தவைகளையும் கருத்தியல்களையும் தீர்க்கமாக ஏற்படுத்திக் கொள்கிறது.

இம் மேல்மட்ட அமைப்பை இரு மட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. அரசியல் — சட்டம் சார்ந்தவை; — அரசும் சட்ட விதிகளும்.

2. கருத்தியல்கள் :—கல்வி, மதம், ஒழுக்கங்கள், கலை இலக்கியம் முதலியன. (இவை பற்றிப் பின்னர் விரிவாக எழுதுவேன்.)

படிப்பகம்

www.padippakam.com



இந்த அரசியல்— சட்டங்கள், கருத்தியல்கள் அடித்தள மாகிய பொருளாதாரத்தின் மேல் தாக்கம் ஏற்படுத்துவ தில்லை என்று கூறிவிட முடியாது. மார்க்சியக் கோட் பாட்டின்படி அடிதளத்திற்கும் மேல்மட்ட அமைப்புக்குமிடை யில் தன்னியக்க உறவு உண்டு (Relative Autonomy) அல்லது அடித்தளத்தின்மேல் மேல்மட்ட அமைப்பு மீள தாக்கம் (Reciprocal action) ஏற்படுத்துகிறது என்று விரித்து விளக்கப்படுகிறது.

இவ்வாறு பார்க்கும்போது மேலே கூறிய மாடிக் கட்டட உதாரணம் அத்தனை சிறந்ததாகக் கூறுவதற் கில்லை. அரசமரம் அதனிலும் பார்க்க நல்ல உதாரண மாகலாம். அடித்தளமான வேர்களும் அவற்றின் செயல் களுமே மரத்தின் வளர்ச்சியைத் தீர்மானிக்கின்றன. அதே வேளை மேற்புறமரத்தின் செயற்பாடுகளும் அடித்தளத் தைப் பாதிக்கின்றன. தாவரவியல் பாடத்தின்போது நீ இவற்றைக் கற்றிருப்பாய். மரங்களின் இலைகளின் செயற் பாடுகளுக்கு மரத்தின் வேர்களைப் பலமாக வளர்ப்பதில் பெரிய பங்கு உண்டு.

அடித்தளத்திற்கும் மேல்மட்ட அமைப்புக்கும் உள்ள உறவை மற்றோர் உதாரணம் மூலமும் விளக்க விரும்பு கிறேன்.

கல்வி என்ற கருத்தியலை எடுத்துக் கொள்வோம். இன் றைய அரசே பாடசாலைகளையும், கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் நடத்துகிறது. உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்ட முதலாளிகளின், அவரது அரசின் தேவைகளை ஒட்டியே, பல்வேறு பிரிவு களை ஏற்படுத்திக் கல்வி இன்று வழங்கப்படுகிறது. அரசு என்பது உற்பத்திச் சாதனங்களை உடைய முதலாளிகளின் அரசு என்பதை நீ அறிந்திருப்பாய். அரசு பற்றி மேலும் விளக்கமாகப் பின் அறிந்து கொள்வாய்.

படிப்பகம்

www.padippakam.com



உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட முதலாளிகளுக்கு வேண்டிய கூலி அடிமைகளைக் கூலிச் சந்தையில் பெருக்குவதே இன்றைய கல்வியின் பின் நோக்கமுமாகும். கல்வியின் பின் பெற்றோரின் சிறு தொழில்களை மேம்படுத்தி வாழப் பிள்ளைகள் விரும்புவதில்லை. அத்தொழில்களுக்குப் பயன்படும் விஞ்ஞான முறைகளையும் கற்க நாடுவதில்லை. கூலிச் சந்தையில் கிடைக்கும் வேலைக்கே கல்வியின் பின்னர் அலைவதைக் காணலாம்.

இதே கல்வி பின்னர் முதலாளிகளின் யந்திரங்களை ஓட்ட, கணக்கெழுத, நிர்வாகங்களை நடாத்தப் பயன்படுத்தப்படுகிறது, ஆகவேதான் அடித்தளம் மேல்மட்ட அமைப்பான கல்வியைத் தீர்மானித்தபோதும் பின்னர்க் கல்வியும் அடித்தளமான பொருளாதாரத்தின் மேல் தாக்கம் ஏற்படுத்துகிறது; அதற்குச் சேவை செய்கிறது. இரண்டிற்கும் இடையில் தன்னியக்க உறவு உண்டு என்று கூறுகிறோம்.

இதே போலவே மற்றைய கருத்தியல்களையும் பொருத்திப் பார்க்கலாம். இன்றைய சமூக அமைப்புள் மறைந்திருக்கும் பல புதிர்கள் அவ்வேளை வெளிப்படும். மேலும் கடிதங்கள் மூலம் உன் சிந்தனையில் படியும்வரைக் கூற உள்ளேன்.

அன்பான,

அப்பா,



படிப்பகம்

www.padippakam.com

# 7. அரசியல் ஆதிக்கமும் அரசு யந்திரமும்

அன்புக் குமரா,

இன்று அரசு பற்றிய சில அடிப்படைக் கருத்துகளைக் கூறி வைக்க விரும்புகிறேன்.

அரசு என்பது ஒரு பலாத்கார ஒடுக்குமுறை யந்திரம் என லெனின் 'அரசும் புரட்சியும்' என்ற தமது நூலில் கூறியுள்ளார். அந்த நூலை நிச்சயம் நீ படிக்கவேண்டும்.

பொலீஸ், இராணுவத்தாரிடமுள்ள துப்பாக்கிகள் நூதனசாலைப் பொருட்களல்ல.

தொழிலாளர்களை அடக்கி ஒடுக்குவதற்காக முதலாளிகளால் (முன்னர் நிலப்பிரபுக்களாலும்) அமைக்கப்பட்ட பலாத்கார வடிவமான யந்திரமே அரசு ஆகும். இதன் அனுமதியுடனேயே தொழிலாளர்களின் உபரி உழைப்பை முதலாளிகள் அபகரித்துக் கொள்கின்றனர்.

அரசு என்பது அரசுயந்திரத்தையே குறிக்கும். சட்ட விதிகளை நடைமுறைப் படுத்தும் யந்திரம் ஒருபுறம். அதாவது பொலிஸ், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள். இவை தவிர இவற்றால் அடக்கி ஒடுக்கமுடியாத வேளை நேரடியாக ஒடுக்க முன்வரும் இராணுவம், இவற்றுக்கு மேலாக உள்ள அரசின் தலைவர், அரசாங்கம், நிர்வாகம் யாவையும் அரசு உள்ளடக்கியதாகும். இதில் வேடிக்கை யாதெனில் இத்தனை ஒடுக்குமுறைக் கருவிகளும் தொழிலாளர் இரத்தம் பிழிந்து உழைத்த பணத்திலேயே நடைபெறுவதாகும்.

www.padippakam.com



அரசு பற்றிய மார்க்சிச-லெனினிசக் கோட்பாட்டை மீண்டும் நான் தெளிவுபடுத்திக் கூற விரும்புகிறேன். தெளிவாக நீ கிரகித்துக் கொள்ள வேண்டும்.

அரசு என்பது ஒடுக்குமுறையை நடைமுறைப்படுத்தும் பலாத்கார அமைப்பு, முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையில் ஏற்படும் வர்க்கப் போராட்டத்தில் ஆளும் வர்க்கங்களின் நலன் பேணும் அமைப்பு. அரசுயந்திரத்தின் அடிப்படைப் பணி இதுவேயாகும். இந்த உண்மைகளை நீ மறந்துவிடக் கூடாது என்பதற்காகவே மீண்டும் அழுத்தமாகக் கூறி வைக்கிறேன்.

1971 இல் இலங்கையில் நடைபெற்ற கிளர்ச்சி அடக்கப்பட்டது பற்றி நீ அறிந்திருப்பாய். அவ்வேளை நீ சிறுவனே. 1981 இலும் 1983 யூலையிலும் நடைபெற்ற இன ஒடுக்குமுறையின் போதும் அரசு என்பதன் சுய உருவத்தை நீ கண்டிருப்பாய்.

ஜனநாயக அரசியல் என்ற போர்வையில் உண்மையில் நடைபெறுவது முதலாளித்துவச் சர்வாதிகாரமேயாகும்.

இங்கு மற்றுமொரு வேறுபாட்டைக் கூறிவைக்க விரும்புகிறேன். அரசு யந்திரம் என்பதையும் அரசு ஆதிக்கம் என்பதையும் பிரித்தறியத் தெரிந்து கொள்ள வேண்டும். பாட்டாளிகள் முதலாளிகளுக்கெதிராக நடத்தும் வர்க்கப் போராட்டம் முதலில் அரசு ஆதிக்கத்தைக் கைப்பற்றுவதற்கேயாகும்.

அரசு ஆதிக்கத்தைக் கைப்பற்றிய பின்னரே அரசு யந்திரத்தை உடைத்தெறிய முடியும்.

பல புரட்சிகளின் தோல்வியைக் கண்டார் லெனின்; தோல்வியின் காரணங்களை ஆராய்ந்தார். பின்னரே முடிவாகக் கூறினார்: 'புரட்சி என்பது அரசு யந்திரத்தின் மேல் கை வைப்பதல்ல; அரசு யந்திரத்தை உடைத்தெறிவதாகும்.'

அரசு ஆதிக்கத்தைக் கைப்பற்றிய பின்னரே அரசு யந்திரத்தை உடைத்தெறியும் பணியைத் தொடங்க முடியும்.

www.padippakam.com



ரனெனில் அரசு யந்திரத்தின் பல பகுதிகள் கருத்திய களாகச் சிந்தனையில் வேரூன்றி உள்ளன. அவற்றை களைவது அத்தனை சுலபமல்ல என்பதைப் பின்னர் விரிவாக அறிந்து கொள்வாய்.

1917 அக்டோபரில் சோவியத் ரஷ்யாவில் லெனி தலைமையில் சோசலிசப் புரட்சி நடந்ததல்லவா? அ வேளையும் அரசியல் ஆதிக்கத்தையே பாட்டாளிகள் முதலி கைப்பற்றினர். அரசு யந்திரத்தின் பல பகுதிகளை உடனே உடைத்தெறிய முடியாத நிலையை லெனின் அடிக்கடி கூ வந்தார். சிறு உடைமை விவசாயிகளே தடையாக இரு தனர். நிலப்பிரபுக்களிலும் பார்க்க இவர்களே புரட்சி எடுத்துச் செல்வதற்கு, அரசு யந்திரத்தை உடைத்தெ வதற்கு அங்கு நந்தியாக இருந்தனர். எங்கும் எதிரியா இருக்கலாம்.

1871 இல் பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிஸி தொழிலாளர்கள் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப் பற்றின சோஷலிச ஆட்சியை அமைக்க முயன்றனர். பாரிஸ் கம்யூ என வரலாற்றில் அது பெயர் பெற்றது. இந்த ஆட்சி நாட்கள் நீடித்தது. தொழிலாளர்கள் வங்கிகள், அ நிர்வாகம் ஆகியவற்றை உடனே தம் ஆதிக்கத்தில் எடுக்க தவறினர். அதனால் அவர்களது ஆட்சி வீழ்ச்சி அடைந்த இத்தோல்விக்குரிய காரணங்களை நீ பின்னர் விரிவா கற்பாய்.

அன்பான,
அப்பா.

www.padippakam.com

# 8. அரசு யந்திரம்

அன்பான குமரா,

அரசு யந்திரத்தை நாம் இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம்.

ஒன்று ஒடுக்குமுறை சார்ந்த அரசு யந்திரம். மற்றது கருத்தியல் சார்ந்த அரசு யந்திரம்.

ஒடுக்குமுறை சார்ந்த அமைப்புகளில் இராணுவம், பொலிஸ், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் ஆகியவற்றைக் கூறலாம். இவையெல்லாம் முதலாளிகளை அடக்கி ஒடுக்க அல்ல; பெரும்பான்மையினரான தொழிலாளி, விவசாயிகளை அடக்கி ஒடுக்க என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். ஒடுக்குமுறை என்னும் போது வன்முறை சார்ந்த ஒடுக்குமுறையையே குறிப்பிடுகிறேன்.

இதில் வேடிக்கை என்னவெனில் சமுதாயம் ஒழுங்காக நடைபெறவும் மறு உற்பத்தி (உற்பத்திச் சாதனங்களும் உற்பத்தி உறவுகளும்) முறையாகத் தொடரவும் இந்த அமைப்புகள் அவசியமானவை என்ற கருத்தையும் முதலாளிகள் நிலைபெறச் செய்து விடுகிறார்கள். அவை கருத்தியலாகவும் செயல்பட்டுவிடுகின்றன.

கருத்தியல் சார்ந்த அரசு யந்திரம் வன்முறை சார்ந்தது அல்ல என முற்று முழுதாகக் கூறமுடியாது. அவை கூடப் பல்வேறு வகையில் துன்பம் விளைவிக்கக் கூடியதே. உதாரணமாகக் கல்வி ஒரு வன்முறையற்ற கருத்தியல். ஆயினும் பாடசாலைகளில் தண்டித்தல், வெளியேற்றல்

படிப்பகம்

www.padippakam.com



என்று நடைபெறுவதில்லையா? இவை பற்றிப் பின்னர் விரிவாக அறிந்து கொள்வாய்.

கருத்தியல் அரசு யந்திரத்தின் கீழ்ப் பின்வருவனவற்றைத் தற்போது நிரைபடுத்த விரும்புகிறேன்.

மதம், கல்வி, சட்டங்கள், அரசியல் தொடர்புச் சாதனங்கள் (பத்திரிகை, ரேடியோ, டிவி முதலியன) கலை இலக்கியம், விளையாட்டு, குடும்பம், சாதி, தொழிற்சங்கம், சித்தாந்தம்.

ஒடுக்குமுறை சார்ந்த அரசு யந்திரம் அரசாங்கத்தைச் சார்ந்ததாயுள்ளது. மேற்கூறிய கருத்தியல் சார்ந்தவற்றில் பல தனியார் அமைப்புகளைச் சார்ந்ததாகும். உதாரணமாகக் கோவில்கள், சில கல்வி நிலையங்கள், சில பத்திரிகைகள், கலை இலக்கியங்கள், குடும்பம் ஆகியவற்றைக் கூறலாம். ஆயினும் இவை அரசு யந்திரத்திற்கு அப்பாற்பட்டவை என்று கூற முடியாது.

ஒடுக்குமுறை அரசு யந்திரம் வன்முறையாகச் செயல்படுகிறது. கருத்தியல் அரசு யந்திரம் கருத்தியலாகச் செயல்படுகிறது.

இங்கு ஒரு வினாவை மீண்டும் எழுப்புவோம்.

உற்பத்தி உறவின் மறு உற்பத்தி எவ்வாறு உறுதிப்படுத்தப்படுகிறது?

ஆரம்பத்தில் நாம் எடுத்துக்கொண்ட அடித்தளம், மேல் மட்ட அமைப்பை வைத்துக்கொண்டே பதில் கூறுவோம்.

அரசு யந்திரத்தாலும் (ஒடுக்குமுறை சார்ந்த) கருத்தியல்களினாலுமே உற்பத்தி உறவுகளின் மறு உற்பத்தி உறுதியாக்கப்படுகிறது.

ஒடுக்குமுறை சார்ந்த அரசு யந்திரம் ஒருமுகப்பட்டதாகும். ஆளும் வர்க்கத்தின் அதிகாரத்தில் உள்ளது. அவ் வர்க்கத்தின் பிரதிநிதிகளால் நடைமுறைப்படுத்தப்படு

படிப்பகம்

www.padippakam.com



கிறது. கருத்தியல் அரசு யந்திரம் விரிந்தது. பல முரண்பாடு களையும் கொண்டது.

இன்று இருப்பதுபோல் மன்னராட்சிக் காலத்தில் போலிஸ், முப்படைகள், நிர்வாகம் இருக்கவில்லையே என நீ கூறலாம். அது உண்மையே. அரசை எதிர்த்த வன்முறைகள் வளர அரசும் தம் வர்க்கத்தைக் காப்பாற்ற வன்முறை அரசு யந்திரத்தை வலிதாக்குகிறது, புரட்சியை எவ்வளவு காலம் தள்ளிப்போடுகிறீர்களோ அத்தனைக்கு அரசும் தன்னைப் பலப்படுத்திக் கொண்டே இருக்கும் என்பதை மறந்து விடாதே.

மன்னர்களது ஆட்சிக் காலத்திற்கும் இன்றைய நிலைக்கும் அதிக வேறுபாடு கிடையாது. அந்த ஒடுக்கு முறை ஒருமுகப்பட்டிருந்தது. கருத்தியல் அரசு யந்திரம் இன்றைய தேவையை ஒட்டிவிரிந்துள்ளது. மேல்நாடுகளில் கிறித்துவ தேவாலயங்கள் ஒருகாலக் கட்டத்தில் குடும்பம், கல்வி, பண்பாடு ஆகியவற்றைத் தம் கட்டுப்பாட்டுள் வைத்திருந்தன. இங்குக் கோவில்கள் செயலாற்றின. இன்று கல்வி விரிந்து பரந்து கருத்தியல்களின் முக்கிய களமாக அமைந்துள்ளது. மறு உற்பத்தியின் அடித்தளமாக வும் மாறியுள்ளது,

அன்பான,

அப்பா.

www.padippakam.com

# 9. கல்வி

அன்பிற்கினிய குமரனுக்கு,

மேல்மட்ட அமைப்பைச் சார்ந்த கருத்தியல்களில் கல்வி ஒன்று என்பதை நீ அறிவாய். முதலாளித்துவ அமைப்பில் மிக முக்கியமான கருத்தியல் இது என்று கூறினும் தவறில்லை.

மேல்நாடுகளில் முன்னர்க் கிறித்தவ தேவாலயங்களின் ஆதிக்கத்திலிருந்த அரசு யந்திரத்தை முதலாளித்துவ சமூக அமைப்பு கல்வியின் மூலமாகவே உடைத்து எடுத்தது.

கல்வி என்ற கருத்தியலை முதன்மைப்படுத்துவதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

எல்லாக் கருத்தியல் அரசு யந்திரங்களும் ஒரே முடிவுக்கே செல்கின்றன—அது உற்பத்தி உறவுகளின் மறு உற்பத்தி—அதாவது முதலாளித்துவச் சுரண்டல் உறவு. அதற்குச் சேவை செய்யும் கல்வி மிக அமைதியான ஆழமான கருத்தியலாகும்.

சிறுவயதிலேயே குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். (நாலு வயதில் அம்மா உன்னை 'நேசரி'ப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டார்.) பின்னர்ப் பல வருடங்களாகக் குடும்பத்திற்கும் பள்ளிக்குமிடையில் பிள்ளைகள் திணிக்கப்படுகிறார்கள்; நெரிக்கப்படுகிறார்கள். நடைமுறையிலுள்ள கருத்தியல் சார்பாகவே தமிழ், ஆங்கிலம், கணக்கு, வரலாறு, விஞ்ஞானப் பாடங்கள், இலக்கியம் யாவும் கற்பிக்கப்படுகின்றன.

www.padippakam.com



இவை தவிர, குடியியல், சித்தாந்தம், சமயம் ஆகியவையும் கற்பிக்கப்படுகின்றன. 14-18 வயது வரையில் கற்ற கல்வியை விட்டுப் பெரும்பாலானவர்கள் உற்பத்தியில் ஈடுபட, தொழிலாளராக, விவசாயிகளாகத் தள்ளப்படுகின்றனர்.

மற்றும் ஒரு பகுதியினர் மேலும் கல்வியைத் தொடர்கின்றனர் தொழில் நுட்பவியலாளராகவும் குமாஸ்தாக்களாகவும் நடுத்தர நிர்வாகிகளாகவும் முதலாளிகளுக்குச் சேவை புரிகின்றனர்.

மேலும் ஒரு பகுதியினர் சுரண்டுபவரின் ஏஜெண்டுகளாகின்றனர்; முதலாளிகளின் மானேஜர்களாகின்றனர்.

இன்னொரு பிரிவினர் இராணுவம், பொலிஸ், அரசியல், நிர்வாகம் ஆகியவற்றில் நுழைந்து ஒடுக்குமுறையின் ஏஜெண்டுகளாகின்றனர். ஒரு சிலர் மதப் பிரச்சாரகர்களாகவும் மதகுருக்களாகவும் சித்தாந்தவாதிகளாகவும் நடைமுறையிலுள்ள கருத்தியல்களை நீதிப்படுத்தி, நிலைநிறுத்துகின்றனர்.

பாடசாலைகள் ஆலயங்களாக இன்று பெற்றோரால் கருதப்படுகின்றன. பிள்ளைகளுக்கு நீதியையும் நேர்மையையும் ஒழுக்கத்தையும் போதிப்பவர்களாக ஆசிரியர்கள் மதிக்கப்படுகிறார்கள். ஆனால் நடைபெறுவது என்ன? இன்றைய நடைமுறையிலுள்ள கருத்தியல்களையே அவர்கள் பாட நூல்கள் மூலமும் தம் அனுபவமாகவும் பயிற்றுகின்றனர்.

நடைமுறையிலுள்ள கருத்தியல்களுக்கு எதிராகக் கற்பிக்க முயலும் ஆசிரியர்கள் மிக அரிது. அவர்கள் தமது உழைப்பையே இழந்து வெளியேற நேரலாம். எவ்வாறாயினும் அவ்வாறு கற்பிக்க முன் வருபவர்கள் வீரர்களே.

ஆனால் உங்கள் பள்ளியில் அப்படியான ஆசிரியர் எவராவது உள்ளாரா? பெரும்பாலான ஆசிரியர் மாணவர்

படிப்பகம்

www.padippakam.com



கள்மேல் தாம் கவனம் செலுத்துவதை நிரூபிக்க இடையிடை பெற்றோரையே பள்ளிக்கு அழைக்கின்றனர். பிள்ளைகளின் குழப்படி, குறும்பு பற்றியும் ஒழுக்க வரம்புகளை மீறுவது பற்றியும் கூறிக் கல்வியில் குறிப்பிட்ட பாடங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அறிவுரை பகர்கின்றனர்.

ஆசிரியர்களே நடைமுறையிலுள்ள கருத்தியல்களுக்குப் பாதுகாவலராகிவிட்டனர்.

ஒருதடவை உன் இலக்கிய ஆசிரியர் என்னைக் கண்டபோது பல குறைகளைக் கூறினார். உன்னைக் கண்டித்துத் திருத்தும்படியும் சொன்னார். நான் அவரது கருத்தியல் அடிமை நிலையை எண்ணி உள்ளூரச் சிரித்துக்கொண்டேன். உனக்கு எதுவுமே சொல்லவில்லை. ஏனெனில் நீ ஒரு சுதந்திர மனிதனாக, நடைமுறையிலுள்ள கருத்தியல்களை உடைத்தெறிபவனாக வளரவேண்டும். அதுவே என் அவா.

கல்வியின் தேவை இரண்டு விஷயத்திற்குப் பயன்படவேண்டும். ஒன்று சரியான அறிவு. மற்றது உற்பத்தியில் பங்குபற்ற உதவவேண்டும். இன்று பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு எங்கள் நாட்டில் பல லட்சம் வாலிபர்கள் நடுத்தெருவில் நிற்கின்றனர். அல்லது ஆயுதம் எடுத்தே அரசை எதிர்க்க ஆரம்பித்துள்ளனர். திட்டமிடாத வெறும் கல்வி இவ்வழியையே காட்டும்.

அன்பான,

அப்பா.

# 10. மதம்

அன்பு மகனுக்கு,

சிறு வயதிலிருந்தே அம்மா உனக்குத் தெய்வங்கள் பற்றிப் பல கதைகள் சொல்லித் தந்து விட்டார். வீட்டில் நாள்தோறும் வணங்கவும் திருநீறு பூசவும் கட்டுப்பாடாகப் பழக்கிவிட்டார். வெள்ளிக்கிழமை தோறும் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார். நீ பிறந்த 31வது நாளே பிராமணரை அழைத்துப் பூசை நடைபெற்றது. மறுநாள் கோவிலுக்குத் தூக்கிச் சென்று, தெய்வ அர்ச்சனை செய்தார்.

இவ்வாறெல்லாம் சமூகத்தில் மதவழிபாட்டைச் சிறு வயதிலேயே ஆரம்பித்து விடுகின்றனர். பிறப்பு, திருமணம் மரணத்தின்போதெல்லாம் மதச்சடங்குகள் நடைபெறு கின்றன. கோவில் திருவிழாக் காலங்களிலெல்லாம் சிறப் பான மத வழிபாடுகள் நடைபெறுகின்றன. பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற சமய நாட்களில் விசேட வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவ்வாறு மதம் சமுக வாழ்வோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது.

நிலப்பிரபுத்துவக் காலத்திலேயே மதம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது. தமிழ் நாட்டில் மன்னர்கள் அரண்மனைகள் கட்டுவதிலும் பார்க்க கோவில்களைக் கட்டுவதிலேயே உபரி உழைப்பு யாவற்றையும் பயன் படுத்தினர். இசை, நடனம், சிற்பம் ஆகிய கலைகளை யெல்லாம் கோவிலை ஒட்டியே வளர்த்தனர்.

பள்ளியில் சமயப்பாடம் கட்டாயப் பாடமாகப் போதிக்கப் படுகிறது. புராண, இதிகாசக் கதைகளையெல்லாம்

www.padippakam.com



உண்மையாக நடந்ததுபோல் சொல்லித் தருகிறார்கள். எதிர்த்துப் பகுத்தறிவு பேசுவதே குற்றம். பள்ளி மத வழிபாட்டுடனேயே ஆரம்பமாகிறது. இது தவிரக் கூட்டங்கள் பிற விசேட வைபவங்களெல்லாம் மதவழிபாட்டுடனேயே தொடங்குகின்றன. இந்து, பௌத்தம், இஸ்லாம், கத்தோலிக்கம், கிறித்துவம் என மத அடிப்படையில் மக்கள் பிரிந்து நிற்கின்றனர். இவர்களுக்கிடையே அடிக்கடி மோதல்கள் வேறு ஏற்படுகின்றன.

ஒவ்வொரு மதத்தவரும் தாம் வணங்கும் கடவுளே உண்மையானவர் என நம்புகின்றனர். மதம் என்ற கருத்தியல் எத்தனை பலம் வாய்ந்தது என்று பார்த்தாயா?

மேல்நாட்டவர் இதற்கு விதிவிலக்கல்ல. எமது கோவில்களிலும் பார்க்க கிறித்துவத் தேவாலயங்கள் மிகவும் பலம் வாய்ந்தவையாக சில நூற்றாண்டுகளின் முன்வரை இருந்தன. சேர்ச்சுகளே நாடுகளை ஆண்ட வரலாறு உண்டு குடும்பங்கள் இன்றும் சேர்ச்சுகளோடு கட்டுப்பட்டுள்ளன. கத்தோலிக்க மதம் மிக இறுக்கமான அமைப்புகளையும் கட்டுப்பாடுகளையும் கொண்டது; போப்பாண்டவர் கடவுளின் பிரதிநிதியாக இன்றும் கருதப்படுகிறார்.

அரசுகள் மதம் சார்ந்திருப்பதை இன்றும் காணலாம். இலங்கை அரசே பௌத்த மத அரசு எனப் பெருமையாகக் கூறிக்கொள்கிறது.

இன்றைய ஆளும் முதலாளித்துவ வர்க்கம் மதம் என்ற கருத்தியலைப் பேணி வளர்க்கிறது. கோவில்கள், மத ஸ்தாபனங்களைப் பராமரிக்கிறது.

'முற்பிறப்பில் புண்ணியம் செய்தவர்களே பணக்காரராக, முதலாளிகளாக வருகின்றனர்; பாவம் செய்தவர் ஏழைகளாக, தொழிலாளராகக் கஷ்டப்படுகின்றனர். இப்பிறவியில் அடக்கமாக, ஒடுங்கி வாழ்ந்து உழைத்தால் மறுபிறவியில் சிறப்பாக வாழ்வீர்கள்.'

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு மதங்கள் போதிக்கின்றன. உற்பத்தி உறவு களின் மறு உற்பத்திக்கு மதம் என்ற கருத்தியல் எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பார்த்தாயா?

'கடமையைச் செய். பலனை எதிர் பார்க்காதே' எனவும் 'மெய்வருத்தக் கூலி தரும்' எனவும் உழைக்கும் வர்க்கத் தவர்களுக்குப் போதிக்கப்படுகிறது.

மதப் பிடியிலிருந்து உன்னையே என்னால் வெற்றி கொள்ள முடியவில்லை.

மதம் ஒரு மயக்க மூட்டும் வெறி தரக்கூடியது. அதனால்தான் 'மதம் ஒரு அபினி' என மார்க்சும் கூறினார்.

'மனித வரலாற்றின் ஒரு காலக் கட்டத்தில் தன் தேவைக்காகக் கடவுளை (கருத்தியலை) மனிதன் படைத் தான். தனக்குத் தேவையில்லை என உணரும்போது தூக்கி எறிந்து விடுவான்' இவ்வாறு மாவோ கூறினார் அத்தனைச் சீக்கிரமாக இக்கருத்தியலிருந்து மனிதன் விடுபட்டுவிடுவான் என்று கூறுவதற்கில்லை. சோசலிச புரட்சியின் பின்னரும் ஒரிரு தலைமுறைகளுக்கு இக்கருத் தியல் கொண்டு செல்லப்படினும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

மனித வரலாற்றில் 'தெய்வம் என்றதோர் சித்த முண்டாகி' மூவாயிரம் ஆண்டுகள் வரையிலேயே ஆ யுள்ளன. 'கடவுளை நம்பு' என்றுதான் கூறுவார்கள் நம்பிக்கையே கடவுள். பகுத்தறிவுக்கு அங்கே இடமில்லை கடவுள் இல்லாத மதங்களும் உள்ளன. சமணம்; புத்தம்.

அன்பான,

அப்பா.

படிப்பகம்

www.padippakam.com

# 11. அரசியல்

அன்பான குமரா,

அரசு பற்றி முன்பு விரிவாக ஆராய்ந்து விட்டோம். இங்கு அரசியல் என்ற கருத்தியல் பற்றியே கூறப் போகின்றேன்.

இன்று நிலவும் அரசியல் முறைகள், அரசியல் அமைப்புகள், மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் பற்றி நீ ஓரளவு அறிந்திருப்பாய்.

சில நாடுகளில் ஜனாதிபதி ஆட்சிமுறையும் பல நாடுகளில் ஜனாதிபதி பொம்மையாக இருக்க முதலமைச்சரின் தலைமையில் ஆட்சியும் நடைபெறுகிறது. இவற்றுள் வேறுபாடு குறைவு. மக்களாட்சி, சோசலிச ஆட்சி என்ற பெயர்களில் முதலாளித்துவ நாடுகளில் வயது வந்தோருக்கு வாக்குரிமை அளித்தது; தேர்தல் முறையாக அரசியற்கட்சிகளுக்கு வாக்குரிமை தரப்படுகிறது. 51% தொகுதிகளைப் பெற்றவர்கள் 49% மக்களையும் ஆள உரிமை பெறுகின்றனர். இம்முறையில் வேடிக்கை யாதெனில் மொத்த வாக்காளரில் என்ன விகிதத்தினர் வாக்களிக்க வேண்டும் என்பதில் வரைவு கிடையாது. இந்த உதாரணப்படி மொத்த வாக்காளரில் 50% மக்கள் வாக்களிக்கும்போது 26% மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவரே முழு மக்களையும் ஆளத் தகுதி பெறுகின்றனர். இதுவே முதலாளித்துவம் காட்டும் ஜனநாயகம்.

முதலாவதாக இன்றைய அரசியல் பற்றிய கருத்தியலை எல்லோரும் ஏற்கும்படிச் செய்கின்றனர். பாராளுமன்றத் தேர்தல் முறை, அபிப்பிராய வாக்கெடுப்பு முறை ஆகியவை ஜனநாயகம் வழங்கும் நல்ல முறைகள் என நம்பச் செய்து விடுகின்றனர். முன் கூறியது போல

www.padippakam.com



51% மானவர்கள் 49% மானவர்களை அடக்கி ஒடுக்க, நசுக்க உரிமையுள்ளவர்கள் என்ற கருத்தியலைப் பரப்பி விட்டனர்; நடைமுறையில் தேர்தல் முடிந்தபின் 95% உழைக்கும் மக்கள் நசுக்கப்படுகின்றனர். இதனால் சிறு பான்மைத் தேசிய இனத்தவர்கள் எவ்வாறு துன்பமடைய வேண்டியுள்ளது என்பதை இலங்கையிலேயே பார்த்தோம்!

வயது வந்தோருக்கு வாக்குரிமை என்று கூறிச் சொந் துள்ளவர்களுக்கும் சொத்தில்லாத பாட்டாளிகளுக்கும் ஒரே வாக்குரிமை உண்டு எனச் சமன்படுத்துகின்றனர். தேர்தலின்போது பணம், சாதி, மதம், கட்சி என்ற பெயரில் வாக்குரிமைகள், வாங்கப்படுவதைப் பார்க் கிறோம்.

தேர்தல் மூலம் பாட்டாளிகள் தமது அரசை அமைத்த தாக வரலாறு கிடையாது. முதலாளிகளே கட்சிகளாகப் பிரிந்து நின்று, பணம் செலவு செய்து, வாக்குகளை வாங்கி அரசாட்சியைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். பின்னர் ஆளும் கட்சி அமைச்சரவையை அமைத்து முதலாளிகளின் தேவையை ஒட்டி ஆட்சியை நடத்துகின்றனர். அமைச்சரவை யிலும் குழுக்கள் பிரிந்திருப்பதைக் காணலாம். பின் முதலமைச்சர் அமைச்சரவை உறுப்பினர் ஒரு சிலருடன் இணைந்து சர்வாதிகார ஆட்சி நடத்துவதைக் காண லாம்.

இத்தகைய அரசியல் முறை நீதியானது, நேர்மை யானது, ஜனநாயகமானது, மக்கள் அனைவரது அனுமதி யுடன் நடைபெறுவது என்று கல்வி நிலையங்கள், பத்திரிக்கைகள், பிற மக்கள் தொடர்புச் சாதனங்கள் யாவும் நீதிப்படுத்துகின்றன.

ஆகவே அரசியல் கருத்தியல் முதலாளிகள் தம் சுரண் டலைத் தொடர்ந்து நடத்த உதவுகிறது. அதே வேளை முதலாளிகளும் இதே அரசியலை ஆதரித்து வளர்க் கின்றனர்.

www.padippakam.com



முன் கூறிய எல்லாக் கருத்தியல்களும் அரசியலுக்கு அப்பாற்பட்டவையல்ல. கலை இலக்கியங்களையும் உள்ளடக்கியே கூறுகிறேன்.

முதலாளித்துவ அரசின் கருத்தியலை எதிர்த்து நிற்பது புரட்சிகர அரசியலேயாகும்.

இன்றைய அரசியலாரின் தனிச்சிறப்பு என்ன தெரியுமா? உழைத்து இன்னலுறும் உழைக்கும் வார்க்கத்தவரையே, தேர்தல் என்ற ஏமாற்று வித்தையை நம்பச் செய்து, அவ்வர்க்கத்தவர் தமது நலனுக்கு எதிராகவே வாக்களிக்கச் செய்வதாகும்.

புரட்சிகர அரசியல் மூலம் மட்டுமே அடித்தளத்தை அல்லது அடிப்படை அமைப்பை மாற்றியமைக்க முடியும். சமுதாயத்தின் அடித்தளமாக உள்ள உற்பத்திச் சக்திகளைத் தனியார் ஆதிக்கத்திலிருந்து சமூக உடைமை ஆக்கமுடியும். உற்பத்தியும் சமூக உற்பத்தியாகும் போது உற்பத்தி உறவுகளும் மாற்றமடைகின்றன. கூலி அடிமை என்ற இறுதி அடிமைத்தனமும் சமுதாயத்திலிருந்து அப்போதுதான் ஒழிக்கப்படும்.

அன்பான,
அப்பா.

படிப்பகம்

www.padippakam.com

# 12. சட்டம்

அன்பு மகனே,

சட்டம் இருவகைப்படும். ஒன்று ஒடுக்கு முறையும் வன்முறையும் சார்ந்தது. இதுபற்றி முன் கடிதத்திலும் குறிப்பிட்டேன். மற்றது கருத்தியல் சார்ந்தது.

அரசு இயற்றும் சட்ட விதிகள் சமூகத்தின் நன்மைக்காக என்ற கருத்து பல்வேறு வகையாக மக்கள் மனத்தில் திணிக்கப்படுகிறது. அவர்களும் நம்புகின்றனர். சட்ட விதிகளுக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டும் என்பதைப் பள்ளியில் ஆசிரியர்கள் நயமாகவும் பிரம்பு கொண்டும் பள்ளிப் பாடங்கள் மூலமாகவும் கற்பித்து விடுகின்றனர்.

பசித்தாலும் திருடாதே, பிறர் சொத்தைத் தீண்டுவதே தண்டிக்கப்பட வேண்டியது. நீதி மன்றங்கள் சட்ட விதிகளுக்கமைய நீதி வழங்குகின்றன என்ற கருத்துகள் மக்களைக் கட்டி வைத்திருக்கின்றன.

'சாக்ரட்டீசே நீதிமன்றத் தீர்ப்பை மதித்து நஞ்சுண்டார்; மகாத்மாகாந்தி சிறை சென்றார்.'

இவ்வாறு கதைகளைக் கூறி இன்றைய சட்ட விதிகளுக்கமையக் கீழ்ப்பணிந்து நடக்கவேண்டும் எனப் போதிக்கின்றனர்.

சட்டங்கள் யாவும் உற்பத்திச் சாதனங்களையும் சொத்துகளையும் உடையவர்களைப் பாதுகாப்பதற்காகவே ஆக்கப்படுகின்றன. பெரும்பாலான ஏழைத் தொழிலாள, விவசாயிகளை அடக்கி ஒடுக்கவும் முதலாளிகளின் சுரண்டலை நீதிப்படுத்தவுமே சட்டவிதிகள் அமைக்கப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு சட்டங்கள் அடிப்படை அமைப்பான பொருளாதாரத்திற்குச் சேவை செய்கின்றன. ஆளும் வர்க்கமும் உடைமை வர்க்கத்திற்குப் பயன்படச் சட்டங்களை ஆக்கிக் கொள்கின்றது.

'வழமையே சட்டவிதிகள்' என்று கூறுவர். சட்ட நூல்களில் எழுதப்படாத சட்டங்களும் அடித்தளத்திற்குச் சேவை செய்கின்றன. பர்வ புண்ணியங்களுக்கு அஞ்சி நட, பொறாமைப்படாதே, பேராசைப்படாதே, நீதிக்குத் தலை வணங்கு, ஊரோடு ஒத்து வாழ்—இவ்வாறான பல கருத்துகள் வாழ்வோடு இணைந்த சட்ட விதிகளாக நிலவுகின்றன. அவற்றை மீறியும் சமூகத்தில் வாழ முடியாது போய் விடுகிறது. எழுத்தில் இல்லாத கருத்தியற் சட்டங்களும் மிகவும் பலம் வாய்ந்தவை.

ஆளும் வர்க்கத்தால் ஆக்கப்படும் சட்டங்களினால் பாதிக்கப்படுபவர்கள் ஏழைத் தொழிலாள, விவசாயிகளே. எந்தச் சிறைச்சாலையைச் சென்று பார்ப்பினும் இந்த உண்மை தெரியும்.

செல்வந்தர், முதலாளிகள் சட்ட விதிகளிலிருந்து தமது அரசியலாதிக்கத்தை வைத்தே தப்பிக்கொள்வர். தவறினும் சட்ட நிபுணர்களை வாதிடச்செய்து தப்பி விடுவர். அதற்கேற்றபடியே சட்ட விதிகளும் ஆக்கப்படுகின்றன. நீதியை வழங்குபவர்களும் ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தவர்களே. ஒரு சில முதலாளிகள் தண்டிக்கப்படுவதைப் பெரிதுபடுத்திச் 'சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படுகின்றன' எனப் பிரச்சாரம் செய்கின்றனர்.

தொழிலாள, விவசாயிகளிடம் சிறந்த வழக்கறிஞரை நியமித்து மன்றங்களில் வழக்காட பணம் கிடையாது. அவர்கள் குற்றவாளி எனக் கூறித் தண்டனை பெற்றுச் சட்ட விதிகளைக் காப்பாற்றுகின்றனர்! நீதிமன்றங்களில் சென்று பார்ப்பின் வழக்காடப் பணமின்றித்

www.padippakam.com



தொழிலாள, விவசாயிகள் தாம் 'குற்றவாளி' எனக்கூறிச் சிறைத் தண்டனையை ஏற்பதைக் காணலாம். பிணையாக நிற்க ஆளின்றி, பிணைப்பணம் கட்டுதற்குப் பணமின்றி, தொழிலாள, விவசாயிகள் சிறையிலிருந்து பிணைமூலம் வெளியே வர வாய்ப்பு இருந்தும் வரமுடியாது அல்லற் படுவதையும் காணலாம்.

நீதி மன்றத்தில் வழக்காடுவதில் தமக்கு உள்ள சிரமங்களை அறிந்து தொழிலாளர், விவசாயிகளைக் 'குற்றவாளி எனக் கூறு. குறைந்த தண்டனை பெற்றுத் தருகிறேன்' எனப் பொலிசார் கூறி ஏமாற்றியும் உள்ளே தள்ளி விடுகின்றனர். ஒருவனைச் சிறைக்கனுப்பியதும் பொலிசாருக்குப் பாராட்டு, பதவி உயர்வு. இந்தக் கொடுமைகளை வளர்ந்தபின் நீ நன்கு காண்பாய்.

சிறைச்சாலையில் கூட வகுப்புகளுண்டு. சாதியாலல்ல; பணத்தால். பண வசதியானவருக்கு முதல் வகுப்பு. ஏழை மக்களுக்கு மூன்றாவது வகுப்பு. நீதிக்கும் பணத்திற்குமுள்ள தொடர்புகளைப் பார்த்தாயா?

ஆளும் வர்க்கத்தவர் தமக்கு வாய்ப்பாகவே சட்டங்களை ஆக்குகின்றனர். அவற்றிற்கு மக்கள் கட்டுப்பட வேண்டும் என்ற கருத்தையும் நிலை நாட்டி விடுகின்றனர். சட்டம், ஒழுங்குமுறை அரசின் கடமைகள் என்ற பெயரில் நடைபெறும் அரசின் வன்முறைகள் அனைத்தும் நீதிப் படுத்தப்படுகின்றன.

அன்பான,

அப்பா.

படிப்பகம்

www.padippakam.com

# 13. குடும்பம்

அன்பான குமரா,

எங்கள் குடும்பத்தில் நீ ஓர் அங்கத்தவனாக இருக்கிறாய். அதேபோலவே ஒவ்வொருவரும் சமூகத்தின் சிறுகூறாக உள்ள குடும்பத்தோடு ஒட்டியுள்ளனர்.

உனது பெயரைக்கூட என்னுடைய பெயரோடு இணைத்தே நீ எழுதுகிறாய். க. குமரன் என்றே கையெழுத்திடுகிறாய். எங்கே எதற்குச் சென்றாலும் அப்பா பெயர், அம்மா பெயர், முகவரி கூறவேண்டும். அப்பா பெயர் கூற முடியாவிட்டால், சமூக அந்தஸ்தே குறைந்து விடுகிறது. எத்தனை சகோதரர், எங்குப் படிக்கிறார்கள் என்று காண்பவர்கள் உன்னைக் கேட்பதில்லையா!

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று பரம்பரையாகக் கூறி வருகின்றனர். பெற்றோருக்கு, குடும்பத்திலுள்ள பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும், அவர்களுக்கு வணக்கம் தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லி நீ தெரிந்து கொள்ளவில்லை. நீயாகவே பார்த்துப் பழகிக் கொண்டாய்.

என் உடன் பிறந்தவர், பாட்டன், கொள்ளுப் பாட்டன் பற்றியெல்லாம் நீ விசாரித்து அறிந்து கொண்டாய். அவர்களைப் பற்றிப் பெருமைப்பட்டும் கொள்வாய். அம்மா தன் பாட்டா முதன் முதல் பி. ஏ. பட்டம் பெற்றவர் என அடிக்கடிப் பெருமையாகக் கூறிக் கொள்வார்.

படிப்பகம்

www.padippakam.com



சகோதரியரது வாழ்க்கைப் பொறுப்பு ஆண் பிள்ளைகளது என்ற மரபும் குடும்பத்தில் உள்ளது. அவர்களது சீதனத்திற்கு உழைத்துக் கட்டிக்கொடுத்த பின்னரே ஆண்கள் திருமணம் செய்து கொள்வதைக் காணலாம்.

பெற்றார் இறந்த பின்னர் அவர் உருவப் படத்தை வைத்து வணங்குவதும் தமிழர் குடும்பங்களில் வழமையாகும். அவர்கள் இறந்த நாள், திதி என்று ஆண்டு தோறும் சடங்கு செய்து நினைவு கூறுவதும் ஆடி அமாவாசையின்போது தந்தைக்காகவும் சித்திரைப் பூரணையின்போது தாயாருக்காகவும் விரதம் இருப்பதும் குடும்பங்களில் நடைபெறுகின்றன.

முதலாளித்துவத்தில் குடும்பம் உடைவதாகக் கூறிய போதும் மேல்நாடுகளிலும் கிறிஸ்மஸ் பண்டிகையின்போது குடும்பங்கள் ஒன்று சேருகின்றன. குடும்பப் பெயரையே ஆண்கள் பரம்பரையாக எடுத்துச் செல்கின்றனர். பெற்றாரின் பெயரைக் கூறியே யாவரும் அழைக்கப்படுகின்றனர். இலண்டனிலுள்ள உன் சத்தியச் சித்தப்பாவைச் செல்லையா என எங்கள் அப்பா பெயரைக் கூறியே அழைப்பார்களாம். நெருங்கிய நண்பர் மட்டுமே சத்தியன் என அவரின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவர்.

மேல்நாடுகளில் குடும்பப் பெயர்களைப் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு செல்வர். இந்தியாவில் சாதிப் பெயர்களைக் கொண்டு செல்வதைக் காணலாம். எங்கள் குடும்பங்களிலும் பேரன், பேத்திக்குப் பாட்டன், பாட்டிப் பெயரைச் சூட்டுவது வழமையாக உள்ளது.

இவ்வாறெல்லாம் குடும்பம் என்ற கருத்தியல் பலம் பெற்றுள்ளது. குடும்பம் என்ற அமைப்பு வேறு பணிகளைக் கொண்டுள்ள போதும் உழைப்புச் சக்தியை மறு உற்பத்தி செய்வதே அதன் தேவையாக உள்ளது. அதாவது குடிப்பெருக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



நிலப்பிரபுத்துவத்தில் நிலப் பிரபுவிக்குத் தொடர்ந்து உழைப்பவர் வேண்டும்; குடும்பம் என்ற கருத்தியல் உபரி உற்பத்திக்குப் பயன்பட்டது. நிலப்பிரபுக்களும் குடும்பங்களைப் பேணிப் பெருக்கினர்.

முதலாளித்துவத்திலும் குடும்பம் என்ற அமைப்பு உடைந்துவிடவில்லை. குடிப்பெருக்கத்திற்குப் பிரச்சாரமும் முதலாளித்துவ அரசின் மானியங்களும் அங்கு உள்ளன; குடும்பமாக வாழ்பவர்களுக்கே அங்கும் சமூக அந்தஸ்தும் மதிப்பும் உள்ளது. இலங்கை இந்தியா போன்ற மூன்றாவது உலக நாடுகளும் குடிப்பெருக்கத்தை நிறுத்திவிட முடியாது. அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில், ‘அளவோடு பெறுங்கள்’ என்றே பிரச்சாரம் செய்கின்றனர். ‘இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்’ என்று கூறும்போதும் முதலாளித்துவம் தொடர்ந்து இயங்க, மறு உற்பத்தியைத் தொடர்ந்து சுரண்டி வாழ இரண்டைப் பெற்று வளர்த்துத் தாருங்கள் என்றே பிரச்சாரம் செய்கின்றனர். ஒன்றுமே வேண்டாம் என ஆளும் வர்க்கம் ஒருபோதும் கூறுவதில்லை. மேலும் முதலாளித்துவத்தில் வேலையற்றவரும் ஒரு பகுதியினர் இருக்க வேண்டும். அல்லது முதலாளித்துவச் சுரண்டல் யந்திரம் தொடர்ந்து இயங்காது.

நிலப்பிரபுத்துவத்தில் குடும்பக்கட்டுப்பாடு நினைவுப்பூர்வமாக ஏற்படுவதில்லை. நிலம் இருக்கிறது. எத்தனைப் பிள்ளைகளும் உழைக்கலாம் என்ற நினைவே மக்களிடம் ஏற்படுகிறது. குழந்தைகளைச் செல்வமாகப் பெற்றாரும் சமுகமும் கருதுகிறது. கருச்சிதைவு பாவமாகக் கருதப்பட்டது. முதுமைக்கும் குழந்தைகளே ஆதரவு எனவும் பெற்றார் கருதுகின்றனர். என் அம்மா ஏழு குழந்தைகளைப் பெற்றார். உன் அம்மா மூன்றுடன் நிறுத்திவிட்டார்!

முதலாளித்துவத்தில் கொடுக்கப்பட்ட கூலித் தொகையுள் வாழும் நிலை ஏற்படுகிறது. ஆகவே

www.padippakam.com



தொழிலாளர் தாமாகவே குடும்பத்தைக் கட்டுபடுத்திக் கொள்கின்றனர். முதலாளித்துவத்திற்கு மறு உற்பத்தியைத் தொடர குடிப்பெருக்கம் தேவைப்படுகிறது. அதனாலேயே மேல் நாடுகளில் அதிகக் குழந்தைகளுக்காகப் பிரச்சாரமும் மானிய உதவிகளும் அரசினால் வழங்கப்படுகின்றன. கத்தோலிக்க மதப் பிரச்சாரமும் இதற்குத் துணை புரிகிறது.

மனித வரலாற்றில் குடும்பம் என்ற அமைப்பு இடையிட்டுத் தோன்றியது என்பதை நீ வரலாற்றைக் கற்கும் போதும் அறிந்து கொள்வாய். தனிச் சொத்துடைமை, வேலைப் பிரிவினை, வர்க்கம், ஆணாதிக்கம் ஆகியவை மனித சமுகத்தில் ஏற்பட்டதனாலேயே குடும்பம் என்ற சமூக வடிவமும் ஏற்பட்டது. காலப் போக்கில் இவ்வடிவமும் உடைந்து போகலாம்.

நான் கூறியவை யாவும் உனக்குப் புதுமையாகத் தெரிகின்றனவா? சமூக அமைப்பை ஆழமாக நோக்கும்போது இந்த உண்மைகள் தெரிய வருகின்றன.

அன்பான,
அப்பா

படிப்பகம்

www.padippakam.com

# 14. மக்கள் தொடர்புச் சாதனங்கள்

அன்பான மகனே,

காலையில் எழுந்ததும் ரேடியோவை நீ முடுக்கி விடுகிறாய்; காப்பி சாப்பிடும்போது பத்திரிகைளை ஒவ்வொன்றாகப் புரட்டுகிறாய்; மாலையில் டி. வி. யை முடுக்கி விட்டால் தூங்கும்வரை அதையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்.

நீ மட்டுமல்ல. எங்கள் நாட்டுத் தொழிலாளர், விவசாயிகளே ரேடியோவைக் கேட்கின்றனர்; பத்திரிகைச் செய்திகளைப் படிக்கின்றனர்; படிக்காதவரும் செய்திகளைக் கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர்.

பலம் வாய்ந்த இம்மக்கள் தொடர்புச் சாதனங்கள் யாவும் அரசின் ஊது குழல்களாகவே உள்ளன. பத்திரிகைகள், சஞ்சிகைகள் சில தனியார் ஆதிக்கத்தில் இருப்பினும் அவை முதலாளிகளின் குரல்களையே எதிரொலிக்கின்றன.

நிலப்பிரபுத்துவத்தில் இச்சாதனங்கள் இருக்கவில்லை. யந்திரப் புரட்சியோடு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பெரும் பகுதி முதலாளிகள், குட்டி பூர்ஷ்வாக்களிடமே சென்றன. முதலாளித்துவ வளர்ச்சியின்பின் தினப் பத்திரிகைகள், ரேடியோ, டி. வி. ஆகியன நவீன கருத்தியல் சாதனங்களாக இன்று ஆதிக்கம் செலுத்துகின்றன.

பத்திரிகை, வாணிபச் சஞ்சிகைகளைப் புரட்டும்போது முதலாளித்துவத்தின் விளம்பரங்களைத் தாராளமாகக் காண்கிறோம். பெரும்பாலும் பண்ட விற்பனையை விரிவுபடுத்தும் விளம்பரங்களே. இவைதவிர வேலை வெற்றிடங்

படிப்பகம்

www.padippakam.com



களுக்கு விண்ணப்பிக்கும் படியான விளம்பரங்களையும் தாராளமாகக் காணலாம்.

முதலாளிகளின் விளம்பரங்களின் மூலம் வரும் பணத்திலேயே பிற முதலாளிகள் பத்திரிகை, சஞ்சிகைகளை வெளியிட்டுத் தாமும் லாபம் பெறுகின்றனர். அரசின் காவலில் உள்ள ரேடியோ, டி.வி.யும் இதே முறையிலேயே நடைபெறுகின்றன. முதலாளிகளின் தயவில் வாழும் இத்தொடர்புச் சாதனங்கள் முதலாளித்துவத்திற்கு எதிராகச் செயற்பட முடியுமா?

இம் மக்கள் தொடர்புச் சாதனங்கள் யாவும் முதலாளிகளுக்கு வேண்டிய தேசிய வாதம், இனவாதம், சுரண்டற் சுதந்திரம், முதலாளித்துவ ஒழுக்கங்கள் முதலியவற்றையே தினந்தோறும் மக்களுக்கு ஓதிக் கொண்டிருக்கின்றன. கலாச்சாரக் கருத்தியல் மூலமாகவும் இது நடை பெறுகிறது. சாதாரணமாக விளையாட்டுகளில் இனவெறி, குழுவெறி ஊட்டப்படுவதைக் காணலாம்.

பத்திரிகையைப் பிரித்ததும் விளையாட்டு பற்றிய பகுதியைப் படிப்பவர்களைக் காணலாம். ரேடியோவில், டி. வி. யில் விளையாட்டு வர்ணனைகளை இனவெறி, குழுவெறி அடிப்படையில் பார்த்து ஆரவாரிப்பவர்களைக் காணலாம்.

அரசியல் செய்திகள் கூட ஆளும் வர்க்கத்திற்குச் சாதகமான முறையிலேயே தரப்படுகின்றன.

மக்கள் தொடர்புச் சாதனங்களை ஊடுருவி விவேகமாகப் பார்க்க முடியாத அனைவரும் இக்கருத்தியலுக்கு அடிமையாகிவிடுகின்றனர். பெரும்பாலானோர் அச்செழுத்தில் வருபவற்றை, ரேடியோ, டி.வி. செய்திகளை அப்படியே நம்பிவிடுகின்றனர். இது தவிர இந்த ஊதுகுழல்கள் திரும்பு மிடமெல்லாம் இன்று ஒலிக்கின்றன. அதனாலும் எம் நினைவிலி மனத்தில் எம்மை அறியாது ஆழமாகப் பதிந்து

www.padippakam.com



விடுகின்றன. மக்கள் தொடர்புச் சாதனக் கருத்தியல் முதலாளிகளுக்கு இவ்வாறு பலவகையில் சேவை செய்கின்றது. முதலாளிகளும் இச்சாதனங்களை வளர்ப்பதற்கு முன் நிற்கின்றனர். விளம்பரம், பண உதவி தந்து ஊக்குவிக்கின்றனர்.

உலகச் செய்திகளைத் தம் வர்க்கம் சார்ந்ததாக வெளியிட்டு உலக முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இத்தொடர்புச் சாதனங்கள் சேவை செய்கின்றன; சர்வதேசக் கம்பனிகளின் வளர்ச்சிக்கும் ஆதரவளிக்கின்றன. இக்கம்பனிகளின் விளம்பரங்களே இத்தொடர்புச் சாதனங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இத்தொடர்புச் சாதனங்களும் அவர்களுக்கே தொடர்ந்து சேவை செய்கின்றன. இவை யாவும் லாபம் சேர்க்கும் சுரண்டல் அமைப்பாக இருப்பது மட்டுமின்றி இன்றைய சுரண்டலை அடிப்படையாகக் கொண்டவன் முறையான சமூக அமைப்பை நீதிப்படுத்துகின்றன. மக்களைச் சிந்திக்கவிடாது தவறான கருத்துகளைத் திணித்து மூளையை மழுங்கடிக்கின்றன.

விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவை மக்கள் தொடர்புச் சாதனங்களை உலகளாவி விரித்துள்ளன. ஒரே ரக நுகர் பண்டங்கள் உலகெங்கும் பரவுவது போலச் செய்திகளும் பரவிவருவதை நீ காணலாம். விண்மதி மூலம் உலகச் செய்திகள் மட்டுமல்ல அவுஸ்திரேலியாவில் நடைபெறும் கிரிக்கெட் விளையாட்டை நீ நுகர்பண்ட விற்பனை விளம்பரங்களோடு, உடனேயே இங்கே பார்க்கிறாயே.

அன்புள்ள,
அப்பா.

www.padippakam.com

# 15. கலை, இலக்கியம்

அன்பான குமரா,

பாடப் புத்தகங்களைக் கற்றுத் தொடர் வசனங்களைப் படிக்க ஆரம்பித்ததும் 'காமிக்ஸ்' படிக்கத் தொடங்கினாய். நாளுக்கு ஒரு 'காமிக்ஸ்' உனக்குத் தேவைப்பட்டது. பின்னர்ப் பயங்கரக் கதைகளை ஆர்வமாகப் படித்தாய். அதன் பின்னரே சிறுகதைகள், சரித்திரக்கதைகள், காதல் கதைகள் படிக்கத் தொடங்கினாய். அதோடு வாணிபச் சஞ்சிகைகள் யாவையும் ஆர்வத்தோடு தேடிப் படிக்க ஆரம்பித்து விட்டாய். கவிதைகளையும் படிக்கிறாய். சினிமாப் பாட்டுகளை ஆர்வமாகக் கேட்கிறாய்.

உன்னைப் போலவே இன்றைய இலக்கிய அறிமுகம் மற்றெல்லோருக்கும் ஏற்படுகிறது.

இக்கதைகள், கவிதைகள் யாவும் இன்றைய சமூக அமைப்பை நீதிப்படுத்துவதாகவே அமைந்துள்ளன. சொத்துடைமை, சுரண்டல், குடும்ப அமைப்பு யாவும் சமுதாய நியதி என்றே கூறுகின்றன. பல கதைகள் சமூகச் சீர்திருத்தம் வேண்டுபவையாய் இருப்பதையும் கவனித்திருப்பாய். பணம், சாதி, சமய வேறுபாட்டால் காதல் கை கூடாது போகும் கதைகளைப் படிக்கும்போது இச்சமூக அமைப்பைப் பற்றி நீயே ஆத்திரமடைந்திருப்பாய். அக்கதைகளும் இன்றைய சமூக அமைப்பை ஏற்றுக் கொண்டே சில சமூகச் சீர்திருத்தங்களை மட்டும் வேண்டுகின்றன.

நிலப்பிரபுத்துவத்தில் மன்னர்களது காதல் பற்றியே கவிதைகள் பாடப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



முதலாளித்துவத்தில் குடும்பங்கள் உடைந்து மனிதர்கள் தனி மனிதர்கள் ஆகின்றனர். காதல் திருமணங்களே நடைபெற வேண்டும். பெற்றோர் எதிர்ப்பு இருக்கப் படாது. சாதி, சமயம், பணம் ஆகிய பேதங்கள் தடையாக வரப்படாது. இவை கலை, இலக்கியங்களின் கொள்கையாக இருப்பதைக் கவனித்திருப்பாய்.

காதல் திருமணம், அதை ஒட்டிய குடும்ப அமைப்பு வலியுறுத்தப்படுகிறது. முதலாளித்துவக் கலை இலக்கியங்கள் இவற்றை வற்புறுத்துகின்றன. காதலை ஒட்டிக் குடும்ப வாழ்வையும் ஒருதார மண முறையையும் முதலாளித்துவம் குடிப் பெருக்கத்திற்காக வரவேற்கிறது. மறு உற்பத்தியே இதன் அடிப்படை நோக்கமாகும். காதல் கூட மேல் மட்ட அமைப்பாக அடிப்படை அமைப்பிற்குச் சேவை செய்வதைக் காண்கிறோம்.

நிலப்பிரபுத்துவத்தில் கவிதையே பிரதான இலக்கிய வடிவமாக இருந்தது. அத்துடன் கூத்து, நடனம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகள் மன்னர்களை அல்லது கோவில்களைச் சார்ந்தே இருந்தன. மன்னர்கள், தெய்வங்களைப் பற்றியே அக்கலைகளும் படைக்கப்பட்டன.

முதலாளித்துவத்தில் கலை, இலக்கியங்கள் பரந்து விரிந்து பல்வேறு வடிவங்களாகச் சாதாரண மக்களைப் பாதிக்கும் அளவில் தாக்கம் ஏற்படுத்துகின்றன. இவற்றுள் தொழில் நுட்பக்கலையாக வளர்ந்து பல கலைகளை உள்ளடக்கிய சினிமாவை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். கிராம மக்களிடமே முதலாளித்துவப் பண்டங்களையும் வாழ்க்கையையும் எடுத்துச் செல்லும் கருவிகளாக இன்றைய சினிமாக்கள் அமைந்துள்ளன.

இவை தவிர முதலாளித்துவத்தில் கலை, இலக்கியங்கள் விற்பனைப் பண்டங்களாகவும் மாறி விடுகின்றன.

கலை, இலக்கியங்களைச் சமுதாய மாற்றத்திற்கு வேண்டிய கருவிகளாக முதலாளித்துவம் கொள்வதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



அவற்றை மலினப்படுத்திப் பொழுதுபோக்காக்கி, லாபம் தரும் விற்பனைப் பண்டமாக்கி விடுகிறது. அவ்வாறு லாபம் சேர்ப்பது மட்டுமல்ல; தமக்கு வேண்டிய கருத்தியலைப் பரப்பும் கருவியாகவும் பயன்படுத்திக் கொள்கிறது. அடிப் படை அமைப்பிற்கு இவ்வாறு கலை, இலக்கியங்கள் சேவை செய்கின்றன. முதலாளித்துவமும் தமது தேவையை ஒட்டி இவ்வாறு இவற்றைப் படைத்து விற்கின்றன.

மக்கள் தொடர்புச் சாதனங்கள் பற்றி முன் கடிதத்தில் கூறும்போது முதலாளிகள் லாபம் சேர்க்கும் தொழி லாகவும் அவற்றை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் எனக் குறிப்பிட்டேன். தற்போது மேலும் தெளிவு பெற் றிருப்பாய்.

இன்றைய கலை, இலக்கியங்கள் யாவும் கருத்து முதல் வாத நிலையிலேயே உள்ளன. அவை பொருள் முதல்வாத முறையில் விஞ்ஞான ரீதியாகப் படைக்கப் படவேண்டும். பரந்துபட்ட நோக்கமும் எழுச்சியும் பாட்டாளிகளின் விடிவை நோக்கியதாகவும் அமையவேண்டும். 'உலகத் தொழிலாளர் களே ஒன்று சேருங்கள்' என்ற மார்க்சின் பரந்த நோக்கை ஒலிக்க வேண்டும்.

இந்நிலைக்கு விடிவே இல்லையா அப்பா என்று கேட்கிறாயா? இருக்கிறது; அதுவே பாட்டாளிகளின் விடிவிற் காகப் படைக்கப்படும் புரட்சிகரக்கலை இலக்கியங்கள். அவை மார்க்சியக் கோட்பாடுகளுடன் இணைந்து சமுதா யத்தை மாற்றி அமைக்கும் நோக்கம் கொண்டவையாக இருக்கும். அவற்றையெல்லாம் நீ தேடிப் படிக்கவேண்டும். உன் நண்பரிடை பரப்ப வேண்டும் என விரும்புகிறேன்.

அன்பான,

அப்பா.

www.padippakam.com

# 16. விளையாட்டு

அன்பிற்கினிய மகனே,

'அண்ணாவிற்குக் கிரிக்கெட் பைத்தியம்' என உன் தங்கை அடிக்கடி கேலி செய்வாள். உன் பெரும்பாலான ஓய்வு நேரம் யாவும் கிரிக்கெட் விளையாடுவதிலும் விளை யாட்டுப் போட்டிகளைப் பார்ப்பதிலும் கழிகிறது. இவை தவிரப் பத்திரிகையை விரித்ததும் விளையாட்டுகள் பற்றி வெளிவரும் பக்கங்களையே முதலில் விரிக்கிறாய். அரசியல், உலகச் செய்திகளைப் பற்றிப் பின்னரே படிக்கிறாய்.

டி.வி. பார்ப்பதிலும் உனக்கும் உன் தங்கைக்கு மிடையில் போட்டி. அவள் ரூபவாகினியில் சினிமா பார்க்கத் திருப்ப நீ மற்ற அலைவரிசையில் காற்பந்தாட்டம், டென்னிஸ், மல்யுத்தம் ஆகியவற்றைப் பார்க்க வேண்டும் எனச் சண்டை போடுகிறாய்.

நம் வீட்டைப் பார்க்கும் போதேயே விளையாட்டுகள் இன்றைய முதலாளித்துவச் சமூக அமைப்பில் எத்தனை ஆதிக்கம் பெற்றவையாக விரிந்து பரந்துள்ளன எனத் தெரிகிறது. போட்டி விளையாட்டுகளைப் பார்க்க எவ்வாறு மக்கள் குவிகிறார்கள். இலாபம் குவிக்கும் வாணிபமாகவே விளையாட்டுப் போட்டிகளும் மாறி விட்டன.

உடற்பயிற்சிக்காக விளையாடுபவர்களைச் சிறிது ஒதுக்கி வைப்போம். போட்டிகளுக்காக விளையாடுபவர் களுக்கு இது ஒரு கூலி உழைப்பாகிறது. போட்டிகளை ஏற் படுத்தி, விளையாட்டையும் முதலாளிகள் ஒரு லாபகரமான தொழிலாக நடத்துகின்றனர்.

விளையாட்டிற்கு வேண்டிய பல்வகைப் பந்துகள், துடுப்புகள், விரிப்புகள், காலணிகள், சீருடைகள் மிகப்பெரிய உற்பத்திப் பண்டங்களாகின்றன. முதலாளிகளுக்கு லாபம்

www.padippakam.com



தரும் தொழிலாகின்றன. ரேடியோ, டி.வி.யில் விளம்பரங் களுடன் காட்டப்படுகின்றன.

கார்கள், மோட்டார் சைக்கிள்கள், டயர்கள் உற்பத்தி செய்யும் சர்வதேசக் கம்பனிகள் வாகன ஓட்டப் போட்டிகளை நடத்தித் தம் பண்டங்களை விளம்பரப்படுத்தி விற்பனையை விரிவாக்குகின்றன.

பள்ளியிலேயே இவ்விளையாட்டுகள் ஆரம்பிக்கப்படு கின்றன. பின்னர்ப் போட்டிகள் மூலம் பிற பள்ளிகளுடன் பகைமை ஏற்படுத்தப்படுகிறது, 'விளையாட்டு' என்ற நய மான சொல்லின் அடிப்படையில் ஊட்டப்படும் வெறியைப் பள்ளிகளுக்கிடையில் நடைபெறும் போட்டுகளிலேயே எளிதில் காணலாம்.

முதலாளித்துவம் தன் பண்ட உற்பத்தி, விற்பனைப் போட்டியை விளையாட்டிலும் ஏற்படுத்துகிறது. கல்வி யிலும் முதலாவது பிள்ளை, இரண்டாவது பிள்ளை; கடைசிப் பிள்ளை எனத் தரம்பிரித்து மாணவரிடையே போட்டி, பொறாமை, பகைமையை ஏற்படுத்துகிறது. இதனால், மாணவரிடை ஒற்றுமை, தோழமை உணர்வு, கூட்டுணர்வு இல்லாது போய்விடுகிறது.

மல்யுத்தம் போன்ற விளையாட்டுகள் மனித நேயத்தை எடைபோடுகின்றன. அடிமைச் சமூகத்தில் மடியும்வரை அடிமைகளைப் போரரடச் செய்வதையும் மிருகங்களுடன் போராடிக் கொல்லப்படுவதையும் பொழுது போக்கு விளை யாட்டாக்கினர். இன்று கூலி அடிமைகளைக் குத்துப் பந்தயத்தில் ஈடுபடுத்திக் குதூகலிக்கின்றனர்.

குதிரைப்பந்தயம், பிற சூதாட்ட வகைகளெல்லாம் முதலாளித்துவத்தில் விளையாட்டுகளாகக் கருதப்படு கின்றன..

விளையாட்டுகள் பந்தயமாகவும் அதிர்ஷ்டங்களைப் பரிசோதிப்பவையாகவும் ஆக்கப்பட்டு ஏழைத் தொழிலாள, விவசாயிகள் மேலும் சுரண்டப்படுகின்றனர்.

www.padippakam.com



விளையாட்டுகள் சுரண்டல் என்ற முதலாளித்துவ உறவை ஏற்படுத்துகின்றனர்; இன, குழு வெறியையும் ஏற்படுத்துகின்றன.

விளையாட்டுப் போட்டிகள் பள்ளிகளிடை நடைபெற்றுப் பின்னர் மாவட்டங்களிடை விரிந்து அதன்பின் உள்நாடு வரை விரிகின்றன.

மேலும் ஆசிய நாடுகளிடைப் (ஏசியன் கேம்ஸ்) போட்டி எனவும் இறுதியில் ஒலிம்பிக்ஸ் என உலக நாடுகளிடைப் போட்டியாகவும் உலகளாவிய வடிவம் எடுக்கிறது.

இப்போட்டிகள், விளையாட்டுகள் அத்தியாவசியமானவை எனக் கருத்தியலாகச் சிந்தனையில் பதிந்து விடுகின்றன. முதலாளித்துவ நாடுகளில் விளையாட்டுகளை முன்வைத்தே பந்தயம் கட்டும் சூதாட்டங்கள் தினமும் நடைபெறுகின்றன. முதலாளிகள் எவ்வாறு அனைத்தையும் லாபம் சேர்க்கும் தொழிலாக்கி, மக்களைப் பகடைக் காய்களாக்கி விளையாடுகிறார்கள் என்பதைப் பார்த்தாயா?

உலகம் இன்றும் தேசங்களாகப் பிரிக்கப்பட்டுத் தேசீயம் என்ற உணர்வு வளர்க்கப்படுகின்றது. ஒலிம்பிக்ஸ் விளையாட்டில் தேசீயம், தேசம் என்ற பெயரில் போட்டிகள் நடைபெறுகின்றன. சோஷலிச நாடுகள் என்று கூறப்படுபவையே, இவற்றில் பங்கு பற்றுகின்றன. இதனால் சர்வதேசீயம் என்ற உணர்வு குன்றுகிறது.

விளையாட்டுகளில் தோல்வியடைபவர்கள், ஒதுக்கப்படுபவர்கள், தண்டிக்கப்பட்டவர்களாகின்றனர்; மனத்தால் வருத்தமடைகின்றனர். நீ கூடப் பல தடவை இத்தகைய உணர்வு பெற்றுச் சோர்ந்திருந்ததை நான் பார்த்து வருந்தியதுண்டு.

அன்பான,
அப்பா.

படிப்பகம்

www.padippakam.com

# 17. தொழிற்சங்கம்

அன்பான குமரா,

அன்றொரு நாள் பள்ளிக்குப் புறப்பட்டுச் சென்று திரும்பி வந்தாய். 'பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் அப்பா' என்று கூறினாய். சில நாட்கள் பஸ்கள் ஓட வில்லை.

அதேபோல அரசு அலுவலகங்களில் வேலை நிறுத்தம், பாங்குகளில் வேலை நிறுத்தம், துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் எனப் பத்திரிகைகளில் படித்திருப்பாய். இது எவ்வாறு நிகழ்கிறது என்று கேட்கிறாயா?

தொழிலாளர்கள் ஒன்று திரண்டு தொழிற் சங்கங்களை அமைக்கின்றனர். இதற்கு அரசு அனுமதி வழங்குகிறது. அதற்குரிய சட்டவிதிகள் உள்ளன.

முதலாளிகள் தொழிலாளர்களை இருவகையாகச் சுரண்ட முனைகின்றனர். ஒன்று வேலை நேரத்தைக் கூட்டுவது. இரண்டாவது கூலியைக் குறைப்பது. இவ் விரண்டிற்கும் எதிராகத் தொழிலாளர் அணிதிரண்டு போராட நேரிடுகிறது. வேலை நேரத்தைக் குறைப்பது, கூலியைக் கூட்டுவது. இவை தொழிலாளரின் தற்காப்பு நடவடிக்கையாகும். (அவர்களது விடிவுக்கான எதிர்ப்பு நடவடிக்கை புரட்சிகர அரசியல் என்பதைப் பின்னர் கற்பாய்)

தொழிலாளர் கூலி உயர்வுக்குப் போராட்டம் நடத்தும் போது முதலாளிகள் பண்டங்களின் விலைகளை உயர்த்தித் தொழிலாளர்களை மேலும் சுரண்ட முனைகின்றனர்

சி. கு—5

www.padippakam.com



என்று கூறுவர். இதில் ஓரளவு உண்மை இருந்தபோதும் தொழிலாளர்கள் தொடர்ந்த போராட்டத்தினால் முதலாளிகளின் இலாபத்தைக் குறைக்கமுடியும். தமது உபரி உழைப்பை முதலாளிகள் அத்துமீறி அபகரிப்பதைக் குறைக்க முடியும் என மார்க்ஸ் கூறினார்.

தொழிற் சங்க உரிமை என்பது முதலாளித்துவத்தால் வழங்கப்பட்ட ஒரு சலுகையே. தொழிலாளர்களை ஒரு கட்டுப்பாட்டுள் கொண்டு வருவதற்கும் அவர்களது பிரச்சினைகளைச் சமரசம் பேசித் தீர்ப்பதற்கும் அனுமதிக்கப் பட்ட அமைப்பே.

தொழிலாளர்களது கோரிக்கைகள் சரியாகத் தீர்க்கப் படாதவிடத்து அவர்கள் முதலாளிகளுக்கு அறிவித்துவிட்டு வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கலாம். ஆனால் வேலை நிறுத்தப் போராட்டத்தால் அரசுக்கு ஆபத்து ஏற்படும் எனக் கருதப்படும்போது இச்சலுகையை அரசு வாபஸ் பெற்றுவிடுகிறது. அத்தொழிலை அத்தியாவசிய சேவையாக அரசு பிரகடனப்படுத்திவிடுகிறது சட்ட விதிகளை மீறுவதாகக் கூறி வேலை நிறுத்தத்தை அரசு நசுக்கிவிடுகிறது.

ஆகவே வேலை நிறுத்த உரிமை என்பது தொழிற் சங்கங்களுக்கு வழக்கப்பட்ட ஒரு சலுகை தவிர உரிமை அல்ல. தொழிலாளர்கள் கூலி அடிமையாக இருக்கும்வரை, உற்பத்திச் சாதனங்கள் முதலாளிகளது உடைமையாக இருக்கும்வரை தொழிலாளர்களுக்கு விடிவு கிடையாது. அவர்களது உபரி உழைப்பை முதலாளிகள் அபகரித்துக் கொண்டே இருப்பர்.

பல நூறு தொழிற்சங்கங்கள் பல்வேறு வர்க்க நிலைப் பாடுகளில் இருப்பதையும் காணலாம். இச்சங்கங்களெல் லாம் ஒன்றுபட்டுப் புரட்சிகா அரசியலை முன் வைத்துப் போராடுவதில்லை. இன்சுரன்ஸ், பாங்குகளில் பணிபுரிபவர் வாய்ப்பாகக் கூலி, போனஸ் பெறுகின்றனர். உடலுழைப் பில் ஈடுபடும் பாட்டாளிகளின் போராட்டங்களுக்கு இவர்கள் ஆதரவு வழங்குவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



இந்நிலையில் தொழிலாளர்களுக்கு விடிவு எங்கே? கூலி உயர்வுப் போராட்டத்திற்கு மேலாக அரசியல் போராட்டத்தையும் தொழிற்சங்கங்கள் முன் வைக்க வேண்டும். அது ஒன்றே சுரண்டலிலிருந்து, கூலி அடிமை நிலையிலிருந்து அவர்களை விடுவிக்க வல்லது. அரசியல் போராட்டம் என்பது சோசலிசப் புரட்சியே,

முதலாளிகளின் அனுமதியுடன் வழங்கப்பட்ட தொழிற் சங்க உரிமை வெறும் பொய்மைத் தோற்றமே. தொழிற்சங்க அமைப்பு, சுரண்டலை ஏற்றுக் கொள்ளும் அமைப்பேயாகும். இதனாலேயே தொழிற்சங்கம் என்பது முதலாளித்துவத் திற்குச் சேவை செய்யும் மேல்மட்ட அமைப்பாக உள்ளது. அதே வேளை முதலாளிகளும் தொழிலாளர்கள் தொழிற்சங் கங்களை அமைப்பதை விரும்புகிறார்கள். இதன் மூலமே அரசின் சட்டவிதிகளுக்கமைய தொழிலாளர்களை அடக்கி ஆளமுடிகிறது

தொழிலாளர்கள் தமது யதார்த்த நிலைக்கு விடிவை முதலாளித்துவச் சட்டவிதிகளுக்குள் அமைந்த தொழிற் சங்கங்கள் மூலம் தீர்க்க முனைவது பொய்மையே. அதனாலேயே தொழிற்சங்கமும் ஒரு கருத்தியலாக விளங்கு கிறது; சுரண்டலை நீதிப்படுத்தவும் துணை நிற்கிறது. அரசு வழங்கிய 'தொழிற்சங்க உரிமை' தொழிலாளர்களுக்கு மயக்க மூட்டுவதாக அமைகிறது. இந்த அமைப்பு மூலமாக நீதியை முதலாளிகளிடமிருந்து பெற முடியும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தி விடுகிறது.

'தொழிற்சங்கம்' என்ற கருத்தியலும் தொழிலாளர் களை எவ்வாறு இன்று மயக்கி ஆளுகிறது பார்த்தாயா!

''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற மார்க்ஸ், ஏங்கெல்சின் குரலை உலகெங்கும் ஒலிப்பதன் மூலமே தொழிலாளி வர்க்கம் மட்டுமல்ல; உலகமே விடிவு பெற முடியும்.

அன்பான,

அப்பா.

# 18. சாதியமைப்பு

அன்புக் குமரா,

நீ சிறுவனாக இருந்தபோது கிராமத்தில் உன் பாட்டா வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். அங்கே விறகு வெட்டிக் கொண்டிருந்தவன் கிணற்றடியில் வந்து குடிப் பதற்குத் தண்ணீர் அள்ளி ஊற்றும்படிக் கேட்டான்.

''ஏனப்பா, விறகு வெட்டுகிறான். நல்ல உடற்கட்டு. இவனுக்குத் தண்ணீர் அள்ள முடியாதா?''

''ஏனப்பா அவனுக்கு மட்டும் சிரட்டையிலே சின்னம்மா தேநீர் கொடுக்கிறார்?''

இவ்வாறு பல வினாக்கள் எழுப்பினாய். சாதிப் பகுப்புகள் பற்றி அவ்வேளை உனக்குப் புரிய வைப்பது எனக்கே சிரமமாயிருந்தது. இன்று நீ வளர்ந்துவிட்டாய். சமூகப் பிரிவுகள், ஏற்றத்தாழ்வுகள் பற்றியெல்லாம் அறிந்து கவலைப்பட ஆரம்பித்துவிட்டாய். நல்லதே.

''வெள்ளைக்காரர்தான் நிறத்தாலும் மொழியாலும் வேறுபட்டு எம் நாட்டை ஆண்டவர்கள். ஒரே நிறம் ஒரே மொழி பேசுவரிடை எப்படியப்பா இத்தனை வேறுபாடு'' என்றும் நீ அடிக்கடி கேட்பாய். அதுவும் உண்மையே.

நிலப்பிரபுத்துவ அமைப்பில் நிலத்தின்மேல் பரம்பரை யாக உரிமை கொண்டவர் தம்மை உயர்ந்த சாதியாக்கிக் கொண்டனர். அவர்களது நிலத்திலே உழைப்பவர், அவர் களது பிற சேவைகளைக் கவனித்தவர் யாவரும், சேவை யின் அத்தியாவசியத்தை ஒட்டிப் பல்வேறு சமூக அமைப்பின ராகப் பலப் படிகளில் பிரிக்கப்பட்டனர். சொத்துடைய

www.padippakam.com



வர்க்கு, மதிப்பு உழைக்க வேண்டியதில்லை. உடலுழைப் பாளர் குறைவாகக் கருதப்படுகின்றனர். இது நீதியா?

வேலைப் பிரிவினைகளோடு சாதியமைப்பு இணைக்கப் பட்டிருப்பதால் அது பலம் வாய்ந்ததாக இன்றைய அரை நிலப் பிரபுத்துவ அமைப்பிலும் நிலவுகிறது.

சாதியமைப்பின் அடிப்படை நோக்கம் உழைப்புச் சுரண்டலே. கிராமங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட நிலப்பிரபுக்களின் தயவிலேயே வாழ நேரிட்டது. பூசாரி, பரியாரி, வண்ணான், கம்மாளன், பொற் கொல்லன், பள்ளன், பறையன், நளவன் எனத் தன் குடிகளைப் பிரித்துப் பரம்பரையாகக் குறிப்பிட்ட வேலையையே நிலப்பிரபு செய்வித்தான் சாதியமைப்பிலேயே குடிப் பெருக்கம் இன்றும் தொடர் கிறது. தனித்தனிச் சமூக அமைப்பாகவே வாழ்கின்றனர்; திருமணம், வழிபாடு சடங்குகள் ஆகியவையும் நடை பெறுகின்றன. ஆங்கிலேயரின் ஆட்சியின் போது ஆங்கிலக் கல்வியையும் உயர் சாதியினரே பெற்று அரசியலதிகாரத் திலும் பங்கு பெற்றனர்.

நிலப்பிரபுத்துவம் உடைந்து வரும் இக்காலத்திலும் தனிச் சமூக அமைப்பாகவே இச் சாதிகள் கருதப்படுகின்றன. நடைமுறையில் ஆதிக்கம் குறைந்த போதும் சிந்தனைப் பாகுபாடு இன்றும் நிலவுகிறது.

சமூகத்தின் பெரும்பாலான உழைப்பாளர்களாகவும் தொழிலாளர்களாகவும் ஒடுக்கப்பட்ட இச்சாதியினரேவிளங்கு கின்றனர். தொழிலாளர்களாகச் சுரண்டப்படுவது மட்டு மல்ல, சாதியின் பெயராலும் இவர்கள் சுரண்டப்படுகின்ற னர்; அடக்கி ஒடுக்கப்படுகின்றனர்.

இதற்காக நிலப்பிரபுக்கள் 'அடியாட்கள்' எனத் தமது பொலீஸ் படையை வைத்திருந்தனர். இன்றும் பல இடங்களிலெல்லாம் வைத்திருக்கின்றனர். அரிசனர்

படிப்பகம்

www.padippakam.com



குடிசைகள் எரிக்கப்பட்டன எனச் செய்திப் பத்திரிகைகளில் அடிக்கடி படித்திருப்பாய்.

இந்தியாவில் செய் தொழிலின் அடிப்படையாகப் பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் என நான்கு வர்ணமாக மட்டுமல்ல, தீண்டாதவர் என மிகக் கேவல நிலையிலும் ஒரு பகுதி மக்களை ஒதுக்கியிருப்பதை நீ ஓரளவு அறிவாய்தானே. இப்பிரிவினைகளை மதத்துடன் இணைத்துக் 'கடவுள் படைப்பு' என்றும் கூறி நிலை நிறுத்தினர்.

உயர் சாதியினரின் படிக்கட்டாகப் பல சாதிகள் அமைந்துள்ளன. தொழில், சொத்துரிமை ஆகியவற்றை முன் வைத்தே இவை அமைந்துள்ளதைக் காணலாம். தீண்டாதவர் என்பதிலேயே பல படிகள்.

உயர் சாதியினரின் கோவில்களுள், வீடுகளுள் தீண்டாதவர் நுழைய முடியாது என்பது மட்டுமல்ல இவர்கள் தொடும் பொருட்கள் தீட்டுப்பட்டுவிடும் என்பன போன்ற கற்பனைக் கருத்துகளையும் உயர்சாதியினர் கொண்டுள்ளனர். சாதியில் குறைந்தவராகக் கருதப்படும் இவர்கள் சிறு தெய்வவழிபாட்டைக் கைக்கொண்டனர். பள்ளு இலக்கியம் என்ற மக்கள் இலக்கியத்தையும் இவர்களே படைத்தனர். நிலவுரிமை, குடியுரிமை, அரசியலுரிமை ஆகியவையும் இவர்களுக்கு மறுக்கப்பட்டது. பிணங்களை எரித்தல், புதைத்தல், கழிவுப் பொருட்களை அகற்றி ஊரைச் சுத்தமாக வைத்திருத்தல், பறை அறைதல் ஆகிய கடைநிலைத் தொழில்களும் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டன இவற்றை வைத்ததுமே தீண்டப்படாதவர் என ஒதுக்கினர். இத்தொழில்களிலிருந்து இன்று ஒதுங்குபவர்களும் அச்சாதிப் பெயர்களின் பெயரால் சமூகத்தில் ஒதுக்கப்படுகின்றனர்.

சாதி என்னும் கருத்தியலின் சமூக ஆதிக்கத்தைப் பார்த்தாயா!

படிப்பகம்

www.padippakam.com



இந்திய நிலப்பிரபுத்துவத்தின் இறுக்கத்தைச் சாதி அமைப்பின் முறையிலிருந்தே காணலாம். ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய பிரிவும் இறுக்கமும் இருக்கவில்லை. அதனாலேயே அங்கு நிலப்பிரபுத்துவமும் எளிதாக, விரைவாக உடைக்கப்பட்டது என்றும் சில சமூக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

யந்திர உற்பத்தியின் வளர்ச்சி ஒன்றே சாதி அமைப்பை ஓரளவு உடைக்கவல்லது. பின்னர் முதலாளி தொழிலாளி என்ற பிரிவிலேயே சுரண்டல் நடைபெறும். அதன்பின் நடைபெறும் சோசலிசப் புரட்சி ஒன்றே சாதி அமைப்பிற்கும் முடிவு கட்டக்கூடியது. அங்கும் இக்கருத்தியலை ஒழிக்கப் பல ஆண்டுகள் ஆகலாம். ஏனெனில் இது சிந்தனையுடன் ஒன்றியிருப்பதாகும்.

அன்பான,

அப்பா.

படிப்பகம்

www.padippakam.com

# 19. சித்தாந்தம்

அன்பிற்கினிய குமரா,

உலகத்திற்கு, மனித வாழ்விற்குத் தரப்படும் பல்வேறு விளக்கங்களையெல்லாம் சித்தாந்தம், மெய்யியல் அல்லது தத்துவஞானம் என்றெல்லாம் தமிழில் கூறுவர். உன் அக்கா இந்தியச் சித்தாந்தத்தையும் சமூகவிஞ்ஞானத்தில் பட்டம் பெறப் படித்துக் கொண்டிருக்கிறாள், எதுவும் புரியவில்லையெனச் சிணுங்கியபடிக் குறிப்புகளை மனனம் செய்கிறாள், பரீட்சைக்கு எழுத!

இந்தியச் சித்தாந்தமும் உற்பத்தி முறைகளின் மாறுதல்களை ஒட்டிப் பல்வேறு வடிவங்களைப் பெற்று வந்துள்ளது. ஆயினும் அவை மதத்தின் பிடியிலிருந்து விடுபடவில்லை. பொருள் முதல்வாதமும் இந்தியாவில் மதங்களோடு ஒட்டி நீண்ட காலமாக நிலைத்திருந்த போதும் கற்பனாவாத மதத்தை வெற்றி கொள்ள முடியவில்லை.

வேதங்கள், உபநிடதங்கள் பின்னர் சைன, புத்த மதங்களின் போதனைகள், சைவசித்தாந்தம் பற்றியெல்லாம் சமய பாடத்தில் ஓரளவு கற்றிருப்பாய். வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றியே இவை யாவும் பிரச்சாரம் செய்கின்றன. 'வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்' என்பவை உழைக்கும் வர்க்கத்தவருக்கு மற்றோர் கற்பனை உலகை, சொர்க்கத்தையும் நரகத்தையும் காட்டி ஏமாற்றிக் கொண்டிருந்தன. பரமாத்மா, ஜீவாத்மா, பதி, பசு, பாசம், ஆணவம், கன்மம், மாயை

www.padippakam.com



போன்ற பல கற்பனை விளக்கங்களை மனித வாழ்விற்குக் கூறிக்கொண்டிருந்தன. இவையெல்லாம் உழைக்கும் மக்கள் அறியாத வார்த்தைகள். உடைமை வர்க்கத்தவரே சித்தாந்திகளை ஆக்கி அவற்றுள் ஆராய்ச்சி நடத்துவர்.

மதங்கள் போலவே அவற்றின் மற்றோர் தோழனாகச் சித்தாந்தங்களையும் அரசுகள் பேணி வளர்த்து வந்துள்ளன. மன்னர்களெல்லோரும் ஒவ்வொர் மதத்தை அண்டி இருந்தனர் என்பதை உனக்குக் கூற வேண்டியதில்லை.

இன்றும் முதலாளித்துவ நாட்டு அரசுகள் எதுவும் மதத்திலிருந்து விடுபட்டுவிட்டதாகக் கூற முடியாது. மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகப் பெரும்பாலான மக்களின் மதத்தையே அரசுகள் சார்ந்திருப்பதைக் காணலாம். இலங்கையில் புத்தமதம் சார்ந்த அரசு என்பதை யாவரும் அறிவர். மற்ற மதத்தவர் எவ்வாறு அடக்கி ஒடுக்கப்படுகின்றனர் என்பதையும் நீ கண்டிருப்பாய்.

இன்றும் பல்கலைக் கழகங்களில் சித்தாந்தம் ஒரு தனிப் பீடமாக இருப்பதைக் காணலாம். கல்லூரிகளிலெல்லாம் சித்தாந்தம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இன்றைய சமூக அமைப்பையும் உற்பத்தி முறையையும் நீதிப்படுத்தி விளக்கம் கூறுவதற்காகவே இது அரசால் பேணப்படுகின்றது.

சித்தாந்தமும் வெறும் கருத்துகளால் ஆன கருத்தியலே. மூடநம்பிக்கைகளையும் பொய்மைகளையும் கொண்டது. மக்களுக்குப் புரிய முடியாத, மயக்க வார்த்தைகளில் கூறப்படுவது. மதம் தவிர்த்த எவ்வித நடைமுறையையும் கொண்டதல்ல.

விஞ்ஞான வளர்ச்சியைத் தொட்டே சித்தாந்தங்களும் வளர்கின்றன என்பர். தாலஸ், பைதோகிரஸ் போன்ற

www.padippakam.com



கிரேக்க அறிஞர்கள் கணிதத்தை விஞ்ஞான மயப்படுத்திய பின்னரே சாக்கிரட்டீஸ், பிளாட்டோ போன்றோர் தருக்க முறையாகக் கருத்துகளை ஆராயும் சித்தாந்தத்தைத் தொடக்கினர். இதே கணித விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலேயே இந்தியத் தத்துவ ஞானங்களும் தருக்க முறையாகக் கருத்துகளை அணுகும் முறையில் வளர்ச்சியடைந்தன என்றே கூறவேண்டும்.

17 ஆம் நூற்றாண்டில் கலிலியோ. நியூட்டன் ஆகியோர் பௌதிகத்தைக் கணிதத்தோடு இணைத்து விஞ்ஞானமயப் படுத்திய பின்னர் இயக்க மறுப்பியல் (மெட்ட பிசிக்ஸ்) என்ற சித்தாந்தம் மேல்நாடுகளில் தோன்றியது. அந்நாட்டவரின் ஆட்சியினால் போலும் எம் நாடுகளிலும் இச் சித்தாந்தமே அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கிருந்த சித்தாந்தங்கள் ஓரளவு புதிய விளக்கங்கள் பெற்றவையேயல்லாது புதியவை இங்கு எதுவும் தோன்றியதாகக் கூற முடியாது.

மனித வரலாற்றை மார்க்ஸ் விஞ்ஞான மயப்படுத்தினார். அதுவே **வரலாற்றுப் பொருள்முதல் வாதம்.** ''குந்தவிக்குக் கடிதங்களில்'' படித்துத் தெளிந்திருப்பாய். அவ்விஞ்ஞானத்தைத் தந்த அவரே புதிய சித்தாந்தம் ஒன்றையும் ஆக்கித் தந்தார். அதுவே **இயக்க பொருள்முதல் வாதம்** என்பதாகும்.

இது மற்றைய சித்தாந்தங்கள் போல உலகத்திற்கு கற்பனையாக விளக்கங்கூறும் சித்தாந்தமல்ல; நடைமுறை கொண்ட சித்தாந்தம்; நடைமுறைப் படுத்தக்கூடிய சித்தாந்தம்; கடந்து வந்த மனித வரலாற்றையும் எதிர் காலத்தையும் காட்டும் சித்தாந்தம்; உலகின் பெரும்பாலான உழைக்கும் வர்க்கமான பாட்டாளிகளுக்காகக் கண்டுபிடிக்கப் பட்ட சித்தாந்தம்! புரட்சிகரச் சித்தாந்தம். உலகை மாற்றியமைக்க வழிகாட்டும் சித்தாந்தம்; தொழிலாளர் இயக்கங் களையும் புரட்சிகர அரசியலையும் கொண்ட கோட்பாடே

www.padippakam.com



இதுவாகும். லெனின் இச் சித்தாந்தத்தைப் புரட்சிகர அரசியல் செயற்பாடாக்ப் புரிந்துகொண்டு சோவியத் நாட்டில் சோசலிசப் புரட்சியை நடத்திக் காட்டினார். மாவோ சீனப் புரட்சியை நடத்தினார்.

இங்கு ஏன் அழுத்தமாக இவற்றைக் கூறினேன் என்பதைக் கடைசிக் கடிதத்தில் கண்டு கொள்வாய்.

இன்று முதலாளித்துவ் நாட்டுச் சித்தாந்தங்கள் கருத்தியலாக மதத்தோடு இணைந்து நிற்கின்றன; இன்றைய உற்பத்தி முறைக்குத் துணை செய்து சுரண்டலுக்கு உதவும் மறு உற்பத்தியும் தொடர வழி செய்கின்றன; சமுதாய அமைப்பை உயர் மட்டத்தில் நின்று நீதிப்படுத்தி விளக்கம் கூறுகின்றன; உழைக்கும் வர்க்கத்தவர் இவற்றை அறியாத போதும் அடக்கி ஒடுக்கும் அரசுயந்திரத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சமாதானம் கூறுகின்றன. அவர்களது வன்முறைகளைச் சமூகநீதி என 'நீதி' வழங்குகின்றன.

அரசு பல்கலைக் கழகங்களிலே பல்வேறு சித்தாந்தங்கள் பற்றியும் கற்பிப்பதற்குத் தனித்துறையையே ஏற்படுத்தியுள்ளது, கற்பிக்கும் அப்பேராசிரியர்களுக்குத் தனி மதிப்பு, உயர்ந்த கூலி. அவர்களெல்லோரும் இன்றைய சமூக அமைப்பைச் சித்தாந்த ரீதியாக நீதிப்படுத்துவர்.

அன்பார்ந்த,

அப்பா.

www.padippakam.com

# 20. விஞ்ஞானப் பார்வை

அன்பிற்கினிய குமரா,

"கருத்தியல்கள் மனிதச் சிந்தனையைச் சிறைப் பிடித்து வைத்திருப்பதை நன்கு தெரிந்துகொண்டேன். ஆனால், இவற்றிலிருந்து விடுதலை பெற, சுதந்திரமாகச் சிந்திக்க வழியில்லையா? உழைக்கும் வர்க்கத்தவருக்கு விடிவில்லையா? அரசின் வன்முறைகளை மக்கள் ஓரளவு அறிந்து கொதிப்படைகின்றனர். ஆனால் கருத்தியல் அரசு யந்திரத்தின் பயங்கரத்தை நன்குணர்ந்து அதிலிருந்து எவ்வாறு விடுதலை பெறப் போகின்றனர்?"

இவ்வாறெல்லாம் நீ எழுப்பிய பல சந்தேகங்களையும் வினாக்களையும் உன் கடிதத்தில் படித்து மகிழ்ச்சியடைந்தேன். உன்னை ஓரளவு இன்றைய சமுதாய அமைப்பு பற்றிச் சிரத்தையோடு சிந்திக்க வைத்ததையிட்டுப் பெருமைப்படுகிறேன்.

பளிங்குபோல உள்ள சிந்தனையில் இன்றைய அரசால் பேணிப் பாதுகாக்கப்படும் கருத்தியல்கள் தூசிபோல் படிந்துள்ளன என்பது உண்மையே. அவற்றைத் துடைத்துச் சரியான, தெளிவான சிந்தனையை எம்மால் ஏற்படுத்திக் கொள்ள முடியும். அதற்கு உதவக் கூடியதே விஞ்ஞானக் கண்கள் கொண்ட பார்வை. இப்பார்வையை எமக்கு முதன் முதலில் கற்றுத் தந்தவர் அறிஞர் கார்ல் மார்க்ஸ் ஆவர். அவர் மறைந்து நூறு ஆண்டுகள் ஆகின்றன. அன்னார் மறைந்த நூறாவது நினைவு நாளன்று கொழும்பில்

படிப்பகம்

www.padippakam.com



நடத்திய விழாவிற்கு உன்னையும் அழைத்துச் சென்றதை நீ மறந்திருக்க மாட்டாய்.

மனித சமுதாயத்தை ஊடுருவிக் காண மார்க்ஸ் இரண்டு கண்களை — இரண்டு கோட்பாடுகளை எமக்குத் தந்தார். ஒன்று வரலாற்றுப் பொருள் முதல்வாதம். இரண்டாவது இயக்கவியல் பொருள்முதல்வாதம். இவ் வார்த்தைகள் இன்று உன்னைப் பயமுறுத்தி விடமாட்டாது என எண்ணுகிறேன். 'குந்தவிக்குக் கடிதங்கள்' என்ற நூலைப் பல தடவை படித்ததாக எழுதினாய்.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்பது மனித வரலாற்றை விஞ்ஞானப் பூர்வமாகக் காணும் பார்வை. இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்பது உலகத்திற்கு விளக்கம் கூறும் சித்தாந்தத்தை விட்டு, உலகை மாற்றி அமைக்கும் செயற்பாடு கொண்ட புரட்சிகர அரசியற் கண்ணோட்டம். முன் கடிதத்திலும் இவைபற்றி விரிவாக எழுதினேன்.

இவ்விரண்டு கண்களையும் — கோட்பாடுகளையும் கொண்டு கருத்தியல் சார்ந்த அரசு யந்திரத்தை நாம் காணப் பழகிக் கொள்ள வேண்டும். அப்பொழுதே சரியான சிந்தனையைக் கிரகித்துக் கொள்ள முடியும். சிந்தனையில் தொடர்ந்து தூசுகளைப் பரப்பிக் கொண்டிருக்கும் அரசு யந்திரத்தை உடைத்தெறிய முடியும். அரசு ஆதிக்கத்தைக் கைப்பற்றுவது வேறு. கருத்தியல் சார்ந்த அரசு யந்திரத்தை உடைத்தெறிவது வேறு. இரண்டாவதே மிகவும் சிரமமானது என்பதை தற்போது நீ உணர்ந்திருப்பாய். உலகில் சோசலிசப் புரட்சி நடத்திய நாடுகளே இன்று கருத்தியல்களின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுதலை பெற முடியாது திரிபுவாத அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றை நீயாகவே அந் நாட்டு அரசியல் போக்குகளைக் கற்று அறிந்துகொள்ள முடியும்.

www.padippakam.com



மற்றும் ஒரு கருத்தை நீ கிரகித்துக் கொள்ள வேண்டும்:

கருத்தியல்கள் சிறுவயதிலிருந்தே எம் நினைவிலி மனத்தில் படிந்து விடுகின்றன. நாமும் தூசு படிந்த, தூசுகளைப் பரப்பிக்கொண்டிருக்கும் சமூகத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால் நினைவிலி மனத்தில் படிந்திருக்கும் தவறான கருத்துகளே எவ்வேளையும் முதலில் நினைவில் ஓடி வந்துவிடுகின்றன. பின்னரே சரியான சிந்தனையைப் பயன்படுத்தித் தவறைத் திருத்திக் கொள்கிறோம்.

உதாரணமாக, வெளியே புறப்படும்போது பூனை குறுக்கிடுவது, தீர்மானம் எடுக்கும்போது பல்லி சொல்வது போன்றவை மூடக் கொள்கைகள் என்பதை அறிவோம். ஆயினும் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றதும் நினைவிலி மனத்தில் படிந்திருப்பவையே முதலில் வந்து எம்மை அச்சுறுத்துகின்றன. பின்னரே நாம் சரியான சிந்தனையைப் பயன்படுத்தி அக்கருத்துகளை ஒதுக்கிச் செயலாற்றுகிறோம். இதிலிருந்தே கருத்தியல்கள் நினைவிலி மனத்தில் படிந்திருந்து எவ்வாறு சரியான சிந்தனைக்கும் செயலாற்றலுக்கும் தடையாயுள்ளன என்பதை ஊகித்தறிவாய்.

மீண்டும் நினைவூட்டுகிறேன். கருத்தியல் யாவும் விஞ்ஞானப் பூர்வமற்றவை. அவை வெறும் கருத்துகளின் அடிப்படையில் எழுந்தவை. அதனாலேயே கருத்தியல் என்றும் கூறுகிறோம். வெறும் நம்பிக்கையிலேயே நிலைத்துள்ளன.

மதம் ஒரு கருத்தியல். கடவுள் என ஒருவர் உள்ளார் என விஞ்ஞானப் பூர்வமாக நிரூபிக்க முடியுமா? வெறும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே 'கடவுள்' நிலைத்துள்ளார். சிந்தனையை விஞ்ஞானமயப் படுத்தியதும் இப்பொய்மை தூக்கி எறியப்பட்டுவிடும். கண்ணாடியிலுள்ள

www.padippakam.com



தூசுகள் துடைக்கப்பட்டதும் முகம் தெளிவாகத் தெரிவதில்லையா?

கலை, இலக்கியம் என்ற கருத்தியல் பற்றிக்கூறும்போது சீனத்தலைவர் மாவோ பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''கலை, இலக்கியம் கருத்தியல் வடிவப் படைப்பாகும்; சமூகத்தின் வாழ்வு மனிதச் சிந்தனையிலிருந்து பிரதிபலிப்பதாகும். புரட்சிகரக் கலை, இலக்கியம் என்பது மக்களது வாழ்வு, புரட்சிகர எழுத்தாளர், கலைஞரது சிந்தனையிலிருந்து பிரதிபலிப்பதன் மூலம் எழும் படைப்பாகும்.''

புரட்சிகர எழுத்தாளர், கலைஞரது சிந்தனை என அறிஞர் கருதியது மார்க்சிய விஞ்ஞானப் பார்வை கொண்ட எழுத்தாளர்களையே ஆகும். அவர்களால் மட்டுமே கருத்தியல்களை ஊடுருவி விஞ்ஞானப் பூர்வமாகப் புரட்சிகரமாகச் சிந்திக்க முடியும். நீயும் இத்தகைய சித்தனையைப் பெறவேண்டும் என்பதே என் அவா.

மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். கருத்தியல்கள் வெறும் கருத்துகளாலானவை: விஞ்ஞானப்பூர்வமற்றவை. கருத்துமுதல்வாதமானவை, எமது பொருள்முதல்வாதப் போக்கிற்கு முற்றிலும் எதிரானவை.

மார்க்கியக் கோட்பாடுகள் மட்டுமே விஞ்ஞானப் பூர்வமானவை. கருத்தியல்களிலிருந்து விடுபட விஞ்ஞானப் பூர்வமான கோட்பாடுகளைக் கடைப்பிடி. அவை மார்க்சியக் கோட்பாடுகள் என்றும் மறந்துவிடாதே.

என் அன்பான வாழ்த்துகள்.

அன்பு நிறைந்த,

அப்பா

படிப்பகம்

www.padippakam.com

# அறிவுக் கடிதங்கள்

படிப்பகம்

# சித்தாந்தத்திற்கு ஓர் அறிமுகம்

உலக மக்கள் அனைவருக்கும் தாம் வாழும் உலகம் பற்றிய ஏதோ ஒருவிதக் கண்ணோட்டம் இருக்கவே செய்யும். உலகு பற்றிய கண்ணோட்டத்தையே சித்தாந்தம் என்பர். தத்துவம், மெய்யியல் எனவும் கூறுவர்.

அறிஞர்கள் எனக் கருதப்பட்டோர் சமுதாயத்தின் உயர்மட்டத்தில் வாழ்பவரின் கண்ணோட்டங்களைத் தொகுத்து பல்வேறு சித்தாந்தங்களாக வகைப்படுத்தினர். அவை பற்றி தம்முள்ளே பொழுது போக்காக விவாதித்தனர். சண்டையிட்டனர்; உலகிற்குப் பல்வேறு விளக்கம் கூறி வந்தனர். இவ்வறிஞர்கள் பரந்து பட்ட மக்களுக்குப் புரியாத வகையில் இச்சித்தாந்தங்கள் பற்றி எழுதிச் சிக்கலாக்கினர். பல்கலைக் கழகங்களில் கற்பிப்பதற்கும் ஏற்பாடு செய்தனர். சுருங்கக்கூறின் மேல்த்தட்டு மக்களின் நலன் சார்ந்தே இச்சித்தாந்தங்கள் தொகுக்கப்பட்டன.

உதாரணம் கூறின் கல்வி அறிவுக்கே வாய்ப்பில்லாது உழைப்பே வாழ்வாகத் துன்பப்படும் மக்களுக்குத் தலைவிதி, நியதி, முற்பிறவிப் பயன், பாவபுண்ணியம் என்றெல்லாம் உலக வாழ்வு பற்றி விளக்கம் கூறி அவர்களது சிந்தனையையும் தொடர்ந்து மழுப்பி வந்தனர்.

உலகில் மனித உயிரினம் தோன்றிய காலம் தொட்டு உணவுப் பொருள் தேடுதல், தற்காப்பு, கருவிகள் ஆக்கல் முதலாக பொருள் முதல் வாழ்வே மக்கள் வாழ்ந்து வந்தனர். இயற்கையின் உற்பத்தியாக மனித இனம் பூமியில் வாழ்ந்ததால் இயற்கையின் சீற்றத்திற்கும் அஞ்சி இயற்கையை வழிபட்டும் வந்தனர்.

உழைப்பு மனித இனத்தின் தனிச்சிறப்பாக விளங்கியது. வளர்ச்சியடைந்த கருவிகள், மிருக வேட்டை, பிற கணக் குழுக்களுடன் மோதுவதில் வீரர்களாக விளங்கியவர்களுக்கும்

www.padippakam.com



அவர் தம் கருவிகளுக்கும் கணக்குழு சார்ந்தவர் வீரவணக்கம் செலுத்தியும் வந்தனர்.

க்ருவிகளின் வளர்ச்சியோடு உற்பத்தியும் மேம்பட சமூகத்தையும் உற்பத்திச் சாதனங்களையும் உடைமையாகக் கட்டுப்படுத்தும் இறைவன் என மன்னன் தோன்றினான். அதைத் தொடர்ந்து வர்க்க சமுதாயம் நிலை பெற்றது.

சமூக வளர்ச்சிப் போக்கில் மன்னனின் வர்க்க நலன், குறைபாடுகளையும் கண்டறிந்த சிந்தனையாளர்கள் மன்னனிலும் உயர்ந்த வடிவமாக, கற்பனைக் கடவுளையும் மனித உருவிலே படைத்தனர். சமுதாயத்தில் பல்வேறு ஏற்றத் தாழ்வுகள் நிலவிய போதும் 'தெய்வமென்றதோர் சித்தமுண்டாகி'யதும் தெய்வத்தின் முன் அனைவரும் சமம், அனைவருக்கும் ஒரே ஆத்மாவே உள்ளது என சமரசம் பேசினர். 'படைத்தவன் படியளப்பான்' என்பது மட்டுமல்லாது 'தெய்வ நீதி என்றும் நிலைக்கும்' என்ற கருத்துகளிலும் நம்பிக்கை ஏற்படுத்தினர்.

மதங்களைத் தொட்டே பெரும்பாலான சித்தாந்தங்கள் தோன்றின; மறைந்தன; பல இன்றும் நிலைத்து ஆதிக்கம் செலுத்துகின்றன; கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கற்பிக்கப்பட்டு ஆராயப்படுகின்றன.

நிலப்பிரபுத்துவமும் முதலாளித்துவமும் தமது வர்க்க நலன் பேணத்தக்கதாக பல்கலைக் கழகங்களில் சித்தாந்த பீடங்களையும் நிறுவுகின்றன. அறிஞர்கள் என அரசனால் மதிக்கப்படும் சித்தாந்தவாதிகள் ஆளும் வர்க்கத்தவரின் செயல்களை நீதிப்படுத்தினர்.

முதலாளித்துவத்தில் ஆசிரியர்கள்; அதிகாரிகள், மருத்துவர், மதகுருமார், சித்தாந்தவாதிகள் அனைவரும் கூலி அடிமை ஆக்கப்படுவர் என மார்க்ஸ், எங்கெல்ஸ் எழுதிய கம்யூனிஸ்டு அறிக்கை கூறும்.

படிப்பகம்

www.padippakam.com



வர்க்க சமுதாயத்தில் முதலாளிகளின் உலகக் கண்ணோட்டமும் பாட்டாளிகளதும் வேறுபட்டேயிருக்கும். உலகின் பெரும்பான்மையினரான பாட்டாளிகளின் உலகு பற்றிய கண்ணோட்டத்தை விளக்கும் சித்தாந்தம் எதுவும் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிவரை வகுக்கப்படவில்லை.

ஜெர்மனியச் சித்தாந்தவாதியாகிய, ஹேகல் என்பவரின் இயங்கியல் கொள்கையையும் அவரின் மாணாக்கராகிய பய்ன்பார்க் என்பவரது பொருள் முதல்வாதக் கோட்பாட்டையும் உள்ளடக்கி இயங்கியல் பொருள் முதல் வாதம் என்ற நடைமுறை கொண்ட சித்தாந்தத்தை கார்ல் மார்க்சே தொகுத்துப் பாட்டாளி வர்க்கத்தின் தனிப்பெரும் கோட்பாடாக வழங்கினார்.

ஏற்கனவே 1848ல் மார்க்சும் ஏங்கெல்சும் இணைந்து வரலாற்றுப் பொருள் முதல்வாதம் மூலம் மனிதவரலாற்றை விஞ்ஞான மயப்படுத்தி எழுதி வெளியிட்டிருந்தனர்:

மனித வரலாற்றில் ஏற்பட்ட பல்வேறு உற்பத்தி முறைகளையும் சமூக அமைப்புகளையும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் விரிக்கும். அத்தோடு ஒரு சமூக அமைப்பிலிருந்து மற்றோர் சமூக முறைக்கு மாறுவதையும் இது விளக்கிக் கூறும்.

உலகில் பல நூறு சித்தாந்தங்கள் தொகுக்கப்பட்டன. இச்சித்தாந்தங்கள் அனைத்திற்கும் இயங்கியல் பொருள் முதல் வாதத்திற்கும் இடையில் மாபெரும் வேறுபாடு உள்ளது. பிற சித்தாந்தங்கள் அனைத்தும் உலகிற்கு பல்வேறு வகையில் விளக்கம் கூறுவன. இயங்கியல் பொருள் முதல்வாதம் ஒன்றே உலகை மாற்றியமைக்க வழிகூறும் நடைமுறை கொண்ட சித்தாந்தமாகும்.

உலகை மாற்றியமைக்கக் கூடியவர் பரந்துபட்ட மக்களே; உழைக்கும் பாட்டாளி மக்களாலேயே சாதிக்கக்

www.padippakam.com



கூடிய செயலாகும். இவர்களுக்காக உருவாக்கப்பட்ட சித்தாந்தமே இயங்கியல் பொருள் முதல்வாதமாகும்.

மற்றைய சித்தாந்தங்கள் போல வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இயங்கியல் பொருள் முதல்வாதம் இருக்க வில்லை. லெனினால் சோவியத் நாட்டிலும் மாஓவினால் சீனாவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டது. அதனாலேயே தமது அழிவை நோக்கும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள் இச்சித்தாந்தத்தைக் கண்டு அஞ்சு கின்றன. சோஷலிசப் புரட்சியை நடைமுறைப்படுத்தப் படும் நாடுகளை உடைத்துவிட முயல்வதை இன்றும் காண் கிறோம்.

ஸ்டாலின் இச்சித்தாத்தத்தை 28 பக்கங்களில் எழுதி னார். மாஓ முரண்பாடுகள், நடைமுறை எனப்பிரித்து 50 பக்கங்களில் விரித்தார். இன்று இச்சித்தாந்தத்தை விரித்துக் கூறும் நூல்கள் பல நூற்றுக்கணக்காக பல நூறு பக்கங்களில் உலகில் வெளிவந்துள்ளன.

இயங்கியல் பொருள் முதல்வாதத்தில் முதன்மை பெறும் அம்சங்கள் இரண்டு; நடைமுறை, முரண்பாடு. இவ்விரண்டு சிறப்பம்சங்களையும் எளிமைப்படுத்தி விளக்கிய பெருமை மாஓவையே சாரும்.

முரண்பாடுகளை பகைமை முரண்பாடு, பகைமையற்ற முரண்பாடு, பிரதான முரண்பாடு, துணை முரண்பாடுகள் என்றெல்லாம் பிரித்தறிவதும் அவற்றைச் சமூக வளர்ச்சிப் போக்கில் கையாள்வதும் அனைவரும் கற்று அறிய வேண்டிய தாகும். நடைமுறையின் மூலமே புலனறிவு பகுத்தறிவாகி புரட்சிகர நடைமுறைக்கு இட்டுச் செல்வதை அறிய முடியும். சரியான உலக அறிவைத் தரக்கூடியதும் இச்சித்தாந்தமே.

இச்சித்தாந்தத்தின் முக்கிய அம்சங்களைப் பள்ளி மாணவரும் புரிந்து கொள்ளக்கூடியதாக, எளிமைப்படுத் தும் முறையாக எழுந்ததே இச்சிறு நூல். எளிமைப்படுத்

www.padippakam.com



தும் போது சித்தாந்தத்தின் ஆழமும் குறைந்து போகலாம். இது ஓர் அறிமுக நூலே. மேலும் ஆழ்ந்து கற்க வேண்டியவை பல உள; பிற சித்தாந்தங்களுடன் ஒப்பிட்டுக் கற்கும்போதே மேலும் தெளிவுபெற முடியும்; இச்சித்தாந்தத்தின் சிறப்பு களையும் அறிய முடியும்.

முன்னர் மார்க்சிய விஞ்ஞான அணுகுமுறையில் மூன்று கடித நூல்கள் எழுதினேன். அவை 'குந்தவிக்குக் கடிதங்கள்', 'குமரனுக்குக் கடிதங்கள்', 'மான் விழிக்குக் கடிதங்கள்' ஆகும். இவை தமிழகத்திலும் நல்ல வரவேற்புப் பெற்றன.

என் மகன் குமரன் இயங்கியல் பொருள் முதல்வாதத் தையும் முன்னவைபோன்று, எளிதாக்கிக் கடித மூலம் விளக்கும்படி தூண்டிக் கொண்டிருந்தான். இப்பணி பற்றிக் கூறியபோது தமிழக நண்பர் அனைவரும் வரவேற்று மேலும் ஊக்கினர்.

இந்நூலை எழுதத் துணைபுரிந்தவர் அனைவர்க்கும் நான் நன்றிக் கடனுடையேன். உரிய நூல்கள் குறிப்புகள் தந்தும், எழுத்துப் பிரதியைப் படித்துக் குறிப்புரை கூறிய நண்பர்கள் டாக்டர். ந. தெய்வசுந்தரம், புலவர் த. ச. இராசாமணி, சத்தியமங்கலம் நாகராசன், க. கோவிந்தன் ஆகியோருக்கும் என் நன்றி. ஆயினும் இந்நூலின் கருத்துகள் அனைத்திற்கும் நானே பொறுப் பாளி.

விரைவில் அச்சிட்டு உதவிய திரு. பொன்விஜயன், அச்சகத் தொழிலாளர்க்கும் என் அன்பு. அட்டையை அழகுபடுத்துவதில் உதவிய நண்பர் மணியம் செல்வனுக்கும் என் நன்றி.

**செ. கணேசலிங்கன்**

www.padippakam.com

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | உலோகமும் பொருளும் | 87 |
| 2. | மூளையும் களிமண்ணும் | 91 |
| 3. | பூமியும் பொருளும் | 95 |
| 4. | மனிதனும் மிருகமும் | 100 |
| 5. | பொருளும் இயக்கமும் | 105 |
| 6. | எதிரிடையும் ஒற்றுமையும் | 110 |
| 7. | வர்க்கமும் பகைமையும் | 114 |
| 8. | அகமுரண்பாடும் பகைமை முரண்பாடும் | 120 |
| 9. | புரட்சியும் புராணங்களும் | 126 |
| 10. | பிரதான முரண்பாடும் உலக முரண்பாடுகளும் | 131 |
| 11. | வளர்ச்சியும் பாய்ச்சலும் | 137 |
| 12. | பழையதும் புதியதும் | 142 |
| 13. | நடைமுறையும் உலக மாற்றமும் | 147 |
| 14. | பொருளாதார நடைமுறையும் மூலதனமும் | 152 |
| 15. | அரசியல் நடைமுறையும் புரட்சியும் | 156 |
| 16. | கருத்தியலும் நடைமுறையும் | 161 |
| 17. | கலை, இலக்கியம்—உள்ளடக்கமும் உருவமும் | 166 |
| 18. | இயங்கியலும் கலை இலக்கியமும் | 171 |
| 19. | இயற்கையும் மனிதனும் | 175 |
| 20. | விமர்சனம் சுயவிமர்சனம் | 179 |
| 21. | அனுபவ அறிவும் பகுத்தறிவும் | 182 |
| 22. | நடைமுறையும் அறிவின் உற்பத்தியும் | 188 |

படிப்பகம்

www.padippakam.com

# 1. உலோகமும் பொருளும்

அன்பு மகனே,

'உலோகாயதம் என்றால் என்னப்பா?' என்று கேட்டு எழுதினாய். மிக நல்லது. இத்தகைய விஷயங்களையெல்லாம் நீயும் கற்றுக்கொள்ளும் காலம் வந்துவிட்டது.

பள்ளிக்கூடத்திலும் உயர்வகுப்பிற்கு வந்த பின்னரே இவ்வார்த்தையைக் கற்க நேரலாம். அவ்வேளையும் ஆசிரியர் எளிமையாக்கிச் சிறியவர் மனத்தில் பதியும்படிக் கற்பிப்பதில்லை.

உலோகம் என்ற சொல்லை நீ விஞ்ஞானப் பாடத்தில் கற்றிருப்பாய். இரும்பு, செம்பு, வெள்ளி, தங்கம், தகரம் போன்ற திடப்பொருள்களை உலோகப் பொருட்கள் என்று அழைக்கிறோம். இவற்றைத் தொட்டு, முகர்ந்து பார்க்க முடியும். நிலத்தில் போட்டு அல்லது தட்டி அவை எழுப்பும் ஒலியையும் கேட்க முடியும்.

இவ்வாறு உலோகத்தை, பொருளை முதன்மையாக வைத்து உலகத்தைப் பார்க்கும் முறையை 'உலோகாயதம்' என்பர். 'உலோகாய்தம்' என விரித்து உலகத்தை ஆயும் முறை என வலிந்து பொருள் கொள்பவரும் உள்ளனர். அவர்களை விட்டுவிடுவோம்.

உலோகத்தை, பொருளை முதன்மைப் படுத்தி விவாதிப்பவர்களை 'உலோகாயதவாதிகள்' என்று கூறி வந்தனர். இன்று இவர்களைப் பொருள்முதல்வாதிகள் என்று பெரும்பாலும் சொல்வர்.

படிப்பகம்

www.padippakam.com



உலோகம் என்பது வடமொழிச் சொல். தமிழில் உலகில் காணும் அனைத்தையும் 'பொருள்' என்றே கூறி வந்தனர். வள்ளுவரும் உலகின் அனைத்துச் சொத்து, செல்வம், வாழ்வின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் பொருள் என்றே கூறி வந்தார். அறம், பொருள், இன்பம் எனத் திருக்குறள் வகுக்கப்பட்டிருப்பதை அறிவாய். உழவுத்தொழில், அரசியல், குடியியல் ஆகியவையும் திருக்குறளில் பொருட்பாலிலேயே அடக்கப்பட்டுள்ளன.

விவசாய உற்பத்தி ஆதிக்கம் பெற்றிருந்த சமூகத்தில் வாழ்ந்த வள்ளுவர் 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்று கூறினார். மேலும் அரசர் கூட உழவர் குடையிலேயே தங்குவர் என்றார். 'பலகுடை நீழலும் தங்குடைக் கீழ்க் காண்பர்' என்பது அவர் கூற்றே. உழவுத் தொழில் மீதே அரசும் நிலைக்கும் என்பதை அவர் ஆராய்ந்து கூறினார்.

என் பாட்டனார் கருணாகரர் உழவுத் தொழிலே செய்துவந்தார். தன் உழவு நிலத்தை விரிவாக்குவதற்காக நாலு ஏக்கர் கலட்டி நிலத்தை வாங்கி கற்களைக் கடப்பாறையால் கிளப்பிக் கொண்டிருந்தாராம். அவர் கடும் வெய்யிலில் நின்று உழைப்பதைப் பார்த்து 'இந்தக் கிழவயதில் இத்தனை நிலத்தையும் எப்படிப் பயிரிடும் நிலமாக்கப் போகிறாய்?'' என்று ஒருவர் கேட்டாராம்.

'என் மக்களும் உதவுகிறார்கள் தானே. நான் செத்த பிறகு அவர்கள் தொடர்வார்கள்; புது நிலத்தில் பயிரிடுவார்கள்' என்றாராம்.

அவருக்கும் உலகம் பற்றிய கண்ணோட்டம் ஒன்று இருந்தது. பருவ காலங்கள், பயிரிடும் முறைகள், நிலத்தின் தன்மைகள், காலத்திற்கேற்ற பயிர்கள், நீர்ப்பாய்ச்

படிப்பகம்

www.padippakam.com



சும் முறைகளை அவர் பரம்பரை அனுபவ அறிவு மூலம் அறிந்திருந்தார்.

பெரியப்பா, என் அப்பா, அவர் தம்பியர் யாவரும் பாட்டனாரின் அனுபவ அடிப்படையில் தொடர்ந்து புதுநிலத்திலும் பயிரிட்டனர். என் அப்பா, உன் பாட்டனார், ஆங்கிலம் எட்டாம் வகுப்பு வரை கற்றும் இருந்தார். அதனால் சிலகாலம் ஆங்கிலேயரின் தேயிலைத் தோட்டம் ஒன்றில் கங்காணியாக, கூலி அடிமையாகப் பணிபுரிந்தார். அவர் இரவில் தூக்கம் வரும்வரை சித்தர் பாடல்களைப் படித்துக் கொண்டே இருப்பார். கோவில்களுக்குச் செல்லமாட்டார். உருவ வழிபாட்டை அவர் எதிர்ப்பார். அவருக்கும் உலகு பற்றிய கண்ணோட்டம் ஒன்று இருந்தது,

நான் கல்லூரியில் சென்று கற்றேன். சிலகாலம் அரசில் கூலி அடிமையாக உழைத்த பின்னரே அச்சகத் தொழிலில் ஈடுபட்டேன். யந்திர உற்பத்தி, நீயும் அதையே தொடர்வாய். இவ்வளர்ச்சிப் போக்கை மறந்துவிடாதே. நினைவில் வைத்துக் கொள்.

கிராமத்தில் என் பாட்டனார் திருத்திய நிலத்தில் இன்று கிழங்கு, வெங்காயம், மிளகாய், கத்தரி வெண்டி என மாற்றுப் பயிர்கள் விளைவதைப் பார்த்திருப்பாய். என் பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகளே பரம்பரையாக அந்நிலங்களில், உடன் பணம் தரத்தக்க பயிர்களை விளைவிப்பதைக் கண்டிருப்பாய்.

அங்கு என் அப்பா கட்டிய வீட்டோடு ஒட்டிய தோட்டத்தில் தென்னை, வாழை, மாமரங்கள் வளர்ந்து பயன் தருவதை அறிவாய் தானே.

வீட்டு முற்றத்தில் மாமரம் ஒன்று நிற்கிறதல்லவா. நானே நல்ல விதையாகத் தேடி மாங்கொட்டை ஒன்றைப் புதைத்தேன். அது முளைவிட்டு வளர்ந்து, சிறு கன்றாகி, தற்போது வளர்ந்து பெரிதாகிவிட்டது. நீ ஏறிக் குதித்து

www.padippakam.com



விளையாடுவாயே இன்று அம்மாமரம் பூக்கிறது; காய்க்கிறது. அம்மா அறியாது காய்களை அடித்துச் சாப்பிடுவாயே. முற்றிய காய்களைப் பறித்து பழுக்க வைத்துச் சாப்பிடுகிறோம். பழத்தைச் சுவைத்துச் சாப்பிட்ட பின் கொட்டையை வீசி விடுகிறோம். மழைக்காலத்தில் அவையும் முளைப்பதைப் பார்த்திருப்பாய்.

இப்பழைய கதைகளையெல்லாம் இவ்வேளை ஏன் எழுதுகிறேன் என்று கேட்கிறாயா? பொருள் முதல் வாதத்தையும் உலகம் பற்றிய என் கண்ணோட்டத்தையும் உனக்கு ஓரளவு விளக்குவதற்காகவே எழுதுகிறேன்.

நம் வீட்டு முற்றத்தில் மாமரம் நிற்பதை நீ எப்படி அறிகிறாய்?

'என்னப்பா, கண்ணால் தானே பார்க்கிறேனே' என்று எளிதில் நீ கூறிவிடலாம்.

உனது பதிலை மேலும் சிறிது ஆழ்ந்து பார்ப்பின் மேலும் சில உண்மைகளை அறிவாய். ஆரம்ப விஞ்ஞானப் பாடத்திலும் நீ கற்றிருப்பாய். மாமரத்திலிருந்து பிரதி பலித்து வரும் சூரிய ஒளிக்கதிர்கள், கண்களில் ஏற்படுத்தும் புலனுணர்வை, மூளை கிரகித்துக் கொள்ளுகிறது. ஆகவே மாமரத்தை நீ காண்கிறாய். சரிதானே.

மாமரம் புறப் பொருளாக வெளியே நிற்கிறது. உன் மூளை அல்லது நீ இல்லாவிடினும் மாமரம் அங்கேயே நிற்கும். உரிய காலத்தில் பூக்கும்; காய்க்கும். ஆனால், மூளை என்ற பொருள் உன் தலையில் இல்லாது நீ இருக்க முடியாது. பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் எல்லாம் அழிந்து விடுவதில்லை.

'மூளை மரத்தைக் கிரகித்துக் கொள்கிறது என்றால் என்ன' என்று கேட்கிறாயா? மூளை உன் உடம்பில் ஒரு பகுதியே. உன் உடல் போல அதுவும் ஒரு பொருளே. உடல் முழுவதுடனும் அதற்குத் தொடர்பு உண்டு. உட

படிப்பகம்

www.padippakam.com



லைச் சடம் என்றும் கூறுவர், இந்த உண்மையை உன் மூளையில் பதித்து வை.

'உன் மூளை களி மண்ணடா' என்று பாடசாலையில் ஆசிரியர் உன்னை ஒருநாளும் திட்டவில்லையா? அப்படி வையும்போதும் அவருடைய மூளையும் ஒரு பொருள் என்பதை அவர் அறிவதில்லை. இதுவே விசித்திரமானது.

அன்பான,
அப்பா

# 2. மூளையும் களிமண்ணும்

அன்பு மகனுக்கு,

'அப்பா, உங்கள் கடிதத்தின் கடைசி வரிகளைப் படித்தபோது சிரிப்பே வந்தது. ஆறாம் வகுப்பில் படிக்கும் போது மூன்று குறியும் சந்தனப் பொட்டுடனும் வரும் சந்திரன் வாத்தியார் கணிதப்பாடத்தின் போது 'உனக்கும் களிமண் மூளையடா' என்று எல்லோரையுமே திட்டித் தீர்ப்பார். நீங்கள் இப்போது விளக்குவது புதுமையாக இருக்கிறது. ஆயினும் 'என்மூளையில் முற்றாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை' என்று எழுதினாய். ஆரம்பத்தில் சிறிது கஷ்டமாகவே இருக்கும். பொருள் பற்றிய மேலும் சில உண்மைகளை நீ அறிந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர் தன்னை அறியாமலே மூளையைக் களிமண்ணோடு ஒப்பிடும் ஒரு பொருளாகவே மறைமுகமாகக் கூறி வந்தார்.

மூளையில் நோய், கட்டி, இரத்த ஓட்டத் தடை ஏதாவது ஏற்படும்போது மூளையைத் தனிமைப்படுத்தி ஆபரேசன் செய்வதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய்.

www.padippakam.com



ஆடு, மாடு போன்ற சில மிருகங்களின் மூளையைத் தனியே எடுத்துக் கறி ஆக்கியும் உண்பர்.

கண்களால் பார்த்து, கையால் தொட்டு, மூக்கால் முகர்ந்து, கைகளால் தட்டி ஒலி எழுப்பிப் பார்க்கக் கூடிய வற்றைப் பொருட்கள் என முன்பு கூறினேனல்லவா. இவ்வாறு அறிவதை புலனறிவு எனக் கூறுவர்.

மீண்டும் நினைவில் வைத்துக் கொள். புறப் பொருட் கள் நமது புலன்களைப் பாதித்து மூளை மூலம் தம்மை உணர்த்துகின்றன. மரத்தைக் கண்களால் பார்த்துக் கையால் தொட்டு அறிகிறோம். காற்று உடல் மீது படுவ தால் உணர்கிறோம். காற்றும் ஒரு பொருளே.

ஆசிரியர் வைத களிமண்ணும் அதனுடன் ஒப்பிட்ட மூளையும் பொருள்களே என்பதை கிரகிப்பதில் உனக்கு கஷ்டமேற்பட்டது நியாயமே. இரண்டும் பொருள்களே, ஆனாலும், அவற்றிடை வேறுபாடுண்டு.

மூளை மனித உடலோடு ஒன்றி தனி உறுப்பாக வளர்ந்து வருகிறது, மூளை ஒரு முன்னேற்றமடைந்த பொருள்; காண்பவற்றை, கேட்பவற்றை, முகர்ந்தவற்றை, ருசித்தவற்றை, உடலால் உணர்ந்தவற்றை, சேகரித்து வைக்கத்தக்க சிறப்புடையது; ஆரம்ப அறிவாகிய புலனறிவு அனுபவ அறிவைப் பேணி வைக்கத் தக்க ஆற்றலுடையது. அடுத்த கட்டமாகிய பகுத்தறிவுக்கு இட்டுச் செல்லும் சிறப்பும் இதற்கு உள்ளது. சுருங்கக் கூறின் உன் மூளை படைப்பாற்றல் கொண்டது. மற்றவரது களிமண் ணல்ல. மனித இனத்தவர் அனைவரையுமே குறிப்பிடு கிறேன்.

இத்தகைய சிறப்புகள் இல்லாவிடின் நீயும் ஒரு மனித இனமாக வளர்ந்திருக்க முடியாது. உலவி வர முடியாது. பாடசாலையில் பாடங்களைப் படித்து நினைவில் பதிந்து

www.padippakam.com



வைக்கமுடியாது. விஞ்ஞானப் பாடத்தில் ஆய்வுக் கூடத்தில் கற்ற கோட்பாடுகளைப் பரீட்சித்துப் பார்க்க முடியாது. எனக்குக் கடிதம் எழுதி, புதிய கருத்துகளைக் கூறத் தெரிந்திருக்கமாட்டாய். இக்கடிதத்தைப் படித்துப் புரிந்து கொள்ளவே முடியாதிருக்கும்.

மூளை என்ற முன்னேறிய பொருளிலிருந்தே கருத்துகள் தோன்றுகின்றன. மாமரம் என்ற கருத்து, படிமமாக உன் மூளையில் பதிந்துள்ளது. மாமரத்தையும் தென்னை மரத்தையும் உன்னால் வேறுபடுத்திக் காணமுடியும்.

ஆகவே பொருளிலிருந்தே கருத்துகள் தோன்றுகின்றன. கருத்திலிருந்து பொருள்கள் தோன்றுவதில்லை. மந்திரத்தால் மாங்காய் விழுவதில்லை.

பொருள் என்பதற்கு 'கருத்து' என்ற அர்த்தமும் உண்டு. மூளை என்னும் முன்னேறிய பொருளிலிருந்து 'கருத்து' தோன்றுகிறது என நினைவில் பதித்துவை. இந்த உண்மையே பொருள் முதல்வாதத்தின் அடிப்படை என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்

இன்றைய உலகில் மூளையின் வளர்ச்சி, அறிவின் வளர்ச்சி மிகப்பெரியது. கம்பியூட்டர் பற்றி நீ அறிந்திருப்பாயே, மூளையும் ஒரு கம்பியூட்டரே. பற்பல உண்மைகளையும் சேகரித்துவைக்கும் ஆற்றல் மூளைக்குள்ளது. கம்பியூட்டர் கருவியில் மூளையிலும் பார்க்க அதிக உண்மைகளை சேகரித்து, விரும்பியவாறு உடனே கணக்குகளை, விடைகளை, பிற விபரங்களைப் பெற முடியும் என நீ வாதிடலாம். ஆனால் மனித மூளை என்ற முன்னேறிய பொருளின் படைப்பாற்றல் திறனாலேயே கம்பியூட்டர்களும் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை நினைவில் கொள். மூளை அத்தகைய ஆக்க சக்தி, படைப்பாற்றல் மிக்கது.

என் பாட்டனார் இரும்பாலான கடப்பாறை என்ற பொருளால் கற்களைக் கிளப்பி, நிலத்தைப் பண்படுத்திப்

www.padippakam.com



பயிரிட்டார். பின்னர் நம் குடும்பமே உழைத்து பயிரிட்டு வளர்ந்துள்ளதைப் பார்த்தாயல்லவா. குடித்தொகையில் மட்டுமல்ல உழைப்பில், உற்பத்தியிலும் வளர்ந்துள்ளோம்.

கிணற்றிலிருந்து ஏற்றமிறைத்து நீர்ப்பாய்ச்சியதுபோய் பம்செட் போட்டு நீரிறைக்கப்படுகிறது. எருது உழுவது குறைந்து டிராக்டர் ஆழமாக உழுவதைப் பார்த்திருப்பாய். சாணம், இலை, குப்பை உரத்திற்குப் பதிலாக இன்று இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பயிரில் தோன்றும் நோய்களுக்கு இரசாயன கலவை மருந்துகள் அடிக்கப்படுகின்றன. இவையெல்லாம் பொருளின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்டவையே. மூளை என்னும் பொருளின் ஆக்க சக்தியை மறந்துவிடாதே.

மூளையால் மூளையின் தன்மைகளையே ஆராய்ந்து கற்றறியும் அளவிற்கும் வளர்ந்து வந்துள்ளோம். அதன் அமைப்பை உயிரியல் (Biology) தன்மையாகவும் செயல்களை உளவியல் (Psychology) நோக்காகவும் அறியும் முயற்சியிலும் வளர்ந்து வந்துள்ளோம்.

உன் உடம்பில் கல்பட்டு காயம் ஏற்படும்போது தோன்றும் துன்ப உணர்வுகளை மட்டுமல்ல பிறரது துன்பம், கஷ்டம், பிறப்பு, மறைவால் ஏற்படும் உணர்ச்சிகளையும் அனுபவித்துக் கொள்கிறாய், சிலவற்றை நினைவில் வைத்துக்கொள்கிறாய். வேறு சிலவற்றை மறந்துவிடுகிறாய்.

நீண்ட காலமாக நீ ஆழ்ந்து கற்கப்போகும் உலகம் பற்றிய கண்ணோட்டத்தின், சித்தாந்தத்தின் முதல் பாடமாக இவற்றைக் கூறுகிறேன். மீண்டும் படித்து உன் நினைவில், மூளையில் பதிய வை. அது களிமண்ணல்ல. மிக முன்னேறிய ஆக்க சக்தியுள்ள பொருள்.

அன்பான,

அப்பா

www.padippakam.com

# 3. பூமியும் பொருளும்

அன்பான மகனுக்கு,

உன் அன்பான கடிதம் வந்தது. பள்ளியில் ஆசிரியர் என்றும் கற்பிக்காத பல விஷயங்களை அறிந்ததாகப் பாராட்டினாய். ஆயினும் உலோகாயதம், பொருள் முதல்வாதம் பற்றி இதுவரை நான் விளக்கியதை நீ நன்கு கிரகித்துக் கொள்ளவில்லையோ என எண்ணுகிறேன். அது உனது வயதுக்குரிய மூளையின் கிரகிக்கும் ஆற்றலின் குறை பாடல்ல.

மேலும் எளிமைப்படுத்தி விளக்குவதில் நான் தவறி விட்டேன் என்றே கருதுகிறேன். உலகம் பற்றிய அடிப்படை யான சில விஷயங்களை நான் முன்னரேயே கூறியிருக்க வேண்டும் என தற்போது எண்ணுகிறேன்.

நாம் வாழும் பூமி அசையாதது போலவே தோன்று கிறது. ஆயினும் இது அசைந்துகொண்டே இருக்கிறது. இயங்கியலானது என்பதைக் கற்றிருப்பாய். கண்ணால் காண்பதெல்லாம், அனுபவ உணர்வெல்லாம் உண்மையாகி விடுவதில்லை.

பூமி 24மணி நேரத்திற்கு ஒரு தடவை தன்னைத் தானே சுற்றுகிறது. எரிந்து கொண்டிருக்கும் சூரியனைப் பூமி 365 நாட்களில் ஒரு தடவை சுற்றி வருகிறது. சூரியன் காலையில் கிழக்கில் உதித்து மாலை யில் மேற்கில் மறைவதில்லை. பூமி தன்னைத்தான் சுற்று

படிப்பகம்

www.padippakam.com



வதனாலேயே அவ்வாறு தோன்றுகிறது. திசைகளை நம் வாய்ப்புக்காக நாமே கற்பித்துள்ளோம். அனுபவங்கள் எல்லாம் உண்மையாகி விடுவதில்லை. மறந்து விடாதே.

இந்தப் பூமி எங்கிருந்து வந்தது?

சூரியன் என எரிந்து கொண்டிருக்கும் பெரிய கோளத்தி லிருந்து பூமி சுமார் 500கோடி ஆண்டுகளின் முன்னர் வெடித்து வந்த தீப்பிளம்பாகும். பிரபஞ்சம் உருவாகிய நிகழ்ச் சியை மிகப் பெரிய வெடிப்பு' (Big Bang) என்பர். பலகோடி ஆண்டுகளின் பின் நெருப்பு அணைந்து பூமி குளிர்ச்சியடையத் தொடங்கியது.

பின்னர் நிலம், நீர், வாயுவாக மாறவே 200 கோடி ஆண்டுகள்வரை ஆகின எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். அதன் பின்னரே பொருளின் மாற்றத்தாலும் சேர்க்கையா லும் ஒற்றை உயிரணு (Cell) உருவாகி உயிரின் வளர்ச்சிக்கு வித்திட்டது. 300கோடி ஆண்டு வளர்ச்சியின் பின்பே, இற்றைக்கு 20 லட்சம் ஆண்டுகளின் முன் உயிரணு மனிதக் குரங்கு நிலையை அடைந்தது. இருகால்களை ஊன்றி நடந்து மற்றிரு கால்களைக் கைகள் ஆக்கியதால் முதுகெலும்பு நிமிர்ந்தது. மூளையும் வளர்ச்சியடைந்தது. அவ்வேளையும் மிருக நிலையே.

பொருளின் வளர்ச்சியிலிருந்தே உயிர் வாழ்வன அனைத்தும் தோன்றின என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்.

தன் உணவிற்கும், தற்காப்பிற்குமாக இயற்கையி லிருந்து கல்லை எடுத்த மிருகம், அக்கல்லை மற்றொரு பொருளின் மீது தீட்டி கூரான கல்லாக்கி இயற்கையை வெற்றிகொள்ள ஆரம்பித்த பொழுதே மனிதன் தோன்றி னான். கற்களால் கருவிகள் செய்த காலம் கழிந்து பித்தளையைக் கண்டுபிடித்து கருவிகள் செய்யத் தொடங்

www.padippakam.com



கிய பின்னரே இயற்கையை வெல்லும் துணிவு மனிதனுக்கு ஏற்பட்டது என்பர். இரும்பின் கண்டுபிடிப்பு மேலும் துணிச்சலைத் தந்தது. இன்றைய கம்பியூட்டர் நிலைக்கு வளர்ந்து சந்திரனில் காலடி எடுத்து வைக்கமுடிந்தது.

மனிதனும் இயற்கையின் உதவியுடன் வாழும் இயற்கையின் ஓர் அம்சமே. அதே வேளை இயற்கையை எதிர்த்தும் வாழ்வதோடு தன் தேவைக்கேற்ப இயற்கையை மாற்றியமைக்கவும் முயல்பவன்.

மேலே கூறிய உயிரின வளர்ச்சிப் போக்கை விஞ்ஞான ரீதியாக, ஆதாரங்களுடன் முதலில் விளக்கியவர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த டார்வின் (1809-82) என்ற உயிரியல் விஞ்ஞானியாவார்.

சூரியன் என்ற எரியும் பொருளில் இருந்து வெடித்துச் சிதறிய ஒரு சிறு பகுதியிலிருந்தே நாம் உலகில் காணும் அனைத்துப் பொருட்களும் தோன்றின என்பதை உன் சிந்தனை மூலமே அறிந்து கொள்வாய். மூளையிலிருந்து சிந்தனையைப் பிரிக்க முடியாது. நீ காணும் அனைத்துப் பொருட்களும் உன் மூளைக்கு, சிந்தனைக்குப் புறம்பே உள்ளன என்பதை மேலும் விளக்க வேண்டியதில்லை என நம்புகிறேன்.

'மூளை என்பது சிந்தனையின் உறுப்பு, சிந்தனை செய்கிற பொருளிலிருந்து சிந்தனையைப் பிரிக்கமுடியாது' என மார்க்கிய அறிஞரும், அக்கோட்பாடுகளை தடைமுறைப்படுத்தி சோவியத் நாட்டில் சோஷலிசப் புரட்சியை ஏற்படுத்தியவருமான லெனின் கூறினார்.

மூளை உடலோடு ஒன்றிய ஒருபகுதி. அது தலையின் உள்ளே இருப்பதை நாம் அறிவோம். தலையில் மூளைக்கு அண்மையிலேயே புலனுணர்வின் முக்கிய உறுப்புகளான



படிப்பகம்

www.padippakam.com



கண், செவி, நா, மூக்கு யாவும் உள்ளன. உணர்ச்சியும் அங்கு தோன்றியே உடலையும் பாதிக்கின்றது.

''மூளையின் பணிகள் பல. புற உலகோடும் பரவலான உறவு கொண்டது. உள்ளே உடம்பின் அனைத்துப் பகுதிகளுடனும் ஒருங்கிணைந்துள்ளது. உடலுக்கும் உலகிற்கும் நீங்காத தொடர்புண்டு.

ஆகவே பொருளிலிருந்தே அனைத்தும் தோன்றின என்பதைக் காண்பாய். பொருள் மாறும் தன்மையது. உலகிலுள்ள நீர், மண், புல், பூண்டு, மரங்கள், உயிரினங்கள், மனிதர் அனைத்தும் பொருளின் மாற்றத்தில், வளர்ச்சிப் போக்கில் தோன்றின என்பதை மறந்துவிடாதே

இந்த மாற்றத்தைத் தமிழர்களும் முன்னரே அறிந்திருந்தனர். ஆயினும் மனிதனின் மறுபிறப்பின் வளர்ச்சியாகத் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் தமது சிவ புராணத்தில் கூறியுள்ளார்:

''புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல் மிருகமாய் பறவையாய் பாம்பாகி...''

மேலும் உலகப் பொருட்கள் அனைத்தும் புறத்தே உள்ளன. நீ இன்றியே, உன் மூளை இல்லாமலே அவை நிலைத்து மாறிக் கொண்டிருப்பன என்பதை உன் மூளையின் பிரதிபலிப்பிலிருந்தே அறிந்து கொள்கிறாய்

தீக்கோழி ஓடிக் களைத்ததும் மணலுக்குள் தலையைப் புதைத்துவிட்டு உலகமே அழிந்துவிட்டது என எண்ணிக் கொள்ளுகிறதாம்! தூங்கும் வேளை மனிதர்கள் உலகை மறந்து விடலாம். ஆயினும் மூளை தூங்கிவிடுவதில்லை. மனிதன் மூச்சு விடுகிறான். கனவு காண்கின்றான்.

உலகப் பொருட்கள் எல்லாம் எப்பொழுதும் மாறிக் கொண்டே இருக்கின்றன என்பதை முதன் முதலில் கூறிய

www.padippakam.com



வர் ஹெராக்லிட்ஸ் (கி. மு. 540—480) என்ற கிரேக்க அறிஞராவார். பொருள்களின் மாற்றம்பற்றி முதன்முதலில் கூறிய பொருள் முதல்வாத சித்தாந்த வாதிகளில் ஒருவராவர்.

மேலும் பொருள்களுக்கு இடமும் காலமும் உண்டு. பொருளையும் இடத்தையும் காலத்தையும் பிரிக்கமுடியாது. அதேபோல ஒன்றுமேயில்லாது அழிக்கவும் இயலாது. பொருள் ஆரம்பமும் முடிவும் இல்லாதது. பொருள் ஆற்றலாக மாறக் கூடியது. பொருளும் ஆற்றலும் ஒன்றுக்கொன்று இணைந்தவை. அணுவைப் பிரித்து சக்தியாக்குவதைப் பற்றிக் கற்றிருப்பாய். அணுகுண்டு பற்றி அறிந்திருப்பாய்.

சில தனிப்பொருட்களை இன்று நாம் அறியாதிருக்கலாம். காலப்போக்கில் அறிந்து கொள்வோம். உலகப் பொருட்களை ஆய்ந்து அறியும் விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது.

நான் கல்லூரியில் கற்கும்போது, உலகில் 92 தனிப் பொருட்களே (Elements) உள்ளன எனக் கற்பிக்கப்பட்டது. இன்று 103 தனிப்பொருட்களின் சேர்க்கையாக உலகம் இயங்குகிறது என விஞ்ஞானிகள் இனம் கண்டுள்ளனர்.

'கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு' என அவ்வைப் பழமொழியைக் கேட்டிருப்பாய். மண்ணிலிருந்து பிரிக்கப்படும் சிலிக்கா என்ற மூலப் பொருளிலிருந்தே அரைக் கடத்தி (Semi-Conductor) உற்பத்தி செய்யப் படுகிறது. இதுவே கம்பியூட்டர் கருவிகளின் அடித்தளம் என்பதையும் கற்றிருப்பாய். இம்மூலப் பொருள் தாராளமாக உலகெங்கும் கிடைப்பதனாலேயே கம்பியூட்டர் கருவிகளின் விலைகள் குறைந்து வருகின்றன. 'மண்ணளவு' கற்றதையே (கம்பியூட்டர் உட்பட) சிறிதாகக் கொள்ளின்

www.padippakam.com



இன்றும் உலகைப் பற்றி, பொருட்களைப் பற்றிக் கற்பதற்கு எவ்வளவு உள்ளது. கற்பதற்கும் இயற்கையை வெல்வதற்கும் எல்லை இல்லை.

இவற்றையெல்லாம் கிரகித்துக் கொள்ள கஷ்டமாக உள்ளதா? சிறிது மயக்கமும் குழப்பமும் ஏற்படலாம். தொடர்ந்து இவைபற்றிச் சிந்திப்பதன் மூலம் தெளிவு பெறுவாய்.

அன்பான,

அப்பா

# 4. மனிதனும் மிருகமும்

அன்பான மகனே,

கடிதங்களைப் படித்து புதிய கருத்துகள் பற்றிச் சிந்தித்து தெளிவு பெற முயல்வது அறிந்து மகிழ்ச்சி அதே வேளை மூளை என்பது 'காமரா' போன்றதுதானே என உவமைதேடி எழுதியுள்ளாய். பொருள் முதல்வாதம் பற்றி நீ அறிய விரும்பும் ஆர்வத்தை உன் கடிதம் காட்டுவதை அறிந்து மகிழ்ச்சி.

நீ ஒப்பிட்டுக் கூறுவதில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது. காமரா என்பது நுட்பமான லென்ஸ்—கண்ணாடிவில்லை பொருத்திய பொருளே. மேலும்; நான் முன்னர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட மாமரத்தை அல்லது நீர் விரும்பிய மற்றொரு பொருளின் பிம்பத்தை கிரகித்து வேறோர் பிரதி தருவதற்குப் 'பிலிம்' வேண்டுமல்லவா? இத்தகைய பிலிம் சுருள் மிகவும் கூருணர்வு—சென்சிட்டிவ் மிக்கது. குறிப்பிட்ட உருவத்திலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர்களை உள்வாங்கி பிலிமில் இரசாயனப் பாதிப்பு ஏற்படுத்துகிறது. பின்னர் இரசாயன முறை மூலம் பிலி

www.padippakam.com



மைக் கழுவி நெகட்டிவ்வைப் பெறுகிறோம். அதை மீண்டும் கூருணர்வுப் பேப்பரில் அச்சிட்டு படப்பிரதி பெறுகிறோம். அவ்வளவே, படப்பிரதியைக் கிழித்து வீசிவிடின் மீண்டும் பிரதி எடுத்தல் வேண்டும்.

மூளையால் புற உலகில் பார்த்தவற்றைப் படிமமாகக் கிரகித்து வைக்கக்கூடியதாக உள்ளது; தேவை ஏற்படும் போது பேச்சாலும் எழுத்தாலும் அப் படிமத்தை வெளிக் கொணர முடியும்.

மற்றொரு பொருளாகிய கண்ணாடியில் உன் பிரதி பலிப்பைப் பார்க்கிறாய். ஆயினும் உருவத்தைக் கிரகித்து வைக்கும் ஆற்றல் அதற்கில்லை.

நம் வீட்டு மாமரத்தைப் பற்றி உன்னால் விவரித்துக் கூற முடியும். வர்ணித்து எழுதவும் படமாக வரைந்து காட்டவும் இயலுமல்லவா?

மிருகங்களுக்கு உலகம் பற்றிய அறிவில்லை. அவை வெறும் தன்னுணர்வுப் பாங்கு மட்டுமே கொண்டவை மனிதனுக்கு உலகம் பற்றிய ஏதோ ஒரு வித கருத்துண்டு. மனிதனால் பேசவும் முடிந்தது. இன்று எழுதவும் முடிகிறது. இவ்வேக வளர்ச்சிப் போக்கை பிற உயிரினங்கள் எதிலும் காண முடியாது.

சிலந்தியால் நுட்பமான வலை பின்ன முடியும் என நீ வியந்து கூறலாம். ஆனால் அது தன் உள்ளுணர்வால் தான் வலை பின்னுகிறது. ஒரே ரகமானவலையை வாயிலிருந்து வரும் ஒரே ரக பொருளாலேயே எல்லாச் சிலந்திகளும் வலை பின்னுகின்றன. தூக்கணாங் குருவிகளால் புறப்பொருட் எடுத்தும் ஒரே ரக விசித்திரமான கூடுகளே அமைக்க முடிகிறது.

ஆனால் புற உலகைக் கிரகித்த மனித மூளையின் செயலால், தன் கற்பனைப்படி ஒரு வரைபடத்தைக் கீறித்

www.padippakam.com



தா. அதன்படி புதிய ரக வீடு ஒன்றைக் கட்டி விட முடியும். புதிய புதிய வியத்தகு கட்டிடங்களை, வாகனங்களையெல்லாம் நீ பார்க்கிறாய். அவற்றில் பல்வேறு அழகுணர்வுகளையும் மனிதனால் புகுத்த முடிகிறது.

மனித மூளை மிருகங்களின் மூளையிலும் பார்க்க பல வகையில் உயர்ந்தது. படைப்பாற்றல் கொண்டது. அனுபவங்களைத் தொகுப்பது மட்டுமல்ல, தர்க்க முறையாகப் பகுத்தறிவையும் வளர்க்க முடிந்தது. மிருகங்களினால் இயற்கையுடனேயே வாழ முடியும். மனிதனால் மட்டுமே இயற்கையை தன் தேவைக்கேற்ப மாற்றியமைத்து வாழ முடியும். உழைப்பு மனிதனது தனிச் சிறப்பம்சமாகும்.

மனிதன் பல்வேறு கருவிகளையும் தன் தேவையை நோக்கி, கரங்களால் உருவாக்கக் கற்றிக் கொண்டான். பெருவிரல் அவனது தனிச்சிறப்பான உழைப்பின் உறுப்பு. ஏகலைவன் என்ற வேடனின் வில்வித்தைத் திறமையை ஒடுக்க, குருதட்சணையாக அவனது பெருவிரலைக் கேட்டான் துரோணர் என்ற பாரதக் கதையைக் கேட்டிருப்பாய்.

மனிதன் சமூகமாக வாழும் தேவையும் ஏற்பட்டது. சமூக வாழ்விற்குப் பயன்படக்கூடியதாக மொழியையும் மனிதன் உருவாக்கிக் கொண்டான். வரிவடிவமாக மொழியை எழுதவும் கற்றான். இவற்றால் இயற்கையைத் தன் தேவைகளை ஒட்டி மாற்றி அமைக்கும் வளர்ச்சிப் போக்கும் வேகமடைந்தது.

மனிதன் இயற்கையின் ஒரு தோற்றம், உற்பத்தி என முன்னரும் கூறினேன். மனிதர்களும் இயற்கையோடு பொருளோடு கூடிய வாழ்வே வாழ்ந்து வந்தனர். இயற்கையில் கிடைக்கும் பழம், விதை, கிழங்கு, பிற உயிரின இறைச்சி ஆகியவற்றை உண்டு கோடிக்கணக்கான ஆண்டுகளாக

www.padippakam.com



வாழ்ந்து, வளர்ந்து வந்தனர். எங்கும் மனிதன் நிலைத்து வாழவில்லை. உணவு, பாதுகாப்பு வேண்டி இடம்பெயர்ந்து கொண்டேயிருந்தான். வெள்ளம், வரட்சி, பூமியதிர்ச்சிகூட அவனை விரட்டி வந்தது.

உற்பத்திக் கருவிகள் வளர்ச்சியடைந்த பின்னரே பெரும்பாலும் நிலையாக மனிதன் குடியேறி வாழத் தொடங்கினான். தேவைக்கேற்ப உணவு, பண்டங்களை ஆக்கியதோடு அவனது சிந்தனையும் வளர்ந்தது.

உற்பத்திச் சாதனங்களை தனிச் சொத்தாகக் கொண்ட ஒரு பகுதியினருக்காகக் 'கடவுள்' படைக்கப்பட்டார். கல்லிலே அதற்கு உருவமும் தந்தனர். பெரும்பாலும் மனித உருவத்திலேயே கடவுளின் உருவமும் ஆக்கப்பட்டது. மிருகங்கள் தமக்காக ஒரு கடவுளைப் படைப்பின் அதுவும் தம்மின மிருக வடிவத்திலேயே அமையும் என்று சிலர் வேடிக்கையாகக் கூறுவர்;

புதிதாகப் படைக்கப்பட்ட கடவுளை ஏற்றுக் கொள்ளாத பெரும் பகுதியினரும் தொடர்ந்து வாழவே செய்தனர். பொருள் முதல்வாதம் இன்று, நேற்றுத் தோன்றியதல்ல. ஆகவே அநாதியானது. அதன் காலம் கணிப்பிட முடியாதது. ஆனால் தெய்வ வழிபாடு ஆரம்பித்த காலத்தை எளிதில் கணித்து விட முடியும். பலகோடி பொருளியல் வாழ்வில் கடவுள் படைக்கப் பட்டது சில ஆயிரம் வருடங்களின் முன்னரேதான் என்றால் நீ வியப்படையலாம்.

புராண, இதிகாசங்களைக் கடவுள் பிரச்சாரத்திற்காக எழுதினர். படித்துப் புரியத்தக்கதாக வசனம் அமைத்து மனிதர் எழுதத் தொடங்கிய காலம் 2500—3000 ஆண்டுக்குள்ளேயே. அப்போதும் கல்லிலும் தகடுகளிலுமே எழுதினர். பின்னரே ஓலைகளில், மரப்பட்டைகளில் எழுதி ஒருசிலர் பிரதி பண்ணிப் படித்தனர். அச்சு வாகனம் வந்து 200—300

www.padippakam.com



ஆண்டுகளே ஆகின. இன்று நவீன அச்சுயந்திரங்கள் மற்றும் அரசின் பலவகை முயற்சிகள் ஏற்பட்டும் இந்தியாவில் அரைவாசிக்கு மேற்பட்ட மக்களுக்கு எழுதவோ, படிக்கவோ தெரியாது. எழுத்தில், அச்சில் வருவதை முழுமையாக நம்பி விடும் மக்களே பெரும்பான்மையாக உள்ளனர் என்பதை நீயும் கவனித்திருக்கலாம்.

புராண, இதிகாசங்களை எழுதி நலன் பெற்றவர்கள் தமது கடவுள் கொள்கையை ஏற்காதவர்களை அரக்கர்கள் என வர்ணித்தனர். நாத்திகர், உலோகாயதவாதிகள் என்ற வார்த்தைகள் பின்னரே தோன்றின.

அரக்கர் என்போர் ஒழுக்கமற்றவர்; காமவெறியர்; புலால் இறைச்சி உண்பவர்; கள் அருந்துபவர்; சுகபோகத்தில் நாட்டம் கொண்டவர்; கொலையையே தொழிலாகக் கொண்டவர்; தெய்வங்களை எதிர்த்துப் போரிடுபவர். இவ்வாறெல்லாம் பிரச்சாரம் செய்தது மட்டுமல்ல; இவ்வரக்கர்களை வெற்றி கொள்வதாக விழாக்களும் எடுத்தனர். சூரசம்ஹாரம் விழாவை நம் கிராமத்து முருகன் கோவிலில் பார்த்திருப்பாய். நவராத்திரியின் கடைசி நாளாகிய மகா நோன்பு, தீபாவளி ஆகியவையும் இத்தகைய விழாக்களே. அரக்கர்களை வெற்றி கொண்ட நாட்களாக பள்ளிக் கூடங்களிலும் விடுதலை நாள் கிடைக்கும்.

அடுத்த விடுமுறையில் கந்தபுராணம் என்ற நூலை நீ படிக்க வேண்டும். பொருள்முதல்வாதிகளான அரக்கர்கள் எவ்வாறு அண்மைக் காலத்தில் இழிவுபடுத்தப்பட்டனர் என்பதை அறிவாய்.

புறப்பொருள்கள் யாவும் இயங்குகின்றன. மாறுகின்றன; வளர்ச்சியடைகின்றன. மனித சிந்தனையும் மேம்படுகிறது. விஞ்ஞானப் பரிசோதனைகள் நடைபெறுகின்றன. உலகமே மாற்றமடைந்து கொண்டிருக்கிறது. பொருண்

படிப்பகம்

www.padippakam.com



மையே அனைத்தினதும் அடிப்படை, கருத்துச் சார்ந்து பொருள்கள் தோன்றுவதில்லை என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

உலகின் மானிட சமூகவளர்ச்சி, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியோடும் சமூகமாற்றத்துடன் மாறிவரும் உற்பத்தி உறவுகளோடு எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்தது என்பதைக், 'குந்தவிக்குக் கடிதங்கள்' என்ற என் நூலில் கற்றிருப்பாய். அவற்றில் சில உண்மைகளை மறந்திருக்கலாம். ஆகவே மீண்டும் ஒரு தடவை படி. அக்கடிதங்களில் கூறப்படுவது வரலாற்றுப் பொருள் முதல்வாதம். மனித வரலாற்றினது விஞ்ஞான முறைப்படியான ஆய்வு.

பொருள் முதல்வாதம் பற்றியே இதுவரை விளக்கிக் கூறி வந்தேன். 'இயங்கியல் பொருள் முதல்வாதம்' என்ற சித்தாந்தத்தைக் கற்பதற்கும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் பற்றி நீ நன்கு தெரிந்திருப்பதே நல்லது.

அன்பான,
அப்பா

# 5. பொருளும் இயக்கமும்

அன்பின் மகனுக்கு,

'பொருள் முதல்வாதம் என்பதை ஓரளவு கிரகிக்க முடிந்தது. வேறும் நூல்கள் தேடிப் படித்துக் கொண்டிருக்கிறேன். ஆயினும் முன்னைய கடிதத்தில் 'இயங்கியல்' என்ற புதிய சொல்லை அடைமொழியாகக் கொண்டு இயங்கியல் பொருள் முதல்வாதம் என எழுதினீர்கள். முதலில் இயங்கியல் என்றால் என்ன?' எனக் கேட்டு எழுதிய

www.padippakam.com



கடிதம் பெற்றேன். இவற்றைக் கற்றறிய நீ காட்டும் ஆர்வத்தை அறிந்து மகிழ்ச்சி. நன்றி.

பொருளை முதன்முதலாகக் கொண்டே உலகம், உயிரினங்கள் அனைத்தும் தோன்றி வளர்ந்தன என்பதை முன் கடிதமூலம் அறிந்திருப்பாய். அது பொருள் முதல் வாதக் கோட்பாடு. இதுவே உலோகாயதம் எனவும் விளக்கினேன். 'இயங்கியல்' என்பதை அடைமொழியாக்கி இயங்கியல் பொருள் முதல் வாதம் என்பதைச் சிந்தா தமாக வகுத்துக் காட்டியவர் ஜெர்மன் அறிஞரான கார்ல் மார்க் சேயாவர்

'இயங்கியல்' என்பதை புதிய அர்த்தத்துடன் முதலில் விளக்கியவர் மற்றொரு ஜெர்மானிய சித்தாந்தவாதியான ஹேகல் (1770-1831) என்பவரே. இவரின் மாணாக்கரான பெயர்பார்க் (1804-1872) என்ற மற்றொரு ஜெர்மன் சித்தாந்தவாதி வகுத்த 'பொருள் முதல்வாதம்' என்ற வார்த்தையுடன் இணைத்தே கார்ல் மார்க்ஸ் இயங்கியல் பொருள் முதல்வாதம் என்ற புதியதோர் சித்தாந்தத்தை நெறிப்படுத்தினார்.

'தலையால் நடந்தவரை (ஹேகலை) புரட்டிக் காலால் நடக்கச் செய்தேன்' என மார்க்சே கூறியுள்ளார். ஹேகலின் சித்தாந்தம் கற்பனாவாத சித்தாந்தமாக இருந்ததாகவே மார்க்சும் கொண்டார்.

ஜெர்மானிய அறிஞர்களிடமிருந்தே மார்க்ஸ் சித்தாந்தத்தைக் கற்றுக் கொண்டார் என்பர்.

பொருள் இயக்கமற்ற வெறும் சடமல்ல; மாறிக் கொண்டே இருப்பது; பிறபொருட்களுடன் தொடர்புடையது; தனித்த பொருள் என எதுவுமில்லை.

இயக்கமின்றிப் பொருட்களில்லை. நீ ஒரு கல்லை எடுத்து, 'எங்கே அப்பா நீங்கள் கூறும் இயக்கம்' என்று கேட்கலாம்.

www.padippakam.com



வெளிப்பார்வைக்கு இயக்கமில்லாது தோன்றலாம். உண்மை அவ்வாறில்லை. இக்கல்லும் பூமியோடு தானே சுற்றுகிறது நீயும் அவ்வாறே. அத்தோடு இக்கல்லு சூரியனையும் வலம் வருகிறது. ஈரம், குளிர், சூரிய வெப்பம், காற்று ஆகியன அதன் மேல் தாக்கம் ஏற்படுத்துகிறது. உன் சைக்கிளில் கறள் பிடிப்பதை அடிக்கடி எண்ணெய் போட்டுத் துடைப்பாயே.

மேலும் நீ எடுத்த கல் கோடிக் கணக்கான அணுக் களைக் கொண்டது. ஒவ்வொரு அணுவிலும் எலக்ட்ரான், புருட்டோன் என்பன இயக்கிக் கொண்டேயிருக்கின்றன. விஞ்ஞானப் பாடத்தில் நீ இவற்றைக் கற்றிருப்பாய்.

பூமியில் பருவங்கள் மாறுகின்றன. அதற்கேற்ப விவசாயிகள் மாற்றுப் பயிர்கள் நாட்டுகின்றனர். மரங்கள் பூத்துக் காய்க்கின்றன. பழுத்துவிழுகின்றன. கால நிலை களைக் கணக்கிடும் முறைகள் இன்று மிக்க வளர்ச்சி பெற்றுள்ளன.

நீ அசையாது இருந்தபோதும் உடலில் இரத்த ஓட்டம் நிகழ்கிறது. உயிரணுக்கள் அழிவதும் புதிதாகத் தோன்று வதுமாக உள்ளன 'பொருள் முற்றுமுழுதானது மாறாதது என்று கூறமுடியாது. அது மாறிக்கொண்டே இருக்கும். அது உலகளாவியது. சித்தாந்த வகையானது' என லெனின் இயங்கியலுக்கு விளக்கம் கூறினார்.

மனித சிந்தனை மூளை என்னும் பொருளிலிருந்து தோன்றுவது. அது மாறிக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாதது.

'ஒரு முழுப்பொருளை இரண்டு எதிரான பகுதிகளாகப் பிரிப்பதும் அப்பகுதிகள் பற்றி அறிந்து கொள்வதும்தான் 'இயங்கியலின் சாராம்சம்' என லெனின் மேலும் விளக்கு கிறார்.

www.padippakam.com



உலகம் நம்மைச் சுற்றியுள்ளது என்பதை ஏற்றுக் கொண்டவர் அனைவரும் பொருள்முதல்வாதிகளாக இருக்கலாம். ஆனால் அவர்கள் இயங்கியலை, மாற்றங்களை ஏற்றவர்களா என்பதை அறியவேண்டும்.

இயங்கியலை எதிரானவற்றின் ஒற்றுமையின் தத்துவம் என்றும் விரிப்பர். இவற்றைப் பின்னர் விரிவாகக் கற்றுக் கொள்வாய்.

மனிதமூளை ஒரு பொருள் என்பதைத் தற்போது நீ முற்றாக ஏற்றுக் கொள்வாய் தானே. இம்மூளை புறப் பொருளான உலகைப் புலன்களுடாகவே அறிகிறது. இச்செயல் மூலம் சிந்தனை, கருத்துகள் தோன்றுகின்றன. இது இயங்கியலானது, உலகோடும் சுற்றாடலோடும் இணைந்துள்ளது. ஒன்று மற்றொன்றைப் பாதிப்படையச் செய்கிறது.

சமூகத் தேவைகளைச் சார்ந்து அறநெறிகள், ஒழுக்கம், கருத்தியல்கள் வளர்கின்றன. ஆயினும் இவை நிரந்தரமானவையல்ல. சமூகம் வளர்ச்சியடைய, உற்பத்தி மேம்பட இவையும் மாறிக் கொண்டேயிருக்கும். என் பாட்டன் காலத்திலிருந்த உற்பத்திமுறை வேறு. இன்றையவை வேறு. அன்று நிலை பெற்றிருந்த நீதி ஒழுக்கமுறைகள் எல்லாம் இன்று மாறியுள்ளதை நான் விரித்துக் கூறவேண்டியதில்லை.

அன்று வீட்டு முற்றத்தில் வளர்க்கப்பட்ட மாமரம் இன்று எத்தனை மாற்றமடைந்துள்ளது என்பதைப் பார்த்திருப்பாய். அதே போலவே அப்பாவிலும் மாற்றமில்லாமலிருக்குமா? உன் வளர்ச்சியையும் எண்ணிப்பார்.

மற்றும் ஒரு நுணுக்க விஷயத்தை மறந்து விடாதே. ஒன்று, உலகின் இயற்கை நிகழ்வுகளால் ஏற்படும் படிமுறை வளர்ச்சி; மெதுவாக நிகழ்வது. மற்றது மனிதர்களால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள்; புரட்சிகள்.

படிப்பகம்

www.padippakam.com



என் பாட்டனார் கல் நிறைந்த கலட்டி நிலத்தைக் கிளறி, கற்களை அகற்றி, நிலத்தைப் பண்படுத்திப் பயிர் விளைக்கவில்லையா? இது இயற்கையின் மேல் மனிதர் நடத்தும் போராட்டம்.

அம்முற்றத்து மாமரத்தையும் விதையை, நாம் விரும்பிய இடத்தில் நாட்டி, நீர் ஊற்றி, பசளையிட்டு வளர்த்தெடுத்தோம். இன்று அதிகப்பயன் பெறுகிறோம். காட்டிலும் இயற்கையாக மாமரம் வளரலாம். நாம் வளர்ப்பதன் தரமாக அது இருக்காது.

இத்தகைய செயல்களால், உழைப்பால் நமது வாழ்வும் சிந்தனையும்கூட மாற்றமடைந்து மேம்பட்டிருக்கின்றன.

அனைத்துப் பொருட்களும் ஒன்றோடொன்று தொடர்புடையன. உன் மூளை, சிந்தனை, உன் உடலோடு சேர்ந்துள்ளது; மேம்படுகிறது. நீ வாழும் சமூகத்தில் ஓர் அங்கத்தவன். மறந்துவிடாதே.

இதுவரை நீ கற்றதை மீளச் சிந்தித்துப் பார்ப்பின் எமது சித்தாந்தத்திற்கே வருவாய்.

இதுவரை கடிதங்கள் மூலம் நீ கற்றதைக் கூட்டு மொத்தமாகப் பார்க்கலாம்.

நாம் சுற்றுப்புறத்தில், உலகில் காண்பதெல்லாம் பொருள். பொருளற்ற எதுவும் உலகிலில்லை. ஆகவே நமது முதல் சித்தாந்தம் பொருள் முதல் வாதம். தற்போது பொருள்கள் அனைத்தும் மாறுகிறது. இயங்குகிறது. சிந்தனையும் வளர்ச்சியடைகிறது, சமூகமும் மாறுகிறது என்ற கோட்பாடும் கொண்டோம். ஆகவே நமது முற்றுமுழுதான கோட்பாடு இயங்கியல் பொருள் முதல் வாதம் என்போம்.

www.padippakam.com



இச்சித்தாந்தம் மூலமே மனிதனது எதிர்கால நிகழ்வுகளை யும் விளக்க முடியும்.

அன்பான,

அப்பா

# 6. எதிரிடையும் ஒற்றுமையும்

அன்பிற்கினிய மகனுக்கு,

புதிய கருத்துக்களை அறிய நீ ஆர்வம் காட்டுவதை அறிந்து மகிழ்ச்சி மார்க்சிய நூல்களையும் தேடிப்படிப்பது உன் அறிவை நிச்சயம் ஆழமாக்கும்; விரிவாக்கும். இயங்கியல் பொருள் முதல்வாதம் மிக விரிந்த சித்தாந்த மாகும். நானும் முக்கிய குறிப்புகளைத் தொடர்ந்து எழுதி வருவேன்.

இயங்கியல் பொருள் முதல்வாதம் பற்றி மார்க்ஸ் விரி வாக எழுதிவிடவில்லை. அதன் இலக்கணங்களை, ஏங் கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாஓ போன்ற அரசியல் சித்தாந்தவாதிகள் விளக்கியுள்ளனர். இவர்கள் தவிர மார்க்சியத்தைக் கற்று விளக்கம் தருபவர்களும் நவ மார்க்சிஸ்டுகள் எனக் கூறப்படுபவர்களும் அண்மையில் பல் வேறு புதிய விளக்கங்கள் கூறிவருகின்றனர். அனைத்தை யும் தேடிப் படிப்பது உன் அறிவை, சிந்தனையை மேம்படுத்துவதற்கு பேருதவி புரியும் என்பதும் திண்ணம். நீ அறிய வேண்டிய மூன்று முக்கிய அம்சங்களை இங்கு அறிமுகப்படுத்த உள்ளேன்:

(அ) பொருட்களிலும் சமூகத்திலும் எதிரிடையான அம்சங்கள் உள்ளன. அவற்றிடை ஒற்றுமை நிலவுவதாகத் தோன்றலாம். அவை தற்காலிகமானவை. எதிரிடையான காரணங்களால் பொருள்களில் சமூகத்தில் இயைபின்மை, முரண்பாடு எழுகிறது.

www.padippakam.com



(ஆ) இம்முரண்பாட்டின் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்ததும், எல்லையைக் கடந்ததும் அப் பொருளில், சமூகத்தில் பாய்ச்சலான குணமாறுபாடு ஏற்படு கிறது. பனிக்கட்டி ஒரு நிலையில் நீராகிறது. சூடு 100°C ஏறும் போது நீராவியாகிறது.

(இ) வளர்ச்சிப்போக்கு ஒவ்வொரு தடவையும் அபிவிருத்தியை நோக்கியே முன்னேறுகிறது. ஒரு நிலையை மறுத்து புதிய வளர்ச்சி நிலையை அடையும். பின்னர் அந்நிலையை மறுத்து மேலும் மேம்பட்ட நிலையை அடையும்.

இவையே தொடர்ச்சியான இயங்கியல் பொருள் முதல் வாத நிகழ்வாகும். இத்தகைய தொடர் வளர்ச்சிப்போக்கை மூன்று விதிகளாக விவரித்துக் கூறுவர். அதன்படியே நீயும் கற்றறிவது இப்புதிய சித்தாந்தத்தை நன்கு கிரகித்துக் கொள்ளப் பயன்படும்.

1) எதிர்மறைகளின் ஒற்றுமையும் போராட்டமும்.

2) அளவுமாறுபாடு குணமாறுபாடு

3) நிலை மறுப்பியலின் மறுப்பியல்.

இவ்வார்த்தைகளைப் பார்த்துப் பயந்துவிடாதே. மேலே சுருக்கிக் கூறிய, மூன்று அம்சங்களின் சுருக்கமே இவை. அன்றாட வாழ்விலும் நீ காண்பவையே. இவை பற்றிய சில உதாரணங்களைக் கற்று நினைவில் வைத்துக் கொள்ளின் போதுமானது. அதற்கு மேலாக நடைமுறை பற்றியது. அது உன் முடிவான தீர்மானத்தைச் சார்ந்தது.

முதலாவது விதி பற்றி விரிவாகக் கற்றுக் கொள்வது அவசியமே. முரண்பாடுகள் பற்றி முன்னர் ஒரு கடிதத்தில் கேட்டு எழுதினாய். நான் பதில் எழுதவில்லை. ஏனெனில், முரண்பாடுகள் உள்ளடக்கும் இவ்விதி பற்றி நீ மிக விரிவாகக்

www.padippakam.com



கற்கவேண்டும். அதுவே சரியான அறிவைக் கிரகித்துக் கொள்வதற்கு வழி காட்டவல்லது.

'பிரிவன கூடும்; கூடுவன பிரியும்' என்ற முது மொழியை நீ அறிந்திருக்கலாம்.

பள்ளிக்கூடத்தில் சில விஷயங்கள் பற்றி எதிரிடையாகப் பிரிந்து விவாதம் நடத்துவதையும் பார்த்திருப்பாய். நீயும் பங்கு பற்றியிருப்பாய். நாடாளுமன்றத்திலும் கொண்டு வரப் படும் ஒரு சட்ட விதி பற்றி எதிரிடையாக விவாதிப்பதையும் அறிந்திருப்பாய்.

கீழ் வகுப்பில் படிக்கும் போது ஆசிரியர் சில சொற் களைத் தந்து அவற்றின் எதிர்ச் சொற்களை எழுதும்படி வேண்டுவாரல்லவா. அவை எதிரிடையான அர்த்தம் கொண்டவையாக, எதிரிடையாகப் பிரித்துக் காணக் கூடிய வையாக இருக்கும்.

அவற்றில் சிலவற்றைக் காண்க;

உலகம்: பூமி—வானம்

துருவம்: வடதுருவம்—தென்துருவம்

திசை: வடக்கு—தெற்கு; கிழக்கு—மேற்கு

காலம்: பகல்—இரவு, ஒளி—இருள்

கணிதம்: கூட்டல்—கழித்தல், பெருக்கல்—வகுத்தல்

இரசாயனம்: (அணுக்களின்) சேர்க்கை—பிரிவு

மின்சாரம்: நேர் மின்—எதிர்மின்

அணு: எலெக்ட்ரோன்—புரொட்டோன்

உயிரினம்: ஆண்—பெண்

நீர்: தண்ணீர்—வெந்நீர்

கலைகள்: உருவம்—உள்ளடக்கம்

உற்பத்தி: தொழிலாளி — முதலாளி, விவசாயி — நிலப்பிரபு, அடிமை—எசமான்

www.padippakam.com



உறவு : பகைமை—ஒற்றுமை(பகைமையற்றது)
போர் : தாக்குதல்—தற்காப்பு, வாள்—கேடயம்
விநியோகம் : கேள்வி — நிரம்பல்
அறிவு : கோட்பாடு — நடைமுறை
நிலைப்பாடு : அகநிலை — புறநிலை

இவ்வாறு எண்ணற்ற பொருட்களின் எதிர்மறைகளைக் காணலாம். முரண்பாடுகளைக் கவனிக்கலாம். சமுதாயத்தில், சமூக வாழ்விலே இத்தகைய எதிர்மறைகளையும் அவற்றின் ஒற்றுமையையும் காணலாம். வெளியே காணப்படும் ஒற்றுமை நிரந்தரமானதல்ல.

மேலே கூறப்பட்ட, எதிரிடையாகப் பிரித்துக் காண முடியாதவை அதீதக் கற்பனைகளே. அவற்றில் முரண்பாடுகளோ வளர்ச்சிப் போக்கோ காணமுடியாது. குழந்தைக் கதைகள், பிசாசுக் கதைகள், புராணக் கதைகளில் இவற்றைக் காணலாம். நரி பரியாகிய கதை, கறியாக்கிய மகன் எழுந்து வந்த கதை, மிருகங்கள் மரங்கள் பேசும் கதைகளையே கூறுகிறேன். குழந்தைகளுக்கும் அதே மூளை உள்ளவர்க்கும் இவை கவர்ச்சி தரலாம். இவை தப்பி ஓடும் அப்பாவித்தனமான போக்குடையவை. மொட்டந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது என்பார்களே, அதுபோன்ற நழுவல் முயற்சியே. அறிவின் ஆரம்ப நிலையான அனுபவ புலனறிவுக்கோ பகுத்தறிவுக்கோ ஒவ்வாதவை.

நாள்தோறும் வீட்டிலும் வெளியேயும் முரண்பாடுகள் ஏற்பட்டுக்கொண்டே இருப்பதைக் காணலாம். இது அனுபவ உண்மைகூட.

சமையல் பிந்திவிட்டதாக அம்மாவுடன் பிணக்குப் பட்டு சாப்பிடாது, பள்ளிக்கூடத்திற்கு நீ ஓடுவாய். பின்னர் மாலையில் பசியுடன் வந்து அம்மாவுடன் ஒற்றுமையாகச்



படிப்பகம்

www.padippakam.com



சாப்பிடுவாய். பாடசாலையில் பாடங்கள் படிப்பதில் ஆசிரியருடன் முரண்பாடு. பின் ஒற்றுமை.

அம்மாவிற்கும் அப்பாவிற்கும் வயது, உடல் வளர்ச்சி, வேலைகள், கடமைகள், உணவு, உடை, கல்வி முதலான வற்றில் வேறுபாடு இருப்பதை அறிவாய். இவற்றால் முரண்பாடு ஏற்படுவது இயல்பே. இதே போக்கு சமூகம் முழுவதும் ஊடுருவி இருப்பதும் தவிர்க்க முடியாததாகும்.

அன்பான,
அப்பா

# 7. வர்க்கமும் பகைமையும்

அன்புமிக்க மகனே,

'வீட்டிலும் வெளியேயும் முரண்பாடுகள் எழும்போது எந்தப் பக்கம் சரியானது. நாம் எங்கு சார்ந்து நிற்க வேண்டும்' என்று கேட்டு எழுதினாய். இதற்கு தக்க விடைகாண முரண்பாடுகள் பற்றி மேலும் நீ கற்றுக் கொள்ளவேண்டும். முரண்பாடுகளை சரியாகக் கையாள் வது போரிலும் சரி, சமாதானத்திலும் சரி வெற்றிதாக் கூடியது.

ஆரம்பத்தில் சுருக்கமாக நீ அறிந்து கொள்ள வேண் டிய ஒருசில உண்மைகள் உள. எந்தப் பொருள் பற்றி யும் விஷயம் பற்றியும் எதிரெதிரான இருவேறு கருத்து கள் நிலவவே செய்யும். அவற்றில் விஞ்ஞான ரீதியான. வளர்ச்சிப் போக்கான கருத்தை நாம் கண்டுகொள்ள வேண்டும். இருவேறு கருத்துகள் மோதும்போது சரி

www.padippakam.com



யான. விஞ்ஞான பூர்வ உண்மை வெளிப்படும். அதையே
சார்ந்து நிற்க வேண்டும். சரியான கருத்தை, வழியை,
நடைமுறையைத் தேர்ந்துகாண மார்க்சிய விஞ்ஞானமும்
சித்தாந்தமும் துணைபுரியும்.

கடவுளே உலகைப் படைத்தார், அவரே முழுமுத
லானவர் என வாதிடுவோர் ஒரு பகுதியினர்; அவ்வாறு
எவருமில்லை, அனைத்தும் பொருள்மயமே என விவாதிப்
போர் வேறொரு பகுதியினர்: இரு கருத்தோட்டங்களை
யும் காண்கிறோம். கடவுளை ஏற்பவர் கருத்து முதல்வாதி
கள்; பொருளை முதன்மைப்படுத்துவோர் பொருள் முதல்
வாதிகள். இவற்றில் தற்போது நீ எப்பக்கம்? கடவுளை
மனிதர் கண்டுபிடித்து சில ஆயிரம் வருடங்களே ஆகின.
அதன் முன்னரும் உலகமெல்லாம் பொருள் மயமாகவே
இருந்தன என்பதை கூறினேன்.

மனித இனத்தை வளர்த்த ஆதாம், ஏவாள் பாவம்
செய்ததாகக் கூறும் பைபிள் கதை பற்றி அறிந்திருப்பாய்.
அவர்கள் 5000 ஆண்டுகள் முன்னர் வாழ்ந்தனர் எனச்
சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிறிஸ்தவர்களி
டையே நடைபெற்ற விவாதத்தில் முடிவு செய்யப்பட்டது.
இது கருத்து முதல்வாதம்; நடைமுறைக்கு, விஞ்ஞான
அறிவுக்கு ஒட்டாத கற்பனை. ஆயினும் அன்று கிறிஸ்தவர்
களில் பெரும்பாலோர் நம்பினர். டார்வினின் 'உயிரி
னத்தின் ஆரம்பம்' என்ற விஞ்ஞான ஆய்வு நூல் 1859-ல்
வெளிவந்தது. ஆயினும் இன்றும் அவரை ஏற்காத கிறிஸ்
தவர்களும் பிற மதத்தவர்களும் கோடிக்கணக்காக உலகில்
உள்ளனர்.

கருத்து முதல்வாதிகள் பொருள் முதல்வாதிகளை நாத்
திகர் என்று கூறுவதைக் கேட்கலாம். பொருள் முதல்
வாதிகள் 'கடவுள் இல்லை' என்ற விதண்டா வாதத்தில்

www.padippakam.com



இரங்கவேண்டியதில்லை. ஏனெனில் பொருள் முதல் வாத சித்தாந்தத்தில் கடவுளை மறுப்பது என்பது சிறு அம்சமே. நாத்திகர்களெல்லாம் பொருள் முதல் வாதிகள் அல்லர்.

'நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர்' என மாணிக்க வாசகர் பாடும்போது புத்தமத, சமண மதத்தவரையே குறிப்பிட்டார் போலும். புத்தர், மகாவீரர் பொருள் முதல் வாதிகளாக இருக்கவில்லை என்பதை மறந்துவிடாதே. அவர்கள் கடவுளைப் பற்றி எதுவும் கூறவில்லை. அவ் வளவே அவர்களது காலத்தில் 'கடவுள்' என அரசனி லும் உயர்ந்த இறைவனின் தேவை ஏற்படாதிருக்கலாம். இந்தியாவில் புத்த, சமண மதங்களை ஒழிப்பதற்கு, கடவுளைச் சிருஷ்டித்த இந்துக்கள், 'அவர்கள் நாத்திகர் கள்' என்ற ஆயுதத்தையும் நன்கு பயன்படுத்தினர் என்றே கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையினர் கூறும் கருத்தே சரியான கருத்து என நாம் கொள்ளக்கூடாது. விஞ்ஞானபூர்வமான கருத் தைத் தெளிவுபடுத்துவோர் சிலவேளைகளில் சிறுபான்மை யினராகக் கூட இருக்கலாம்.

தவறான கருத்துகள் சிலகாலம் உயர்ந்து நிற்கலாம். சரியான கருத்துகள், செயல்களே இறுதியில் வெற்றி பெறும். சிறுவயதில் நீ கேட்ட பாட்டிக் கதைகள், புராண இதிகாசக் கதைகள் தொடக்கம் இன்று கற்கும் கலை, இலக்கியம் அனைத்திலும் இப்போக்கைக் காணலாம். சமுதாயம் தீயவைகளுடன் போரிட்டு இறுதியில் உண்மையே வெற்றி பெறுவதை அனைத்தும் கூறும்.

சமுதாயத்தில் பலகாலம் நிலை பெற்று வந்த நம்பிக் கைகள் பின்னர் மூட நம்பிக்கைகளாகக் கொள்ளப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



சமூக வளர்ச்சி, மனித சிந்தனையின் மேம்பாடே இவற்றின் காரணமாகும். இவ்வளர்ச்சிப் போக்கிற்கு எல்லையே கிடையாது.

நான்கு நூற்றாண்டுகளின் முன்னர் கூட உலகம் தட்டையானது என்ற கருத்தே நிலைபெற்றிருந்தது. பூமியே வான மண்டலத்தின் மையப் பகுதி, மற்றக் கோள்கள் அனைத்தும் பூமியைச் சுற்றியே வருகின்றன. என்ற எண்ணமே நிலை வந்தது. பூமியும் பிற கோளங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்று கூறிய கொப்பனிக்கஸ் என்ற போலந்து நாட்டு வானசாஸ்திர விஞ்ஞானி சிறையில் அடைக்கப்பட்டான்.

வானத்தில் வீசிய கல் கீழே விழுவது கடவுளின் மந்திர சக்தி என்றே கூறப்பட்டது. நியூட்டன் என்ற ஆங்கில விஞ்ஞானி பூமி தன்னைத்தானே சுற்றுவதால் ஏற்படும் ஆகர்ண சக்தியாலேயே மேலே வீசும் அனைத்துப் பொருட்களும் கீழ்நோக்கிக் கவரப்படுகின்றன என்பது மட்டுமன்றி கீழே ஈர்க்கும் பூமியின் ஆகர்ண சக்தியின் வேகத்தையும் கணக்கிட்டுக் கூறினார்.

இன்று உலகைச் சுற்றும் விமானத்தை மட்டுமல்ல செயற்கைக் கோளங்களையே அனுப்பக் கற்றுக் கொண்டோம். இதன் மூலம் வானிலை ஆய்விலும் தொடர்பு சாதனங்களிலும் வியத்தகு முன்னேற்றம் அடைந்துள்ளோம். இவ்வாறாக இயற்கையின் பல்வேறு நுட்பங்களையும் கற்று, ஆராய்ந்து மனித சமூக வளர்ச்சியை நோக்கி நாம் முன்னேறி வருகிறோம்.

கணக்குழுக்களாக வாழ்ந்த புராதன மனிதன். பரந்த நிலமும் இயற்கை வளங்களும் தமதே என சுதந்திரமாக

படிப்பகம்

www.padippakam.com



வாழ்ந்தது பற்றிப் படித்திருப்பாய். பின்னர் ஆயுத பலத்துடன் எசமானர்கள் தோன்றி மக்களை விலங்கு அடிமைகளாக உழைக்கச் செய்தனர்.

கட்டி வைத்து, உணவு மட்டும் தந்து, உழைப்பின் பயன் முழுவதையும் பெறும் மாடு, எருமைபோல மனிதர் களும் உழைக்க நேரிட்டது.

எசமானர்களின் கொடுமையைத் தாங்க முடியாது அடிமைகள் எதிர்த்ததும் நிலப்பிரபுக்கள் அவர்களை நிலத் திற்கு அடிமையாக்கி உழைக்கச் செய்தனர். அடுத்த கட்டமாக கைவினைப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த கம்மாளர் யந்திர உற்பத்தியில் வளர்ச்சியடைந்து, முதலாளி களாகி, நிலத்திற்கு அடிமையாக இருந்த கிராம மக்களைக் கூலி அடிமைகளாக உழைக்கச் செய்தனர். வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளர் அணிதிரண்டு முதலாளிக்கு எதிராகப் புரட்சி செய்து, உற்பத்திச் சாதனங்களைத் தமதுடைமை யாக்கி சோஷலிசப் புரட்சி மூலம் கம்யூனிச சமுதாயத்தை நோக்கி முன்னேறுவர்.

நீ கற்ற வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தை மீண்டும் இங்கு நினைவூட்டுகிறேன். எதிரெதிரான பகைமை கொண்ட வர்க்கங்களை இங்கே சுட்டிக் காட்டுவதற்காகவே கூறினேன். அடிமைகள்—எசமான்; விவசாயிகள்—நிலப் பிரபு; தொழிலாளர்—முதலாளிகள்.

உழைப்பவர் ஒருபுறம்; உழைப்பை அபகரித்து வாழ்பவர் மறுபுறம், பகைமை முரண்டுபாடு கொண்ட வர்க்கங்கள். எதிர்மறைகளின் போராட்டம் நிரந்தரமானது. இதுவே அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவதையும் காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com



உனக்குக் காய்ச்சல் வரும்போது படுத்துவிடுகிறாய். நெற்றியில், கழுத்தில் தொட்டுப்பார்த்து நாமும் அறிந்து கொள்கிறோம். எங்களது உடற்சூட்டிலும் பார்க்க உன் உடலில் வெப்பம் அதிகம் என உணர்கிறோம்.

பக்டீரியா அல்லது வைரஸ் நுண்கிருமிகள் உன் உடலைத் தாக்கி இருக்க வேண்டும் என ஊகிக்கிறோம். இந்த நுண்கிருமிகளின் தாக்குதலை எதிர்கொள்ளும் ஆற்றல் இரத்தத்தில் ஏற்கெனவே உண்டு. ஆயினும் இரத்தத்தின் எதிர்ப்புச் சக்திகளோடு நுண்கிருமிகள் முரண்பட்டு வெற்றி கொள்ளும்போது தாக்கத்தின் பிரதிபலிப்பாகவே காய்ச்சல் ஏற்படுகிறது. சில நாளில் இரத்தத்தின் எதிர்ப்புச் சக்திகள் பலம் பெற்று, பக்டீரியா அல்லது வைரஸ் நுண்கிருமிகளின் ஆற்றலைக் குறைத்து பின் அழித்துவிடுகின்றன. நீ நலம் பெற்றுவிடுவாய்.

ஆனால், காய்ச்சலைக் கண்டதும் அம்மா உடனே டாக்டரிடம் அழைத்துச் செல்கிறார். டாக்டர் மருந்து தருவார். பக்டீரியாவானால் அந்நுண்கிருமிகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கும், ஏற்கெனவே தாக்கத்தால் பழுதடைந்த உயிரணுக்களை மீளமைப்பதற்குமாக மருந்துகள், இரசாயன பில்லைகள் தருவார்.

வைரஸ் கிருமியின் தாக்குதலாயின் அவற்றை மருந்தின் மூலம் அழித்துவிட முடியாது. உடலில் தாங்கும் சக்தியை உயர்த்துவதன் மூலமும் தாக்குதலால் பழுதடைந்த உயிரணுக்களை மீளக்கட்டுவதன் மூலமுமே வைரஸ் நோய் கிருமிகளை வெற்றி கொள்ள முடியும். டாக்டர் அதற்கேற்ற படியான இரசாயன பில்லைகளைத் தருவார். சிறிது விரைவாகத் தேறிவிடுவாய்.

நுண்கிருமிகளுக்கும் உடலுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளை, உடலில் ஏற்படும் பாதிப்புகளை, உன்

www.padippakam.com



முறையே உனக்கு உணர்த்தும். இரத்தத்தின் தாங்கும் சக்தியுடன் நுண்கிருமிகள் போரிட்டு ஒரு கட்டத்தை, அளவைக் கடந்த பின்னரே உடலிலே குணமாறுபாடு ஏற்பட்டிருப்பதையும் நீ உணர்ந்திருப்பாய். காய்ச்சலைக் கண்டிருப்பாய்.

மனிதர்களால் மட்டுமே எதிர்ப்புத் தன்மைகளைக் கண்டறிய முடியும். எதிர்த்துப் போரிடும் வழிகளையும் தேடமுடியும். பயன்தரத்தக்க கற்பனைகளையும் சிந்தித்துக் காணமுடியும். மிருகங்களால் இவை முடியா.

அன்பான,

அப்பா

# 8. அகமுரண்பாடும் பகைமை முரண்பாடும்

அன்புள்ள மகனே,

'முன்னைய காலங்களிலும் பார்க்க சமூக முரண்பாடுகள் பெருகி வருவது போலத் தெரிகிறது. ஏனப்பா?' என்று கேட்டு எழுதியிருந்தாய். உன் வினா எனக்கு வியப்பும் மகிழ்ச்சியும் தந்தது. உன் சிந்தனை வளர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியே. திடீரென இத்தகையதொரு வினாவை உன்னிடமிருந்து நான் எதிர்பார்க்கவில்லை. அதுவே வியப்பு.

அடிமைச் சமூகத்திலும் நிலப்பிரபுத்துவத்திலும் உற்பத்தி குன்றியிருந்தது. முதலாளித்துவத்தில் பண்ட உற்பத்தி பெருகி வருகின்றன. அதையொட்டி முரண்

www.padippakam.com



பாடுகளும் பெருகி வருகின்றன. ஒவ்வொரு பொருளிலும் அக முரண்பாடு உள்ளது.

இயங்கியல் பொருள் முதல் வாதத்தில் முதன்மையாகக் கொள்ளப்பட வேண்டியது முரண்பாடுகள் எனப் புரட்சியை நடைமுறைப்படுத்திய மாஓ போன்ற மார்க்சிய அறிஞர்கள் கருதினர். முரண்பாடுகளின் விளைவாகவே போராட்டம் ஏற்படுகிறது.

எதிர்மறைகளின் ஒற்றுமையும் போராட்டமும் என்ற விதியின் கீழேயே முரண்பாடு கொள்ளப்படுகிறது என முன்னரே எழுதினேன். ஒற்றுமை என வெளித் தோற்றத்தில் தெரிவது நிரந்தரமானதல்ல. சீன வெடியை நீ கையில் எடுத்து வரலாம். நெருப்பைக் கண்டதும் வெடித்து விடுகிறது.

பொருள்களில் உள்ள முரண்பாடு பற்றிய விதி, இயங்கியல் பொருள் முதல் வாதத்தின் விதி என மாஓ புரட்சிகர நடைமுறையில், தான் கிரகித்த உண்மையைக் கூறியுள்ளார்.

முரண்பாடு வேறு; போராட்டம் வேறு. முரண்பாட்டின் விளைவே போராட்டம். போராட்டம் வெற்றி பெறலாம்; தோல்வியும் அடையலாம். சமூக மேம்பாட்டுக்கு இட்டுச் செல்லும் போராட்டமே முற்போக்கானது. ஏகாதிபத்திய ரஷ்ய நாடு சோஷலிச சோவியத் யூனியனாக வளர்ச்சியடைந்தது. நிலப் பிரபுத்துவ ஜப்பான் ஏகாதிபத்திய நாடாக மாறியது. எல்லா மாற்றங்களும் வளர்ச்சியாகா.

அனைத்துப் பொருட்களும் மாறுதலுக்குரியன. அக முரண்பாடு ஒவ்வொரு பொருளிலும் உண்டு. அதனாலேயே பொருள்களில் சமூகத்தில் இயக்கமும் வளர்ச்சியும் ஏற்படு கிறது. முரண்பாடே மாறுதலின் உந்து சக்தி.

இவற்றை மேலும் விரிவாகக் காண்பதற்கு அகமுரண்பாடு, புறமுரண்பாடு எனப் பிரித்துக் காணலாம். அக முரண்

படிப்பகம்

www.padippakam.com



பாடு அனைத்துப் பொருட்களிலும் உள்ளது. அனைத்து சமூகத்துள்ளும் எழுவது.

ஒரு பொருளுக்கும் மறு பொருளுக்குள்ளும் ஏற்படுவது புறமுரண்பாடு. இரண்டு முரண்பாடுகளும் ஒன்றின்மேல் மற்றொன்று பாதிப்பு ஏற்படுத்தக்கூடியதே. ஆயினும் அகமுரண்பாடே மாற்றத்திற்கு அடிப்படையாகும்.

உதாரணமாக, வீட்டில் எல் பி. (LP) காஸ் அடுப்பில் நாம் சமைப்பதைப் பார்த்திருப்பாய் காஸ் அடுப்பை ஒரு தீக்குச்சி கொண்டே மூட்டிவிடுகிறோம். காஸ் எரிகிறது. எரியும் காஸில் அகமுரண்பாடு ஏற்கெனவே உள்ளது. தீக்குச்சி எனும் புற முரண்பாட்டைக் கொணர்ந்து அடுப்பை எரியச் செய்கிறோம். வெறும் தீக்குச்சியினால் மண்ணிலேயோ, கல்லிலேயோ தீமூட்டி விடமுடியாது.

பெற்றோல் பங்குகளில் 'புகைக்காதீர்' என அபாய அறிவிப்பாக எழுதியிருப்பதைப் பார்த்திருப்பாய். பெற்றோல் அத்தனை அகமுரண்பாடு கொண்டது.

'முட்டையுலிருந்து தான் குஞ்சு வெளிவரும், கல்லிலிருந்தல்ல' என்பதை அடிக்கடி உதாரணமாகக் கூறுவர். அடைக்கோழி முட்டைகளைச் சிறகிடை வைத்துப் புறநிலையாகச் சூடேற்றிப் பொரிக்கச் செய்கிறது. நாமும் குறிப்பிட்ட உஷ்ணத்தைத் தொடர்ந்து பேணுவதன் மூலம் முட்டைகளைப் பொரிக்கச் செய்யலாம். கோழிமுட்டையையும் வாத்து முட்டையையும் அடைகாக்க வைப்பின் அல்லது உரிய சூடேற்றின் முறையே கோழிக் குஞ்சும் வாத்துக் குஞ்சுமே வெளிவரும். அகமுரண்பாடே இனத்தின் தரத்தையும் தீர்மானிக்கிறது. சூடு புறநிலை முரணே.

இதே போலவே சமுதாய மாற்றமும் புரட்சியும் ஒரு சமூகத்தில் ஏற்படுதற்கு அக முரண்பாடுகளே முதன்மைக்

www.padippakam.com



காரணமாக அமையும். புறநிலைச்சக்திகளும் வாய்ப்பாக அமைவது புரட்சியை வேகப்படுத்தும். புறநிலை சக்திகளால் புரட்சியை ஏற்படுத்திவிட முடியும் என எதிர் பார்ப்பது சிறுபிள்ளைத்தனமாகும். புரட்சிகர அரசியலுணர்வு பாட்டாளி வர்க்கத்தைப் புரட்சிக்குத் தயாராக்க வேண்டும். ஆயுதம் இரண்டாவதே.

1917ல் சோவியத் ரஷ்யாவில் சோஷலிசப் புரட்சிக்குப் பாட்டாளி வர்க்கத்தவர் அணி திரண்டனர். அவ்வேளை ஏகாதிபத்தியங்களிடையே ஏற்பட்டிருந்த முரண்பாடுகளும் உலகயுத்தமும் (1914-18) புறநிலைக் காரணங்களாக அமைந்தன. அவ்வேளை ஏகாதிபத்தியங்களுடன் ஜார் மன்னனின் ரஷ்ய நாடு 'பலங்குன்றிய பிணைப்பாக' இருந்த தாக லெனின் கூறுவார்.

சீனாவில் 1928ல் இருந்து புரட்சிக்கு மக்கள் தயாராகி போராட்டம் நடந்த போதும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளிடை ஏற்பட்ட முரண்பாடுகளும் இரண்டாவது உலக யுத்தமும் (1939—41) புதிய ஜனநாயகப் புரட்சிக்குப் புற நிலைக்காரணிகளாக அமைந்தன.

காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது என்பர். பழுத்து விழுவதற்குத் தயாராக இருந்த நிலையில் காகம் புறநிலைக் காரணமாக அமைகிறது.

இன்று மூன்றாம் உலக நாடுகள் அனைத்துமே ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளின் நேரடிக் கண்காணிப்பிலும் கடன் பிணைப்பிலும் இருப்பதைக் காணலாம். அதனால் மூன்றாம் உலக நாடுகளின் புரட்சிக்குப் புற நிலைக்காரணங்கள் பாதகமாக இருப்பதைப் புரட்சிக்குத் தயாராகும் நாடுகள் அனைத்தும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



முரண்பாடுகளைப் பகைமை முரண்பாடு, பகைமையற்ற முரண்பாடு என இரண்டாகப் பிரித்தறிவது அத்தியாவசியமாகும்.

விடுகளிலே கணவன், மனைவி, பிள்ளைகளிடை சச்சரவு ஏற்படுவதையும் வாய்ச்சண்டை போடுவதையும் பார்த்திருப்பாய், பின்னர் இவர்கள் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்துவர்.

காதலர்களிடை ஏற்படும் சிறுசண்டைகளை ஊடல் என்பர். திருவள்ளுவர் ஊடல் பற்றிக் குறளில் காவியமே படைத்துள்ளார். ஊடல் பின்கூடலாக மாறும்.

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடிமுயங்கப்பெறின் (1330)

ஊடுதலும் பின்னர் கூடித் தழுவுதலும் அந்த ஊடலுக்கு இன்பம் என்றார். வள்ளுவரின் கடைசிக்குறள் எதிர்மறைகளின் ஒற்றுமையையும் போராட்டத்தையும் நன்கு விளக்குகிறது. பகைமையற்ற உறவின் எடுத்துக்காட்டாக ஊடலைக் காணலாம்.

தொழிலாளர்களிடை பல தொழிற்சங்கங்கள் இருக்கலாம். முதலாளித்துவத்தின் அத்து மீறிய சுரண்டலுக்கு எதிரான தற்காப்புப் போராட்டமாகக் கூலி உயர்வு, பிற சலுகைகள் வேண்டிக் கூட்டம், ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்களில் ஈடுபடநேரும் போது அவர்களிடை கருத்து மாற்றம், பிணக்கு ஏற்படும். போராட்ட முறை பற்றிய முரண்பாடுகள் எழலாம், இவை பகைமையற்ற முரண்பாடே. தொழிலாளரே தம்மிடை பேச்சு வார்த்தைகள் நடத்தி, விவாதித்து, ஜனதாயக முறையாக முடிவு எடுக்கலாம்.

இத்தகைய முறையை விட்டுத்தொழிலாளர்களிடையே, தொழிற்சங்க உறுப்பினர்களிடையே வன்முறைப் போராட்

www.padippakam.com



டம் நடத்தினால் அது முற்றும் தவறான, கண்டிக்கத்தக்க போக்காகும். இத்தகைய வன்முறைப் போக்கு ஏற்பட நேரின் அது தொழிலாளர்களின், தொழிற்சங்கங்களின் ஒற்றுமையையும் உணர்வுகளையும் பின்னடையச் செய்யும் என்பது உறுதி.

தொழிலாளர்களுக்கும் முதலாளிக்குமிடையில் ஏற்படும் முரண்பாடு பகைமை முரண்பாடாகும். முதலாளிகள் தொழிலாளரின் உபரி உழைப்பை அத்துமீறிப் பறித்துக் கொண்டே இருப்பர். இதற்காக தம் வர்க்க நலன்பேணும் வன்முறை வடிவமான அரசையும் பேணுவர்.

பண்டங்களின் விலையேற்றம், பணவீக்கம், வேலை நிறுத்தம், வேலையின்மை ஆகிய பலமுறைகளால் பாதிப்பு அடையும் தொழிலாளர் வர்க்க உணர்வுடன் ஒன்றுபட்டுச் சுரண்டலிருந்து விடுபடப் போராடிக்கொண்டே இருப்பர்.

தற்காப்பு முறையான கூலிஉயர்வு, சலுகைகள் வேண்டி வேறை நிறுத்தப் போராட்டத்தில் இறங்குவர். இம்முறை பயனளிக்காது போகலாம். அவ்வேளை அரசிய லாதிக்கத்தைக் கைப்பற்றும் தாக்குதல் போராட்டத்தில் அவர்கள் இறங்க நேரும்.

பகைமை முரண்பாடுகள் தீர்க்கப்படும் உயர்ந்த வடிவம் ஆயுதப் போராட்டமாகும். தொழிலாளர்களும் இப் போரில் ஈடுபடநேரும். இதன்மூலமே தொழிலாளர், முத லாளிகளிடை ஏற்படும் பகைமை உறவு தீர்க்கப்படும்.

ஆயுதம் ஏந்திய வன்முறைப் போராட்டத்தின் மூலம் முதலாளித்துவத்தையும் அதன் வர்க்க நலன் பேணும் வன்முறை அரசு யந்திரத்தையும் உடைத்தெறிந்து தொழி லாளர்கள் உற்பத்திச் சாதனங்களைத் தமது ஆதிக்கத் தில் கொணர்வர். அதைத் தொடர்ந்து அரசியலாதிக் கத்தைக் காக்க பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தையும் நிலை நிறுத்துவர்.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு சோஷலிசப் புரட்சி ஏற்பட்ட பின்னரும் முரண்பாடுகள் நிலவவே செய்யும். அவை பகைமையற்ற உறவு. பேச்சுவார்த்தைகள், விவாதங்கள், தக்க நடை முறைகள் மூலம் தீர்க்கப்படும்.

சோஷலிசப் புரட்சி என்பது சிறுபான்மையினரான முதலாளிகள் பெரும்பான்மையினரான பாட்டாளிகள் மேல் நடத்தும் சர்வாதிகாரம் வீழ்த்தப்படுவதும், அதன்பின்னர் பெரும்பான்மையினரான பாட்டாளிகள் சிறுபான்மையின ரான முதலாளிகள் மேல் நடத்தும் சர்வாதிகாரமுமாகும். முன்னர் இருந்த வன்முறை வடிவ அரசு இங்குத் தேவைப் படமாட்டாது.

அன்பான,
அப்பா

# 9. புரட்சியும் புராணங்களும்

அன்பு மகனுக்கு,

'பாட்டாளிகளும் சர்வாதிகார ஆட்சி நடத்துவதா என முன்னர் எண்ணி, இதுவும் தவறுதானே என நினைத் திருந்தேன். இப்போதுதான் அதன் முழு அர்த்தத்தையும் புரிந்து கொண்டேன்' என எழுதிய கடிதம் படித்து மகிழ்ந்தேன்.

பாட்டாளியின் சர்வாதிகாரம் முதலாளித்துவத்தின் மேல் நிலை நிறுத்தப்படாவிட்டால் சோஷலிசப் புரட்சியே தோல்வியடைந்து விடலாம் என்பதை உணர்ந்தே லெனின் தக்க விளக்கம் கொடுத்தார். அதையே நான் எழுதினேன். முதலாளித்துவம் மீண்டும் எப்போதும் தலைகாட்டலாம் என மாஓவும் எச்சரித்திருந்தார்.

www.padippakam.com



'பகைமை உறவு முதலாளி தொழிலாளிக்கிடையில் மட்டும்தான் ஏற்படுகிறதா?' என்றும் கேட்டிருந்தாய். பெரும்பாலும் உழைப்புச் சுரண்டப்படும் இடங்களில் பகைமை உறவே ஏற்படுகிறது.

அடிமைகள் எசமானர்களை எதிர்த்துப் போரிட்ட வரலாறுகள் உள்ளன. இவற்றில் ஸ்பாட்டகஸ் என்ற உரோமானிய அடிமையின் வரலாறை நீ கற்கவேண்டும்.

நிலப்பிரபுக்களுக்கு எதிராக உலகெங்கும் விவசாயிகள் கிளர்ந்தெழுந்த வரலாற்றைக் காணலாம். தமிழ்நாட்டில் இந்திய நாடெங்கும் நடைபெற்றுள்ளது. பெரும்பாலும் தன்னெழுச்சியாக நடைபெற்றவை இவை.

பின்னர் முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கில் நிலத்துக்கடிமையாக உழைத்த விவசாயிகள் கூலியடிமையாக யந்திரங்களை நோக்கி ஓடிவர, பலமிழந்த நிலப்பிரபுக்களும் முதலாளிகளுக்குமிடையில் பகைமை உறவு ஏற்பட்டது. முதலாளிகள் தொழிலாளர்களை தம்முடன் இணைத்து வன்முறைப் போர் மூலம் நிலப்பிரபுக்களை, மன்னராட்சிகளை ஐரோப்பிய நாடுகளில் வீழ்த்தினர். இதை முதலாளித்துவப் புரட்சி என்போம்.

நெற்பயிரும் களையும் பகைமை கொண்ட பயிர்கள். களைகளைக் களைந்து பயிரைக்காப்பது போல கொலையிற் கொடியாரைக் கொலைத் தண்டனை மூலம் மன்னர் ஒழித்து சமுதாயத்தைக் காப்பாற்றலாம் என்ற நிலப்பிரபுத்துவ நீதியை வள்ளுவர் கூறியுள்ளார்.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களை கட்டதனோடு நேர் (550)

இதற்கு அடுத்த குறளில் முறையில்லாத செயல்களைச் செய்யும் வேந்தன் கொலைத் தொழிலைக் கொண்டவரை

www.padippakam.com



விடக் கொடியவன் எனக்கூறி, பகைமை உறவு கொண்ட மன்னனும் மக்களால் களையப்பட வேண்டியவன் என வள்ளுவர் மறைமுகமாக உணர்த்துகிறார்.

கொலை மேற் கொண்டாரிற் கொடிதே அலைமேற்
கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து. (551)

முதலாளித்துவத்தில் மட்டுமே வர்க்க உணர்வு நிலை பெற்று பகைமை உணர்வுடன் பாட்டாளி வர்க்கம் அணி திரண்டு முதலாளித்துவத்தை அழித்தொழிக்கிறது. ஒரு வர்க்கம் எதிர்வர்க்கத்தை அழித்தொழிப்பதன் மூலமே பகைமை முரண்பாடு தீர்க்கப்படுகிறது. முன்னேறிய வர்க்கமே இறுதியில் வெற்றி பெற்ற சமூகம் வளர்ச்சிப் போக்கில் மேம்படும் என்பதும் இயங்கவியல் பொருள்முதல் வாதக் கோட்பாடாகும். சோவியத் நாட்டிலும் சீனாவிலும் நடைபெற்றது இத்தகைய உணர்வு பூர்வமான புரட்சிகளே.

முதலாளித்துவப் புரட்சியின் போது முதலாளிகளுடன் பாட்டாளிகள் ஒன்றிணைவது எதிர்மறைகளின் ஒற்றுமை யும் போராட்டமுமாகும். இப்புரட்சியினால் தொழிலாளர் களும் சில சலுகைகள் பெறுகின்றனர். நிலப்பிரபுத்துவத் தில் கிடைக்காத பூர்ஷ்வா ஜனநாயகம், தேர்தல் முறை, வாக்குரிமை, தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை, கூலி உணர்வுப் போராட்டங்கள், வேலைநேரக் கட்டுப்பாடுகள், விடுமுறைகள் போன்றவை இவற்றுள் அடங்கும்.

ஆயினும் முதலாளித்துவ வர்க்க நலனுக்கு ஆபத்து ஏற்படும் வேளைகளில் இச்சலுகைகளை அவர்கள் நலன் பேணும் அரசு வாபஸ் பெற்றுவிடும். தொழிலாளர்கள் எதிர்த்தால் பின் அரசின் வன்முறை தலையெடுக்கும்; முதலாளித்துவச் சர்வாதிகாரம் மேலும் வலுப்பெற முயலும்.

தொழிலாளி வர்க்கம் எப்பொழுதும் பகைமை, பகைமை யற்ற உறவுகள் பற்றித் தெளிவாக இருத்தல் வேண்டும்.

www.padippakam.com



தமது வர்க்க நலன் பேணுவதாக முரண்பாடுகளைக் கையாள வேண்டும்.

பகைமையற்ற உறவைப் பகைமை உறவாகவும், பகைமை உறவைப் பகைமையற்ற உறவாகவும் தவறாகக் கையாண்டால் தொழிலாள வர்க்கத்தவரின் போராட்டங்களில் நிச்சயமாகப் பின்னடைவு ஏற்படவே செய்யும். இந்த உண்மையை அவர்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இயங்கியல் பொருள் முதல் வாதம் அறிவுறுத்தும் உண்மை இதுவே.

'போரேயில்லாத உலகத்தை அறிஞர்களால் உருவாக்க முடியாதா?' எனவும் சென்ற கடிதத்தின் முடிவில் கேட்டிருந்தாய். முரண்பாடுகள் பற்றி நன்கு புரிந்து கொண்டதும் நீயாகவே இச்சந்தேகத்திற்கு விடைதேடிக் கொள்வாய்.

பகைமை முரண்பாடுகளைத் தீர்க்கும் உயர்ந்த வடிவமே போர் என்பதை முன்னமே தெரிவித்தேன்.

புராண, இதிகாசக் கதைகளிலேயே யுத்தங்களைப் பற்றி அறிந்திருப்பாய். நீதி வெல்லும் அநீதி தோல்வியடையும் என்ற கருத்திலேயே அக்கதைகளைப் பாடசாலையில் கற்பித்திருப்பர்.

பாரதப்போர் பாண்டவருக்கும் துரியோதனாதியாருக்கும் நிலவுரிமை காரணமாகவே நடைபெற்றது எனக் கூறுவதையும் காண்பாய். துரியோதனனிடம் கண்ணன் தூது சென்று பாண்டவர்களுக்கு அவர்களது நாட்டை வேண்டுகிறான். அதை மறுக்கும்போது ஐந்து ஊர், ஐந்து வீடுவரை கேட்டானாம். துரியோதனன் ஓரடி நிலம் கூடத்தர முடியாது என மறுத்தது காரணமாகவே பாரதப்போர் மூண்டது என மகாபாரதம் கூறும்.

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றதால் இராமன் இராவண யுத்தம் நடந்ததாக இராமாயணம் கூறும். சீதையை ஒரு சொத்தாகவும் அதைக் கவர்வது மானப்

அ. க—9

www.padippakam.com



பிரச்சனை எனவும் வால்மீகி கருதியிருக்கலாம். ஆயினும் பொருளை முதன்மையாகக் கொண்டு வாழ்ந்த அரக்கர்களுக்கு எதிராக கடவுள் அவதாரமான இராமன் தொடுத்து வெற்றி கொண்ட போராகவும் இதைக் காணலாம்.

திருட்டைப் பகைமை உறவாகக் கண்டு, தக்க விசாரணையின்றி பாண்டியன் கோவலனைக் கொன்றான், பாண்டியனின் அநீதியைக் கண்டிக்க பகைமை கொண்ட கண்ணகி மதுரையை எரித்தாள்.

புராண, இதிகாசங்கள், காவியங்களில் அதீதக் கற்பனைகள் மலிந்திருப்பதைப் பற்றி முன்னரும் தெரிவித்தேன். பெரும்பாலும் தெய்வ நம்பிக்கையை வளர்ப்பதற்காக இத்தகைய கற்பனைக் கதைகள் கூறப்பட்டு பின்னர் அக்கதைகள் காவிய வடிவம் பெற்றன அதீதக் கற்பனையில் முரண்பாடுகள் நழுவிப்போவதையும் காணலாம்.

இந்நூற்றாண்டில் நடைபெற்ற முதலாவது, இரண்டாவது உலகயுத்தங்கள் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளிடையே பண்ட விற்பனை, சந்தைப் போட்டியாலும் மூலதனம் அதீதலாபம் தேடும் நெருக்கடியாலும் ஏற்பட்டன. இதனால் தொழிலாளி வர்க்கமே இன்னலுற நேர்ந்தது. அதே வேளை உலகெங்கும் அடிமைத்தளைகள் அறுபடும் வாய்ப்பும் ஏற்பட்டது. சோவியத் நாடும் சீனாவும் புரட்சிகர அரசியல் வடிவங்களை அறிமுகப்படுத்தியதும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள் இந்நாடுகளைக் கண்டு அச்சுறும் நிலையும் ஏற்பட்டது.

எதிர்மறைகளின் ஒற்றுமையையும் போராட்டங்களையும் யுத்த வரலாறுகளிலே காணலாம். இக்கண்ணோட்டத்தை நீயும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதே உன் அறிவும் மேம்படும்.

அன்பான,

அப்பா

www.padippakam.com

# 10. பிரதான முரண்பாடும் உலக முரண்பாடுகளும்

அன்புமிக்க மகனே,

'முரண்பாடுகள் பற்றி விரிவாக எழுதியமைக்கும் நன்றி, இதன்மூலம் புதிய கருத்துகளையும் விளக்கங்களையும் அறிந்துகொண்டேன். ஆயினும் பிரதான முரண்பாடுகள், துணை முரண்பாடுகள் எனவும் பிரித்துக் கூறியதை உங்கள் நாவல் ஒன்றில் படித்த நினைவு. இவற்றைப் பற்றியும் அறிய ஆவலாயுள்ளேன்' என எழுதிய கடிதத்திற்கு நன்றி, இவற்றைப் பற்றி பின்னர் எழுதவேயிருந்தேன்.

முரண்பாடுகள் பற்றி எளிமைப்படுத்தி விளக்கிய பெருமை மாஓவிற்கே உரியது என முன்னரும் எழுதியிருந்தேன். சீனாவில் புதிய ஜனநாயகப் புரட்சியை நடத்தி வெற்றிகண்ட மாஓ முரண்பாடுகள் பற்றி விரித்துக்கூறும் போது பின்வருமாறு கூறினார்:

''எந்த ஒரு வளர்ச்சிப் போக்கிலும் ஒன்றுக்கு மேற்பட்ட முரண்பாடுகள் இருக்குமேயானால், அவற்றில் ஒன்று தலைமைப்பாத்திரத்தை, தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கும் பிரதான முரண்பாடாக இருக்கும். ஏனையவை இரண்டாந்தரமாக அமையும். எனவே இரண்டு, அல்லது அதற்குமேலாக முரண்பாடுகள் உடைய எந்த ஒரு சிக்கலான வளர்ச்சிப் போக்கையும் ஆராயும்போது, அதன்

படிப்பகம்

www.padippakam.com



பிரதான முரண்பாட்டைக் காண்பதற்கு நாம் சகலவழி களிலும் முயலவேண்டும். இப்பிரதான முரண்பாட்டைக் கிரகித்துக் கொண்டதும் அனைத்துப் பிரச்சனைகளையும் எளிதில் தீர்த்துவிடமுடியும்.;

ஒவ்வொரு பொருளின் வளர்ச்சிக்குரிய அடிப்படைக் காரணம் அதற்குள் உள்ள முரண்பாட்டிலேயே உள்ளது: இயக்கமும் வளர்ச்சியும் அதனாலேயே ஏற்படுகின்றன. அதேவேளை அப்பொருள் பிறபொருட்களுடன் தொடர்பும் பாதிப்பும் கொண்டது. வளர்ச்சி அகமுரண்பாட்டிலேயே எழுகிறது.

ஒவ்வொரு சமூக அமைப்பிலும் அச்சமூகத்தின் உற் பத்தி முறையைச் சார்ந்து பிரதான முரண்பாடுகள் அமை கிறது. பொருளில் இருந்தே முரண்பாடு எழுவதைக் காணலாம்.

அடிமைச் சமூதாயத்தில் அடிமை உற்பத்தி செய்யும் பொருள் எசமான் உரிமை ஆகிறது. அடிமையின் உழைப்பு முழுவதும் எசமானால் பறிக்கப்படுகிறது. எசமான் ஆடு, மாடு, குதிரைகளுக்கு உணவு தருவதுபோல அடிமைக்கும் வழங்குவான். அப்பொழுதே அடிமையால் மறுநாளுக்கும் உழைக்க முடியும். மனிதனின் ஒரே சொத்து உழைப்பு. அது முழுமையாக இங்கு பறிக்கப்படுகிறது. அடிமைக்கும் எசமானுக்குமிடையில் ஏற்படும் பகைமை உறவே பிரதான முரண்பாடாகிறது.

நிலப்பிரபுத்துவத்தில் விவசாயி விளைவிக்கும் பொருளில் உபரியாக (உயிர் வாழ்வதற்கு மேலாக உள்ளது.) உள்ளது அனைத்தையும் நிலப்பிரபு அபகரிக்கிறான். இதனால் நிலவுடைமையாளருக்கும் உழைக்கும் விவசாயிக்கும் இடை யில் பிரதான முரண்பாடு ஏற்படுகிறது.

www.padippakam.com



முதலாளித்துவத்தில் சமூக உற்பத்திப் பொருள் யாவும் உற்பத்திச் சாதனங்களின் மீது உரிமை கொண்ட முதலாளி களின் தனி உடைமை ஆகிறது. உழைப்பவரின் உபரி மதிப்பு மூலதனமாகி, முன்னேறிய யந்திரமாகி அதை உற்பத்தி செய்த தொழிலாளியையே தெருவில் நிறுத்திப் பட்டினி போடுகிறது. உற்பத்தி செய்த பண்டத்திற்கே உழைத்தவன் அந்நியப்படுகிறான். மனிதனது ஆத்மாவாக உள்ள உழைப் பிற்கே அந்நியப்படும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறு மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையில் ஏற்படுவதே பிரதான முரண்பாடாகிறது.

முதலாளித்துவம் பற்றி ஆரம்ப நடைமுறையில் தனக்குப் புறம்பான நிகழ்வாகவே தொழிலாளி அறிகிறான். யந்திரத் தைத் தன் எதிரியாகவே முதலில் காண்கிறான். தன் னெழுச்சிப் பகையாக யந்திரத்தை உடைத்தெறிய முயல் கிறான்.

பின்னர் முதலாளித்துவ அமைப்பின் சாரத்தை உணர்ந்து சமூக வர்க்கங்களின் தோற்றத்தையும் வரலாற் றுப் போக்கையும் அறிகிறான். நீண்ட கால போராட்ட அனுபவ நடைமுறை மூலம் முதலாளித்துவம் பற்றி மேலும் அறிந்து கொள்கிறான்.

மார்க்சும் ஏங்கெல்சும் பாட்டாளியின் தோற்றத்தையும் சமூகநிலையையும் வளர்ச்சியையும் விஞ்ஞான பூர்வமான வரலாற்றுப் பொருள் முதல்வாத அடிப்படையில் விளக் கினர்.

பாட்டாளி அதன் பின்னரே தன் வரலாற்றுக் கடமையை அறிந்து வர்க்க உணர்வுடன் போராட எழுந்தான். ஆரம்பத் தில் தோல்விகளே ஏற்பட்டன. ஆரம்பப் பொருளாதார,

www.padippakam.com



தற்காப்புப் போராட்டங்கள், பின்னர் அரசியலாதிக்கத்தை யும் கைப்பற்றும் புரட்சி அரசியல் போராட்டமாக வடிவ மெடுத்தது.

உடைமை வர்க்கத்தினர் தாம் நலன் பெறும் சமூக அமைப்பை நிலை நிறுத்தவே முயல்வர். உழைத்துச் சுரண்டப்பட்டுத் துன்புறுவோர் ஒன்றிணைந்து அச்சமூக அமைப்பை உடைத்தெறியவே செய்வர். இது தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்வு.

பிரதான முரண்பாட்டை ஆராயும் போது உடைமை வர்க்கத்தவரிடையேயுள்ள போட்டியில் உள் முரண்பாடு இருப்பதைக் காணலாம். மேலும் முதலாளித்துவ உற்பத்தி முறை நிலவும் வேளையில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை யும் சிறுபண்ட உற்பத்தியும் அருகருகே இருக்கவே செய்யும் இத்தகைய, பல்வேறு உற்பத்தி முறைகள் நிலவும் போது அவற்றுள் மேலாதிக்கம் செய்யும் உற்பத்தி முறையையே தாம் முதன்மையாகவும் கொள்ளல் வேண்டும். அதன் அடிப்படையிலேயே பிரதான முரண்பாட்டையும் அணுக வேண்டும்.

முரண்பாடுகளை அணுகும்போது பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் அணுக வேண்டும். தனிப்பகுதியை அணுகாது, முழுமையாக, இரு எதிர் மறைகளையும் காண வேண்டும். பாட்டாளியைப் பற்றி அறியும் போது முதலாளித் துவத்தை விட்டுவிடக்கூடாது. விவசாயியைக் காணும் போது நிலப்பிரபுவை மறக்கக் கூடாது. கடந்த காலத்தைக் காணும் போது எதிர் காலத்தை விட்டுவிடக் கூடாது.

உழைக்கும் வர்க்கத்தவரிடையேயும் பல்வேறு துறை சார்ந்த உழைப்பாளரும், தொழிற் சங்கங்களும் சிந்தனை

www.padippakam.com



களும் இருக்கவே செய்யும். ஆயினும் புரட்சிக்குப் பாட்டாளியின் தலைமையிலேயே பிற சுரண்டப்படும் வர்க்கத்தாரும் ஒன்றுபடல் வேண்டும்.

பிரதான முரண்பாட்டுடன் இணைந்து நிற்பவற்றை துணை முரண்பாடுகள் என்போம். அவை சாதி, சமயம், இனம், மொழி, பால் முதலிய வேறுபாடுகளால் எழுபவையாகும். மேலே கூறியது போல பல்வேறு உற்பத்தி முறைகள் நிலவும் வேளை அவற்றை ஒட்டியும் துணை முரண்பாடுகள் எழும்.

அரை நிலப்பிரபுத்துவ அரைக் காலனி எனக் கணிக்கப்படும் இந்திய நாட்டில் சாதி, சமய வேறுபாடுகளாலும் மொழி, பிரதேச அடிப்படையிலான தேசிய இனப் பிரச்சனைகளினாலும் ஆணாதிக்கத்தால் எழும் பாலின வேறுபாட்டுப் பிரச்சனைகளாலும் பல்வேறு முரண்பாடுகள் துணை முரண்பாடுகளாகத் தோன்றியிருப்பதைக் காணலாம்.

மேலும் யந்திர உற்பத்தி—விவசாய உற்பத்தி, கனரக உற்பத்தி — கைத்தொழில் உற்பத்தி, கிராமத்து மக்கள் —நகரத் தொழிலாளர், மூளை உழைப்பாளர் — உடலுழைப்பாளர். இவ்வாறு பிரிவுற்றும் முரண்பாடுகள் எழும். ஆயினும் பிரதான முரண்பாட்டைத் தனிமைப்படுத்திக் கண்டு உடைத்தெறியப்படும் போது துணை முரண்பாடுகளும் உடைந்து விடலாம் அல்லது பலவீனப்பட்டு விடலாம்.

அரை நிலப்பிரபுத்துவ அரைக் காலனி அமைப்பில் பிரதான முரண்பாடு நிலத்திற்கும் மக்களுக்குமான முரண்பாடாகவே நிலவும். இத்தகைய சமூக அமைப்பில் ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவ அமைப்பை உடைக்காமல் பேணிக்காப்பாற்றவே முயலும்.

www.padippakam.com



இத்தகைய நிலையிலிருந்து நவகாலனியாக நாடு மாறும் பொழுது ஏகாதிபத்தியத்திற்கும் மக்களுக்குமான முரண்பாடே பிரதான முரண்பாடாக எழும். இன்று இத்தகைய நிலை இலங்கை, இலத்தீன் அமெரிக்க நாடுகள், வேறு பல மூன்றாம் உலக நாடுகளிலும் ஏற்பட்டு வருவதைக் காணலாம்.

ஏகாதிபத்திய ஆதிக்க உலகில் வாழும் நிலையில் உலக முரண்பாடுகள் பற்றியும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

அமெரிக்காவே ஏகாதிபத்தியமாக, அணு ஆயுத பலத்துடன் இன்றும் உலக நாடுகளுக்குத் தலைமை வகிக்கிறது. இங் ஏகாதிபத்திய நாட்டு ஆளும் வர்க்கத்தவருக்கும் அமெரிக்க நாட்டின் உழைக்கும் வர்க்கத்தவரிடையேயும் பிரதான முரண்பாடு இருக்கவே செய்கிறது.

இதுபோலவே G 7 எனக் கூறப்படும் அணியிலுள்ள பிற ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளான பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி (ஐரோப்பிய பொருளாதார சமூகம் சார்ந்தவை) கனடா, ஜப்பான், ஆகிய நாடுகளிலேயும் உழைக்கும் வர்க்கத்திற்கும் ஆளும் வர்க்கங்களிடையேயும் பிரதான முரண்பாடு உள்ளன.

இது தவிர மேலே கூறிய G 7 எனப்படும் ஏழு நாடுகளிடையேயும் உலகமக்களையும் உலகவளங்களைச் சுரண்டுவதிலும் சந்தை பிடிக்கும் போட்டியிலும் முரண்பாடுகள் நிலைக்கவே செய்கின்றன.

அதே வேளை பிற உலக நாட்டுமக்களுக்கும் G 7 நாடுகளுக்குமிடையில் மிகப் பெரிய முரண்பாடு வளர்ந்து வருகிறது. ஏகாதிபத்தியம் வன்முறை வடிவம் என்பதை என்றும் மறந்து விடாதே.

படிப்பகம்

www.padippakam.com



மூன்றாம் உலக நாடுகளில் குடித்தொகை கூடிய நாடு சீனாவும் இந்தியாவுமே. இவ்விரு நாட்டு மக்கள் மட்டுமல்ல பிற பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகளின் உழைப்புகளை யும் மூல வளங்களையும் பல்வேறு முறைகளாக ஏகாதி பத்திய, முதலாளித்துவ நாடுகள் சுரண்டிக் கொண்டே யிருக்கின்றன. கடனுதவி வழங்குவதாகக் கூறியும் இந் நாட்டு ஆளும் வர்க்கத்தவரையும் தம் அரவணைப்பில் வைத்து நாடுகளைச் சூரையாடுகின்றன. நவ காலனி நாட்டு மக்களுக்கும் ஏகாதிபத்தியங்களிடையேயும் ஏற்படு வது பிரதான முரண்பாடு என முன்னரும் கண்டோம்.

அன்பான,
அப்பா

# 11. வளர்ச்சியும் பாய்ச்சலும்

அன்பிற்கினிய மகனுக்கு,

நீ சிறுவனாக இருந்தபோது வீட்டில் ஆக்கிய பாயா சத்தை அளவு மீறிச் சாப்பிட்டு விட்டு, உப்பிய வயிற்றுடன் வயிற்றுவலி எனக் கஷ்டப்பட்டு அழுதது என் நினைவில் வருகிறது. இஞ்சி போட்ட தேநீருடன் வயிற்றிலும் வெந்நீர் ஒத்தணம் தந்து வயிற்று வலியைச் சில மணி நேரத்தில் குறைத்தோம். மேலும் சில மணி நேரத்தில் வலி முற்றாகப் போய்விட்டது.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற பழ மொழியை அறிந்திருப்பாய். எப்பொருளிலும் அளவு மாறு படும்போது குணமாறுபாடு ஏற்படுகிறது.

சாப்பிடும்போது உணவில் உப்பு கூடி விட்டதும் கரிக்கிறது, சாப்பிடமாட்டேன்' என அம்மாவுடன்

www.padippakam.com



சண்டை போடுவாயே, அதையும் நான் மறந்துவிட வில்லை. உப்பின் அளவு சுவையின் அளவை மீறியதும் குணமாறுபாடு ஏற்பட்டு விடுவதை அடிக்கடி அனைத்திலும் காண்கிறோம். காரம், இனிப்புப் போன்றவற்றிலும் அளவு மாறுபடுவது ஏற்படுத்தும் குணமாறுபாட்டை நாள் தோறும் உணர்கிறோம்.

பள்ளியில் திருக்குறள் கற்றபோது மனனம் செய்த குறள் ஒன்றும் நினைவில் வருகிறது. நீயும் படித்திருக்க லாம். மயிலிறகு ஏற்றிய வண்டியே ஆனாலும் அளவு கடந்து மிகுதியாக ஏற்றினால் ஒரு நிலையில் அச்சு முறிந்து விடும்.

பீலி பெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் (475)

எடைகுறைந்த மயிலிறகின் அளவு மாறுபடும்போதும் வண்டியின் குணத்தில் திடீர் மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. வண்டிகள் குடைசாய்வதைத் தெருக்களில் பார்த்திருப்பாய். மயிலிறகின் எடையையும் அச்சின் தாங்கும் சக்தியின் குணத்தையும் நாம் இன்று அளவிட்டு அறிந்து கொள்ள முடியும்.

எப்பொருளையும் அளவிட்டுப் பார்ப்பது, பரிமாற்றம் செய்வது மனித வரலாற்றில் ஒரு முன்னேறிய காலத்திலேயே நடைபெறத் தொடங்கியது என்பதையும் நீ அறிந்திருக்க வேண்டும்.

என் பாட்டனார் வாங்கிப் பண்படுத்தியது 4 ஏக்கர் கல் நிலமென்று முன்னர் எழுதினேன். ஒரு ஏக்கர் நிலத்தை 16 பரப்பு எனக் கணக்கிடுவர். ஒரு பரப்பு நிலத்தில் 250 கன்றுகள் புகையிலை, கத்தரி, மரவள்ளி பயிரிடு வார்கள். கைமுழ நீளத்தையே அளவையாக ஒரு தடியில் எடுத்து பாட்டனார் நிலத்தை அளப்பதைப் பார்த்திருக்

www.padippakam.com



கிறேன். கைமுழ நீளத்தை 18 அங்குலம், ஒன்றரை அடி நீளமாகும். இன்று நீ கற்றுள்ள மீட்டர், கிலோ, லிட்டர் அளவு முறைகள், அளவைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிப் போக்கையே காட்டுகின்றன.

பயிரிடாமல் கற்கள் படர்ந்திருந்த நிலத்தை உழுது பயிரிடும் நிலமாக மாற்றியதும் குணமாறு பாடேயாகும்.

தராசில் ஒரு கிலோ படிக்கல்லை வைத்து மறுபுறத்தில் அரிசியைப் போட்டு அளவும் குணமும் சமன்படுத்தப்படு கிறது. அளவு சிறிது கூடிக் குறையும் குணமாறுபாட்டைத் தராசில் எளிதில் காணலாம்.

நீரைச் சூடேற்றும்போது சிறு குமிழ்கள் தோன்றி, பின்னர் கொதிக்கத் தொடங்கியதும் நீர் ஆவியாக மாறு வதைக் கண்டிருப்பாய். 100°C அளவையிலேயே நீர் கொதிக்கிறது. பின்வேகமாக ஆவியாகிறது. 100°C மேலாக நீரின் சூட்டளவு ஏறுவதில்லை. ஆயினும் இந் நிலைக்கு முன்னரே ஆவி வரத் தொடங்குவதையும் காண லாம். குமிழிகள் தோன்றி மேலெழுவதும் கொதித்து வேகமாக ஆவி வருவதும் ஒரு பாய்ச்சலாக நீரின் குணம் மாறுபடும் கட்டமேயாகும்.

பல துளி வெள்ளமாகி ஒரு கட்டத்தில் பாய்ச்சலாக வரம்பை உடைத்து விடுகிறது.

சமுகத்திலும் இத்தகைய நிலை ஏற்படுவதை நீ காணலாம். ஒரு அரசியல் கட்சி ஆட்சியிலிருக்கிறது. சில வேறுபாட்டுக் கோரிக்கைகளை முன் வைக்கும் மற் றொரு கட்சி பாதிக்கு மேலாக ஒரு தொகுதியில் வெற்றி பெற்றதும் ஆட்சிக்கு வந்து விடுகிறது. 49 சதவீதமாக இருந்த கட்சி 51 சதவீத தொகுதிகளில் வெற்றிபெற்றதும் ஆட்சியுரிமை பெற்று விடுகிறது.

பழைய சமூக நிலையிலிருந்து புதிய சமுதாய அமைப்பு நிலைபெற நீண்ட காலம் எடுக்கலாம். மக்கள் தேவை

www.padippakam.com



களைப் பூர்த்தி செய்யத் தவறும் வேளைகளில் சமூக மாற்றம் ஏற்படுகிறது.

சமூக உற்பத்தியையும் உற்பத்திச் சாதனங்களையும் தனி உரிமையாகக் கொண்ட முதலாளிகள் இலாபமே முதல் நோக்காகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். பெரும்பான்மையினரான தொழிலாளர்களைக் கூலிக்கு அமர்த்தி அவர்களது உபரி உழைப்பையும் அபகரித்து மூலதனக் குவியலைத் தம் உரிமையாக ஆக்குகின்றனர்.

இலாபமே நோக்காகக் கொண்ட இவ்உற்பத்தி முறை மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யத் தவறிவிடுகிறது.

பண்டங்களின் விலைகள் ஏறுகின்றன. பணவீக்கம் ஒருபுறம். வேலையற்றோர் பெருகுகின்றனர். உழைப்போர் துன்பப்படுகின்றனர். அனைவரும் ஒன்று திரண்டு வர்க்கப் போரைத் தீவிரப்படுத்துகின்றனர்.

'புரட்சியை உடனே நடத்தவேண்டும். தவறினால் அனைத்தையும் இழக்கநேரும் என்ற அபாயம். தாமதம் சாவைத் தழுவும், வரலாறு மன்னிக்காது என்ற நிலை ஏற்படுகிறது' எனத் தவிர்க்க முடியாத புரட்சிப் போக்கை லெனின் உறுதியிட்டுக் கூறியுள்ளார். 1917 அக்டோபரில் சோவியத் புரட்சி வெற்றி பெற்றது. இது சமுதாயத்தில் ஒரு பாய்ச்சலான குணவேறுபாடே.

புரட்சிக்கு முன்னர் நடந்த ஒரு சிறு சம்பவம். கிழவி ஒருத்தி திருடிய விறகைச் சுமந்து வந்தாளாம். போலீஸ் காரனைக் கண்டதும் அப்படியே நிலத்தில் போட்டுவிட்டு ஓடினாளாம். அந்தப் போலீஸ்காரன் கிழவியை அழைத்து, விறகைச் சேர்த்து கிழவியிடம் கொடுத்து, எடுத்துச் செல்ல உதவினானாம். அக்காட்சியைக் கண்ட லெனின் புரட்சிக் கேற்ற குணவேறுபாடு 'ஏற்பட்டிருப்பதாக எண்ணிக்கொண்

www.padippakam.com



டார். புரட்சியின் பின் தொழிலாளிவர்க்கத்தவர் ஒன்று திரண்டு உற்பத்திச் சாதனங்களையும் சமூக உற்பத்தியையும் அரசியலாதிக்கத்துடன் தம் கையில் திடீரெனப் பறித்து எடுத்துக் கொள்ளுகின்றனர். சமூக அமைப்பிலும் உற்பத்தி முறையிலும் குணமாறுபாடு ஏற்படுகிறது.

ஆயினும் உற்பத்தியைப் பெருக்கி மக்கள் அனைவரது தேவையையும் பூர்த்தி செய்ய நீண்ட காலம் எடுக்கவே செய்யும். முதலாளிகளிடமிருந்து உற்பத்திச் சாதனங்களையும் தனிச்சொத்துக்களையும் பறித்தெடுத்த போதும் முதலாளிகளும் முதலாளித்துவ சிந்தனை கொண்டவர்களும் இப்புரட்சிப் போக்கை எதிர்த்துக் கொண்டேயிருப்பர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

வளர்ச்சி படிமுறையாக நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. ஆயினும் அகநிலையுடன் புற நிலைத் தூண்டுதலும் சாதகமாக அமையும்போது பாய்ச்சலாகக் குணமாறுபாடு ஏற்படுகிறது' நீரைப் பாய்ச்சலாக நீராவியாக்குவதற்கு வெப்பம் புறநிலைக் காரணியாகும்.

புரட்சிக்கு ஒரு கால கட்டத்தில் புறநிலைச் சக்திகள் சாதகமாக இருக்கலாம். 1917 அக்டோபரில் சோவியத் புரட்சிக்கு முதலாளித்துவ நாடுகளிடையே ஏற்பட்ட முரண்பாட்டின் முடிவான உலகப்போர் சாதகமாக இருந்ததை முன்னரும் கூறினேன்.

மற்றொரு காலகட்டத்தில் (இன்று) அதே முதலாளித்துவ நாடுகள் ஒன்று திரண்டு, உள்முரண்பாட்டுக்கு ஆதரவளித்து எதிர்ப்புரட்சியை ஏற்படுத்தியும் விடலாம்.

முதலாளிகள் சிறு பான்மையினரே. அவர்கள் பெரும்பான்மையினரான மக்கள்மேல் சர்வாதிகார ஆட்சி நடத்தியே வாய்ப்பாக வாழ்ந்து வருகின்றனர். பாட்டாளிகளின் ஆட்சி ஏற்பட்டதும் சிறுபான்மையினரான முதலாளி

www.padippakam.com



கள் மேலும், அவர்களது கொள்கைகள் மேலும் பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தைத் தொடர்ந்து நடக்கத் தவறினும் பாய்ச்சலான குணவேறுபாட்டில் தோல்வி ஏற்படலாம் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

இயற்கையின் அனைத்துப் பொருட்களுள்ளேயும் உள் முரண்பாடு உள்ளது. பழமையும் புதுமையும், அழிவும் அபிவிருத்தியும் உள்ளன.

அளவு மாறுபாடு குணமாறுபாட்டை ஏற்படுத்துகிறது என்ற இயங்கியல் பொருள் முதல்வாதத்தின் இரண்டாவது விதியை இப்போது புரிந்து கொண்டிருப்பாய் என நம்புகிறேன்.

அடிமேலடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழியையும் அறிந்திருப்பாய்.

அன்பான,
அப்பா

## 12. பழையதும் புதியதும்

அன்புமிக்க மகனே,

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினாலே' என நன்னூலில் கூறப்பட்டிருப்பதை நாம் அடிக்கடி நினைவுபடுத்திக் கூறி வருகிறோம். இதற்கு மேலாக இயங்கியல் பொருள் முதல் வாதம் என்னப்பா கூறுகிறது' என அனைத்தும் அறிந்து விட்டவன் போல எழுதியிருந்தாய்.

நீ கூறுவதும் உண்மையே. பழையதை மறுத்து புதியன தோன்றுகின்றன. பின்னர் அப்புதியவையே காலாவதியாகி விடுகின்றன. அன்றாடம் நாம் பயன்

www.padippakam.com



படுத்தும் பொருட்களிலேயே இவற்றைக் காணுகிறோமே. எப்பொருளிலும் கடைசியாக வந்த பொருளை வாங்க வேண்டும் என்ற ஆர்வம் உன்னிடமும் உள்ளது.

இயற்கையில் மட்டுமல்ல, பொருள் உற்பத்தியில் மாத்திரமல்ல, மூளையோடு இணைந்த சிந்தனையிலும் இதே போன்ற மாற்றங்கள் ஏற்படுகின்றன.

ஆயினும் உன் கூற்றில் 'காலவகையினாலே' என முடிவது இயற்கையின் முடிவுக்குள் மட்டும் புதியன புகுவதை உள்ளடக்குவது போலத் தோன்றுகிறது. அதாவது உலகிற்கு, உலக நிகழ்வுகளுக்கு விளக்கம் கூறுவதாக மட்டும் அமைவதாக உள்ளது. இங்குதான் மார்க்சின் சித்தாந்தமாகிய இயங்கியல் பொருள் முதல்வாதம் வேறு படுகிறது.

'இதுவரை காலமும் வாழ்ந்த சித்தாந்தவாதிகள் யாவரும் உலகிற்கு விளக்கம் கூறியே வந்தனர். விளக்கம் கூறுவதை விட்டு உலகை மாற்றியமைப்பதே எமது வினா' எனக் கூறுவது மட்டுமல்ல மாற்றியமைக்கும் நடைமுறைகளையும் கூறிநிற்பதே மார்க்சின் இயங்கியல் பொருள் முதல்வாதம் ஆகும்.

இவ்வார்த்தைகளை என்றும் மறவாது சிந்தனையில் பதித்து வைத்துக்கொள்.

உலகை மாற்றி அமைப்பது எப்படி என்பது தர்க்கத்தால் முடிவு கட்டுவதில்லை 'தர்க்கம் மார்க்கமல்ல'— நடைமுறையாலேயே மாற்றி அமைக்க முடியும். அதுவே விவாதங்களுக்கும் தர்க்கங்களுக்கும் முடிவு கட்டும்.

என் பாட்டனார் வளப்படுத்திய நிலத்திலேயே மாங்கொட்டையைப் புதைத்தேன். அது முளைத்துச் செடியாகி, பூத்துக் காய்த்துப்பழம் தந்தது. பின்னர் அப் பழத்தின் கொட்டையைப் புதைத்துச் செடியாக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



மாமரம் காட்டில் வளர்வதற்கும் பாட்டனார் பயன்படுத்திய நிலத்தில் நாம் வளர்ப்பதற்கும் வேறுபாடு உண்டு என்பதை மறக்க வேண்டாம். மீண்டும் நினைவூட்டுகிறேன்.

விதையிலிருந்து முளைக்கும் பயிர்கள் மீண்டும் விதைகளைத் தருகின்றன. விஞ்ஞான அறிவைப் புகுத்தி நல்ல விதைகளைத் தேர்ந்தெடுத்து பயிர் செழிப்பாக வளர்வதற்கேற்ற சூழலை, மண்வளத்தை ஏற்படுத்தி அதிக விளைச்சல், உற்பத்தியைப்பெற நம்மால் முடியும்.

அடைகாத்த முட்டையை உடைத்துக் கொண்டு குஞ்சு வெளிவருகிறது. பின்னர் அக்குஞ்சு வளர்ந்து முட்டை இடுகிறது. கோழிப்பண்ணைகளை அமைத்து நல்ல ரகக்கோழிகளை வளர்ந்து முட்டைகளைப் பெற மனிதரால் முடியும். நல்ல மாட்டுப் பண்ணைகளை அமைத்து தேவைக்கேற்றபடி பால், இறைச்சி பெற முடியும்.

பாட்டியின் கருப்பையில் வளர்ந்த அம்மா பின் உன்னைக் கருப்பையில் வளர்த்துப் பெற்றெடுத்தார். இவ்வாறு இன்று நமது குடும்பம் சுற்றம் சூழ்ந்த பெரிய சமூகமாக வளர்ந்திருப்பதைக் காண்கிறாய். (ஆணினத்திலும் பார்க்க பெண்ணினமே உயிரின வளர்ச்சியில் முதன்மையாக உள்ளனர் என்பதைக் கவனித்திருப்பாய். ஏனெனில் பெண்ணினத்திடமே கருப்பை உள்ளது.)

புராதன மக்கள் கல்லாலான கருவிகளையே முதலில் பயன்படுத்தினர். பித்தளையைக் கண்டுபிடித்ததும் பித்தளைக் கருவிகளையும், பின் இரும்பைக் கண்டதும் இரும்பிலும் கருவிகள் செய்து சமூக உற்பத்தியைப் பெருக்கினர். பல்வேறு நவீன கருவிகளை, இயந்திர உற்பத்தியை இன்று வளர்த்தெடுத்தனர். கை நெசவு கைத்தறியாகி, இயந்திரத்தறியாக மாறி வந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியின் வரலாறு சமூகத்தையும் சிந்தனையையும் வளர்த்து வந்ததைக் காணலாம். வளர்ச்சியடைந்த உற்பத்திக் கருவிகள் நடைமுறைப்படுத்தப் பட வளர்ச்சியடையாத கருவிகள் காலாவதியாகின்றன.

தனிச் சொத்துடைமையற்ற பழங்குடி மரபு, உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியோடு அடிமைச் சமுதாய அமைப்புத் தோன்றியது. அச்சமூகம் நிலப்பிரபுக்களின் நிலவுடைமைச் சமூகம் ஏற்பட வீழ்ச்சியுற்றது. யந்திர உற்பத்தியுடன் வளர்ச்சியடைந்த முதலாளிகள் தமக்கு உழைக்கும் பாட்டாளிகளுடன் இணைந்து நிலவுடைமைச் சமூக அமைப்பை வீழ்த்தினர். பின்னர் பாட்டாளிகள் ஒன்றிணைந்து, முதலாளித்துவ தனி உடைமையை ஒழித்து, சோஷலிச சமூக உற்பத்தியை ஏற்படுத்துவதும் தவிர்க்கமுடியாத வரலாற்று வளர்ச்சிப்போக்காகும் ஒவ்வொரு உற்பத்திமுறை கொண்ட சமூகமும் மறுக்கப்பட்டு புதியவை சங்கிலித் தொடராக மேம்பட்ட மட்டத்தில் மாறி வருவதை இங்கு காண்பாய்.

உலகமக்கள் சொத்தைத் தனிச் சொத்துரிமையாக்கிய முதலாளிகளின் சொத்துகள் மீண்டும் பறித்தெடுக்கப்படும் என்பதை, 'பறித்தவர் பறித்தெடுக்கப்படுவர்' எனக் கூறி 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுவீர்' எனக் குரலும் கொடுத்து வர்க்கப் போருக்குத் தயாராக்கியவர் மார்க்சே யாவார்.

இவ்வளர்ச்சிப்போக்கு எளிதாக, இலகுவாக நடைபெறுவதில்லை. குழந்தையைக் கருப்பையில் சுமப்பது, பின்னர் பிறக்கும்போது ஏற்படும் வேதனை, சிந்தப்படும் இரத்தம் பற்றி அறிந்திருப்பாய். (பெண்ணினமே இத்தகைய துன்பத்துடன் உயிரின் மறு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர் என்பதை இங்கும் நினைவூட்டுகிறேன்) பின் தவழும்



படிப்பகம்

www.padippakam.com



குழந்தை, குறுநடைபோட்டு, சிறுவனாகி, வாலிபனாகி வளர்ந்து வருகிறான். பெண் பெரியவளாகிக் குழந்தை பெறுகிறாள். இவ்வாறு வளர்ச்சிப் போக்கில் ஒரு நிலை மறுக்கப்பட்டு மறுநிலை தோன்றுகிறது. சமுதாய வளர்ச்சியும் இவ்வாறே நடைபெறுகிறது.

அடிமைச் சமுதாயம் பல ஆயிரம் வருடங்களாக நீடித்தது. அதை மறுத்துத் தோன்றிய நிலவுடைமைச் சமுதாயம் சில ஆயிரம் வருடங்களே நிலைக்க முடிந்தது. அதை மறுத்த முதலாளித்துவ உற்பத்திமுறை தோன்றி சில நூற்றாண்டுகளுக்கிடையில் சோஷலிசப் புரட்சிக்கு வழி வகுத்தது.

இத்தகைய வேகமாக சோஷலிசப் புரட்சிக்கு வழி காட்டியாக அமைந்தது மார்க்சின் வரலாற்றுப் பொருள் முதல்வாதமும் இயங்கியல் பொருள் முதல்வாத சித்தாந்தமுமாகும். சமூக அமைப்பை வேகமாக மாற்றியமைப்பதற்கு உந்து சக்தியாக விளங்குவது மார்க்சின் இக்கோட்பாடுகளேயாகும்.

சமுதாய வளர்ச்சி எளிதாக நடைபெறுவதில்லை என்பதை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன். வளர்ச்சிப் போக்கில் தற்காலிகப் பின்னடைவுகள் ஏற்படலாம். இறுதியில் முற்போக்கான வளர்ச்சியை நோக்கி உலகம் முன்னேறவே செய்யும்.

9ம் வகுப்பிற்கு பிறகு அடுத்து 10ம் வகுப்பில் படித்தாய். பின் 11, 12ம் வகுப்பு எனப்படிப்பில் உயர் வகுப்பிற்கு சித்தியடைந்து உயர்வடைந்து செல்கிறாய் மீண்டும் கீழே இறங்கி 9ல் படிப்பதில்லை.

வளர்ச்சியும் இவ்வாறு சுருள்வட்டமாக மேல்நோக்கியே வளர்ச்சியடையும். ஸ்பிரிங்கை நீ பார்த்திருப்பாயே, அதே போலவே வளர்ச்சி மேலோங்குகிறது.

படிப்பகம்

www.padippakam.com



வள்ளுவரும் 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்றார். இக்கூற்று வளர்ச்சிப் போக்கைக் காட்டும். அறிய, அறிய முன்னைய அறிவு அறியாமையாய் முடியும் என்றார்.

இவையே நிலைமறுப்பின் மறுப்பியல் என்னும் விதியாகும்.

அன்பான,
அப்பா

# 13. நடைமுறையும் உலகமாற்றமும்

அன்பான மகனுக்கு,

'எல்லாம் விரித்துக் கொண்டே எழுதுகிறீர்கள்? சரி இயங்கியல் பொருள் முதல் வாதம் பற்றி சுருக்கிக் கூறி விடுங்களேன்' என எழுதுகிறாய். சுருக்கி இக்கடிதத்தில் கூறிவிடுகிறேன். பின்னர் நீ வேண்டினால் சில விஷயங் களை விரித்துக் கூறுவேன்.

'குந்தவிக்குக் கடிதங்கள்' என்ற என் சிறு நூலில் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் பற்றிப் படித்திருப்பாய். அது வரலாற்றை விஞ்ஞான மயப்படுத்தி எழுதிய மார்க்சின் கோட்பாடாகும்.

இயங்கியல் பொருள் முதல் வாதம் என தற்போது நீ படித்து வருவது மார்க்சின் சித்தாந்தமாகும்.

இதுவரை காலத்தில் பல்வேறு சித்தாந்தவாதிகள் உலகிற்கு விளக்கம் கூறி வந்தனர். இந்த அடிப்படையில் இந்தியாவில் மட்டுமன்று உலகெங்கும் பல நூறு குறிப்பிடத் தக்க சித்தாந்தங்கள் தோன்றி வளர்ந்தன; மறைந்தன. இன்றும் பல நிலைத்துள்ளன.

www.padippakam.com



இயங்கியல் பொருள் முதல்வாதத்திற்கும் மற்றைய சித்தாந்தங்களுக்குமிடையில் பெரிய வேறுபாடுகள் உள்ளன.

முன்னைய சித்தாந்தங்கள் யாவும் உலகிற்கு விளக்கம் கூறுவதுடனேயே நின்றன. மார்க்சின் சித்தாந்தம் ஒன்றே உலகை மாற்றியமைக்கும் கோட்பாடுகளைக் கொண்ட சித்தாந்தமாகும்.

உலகை மாற்றி அமைப்பது என்பது வெறும் பேச்சால் அல்ல. நடைமுறையினாலேயே மாற்றி அமைக்க முடியும். மார்க்சின் சித்தாந்தம் நடைமுறை கொண்ட சித்தாந்தம் அனுபவவாதத்தை ஒதுக்கும் சித்தாந்தம். பகுத்தறிவும் நடைமுறை மூலம் பரீட்சிக்கப்பட வேண்டும் எனக்கூறும் சித்தாந்தம்.

பாட்டாளி வர்க்கத்திற்குச் சேவை செய்து வழிகாட்டும் சித்தாந்தம். நடைமுறை; அடிப்படையான கோட்பாடு கொண்டது.

வாழ்நிலையே சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்ற அடிப்படையிலான பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தையும் கொண்டது சரியான அறிவையும் பண்பாட்டையும் தரும் சித்தாந்தம்; ஆக்க சக்திக்குரிய சித்தாந்தம்.

வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட சித்தாந்தம் என்று ஒன்றும் கிடையாது. எதிர்கால வர்க்கச் சுரண்டலற்ற சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் தகுதி கொண்டதும் பாட்டாளிகளுக்காக உருவாக்கப்பட்டதுமான சித்தாந்தம். இச்சித்தாந்தம் பாட்டாளிகளின் உலகப் பார்வையைக் கூறுவது.

மற்றைய சித்தாந்தங்கள் அனைத்தும் உயர்மட்டத்தில் வாழ்ந்து பிறர் உழைப்பை அபகரித்து வாழ்பவர்

படிப்பகம்

www.padippakam.com



களுக்காக, அவர்களது வர்க்க நலனைப் பேணும் சித்தாந்தங்களாகும். அதனாலேயே பாட்டாளிகளுக்கு அவை புரிவதில்லை.

உலகைப்பற்றிய கண்ணோட்டம் வர்க்க நலனை ஒட்டி வேறுபட்டே இருக்கும். தொழிலாளியின் கண்ணோட்டத்திற்கு முரணாகவே முதலாளிகளின் பார்வை இருக்கும். காலனி நாடுகளுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையே வேறுபட்ட உலகப் பார்வையே நிலவ முடியும்.

இயங்கியல் பொருள் முதல்வாதச் சித்தாந்தத்தைப் பாட்டாளி வர்க்கத்தவரால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும். உன்னைப் போன்ற குட்டி முதலாளித்துவ மாணவனால் முற்றுமுழுதாகப் புரிந்து கொள்வது சிரமமாயிருக்கும் எனக் கூறின் உனக்குக் கோபம் வரலாம். ஆயினும் இது உண்மையே.

இந்தச் சித்தாந்தத்தைப் பாடசாலைகளில், கல்லூரிகளில் கற்பிக்கிறார்களா? இல்லவேயில்லை. ஆசிரியர்களாலேயே இச்சிந்தாந்தத்தைக் கிரகித்துக் கொள்ள முடிவதில்லை.

மேலும், கிரகித்துக் கொண்ட ஆர்வம்மிக்க ஆசிரியர் சிலர் கற்பிப்பின் புரட்சி அணியைச் சேர்ந்தவர் என வேலை நீக்கம் செய்யப்படலாம். ஏனெனில் இன்றைய அரசே நடைமுறையும் சமுகமாற்றக் கோட்பாடும் கொண்ட மார்க்சிய சித்தாந்தத்தைக் கண்டு அஞ்சுகிறது.

அதே வேளை சைவ சிந்தாந்தம், வேத உபநிடதப் பிரச்சாரங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இவற்றைக்கூட ஆசிரியர்கள் முற்றுமுழுதாகக் கிரகித்திருக்க மாட்டார்கள். மேல்நாட்டு கருத்து முதல்வாதச் சித்தாந்தங்களைச் சிலர் கற்பர்; கற்பிப்பர்.

www.padippakam.com



இயங்கியல் பொருள் முதல் வாதம் நடைமுறை கொண்ட பாட்டாளிகளின் சித்தாந்தம் என்று கூறினேன். நடைமுறை வெற்றி பெற்றதா என நீ உடனே கேட்கலாம்.

சோவியத் ரஷ்யாவில் 1917 அக்டோபரில் நடைபெற்ற பாட்டாளி வர்க்கப் புரட்சியை மீண்டும் நினைவூட்டிப்பார். அவ்வேளை அங்குநிலவிய முரண்பாடுகளை லெனின் விஞ்ஞானிபோல ஆராய்ந்து, பிரதான முரண்பாடு முதலாளி களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் வெடிக்க உள்ள நிலையைக் கண்டு, தானே முன்னின்று புரட்சியை நடத்தி வெற்றி கண்டார்.

மார்க்சின் நடைமுறைச் சித்தாந்தத்தைக் கடைப்பிடித்த மாஓ சமூக முரண்பாடுகளைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றிருந்தார். அரைநிலப்பிரபுத்துவ, அரைக் காலனியாகக் கணிக்கப்பட்ட சீனாவில் நிலவிய பிரதான முரண்பாட்டை, தொழிலாளர் தலைமையிலான கிராமப் புறப் பாட்டாளிகளை அணிதிரட்டி உடைத்தெறிந்து புதிய ஜனநாயகப் புரட்சியில் வெற்றி கண்டார்.

'முரண்பாடுகள், நடைமுறை' பற்றிய மாஓவின் மார்க்சிய கோட்பாடுகளை நீ கற்கவேண்டும். இவை இயங்கியல் பொருள் முதல்வாதத்திற்கு சிறந்த விளக்கமாக வும் நடைமுறையில் பரீட்சிக்கப்பட்ட கோட்பாடுகளாகவும் இன்றும் விளங்குகின்றன; என்றும் விளங்கும்.

வியத்நாமில் நடந்த புரட்சியையும் நீ நன்கு அறிந்து கொள்ளவேண்டும். கோசிமின் தலைமையில் மக்கள் ஆயுதப் புரட்சிமூலம் பிரெஞ்சு காலனி ஆட்சியை வடவியத்நாமில் வீழ்த்தினர். பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியம் நுழைந்து தென் வியத்நாமை தனது பாதுகாப்பில் நிலை நிறுத்த முயன்றது. வியத்நாமிய தொழிலாளர்களும் விவசாயிகளும், வரலாற்றுப் புகழ்மிக்க வீரப்போர் புரிந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தை விரட்டியடித்தனர். சோஷலிசக் குடியர

படிப்பகம்

www.padippakam.com



சாக வடவியத்நாமுடன் தென் வியத்நாமும் இணைக்கப் பட்டது.

உலகை மாற்றி அமைப்பது என்பது புரட்சியினாலேயே சாத்தியமாகும் என்பதை இதுவரை கிரகித்திருப்பாய். மற்றும் ஓர் உண்மையை மறந்துவிடாதே. உழைக்கும் பரந்துபட்ட மக்களே நாள் முழுவதும் வருடம் முழுவதும் நடைமுறையில் ஈடுபட்டுவருகின்றனர். புரட்சிகர அரசியலை அவர்கள் கிரகித்துக் கொண்டதும் உலகையும் அவர்கள் மாற்றி அமைப்பர். அதற்குத் தகுதியும் பெற்றவர் அவர்களே.

வரலாற்றுப் பொருள் முதல் வாதம் மனித வரலாற்றை விஞ்ஞான மயப்படுத்திக் கூறுவதாகும்; பல்வேறு உற்பத்தி முறைகளையும், சமூக அமைப்புகளையும் (புராதனக் கம்யூனிசம், அடிமை, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், சோஷலிசம்) ஒரு சமூக அமைப்பிலிருந்து மற்றொரு சமூக அமைப்பிற்கு மாறுவதையும் விரிப்பதாகும்.

இயற்கை, சமூகம், சிந்தனை முதலானவை பற்றிய பொது விதிகளை இயங்கியல் பொருள் முதல்வாதம் உள்ளடக்குகிறது; பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்ட விஞ்ஞானக் கோட்பாடுகளையும் கொண்டது. சிந்தனை முறையின் அமைப்பையும் பணியையும் உள்ளடக்கியது.

வரலாற்றுப் பொருள்முதல் வாதத்திற்கும் இயங்கியல் பொருள் முதல்வாதத்திற்குமுள்ள வேறுபாடுகள் இவையே. முன்னது விஞ்ஞானம்; பின்னது சித்தாந்தம். விஞ்ஞானங் களைத் தொடர்ந்தே சித்தாந்தங்கள் தோன்றுகின்றன என அல்தூசர் என்ற பிரெஞ்சு மார்க்சிய-லெனினிச அறிஞர் கூறுவார்.

இயங்கியல் பொருள் முதல்வாத சித்தாந்தம் மனித குலத்தின் உயர்ந்த அறிவு, பண்பாட்டு வளர்ச்சிக்குப் பின்

www.padippakam.com



களிக்கிறது. நிலப்பிரபுத்துவசமுதாய அமைப்பில் முதலாளித்துவ நடைமுறை பற்றி அறிய முடியாது. முதலாளித்துவத்திலேயே பாட்டாளிக்கு விடுதலை தரும் இயங்கியல் பொருளாதாரம் என்ற சித்தாந்தம் தோன்ற முடிந்தது.

இப்பாட்டாளி வர்க்கத்திற்குரிய நடைமுறை கொண்ட சித்தாந்தத்தின் நடைமுறைகளை மூன்றாக வகுக்கலாம். அவையாவன:

பொருளாதார நடைமுறை
அரசியல் நடைமுறை
கருத்தியல் நடைமுறை

அன்பான,
அப்பா

# 14. பொருளாதார நடைமுறையும் மூலதனமும்

அன்பிற்கினிய மகளுக்கு,

'மூன்று நடைமுறைகள் பற்றியும் விளக்கம் வேண்டுமப்பா' என்ற கடிதம் வந்தது. நான் எதிர் பார்த்தபடியே நீயும் விளக்கம் கேட்டு எழுதினாய். நல்லது. நன்கு கற்க பொறுமையும் வேண்டும்.

பொருளாதாரமே சமூகவாழ்வின் அடிப்படை அமைப்பாகும். நமது கிராமத்து மயானத்தருகே உள்ள ஆலமரத்தைப் பார்த்திருப்பாய். கிளைகள், விழுதுகள் விட்டுவளரும் ஆலமரத்தின் மூல வேர் போன்றது பொருளாதாரம், அரசியல், சட்டவிதிகள், கருத்தியல்கள் மரத்திற்குச் சேவை செய்யும் கிளைகளும் விழுதுகளுமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



மனித இனம் குழுவாக வாழ்ந்து கூட்டாக உற்பத்தியில் ஈடுபட்டே வளர்ந்து வந்தது என்பதை நீ அறிவாய். பின்னர் அடிமையாக உழைத்த மக்கள் நிலத்திற்கு அடிமையாகி; முதலாளித்துவத்தில் கூலிக்கு அடிமை ஆகினர். இவற்றை முன்னரே கற்றிருப்பாய்.

மார்ச்சும் ஏங்கெல்சும் இணைந்து 1848ல் 'கம்யூனிஸ்டு அறிக்கை' என்ற மனித வரலாறு பற்றிய விஞ்ஞான அறிக்கையை வெளியிட்டனர். மனித இன வரலாற்றை வர்க்கப் போராட்ட வரலாறாக, பொருள் முதல்வாத நோக்கில் ஆராய்ந்து எழுதினர். உலகை மாற்றி அமைக்கும் ஆரம்பக்குரலாக, 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற ஆணையுடன் இவ்வறிக்கை முடிகிறது. இதை நீ முதலில் கற்கவேண்டும்.

இதற்கு அடுத்தபடியாகத் தொழிலாள வர்க்கத்தவருக்குச் சரியான அறிவூட்டி, புரட்சிக்கு உந்து சக்தியாக அமைந்தது மார்க்சின் மூலதனம் என்ற விஞ்ஞான ஆய்வு முறை கொண்ட நூலாகும். இந்நூல் முதலாளித்துவ உற்பத்தி முறை, உற்பத்தி உறவுகள், விநியோகம் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களையும் விஞ்ஞான முறையில் ஆராய்கிறது.

பொருள் உற்பத்தியைப் பற்றி மட்டுமல்ல அதன் விநியோகத்தைப் பற்றியும் ஆராய்ந்த முதலாவது பொருளாதார அறிஞர் மார்க்சேயாவார்.

இங்கிலாந்தின் பொருளாதாரத்தைக் கற்பதன் மூலமே விஞ்ஞானபூர்வமான அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளை மார்க்ஸ் வகுத்தார் என்பர்.

உழைப்பே மனிதனின் ஆத்மா. உழைப்பே மனிதனை மிருகத்திலிருந்து வேறுபடுத்துகிறது. மொழி மனிதனை மேலும் உயர்த்தி சமூக உறவை ஏற்படுத்துகிறது. முத

www.padippakam.com



ளாளித்துவத்தில் மனிதனின் உழைப்பு எவ்வாறு பண்டமாகிறது என்பதையும், சமூக உறவுகள் பண்ட உறவாக மாறுவதையும் மார்க்ஸ் விளக்கினார்.

தொழிலாளரின் உழைப்பு உபரிமதிப்பாகி முதலாளிகளால் எவ்வாறு பறிக்கப்படுகிறது; உபரி உழைப்பு மூலதனக்குவியலாக வளர்ந்து மேலும் மேலும் சுரண்டும் முறைகளையும் கூலி அடிமைகளான தொழிலாளர்களின் உழைப்பும் மூலதனமும் எவ்வாறு முரண்படுகிறது என்பதையும் மார்க்ஸ் விளக்கியுள்ளார்.

முதலாளித்துவத்தில் இதுவே பிரதான முரண்பாடாகிறது என்பதை முன்னர் கண்டோம்.

தொழிலாளரின் உழைப்புச் சக்தி முதலாளித்துவத்தில் மூலப் பொருட்களுடன் இணைந்து பண்டமாகிறது. முதலாளிகளுக்கு வாய்ப்பான வேளையில் அப்பண்டம் பணத்திற்கு விற்கப்படுகிறது உபரிமதிப்பு, இலாபம், வட்டி, குத்தகை ஆகியவை பற்றியும் மூலதனம் விளக்கும். மேலும் ஆரம்ப மூலதனக்குவியல் அதன் பொருளாதார வளர்ச்சிப் போக்கையும் இந்நூல் விரிக்கும் முதலாளிகள் வேலை நேரத்தை அதிகரித்தல், ஓவர்ரைம், போனஸ், வேலை நீக்கம் போன்ற ஆயுதங்கள் மூலமும் எவ்வாறெல்லாம் தொழிலாளரின் உழைப்புகள் மறைமுகமாகப் பறிக்கப்படுகின்றன என்பதையும் மார்க்ஸ் மூலதனம் நூலில் கூறியுள்ளார்.

தனியார் சொத்தாகிய மூலதனம், தொழிலாளரின் உபரி மதிப்பின் குவியலாகி உழைத்த தொழிலாளர்களையே எதிர்க்கிறது; எதிரியாக்குகிறது; அந்நியப்படுத்துகிறது. வாழைக்குத் தானீன்ற காய் கூற்றமாவது போலாகிறது. வளர்த்த கடா மார்பில் பாயும் நிலைக்கு தொழிலாளரை மூலதனக்குவியல் இட்டுச் செல்வது எத்தனை கொடுமை என்று பார்த்தாயா?

www.padippakam.com



தான் உற்பத்தி செய்த பண்டத்திற்கே அந்நியமாவதை முன்னரும் கூறினேன். நெசவாலைத் தொழிலாளரின் மனைவி, பிள்ளைகளுக்கு மாற்றிக் கட்டத் துணியில்லை. நகரெல்லாம் வீடு கட்டும் கொத்தனார்கள் குடிசையில் வாழ்கின்றனர். வருடம் பூராவும் வயலில் உழைத்து நெல் விளைவித்த விவசாயியின் வீட்டில் அரிசியில்லை, பட்டினி கிடக்கிறான்.

வயிற்றை நிரப்ப, தமக்குப் பிடிக்காத உழைப்பில், கூலி அடிமையாக வாழ்நாள் பூராவும் தொழிலாளர் உழைக்க நேருகிறது. இதனால் தமது ஆத்மாவிற்கே அவர்கள் அந்நியமாகின்றனர்.

இந்தச் சுரண்டலுக்கு விடிவே இல்லையா? என்று நீ கேட்கலாம். சுரண்டலால் துன்பப்படும் பாட்டாளிகள் ஒன்று திரண்டு தொழிற் சங்கங்கள் அமைந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

உழைப்புச் சக்தி சுரண்டப்படுவதால் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையில் ஏற்படுவது பகைமை உறவு என்பதை முன்னரே கூறினேன். தொழிலாளர்கள் தற்காப்பு நடவடிக்கையாக கோரிக்கைகள், ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் மூலம் தமது உபரி உழைப்பில் பங்கு பெறப் போராடுவர். புரட்சிகர அரசியலையும் அவர்கள் மறந்து விடார். கூலி அடிமை முறையிலிருந்து விடுபட, அரசியலா திக்கத்தைக் கைப்பற்ற சோஷலிசப் புரட்சியே ஒரே வழி என, தாக்குதல் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

இத்தகைய நடைமுறையையும் போராட்டத்தையும் முற்றுமுழுதாகப் புரிந்துக் கொள்ள முடியாது போகலாம். பொருள் உற்பத்தி நடைமுறையில் ஈடுபட்டு உபரி உழைப்பு பறிபோவதை உணர்ந்த தொழிலாளி வர்க்கத்தவராலேயே இவற்றை விரைவில் கிரகித்துக் கொள்ள முடியும்.

www.padippakam.com



வாழ்நிலையே சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்ற மார்க்சியக் கோட்பாட்டை என்றும் மறந்துவிடாதே.

தமது உபரி உழைப்பு பறிபோகும் முறையையும் முதலாளி எவ்வாறு உழைப்புச் சக்தியைப் பறித்தெடுத்துக்கொள்கிறார்கள் என்பதையும் உழைப்பவர்களாலேயே உணர்ந்தறிய முடியும். அதனாலேயே முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் பகைமை உறவு ஏற்பட்டு ஒரு வர்க்கம் மற்றைய வர்க்கத்தை அழித்தொழிக்க முயலும் போர் என்ற உயர்ந்த வன்முறை வடிவத்துக்கு தூண்டிவிடுகிறது.

மார்க்சின் மூலதனம் பாட்டாளி வர்க்கத்தவரின் கை நூல்; வழிகாட்டி நூல். அவர்களாலேயே மார்க்சிய நடைமுறை கொண்ட சித்தாந்தத்தைக் கிரகித்து, புரட்சிகர நடைமுறையில் ஈடுபட்டு, முதலாளித்துவ உற்பத்தி முறையை முறியடித்து, சோஷலிசப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

சோஷலிசப் பொருளாதாரத்தில் கூலி அடிமைத்தனம் ஒழிகிறது. உழைப்பு பண்டமாகும் நிலை நீங்குகிறது. திட்டமிட்ட உற்பத்தியும் விநியோகமும் நடைமுறைப் படுத்தப்படுகிறது. மனிதத் தேவையை ஒட்டி உற்பத்தி பெருகி அனைத்தும் பெறக்கூடிய கம்யூனிச சமுதாயத்தை நோக்கி மனித இனம் முன்னேறும்.

அன்பான,
அப்பா.

# 15. அரசியல் நடைமுறையும் புரட்சியும்

அன்புள்ள மகனுக்கு,

'வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தை நான் ஓரளவு அறிந்து கொண்டேன். உங்கள் கடிதங்களில் அங்கு,

www.padippakam.com



கூறப்படும் உற்பத்தி முறை மாற்றங்களையே திரும்பத் திரும்ப கூறுவதாகத் தெரிகிறது' என எழுதியுள்ளாய். அது ஓரளவு உண்மையே.

அனைத்து விஷயங்களையும் விஞ்ஞான பூர்வ கண்ணோட்டத்திலேயே நாம் பார்க்கிறோம். அப்போது நிருபிக்கப்பட்ட நடைமுறை, கோட்பாடுகளையே சாதாரண மாகக் கூறமுடியும். மார்க்சிய சித்தாந்தம் கற்பனை மேல் கட்டப்பட்டதல்ல.

அரசியல் நடைமுறைபற்றிக் கூறும் போதும் நடைமுறையாக லெனினின் நடைமுறையையும் அரசியல் எழுத்துக்களையுமே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவரே மார்க்கின் சமூக விஞ்ஞான ஆய்வையும் சித்தாந்தத்தையும் நன்கு கிரகித்து, புரட்சிகர அரசியல் நடைமுறை மூலமே புதியதோர் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதை 1917 அக்டோபர் புரட்சிமூலம் நிருபித்துக் காட்டினார்.

1848-ல் ஜெர்மனியில் தோல்வியுற்ற புரட்சி, 1879-ல் பிரான்சில் தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட பாரிஸ் கம்யூனின் தோல்வி ஆகிய இரண்டையும் மார்க்ஸ் நன்கு கற்று, தோல்விக்குரிய காரணங்களையும் ஆராய்ந்தார். லெனின் இவற்றிற்குமேலாக 1905-ல் சோவியத்தில் தோல்வியுற்ற எழுச்சியை நேரில் கண்டிருந்தார். வரலாற்றில் நடைபெற்றுத் தோல்வியுற்ற புரட்சிகளின் ஆய்வுகளே அக்டோபர் புரட்சியின் வெற்றியாகும். பாரிஸ் கம்யூனின் தோல்வியைக் கற்ற லெனின் பின்னர் கூறினார்: 'புரட்சி என்பது அரசு யந்திரத்தின் மேல் கைவைப்பதல்ல. அதை நொறுக்கிவிடுவது.'

புரட்சிகரக் கோட்பாடின்றி புரட்சிகர இயக்கத்தைக் கட்டமுடியாது என்ற கொள்கையுடன் போல்ஷவிக்கட்சியை, மார்க்சின் கோட்பாடுகளை முன்வைத்து, லெனின் கட்டி எழுப்பினார். லெனினது காலகட்டத்தில் உருவான

படிப்பகம்

www.padippakam.com



முதலாளித்துவத்தின் உச்சக்கட்டமான ஏகாதிபத்தியத்தை ஓர் அரசியல் நடைமுறையாகவே அவர் கணித்தார்.

உலக யுத்தத்தினால் ஏகாதிபத்தியம் பலவீனப்பட்டிருந்ததை லெனின் நன்கு உணர்ந்திருந்தார். வர்க்கங்களிடையே தற்காலிகமாக ஏற்பட்டிருந்த பகைமையற்ற நிலை, பகைமை நிலையாகி வெடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. உள்நாட்டு நிலைமைகளையும் சர்வதேசப் போக்குகளையும் நன்கறிந்த லெனின் தியாகத்துடனும் விவேகத்துடனும் துணிச்சலாகப் புரட்சியை முன்னெடுத்துச் சென்று சோஷலிசப் புரட்சியை நடத்தி வெற்றி கண்டார்.

ஒரு வர்க்கத்தை வீழ்த்தி மற்றொரு வர்க்கம் அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றுவதையே புரட்சி என்போம். 1917 பிப்ரவரியில் ஜார் மன்னனின் நிலப் பிரபுத்துவ ஆட்சியை வீழ்த்தி முதலாளித்துவப் புரட்சி நடைபெற்றது. அதே ஆண்டின் அக்டோபரில் முதலாளித்துவத்தை வீழ்த்தி பாட்டாளி வர்க்கத்தவரின் சோஷலிசப் புரட்சி எழுந்தது.

ஜார் மன்னன் வீழ்ந்தான். 'ஆகா என்றெழுந்தது பார் யுகப் புரட்சி' எனப் பாரதி பாடினான் பிப்ரவரி முதலாளித்துவப் புரட்சியையா, அக்டோபர் சோஷலிசப் புரட்சியையா பாரதி பாராட்டிப் பாடினான் என்பதில் கருத்து வேற்றுமைகள் இங்குள்ள அரசியல் கட்சிகளிடை இன்னும் நிலவுகின்றது. எப்படியிருப்பினும் அக்டோபர் புரட்சி உலகைக் குலுக்கிய யுகப் புரட்சி என்பதில் சந்தேகமில்லை.

பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதன் மூலமே சோஷலிசப் புரட்சியை, கம்யூனிசத்தை நோக்கி எடுத்துச் செல்ல முடியும் என்பதை லெனின் வலியுறுத்தி நடைமுறைப்படுத்தி வந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



ஸ்டாலினும் தொடர்ந்தார். இரண்டாவது உலகயுத்த நடவடிக்கைகள் சோஷலிசத்தைத் தொடர்ந்து கட்டி எழுப்பு வதற்குப் பேரிடியாக வந்தது.

சோஷலிசக் கட்டுமான முயற்சிகள் தளர்த்தப்பட்டு, பாசிசத்திற்கு எதிரான யுத்தத்தில் ஏகாதிபத்தியங்களுடன் இணைந்து, சோவியத் நாடும் போரிட நேரிட்டது.

உலகயுத்தம் முடிந்ததும் சோவியத்தின் கண்காணிப்பில் வந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்டு கட்சிகள் அமைக்கப்பட்டு, சோஷலிசத்தைக் கட்டி எழுப்ப அந்நாடுகள் ஊக்குவிக்கப்பட்டன.

யுத்த காலத்தில் ஏற்பட்ட சமூக இறுக்கமும் பேரி ழப்புகளும் ஸ்டாலின் மறைந்ததும் 'தனிநபர் வழிபாட்டுக்கு வழிவகுத்தார்' என்ற குற்றச்சாட்டு அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது.

சோஷலிசப் புரட்சியின் பின் வர்க்கப் பகைமை உறவு கள் நீங்கிவிடும். அந்நாடுகளில், மக்களிடை பகைமை யற்ற உறவே நீடிக்கும். ஆயினும் பகைமையற்ற முரண் பாடுகள் தொடரவே செய்யும். அவை கலந்துபேசி, விவாதித்து, ஜனநாயகமுறையில் தீர்க்கப்படும் என்ற இயங்கியல் பொருள் முதல்வாதக் கோட்பாட்டை முன்னரும் கூறினேன்.

ஆனால் சோஷலிசம் கட்டி எழுப்பப்படும் நாடாகிய ஹங்கேரியில் 1956-ல் நடைபெற்ற கிளர்ச்சியை அடக்கி ஒடுக்குவதற்குச் சோவியத் படைகள் குருசேவினால் அனுப்பப்பட்டன. வன்முறை மூலம் மக்கள் கிளர்ச்சி நசுக் கப்பட்டது. அதைத் தொடர்ந்த திரிபுவாதப்போக்கு, ஸ்டாலினைப் புதைப்பதாகக் கூறிக் கொண்டே 35 ஆண்டுகளில் ஏகாதிபத்தியங்களுடன் இணைந்து லெனி

www.padippakam.com



னின் சோஷலிசப் புரட்சியைக் களங்கப்படுத்தும் நிலைக்கு வந்துள்ளது.

இரண்டாவதாக, உலகின் மிகப்பெரிய மார்க்சிய நடைமுறையாக, சீனப்புரட்சியைக் கூற வேண்டும். அரைக்காலனி, அரைநிலப்பிரபுத்துவ நாடாக இருந்த சீனாவில் புரட்சிகரக் கம்யூனிஸ்டு கட்சி அமைக்கப்பட்டு தொழிலாளர் வர்க்கத் தலைமையில் கிராமப்புறப் பாட்டாளி களை அணிவகுத்து நீண்டகால யுத்தம் மூலம் மாஓ புதிய ஜனநாயகப் புரட்சியை 1949-ல் நடத்தினார். வெற்றி கண்டார். அதைத் தொடர்ந்து 1949-ல் இருந்து சோஷ லிசப் புரட்சி நடைமுறைப் படுத்தப்படுகிறது.

மூன்றாவதாக, வீரவியத்நாமிய மக்கள் பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியங்களை விரட்டிய தேசீயப் புரட்சி யையும் அதைத் தொடர்ந்து கட்டப்படும் சோஷலிசப் புரட்சியையும் குறிப்பிடவேண்டும்.

சமூக, அரசியல் முரண்பாடுகள் முடிவற்றவை எனக் கூறியது மட்டுமல்ல முரண்பாடுகளையும் நடைமுறையை யும் வகைப்படுத்திய பெருமை சீனப் புரட்சியை வெற்றி கரமாக நடைமுறைப்படுத்திய மாஓவையே சாரும். முரண் பாடுகள் பற்றியும் நடைமுறை பற்றியும் எளிமையாக விளக்கி இயங்கியல் பொருள் முதல்வாதத்திற்குப் புதிய விளக்கமும் நடைமுறையும் வகுத்தவர் அவரே. புரட்சிகர அரசியல் நடைமுறைக்கு மாஓவின் நடைமுறைகளும் கோட் பாடுகளும் அணிகலங்களாக அமைந்துள்ளன.

அன்பான,
அப்பா

படிப்பகம்

www.padippakam.com

# 16. கருத்தியலும் நடைமுறையும்

அன்பான மகனுக்கு,

நீ சிறுவனாக இருந்தபோது பாட்டியிடம் கதைகள் கேட்பாய். பேய், பிசாசுக் கதைகள் எல்லாம் அவர்கூறுவார். நீ அவற்றையெல்லாம் நம்பிவிடுவாய். பேய், பூதங்களைக் கனவில் கண்டு வாய் புலம்புவதையும் நான் கேட்டுள்ளேன்.

அடுத்த வீட்டுப் புளிய மரத்தில் முனி ஒன்றிருந்தது, பார்வதி என்ற பிள்ளைத்தாச்சி இரவில் செல்லும் போது அடித்துக் கொலை செய்தது என தானும் கண்டது போல நம்பும்படியாகக் கூறி விடுவார்.

அந்தப் புளியமரத்தடிப் பக்கமாக இரவில் போவதற்கே நீ அஞ்சுவாய். நான் அழைத்துச் செல்லும் போதே பயந்து பயந்தே வருவாய்.

இவற்றை இன்று எண்ணிப்பார். சிரிப்பாய். ஏனெனில் உன் அறிவு பகுத்தறிவாக, விஞ்ஞான அறிவாக இன்று வளர்ந்து வருகிறது. அறியாமை நிலையிலிருந்து அறிவு வளர்கிறது. அறிய அறிய அறியாமை பழமையாகிறது என்றார் வள்ளுவர்.

நடைமுறையே சரியான அறிவை மேலும் மேலும் வளர்க்கிறது. பெரும்பாலாரது அறிவு இன்னும் நீ குழந்தையாக இருந்த நிலையிலேயே உள்ளது. தவறான கருத்தியல்களால் அவர்களது சிந்தனை கவரப்பட்டுள்ளது.

பேய், பிசாசு, முனி என்று உன் மூளையில் திணிக்கப் பட்டவை வெறும் கருத்துக்களே, இவ்வாறு வெறும் கருத்துக்களானவற்றையே கருத்தியல்கள் என்போம்.

சி. கு--11

படிப்பகம்

www.padippakam.com



இவையும் பொருள் தன்மை பெற்றவை. அதனாலேயே புளியமரத்தைக் கடக்கும்போது நீ அஞ்சி அஞ்சி வருவாய். எத்தனை கூறினாலும் நீ அப்போது ஏற்கமாட்டாய்.

விஞ்ஞான கோட்பாடுகள் சார்ந்த அறிவே தவறான கருத்துக்களைப் போக்க வல்லன. இருட்டறையில் கறுத்தப் பூனை இருக்கிறது என சிலரை நம்பச் செய்யலாம். 'விளக்கைத் தா பார்ப்போம்' எனக் கேட்பவனே உண்மையை அறிவான். 'பாம்பு' எனப் பயப்படுத்தப்பட்டவனுக்குப் பாதி ஒளியில் கயிறும் பாம்பாகவே தோன்றும்.

இன்று ஆதிக்கம் பெற்றுள்ள கருத்தியல்களை எவ்வாறு மாற்றலாம் என நீ கேட்கலாம். இது சிரமமான பணியே. ஏனெனில் மூளை வெளியே உள்ள பொருளல்ல. ஒவ்வொருவரது உடலோடும் ஒன்றியுள்ளது. ஏன்? எப்படி? என்று தர்க்க ரீதியைத்தேடும் பகுத்தறிவுமூலம் மூட நம்பிக்கைகளை ஓரளவு அகற்றலாம். அடுத்தது புரட்சிகர அரசியல் நடைமுறை.

சமூகத்தின் அடிப்படையாக, மூல வேராக அமைவது பொருளாதாரம்: உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும். இதற்குச் சேவை செய்வதாக அரசியல், சட்டம் சார்ந்தவை, கருத்தியல்கள் ஆலமரக்கிளையாக, விழுதாக அமைந்துள்ளன என்பதை முன்பும் கூறினேன். மீண்டும் நினைவூட்டுகிறேன்.

இவற்றில் அரசியல், சட்டம் சார்ந்தவை குறிப்பிட்ட சமூகப் பொருள் உற்பத்தியை நடைமுறைப்படுத்தப் பயன்படுத்தப்படும் வன்முறை வடிவங்கள். முப்படைகள், போலீஸ், நீதிமன்றம், சிறைச்சாலைகளையே குறிப்பிடுகிறேன்.

கருத்தியல்கள் வன்முறையற்ற வடிவங்கள். கருத்துகளின் அடிப்படையில் எழுவன; விஞ்ஞான பூர்வமற்றவை; பகுத்தறிவுக்கே ஒவ்வாதவை.

www.padippakam.com



கருத்தியல்கள் பொய்மையான கருத்துகளைப் பிரதி பலிப்பதன் மூலம் தனி நபரின் அல்லது சமூகக் குழுவின் சிந்தனையில் மேலாதிக்கம் செய்யலாம். அதாவது மக்களை, உழைப்பவர்களை, சமூகத்தைப் பொய்மை நிலையில், யதார்த்த நிலையை அறிய முடியாத மயக்க நிலையில் வைத்திருப்பதாகும்.

மதம், கல்வி, குடும்ப அமைப்பு, பெண்ணடிமை, தொடர்புச் சாதனங்கள் (செய்தித் தாள்கள், ரேடியோ, டிவி முதலியன) சாதி முறைகள், கலை இலக்கியங்கள் முதலிய கருத்தியல்கள் இன்றைய ஆளும் வர்க்கத்திற்குச் சார்பாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தேசியம், ஒழுக்கம், பொருளியல் வாழ்வு பற்றிய மூதாதையரின் கதைகள் சிறுவயதிலே வீட்டிலும் பள்ளியிலும் கூறப்பட்டுப் பழம்பெருமை பேசப்படுகிறது. அவை உயர்ந்தவை என்றும் போதிக்கப்படுகிறது.

பள்ளிக் கூடங்களில் சிறுவயதிலேயே பிள்ளைகள் சேர்க்கப்பட்டுப் பல வருடங்களுக்குக் குடும்பத்திற்கும் அரசு யந்திரத்திற்குமிடையில் நசுக்கப்படுகின்றனர். வரலாறு, விஞ்ஞானம், இலக்கியம் ஆகியவை அரசியலின் கருத்தியல் தேவைக்கமையக் கற்பிக்கப்படுகின்றன.

கலை, இலக்கியங்கள் அனைத்தும் இன்றைய சமூக அமைப்புக்கு சேவை செய்வனவாகவே ஆக்கப்படுகின்றன.

தொழிலாளி, விவசாயியின் பிள்ளைகளுக்குக் கல்வி வாய்ப்பே அரிதாக உள்ளது. பள்ளிக்குச் செல்ல நேரினும் இடை நிலைக் கல்வியுடன் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

வாய்ப்புள்ள முதலாளிகள், நிலப்பிரபுக்கள், பணக்காரனின் பிள்ளைகள் உயர்கல்விக்குச் சென்று கற்று அரசு

www.padippakam.com



நிர்வாகிகளாகவும் முதலாளிகளின் ஏஜண்டுகளாகவும் ஆகின்றனர். பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கும் இராணுவம்; போலிஸ் அதிகாரிகளாகவும் நிலை பெறுகின்றனர்.

தொழிலாளி, விவசாயிகளின் பிள்ளைகள் கூலி அடிமைகளாக, அரசின் சட்டம் ஒழுங்கிற்கமைய, தொழிற்சாலைகள் உட்பட தெருப்பெருக்கும் வேலைவரை பல துறைகளிலும் பணிபுரிய வேண்டியவராகின்றனர்.

வயதுவந்த அனைவர்க்கும் வாக்குரிமையை முதலாளித்துவம் வழங்கியிருப்பது போல அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும் எனவும் அரசு கூறிக் கொள்ளுகிறது; சரியான அறிவை அவர்களுக்கு வழங்குவதற்கல்ல. சமூகத்தின் ஒழுக்க முறைகள், சட்ட விதிகள், வேலைப்பணி முறைகளைப் படித்தறியும் அறிவு வேண்டும் என முதலாளித்துவம் எதிர்பார்க்கிறது.

அனைத்து துன்பங்களுக்கும் பட்டினிக்கும் தலைவிதி, நியதி, 'அளந்தது அவ்வளவுதான்' என்ற கருத்துகள் சிறுவயதிலிருந்தே மக்களுக்குத் திணிக்கப்படுகிறது. அதனால் உடைமை வர்க்கத்தவரே பயன்பெறுகின்றனர்.

இறைவன் என்ற பெயர் பெற்ற மன்னனின் பிரதி வடிவமாக 'கடவுள்' சிருட்டிக்கப்பட்டார். இக்கடவுள் என்ற கருத்தியல் நிலப்பிரபுத்துவத்திற்கு மட்டுமல்ல முதலாளித்துவச் சமூக அமைப்பையும் நிலைநாட்ட இன்று பயன்படுத்தப்படுகிறது.

கடவுளின் பெயரால் இன்றைய ஒழுக்க முறைகள் தூய்மையானவை என நிலை நாட்டப் படுகின்றன. மதப்போதகர்களின் சொற்பொழிவுகள் மூலமும், பிறப்பு, திருமணம், மரணம் போன்ற முக்கிய சடங்குகளின் போதும் மதம் சார்ந்த ஒழுக்க முறைகள் ஊட்டப்படுகின்றன.

www.padippakam.com



பாபிகள், நரகம், மோட்சம் போன்ற கற்பனை வடிவங்கள் மூலமும் ஏழைகள் அச்சுறுத்தப்பட்டு உழைக்க வைக்கப்படு கின்றனர்.

மனிதன் ஒரு கருத்தியல் மிருகம் எனவும் கூறலாம். விழிப்பு நிலை, உணர்வு நிலையை மறந்து விடக் கூடியவாறு கருத்தியல்கள் மூளையில் திணிக்கப்பட்டு பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கட்டுப்படுத்துகின்றன.

கருத்தியல்களுக்கும் வரலாறு உண்டு. புராதனக் குழு நிலையில் நிலவியவை அடிமைச் சமுதாயத்தில் மாற்ற மடைந்தன. பின்னர் நிலவுடைமைச் சமுதாயத்தை நிலை நிறுத்த வேண்டியபடி மாற்றமடைந்தன. முதலாளித்துவ உற்பத்தி முறைக்குச் சேவை செய்வதாக இன்று மாறி வருவ தைக் காணலாம்.

கருச்சிதைவு நிலப் பிரபுத்துவத்தில் பாவமாகக் கருதப் பட்டது. இன்று இங்கு சட்ட அனுமதி பெற்றுள்ளது. சாதி அமைப்பு, பெண்ணடிமைத்தனம், பாலிய திருமணம், இன மத வேறுபாடுகள் சட்ட ரீதியாக ஒழிக்கப்பட்டுள்ளன. (ஆயினும் கருத்தியலாக இவை நடைமுறையிலும் நிலவவே செய்கிறது) கூட்டுக் குடும்பங்கள் உடைந்து வருகின்றன. மக்கள் தொடர்புச் சாதனங்கள், தொழில் நுட்ப வளர்ச்சி யைச் சார்ந்து ஆதிக்கம் பெற்று வருகின்றன. கலை இலக்கி யங்களும் மலினப்படுத்தப்பட்ட விற்பனைப் பண்டங்களாகி விட்டன. சினிமா, வீடியோ ஆகியவை சுரண்டும் எந்திரங் களாக மாறி வருகின்றன.

கருத்தியல்கள் யாவும் வர்க்க நிலையை வெளிப் படுத்துவன. அவற்றுள் ஏற்படும் உள் முரண்பாடுகள் வர்க்கப் போராட்டம் கூர்மை அடைய, குணமாறுபாடுகளை ஏற்படுத்தி சமுதாய மாற்றத்திற்குத் துணை புரியவே செய்யும்.

www.padippakam.com



இயங்கியல் பொருள் முதல்வாத அடிப்படையில் கருத்தியல்கள் விமர்சிக்கப்பட வேண்டும். புதிய புரட்சிகர அரசியல் கருத்துகள் சோஷலிசப் புரட்சிக்குச் சேவை செய்வதாகக் கற்பிக்கப்படவேண்டும்.

கடவுள் போன்ற கற்பனையான கருத்துகள் யாவும் பொருள் முதல்வாத, விஞ்ஞான அணுகுமுறை மூலம் அடிக்கப்பட்டுவிடும்

வரலாற்றுப் பொருள் முதல்வாதம் ஆகிய அறிவும் நடைமுறையுமான ஆயுதங்கள், நிலப்பிரபுத்துவ சமுதாயங்களுக்குச் சேவை செய்யும். கருத்தியல்களைக் களைந்தெறிந்து, புதிய புரட்சிகரக் கருத்தியல் நடைமுறைகளுக்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அன்பான,

அப்பா

# 17. கலை, இலக்கியம்- உள்ளடக்கமும் உருவமும்

அன்பு மகனே,

'கலை, இலக்கியம் கூட கருத்தியல் சார்ந்தது என்பதை அறிந்து கொண்டேன்.

அதே வேளை உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்குமிடையில் முரண்பாடு உள்ளதாக கலை பற்றிக் குறிப்பிடும்போது முன்னர் எழுதினீர்கள். எனக்கு முற்றாகப் புரியவில்லை. இயங்கியல் பொருள் முதல்வாதம் கலை, இலக்கியம் பற்றி எவ்வாறு கணிக்கிறது?' எனக் கேட்டு எழுதியிருந்தாய். மிக நல்லதே. கலை இலக்கியத்தில் நீயும் ஆர்வமாக இருப்பதால் நன்கு அறிந்திருப்பது நல்லது.

www.padippakam.com



இயங்கியல் பொருள்முதல் வாதக் கோட்பாடுகளை முன் வைத்து கலை இலக்கியத்தை நாம் அணுகவேண்டும். அவ்வளவே.

கலை, இலக்கியத்தில் எப்பொழுதும் முற்போக்கான கருத்துகள் உள்ளடக்கம் இருப்பின் ஒரு பகுதியினர் உடனே 'வெறும் பிரச்சாரம், கலைவடிவமில்லை' எனக் குறை கூறிவிடுவர்.

இங்கு ஓர் அடிப்படை உண்மையை நீ நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அனைத்திலும் வர்க்கக் கண்ணோட்டம் இருக்கவே செய்யும். கலை, இலக்கியம் வர்க்கத்தைக் கடந்ததல்ல.

எப்பொருள் பற்றியும் பாட்டாளிகளின் உலகக் கண்ணோட்டமும் முதலாளித்துவத்தின் உலகப் பார்வையும் வெவ்வேறாகவே இருக்கும்; முரணாகவே இருக்கும்.

பாட்டாளிவர்க்கம் சார்ந்து முற்போக்கான கருத்துகளைக் கூறியதும் முதலாளிகள், குட்டி முதலாளிகள் அக் கருத்துகளைக் கண்டு அஞ்சுகின்றனர். 'கலை உருவமில்லை, வெறும் பிரச்சாரம்' என நாமம் போட்டு விடுகின்றனர். உருவத்தை உயர்த்தி வழிபடுபவர் கலை, கலைக்காகவே என்ற கருத்து முதல்வாதிகளாவர்.

ஹேகலின் கருத்து முதல் வாதத்தைக் கார்ல் மார்க்ஸ் விளக்கும் போது நல்லதோர் உவமானத்தைக் கூறினார். பொருள் முதல் வாதம், விதையின் யதார்த்தமான பருப்பு (உட்கரு) எனவும் கருத்து முதல்வாதம் அதை மூடியிருக்கும் மர்க்கோது (தோல்) எனவும் குறிப்பிட்டார்

மேலும் கருத்துமுதல் வாதியாகத் தலையால் நடந்தவரைப் புரட்டி, யதார்த்தமாகக் காலால் நடக்கச் செய்தேன் எனவும் மார்க்ஸ் குறிப்பிட்டார்.

www.padippakam.com



அதேபோலவே பருப்பு உள்ளடக்கம்; தோல் உருவம். உட்பொருளான பருப்பு யதார்த்தமானது. தோல் புதிரானது; மர்மமானது. கலைவடிவங்கள், உருவங்கள் மயக்க மூட்டுவது; உட்பொருள் யதார்த்தமானது. உருவத்தை வழி படுபவர் கருத்து முதல் வாதிகளே.

நெற்பதர்கூட அழகாகவே இருக்கும். ஆனால் உள்ளே நெல்மணி இல்லாத பதர் எவருக்குப் பயன்படும்? முட்டை யின் வெளிப்புறம் அழகானதே. உட்கரு இல்லாவிடின், கூழாகிவிடின் என்ன பயன்?

முதலாளித்துவம் பண்ட விற்பனையையே முதன்மை யாகக் கொண்டு கவர்ச்சிகரமாக, மயக்க மூட்டும் விதமாக பண்டங்களின் புறவடிவங்களில், பொருட்களை அடக்கும் பெட்டிகளில் அதிக கவனமெடுப்பதைக் காணலாம். புற வடிவத்தை அழகாக்கிப் பணம் பறிக்கிறது. நீ கூட சிறு வயதில் இந்த மயக்கத்தில் எடுபட்டு விடுவதைக் கண்டிருக் கிறேன். அம்மா, அக்காவே அடிக்கடி ஏமாறுவதைப் பார்த்துள்ளேன்.

அதே போலவே கலை, இலக்கியத்திலும் முதலாளித் துவம் கலை வடிவங்களிலே அதிகக் கவனமெடுக்கிறது. உள்ளடக்கத்தைத் தன் வர்க்கத்தின் நலம் பேணுவதாக, பிற்போக்கான கருத்துக்களைக் கவர்ச்சியாகவும் அதீதக் கற்பனையுடனும் படைத்து விடுகிறது; விற்று விடுகிறது.

பொருள் முதல்வாதம் யதார்த்தமான பருப்பு; நெல்லின் மணி உட்கரு. உருவம் மயக்க மூட்டும் கோது: நெல்உமி; முட்டைக்கோழி; இவை கருத்துமுதல் வாதம் சார்ந்தவை என்பதை என்றும் சிந்தனையில் பதித்துக் கொள்.

மனிதரின் அனுபவங்களின் தொகுப்பேகலை, இலக் கியம் என்பர் பலர். இது 'அறிவுயாவும் தனி நபர் அனு பவமே' எனும் அனுபவவாதத்திற்கு இட்டுச் செல்லக் கூடியது; ஆபத்தானது. புலன்களுடாகவே கலை இலக்கி யங்களை உட்கொள்ளுகிறோம் என்பது உண்மையே.

படிப்பகம்

www.padippakam.com



ஆயினும் அந்த அனுபவங்கள் முதலாவதாகப் பகுத்தறிவுக்கும், சமுதாய நலனுக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும்.

அதீதக் கற்பனைகள் மூலம் மனித உணர்வுகளை எளிதில் கிளறி விடலாம். ஆனால் அவை மனிதர்களை ஏமாற்றி மயக்குவதே.

குழந்தைகளைக் கவருவதற்காக உலகில் இல்லாத, யதார்த்தமற்ற பேய், பிசாசு, பூதக்கதைகளைக் கவர்ச்சியாகக் கூறி ஏமாற்றுவதுபோலாகும்; பகுத்தறிவை மழுக்குவதாகும்.

காண்தல், உணர்தல், புரிதலல்ல. அறிவுக்கு, பகுத்தறிவுக்கு ஏற்றதாக கலை, இலக்கியங்கள் இருத்தல் வேண்டும்; அடுத்தது நடைமுறைக்கு சாத்தியமாகவும் அமைதல் வேண்டும்.

கலை, இலக்கியத்தில் கற்பனை வேண்டாம் என இயங்கியல் பொருள் முதல்வாதம் கூறவில்லை. கற்பனையாக ஒரு கட்டிடக் கலைஞர் வரைபடத்தைக் கீறித்தரக் கூடாது என இயங்கியல் கூறவில்லை. அவ்வரைபடம் நடைமுறையில் கட்டிடமாக அமைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

இயங்கியலின்படி பொருள்கள் அனைத்தும் மாறிக்கொண்டே இருப்பன. அவ்வாறே சமூகமும் மாறிக்கொண்டே இருக்கும். அம்மாற்றத்தோடு ஒட்டியதாக, சமுதாய வளர்ச்சிக்கு உந்து சக்தியாகக் கலை, இலக்கியங்கள் அமைய வேண்டும்.

உள்ளடக்கமே புரட்சிகர கருத்துருவமாகி சமூக மாற்றத்திற்கு உந்துசக்தியாக முடியும். உருவமல்ல.

முரண்பாடுகளே சமூக வளர்ச்சியின் உந்து சக்தி. கலை, இலக்கியங்களில் பல்வேறு முரண்பாடுகளும் கையாளப்படுதல் வேண்டும். அல்லது குழந்தைகளுக்கு கதை

www.padippakam.com



கூறி ஏமாற்றுவது போலாகும்; பிரச்சனைகளிலிருந்து நழுவிப்போகும், நடைமுறைக்கு ஒவ்வாத அதீதக் கற்பனையாகவே அமையும்.

பல்வேறு சமூக முரண்பாடுகள் பற்றி முன்னைய கடிதங்களில் அறிந்திருப்பாய். அடித்தளமான பிரதான முரண்பாடு, மேல்மட்ட அமைப்புகளான அரசியல், இன, மத, பால். சாதி முதலிய வேறுபாடுகளால் எழும் துணை முரண்பாடுகளைக் கையாள்வதாகக் கலை, இலக்கியம் இருத்தல் வேண்டும்.

துணை முரண்பாடுகளாகக் கருதப்படுபவை சில காலகட்டங்களில் நாட்டில் மேலாதிக்கம் செய்யும் முரண்பாடாகக் காட்சியளிக்கலாம். ஆயினும் இறுதியில் அடிப்படையமைப்பான பொருளாதாரமே அனைத்தையும் தீர்மானிக்கும் என்ற உண்மையையும் மறந்துவிடக்கூடாது.

உலகம் ஆணினத்திற்கு மட்டுமே உரியது என்றவாறு ஆணாதிக்கத்தை முதன்மைப்படுத்தி ஆண்களாலேயே கலை, இலக்கியங்கள் படைக்கப்படுவதைக் காணலாம். மானிட இனத்தில் பாதியினர் பெண்கள்.

பாட்டாளிகள் பெரும்பான்மையினராக உலகில் வாழ்ந்தும் முதலாளித்துவ கலை, இலக்கியங்களில் அவர்கள் கூலி அடிமைகளாக ஒதுக்கப்பட்டு இழிவுபடுத்துவது போலவே, பெண்ணினமும் ஒடுக்கப்படுகிறது. சமுதாய வளர்ச்சிப் போக்கின் சமுதாயத்தை மாற்றியமைக்கும் வரலாற்றுக் கடமை பாட்டாளிக்குக் கலை, இலக்கியத்தில் அளிக்கப்படவேண்டியது போலவே பெண்ணினத்தின் விடுதலைக்கும் எழுச்சிக்கும் உரிய பங்கு தரப்படல் வேண்டும்.

புரட்சிகர அரசியல் கோட்பாடு மூலமே சமுதாயத்தை மாற்றி அமைக்க முடியும். கலை இலக்கியமும் மேல்

www.padippakam.com



மட்ட அமைப்பான கருத்தியலும் இணைவதன் மூலமே சமூக மாற்றத்தைத் துரிதப்படுத்தலாம். கலை, இலக்கியம் அரசியலுக்கு அந்நியப்பட்டதல்ல.

முதலாளித்துவத்தில் மனித உழைப்பு பண்டமாக்கப் படுவதுபோல கலை, இலக்கிய உழைப்பும் பண்டமாகிறது; விற்பனையும் இலாபமுமே அவர்களது முதல் நோக்கம். அதீதக் கற்பனை, கவர்ச்சி வடிவம், பொழுதுபோக்கு ஆகியவையே அவர்களது குறிக்கோளாகிறது; விற்பனை யாகக் கூடிய போக்கையே, நோக்கையே திரும்பத் திரும்பக் கையாள்வர். சினிமாவில் பாலியல், வன்முறைக் காட்சிகளே மீண்டும் மீண்டும் காட்டப்படுகின்றன. நீ விரும்பிப் பார்க்கும் நட்சத்திரங்களின் காதலும் இவ்வகைப்பட்டதே.

விற்பனை நோக்காக கலை, இலக்கியங்கள் மலினப் படுத்தப்படுகின்றன. மனித சிந்தனையும், படைப்பாற்றலும் திசை திருப்பப்படுகின்றன.

அன்பான,
அப்பா

# 18: இயங்கியலும் கலை இலக்கியமும்

அன்புமிக்க மகனுக்கு,

'எல்லாம் சரியப்பா. நீங்க கூறும் கோட்பாடுகளுக்கு அமைய உதாரணமாக ஒரு சிறு கதையாவது கூற முடியுமா?' எனக் கேட்டிருந்தாய். நல்லது. நீயே இதன் படி ஒரு கதை எழுதலாமே. அதற்குமுன் மேலும் சில உண்மைகளை நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

www.padippakam.com



பரவலான மக்களைப் பிரதிபலிப்பதாக பாத்திரங்களைப் படைப்பதை விட்டு விதிவிலக்காகக் காணப்படும் தனிநபர்களை வீர புருஷர்களாக்கி கலை, இலக்கியங்கள் ஆக்கப்படுகின்றன. சினிமாவில் பணக்காரப் பையன் ஏழைப் பெண்ணைக் காதலிப்பதையும், பணக்காரப் பெண் ஏழைப் பையனைக் காதலிப்பதையும் பெரும்பாலும் காணலாம். பொதுவான நடைமுறைக்கு ஒவ்வாததாக நிகழ்ச்சிகளைத் திணிப்பர். விதிவிலக்காக எங்காவது நடைபெறுவது விதியாகாது.

வகை மாதிரியான பாத்திரங்களை வகைமாதிரியான சூழல்களில் கொணர்ந்து கலை, இலக்கியங்கள் கட்டப்பட வேண்டும் என மார்க்ஸ் கூறியுள்ளார்.

ஒவ்வொரு கலை வடிவத்தையும் வேறுபடுத்திக் காட்டுபவை அவ்வடிவங்களுக்குரிய தனி அமைப்புகளே. கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், இசை, ஓவிய கலை வடிவங்களை எம்பால் காணமுடியும். உள்ளடக்கத்தின் சிறப்பே உருவத்தைத் தீர்மானிக்கிறது என்பதே இயங்கியல் பொருள்முதல் வாதக்கோட்பாடு. கவிதை வடிவத்தை நாவல் வடிவத்தில் வலிந்து புகுத்துவது, நாடக வடிவத்தை கவிதையில் வலிந்து திணிப்பின் ஒரு கலை வடிவம் சிதைகிறது என விமர்சிக்கலாம்.

உள்ளடக்கத்திற்கும் உருவத்திற்குமிடையில் முரண்பாடு இருப்பினும் உள்ளடக்கமே சமூக வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைய முடியும். அதற்கேற்ப உருவம் மாறுதலடையும். சிறந்த நெல் மணிக்கேற்ப அதன் உமியும் வடிவமெடுப்பதைக் காண்கிறோம். இயற்கைப் படைப்பு அனைத்திலும் இப்போக்கைக் காணலாம். குழந்தை அளவிலேயே கருப்பை.

இயங்கியல் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தில் கலை, இலக்கியத்தின் இலக்கணங்களையே இங்கு கூற

www.padippakam.com



முனைந்தேன். சிறுகதையாக நீ விரித்து எழுதக் கூடிய ஒரு கதையின் முக்கிய நிகழ்ச்சி ஒன்றை உதாரணமாக உனக்குக் கூற விரும்புகிறேன். இதை விரித்து நீ ஒரு சிறுகதை எழுத வேண்டும்.

''அப்பா இன்று நான் பள்ளிக்குப் போக முடியாது'' சிறுமி தந்தையிடம் வந்து சொன்னாள்.

''ஏன் ராணி அப்படிச் சொல்லுகிறாய்?

''வேறு ஒரு உடுப்பு வாங்கித் தரும்படி எத்தனை நாட்களாகக் கேட்கிறேனப்பா.''

''நேற்றுப் போட்ட உடையை இன்றும் போடு. பிறகு பார்ப்போம்.''

''அது அழுக்காகி கிளிஞ்சும் போச்சு. கழுவிப்போட்டேன். மழையால் காயவில்லை. இன்றைக்கு வேறு உடுப்பு வேணுமப்பா.''

முனகியபடி சிறுமி மீண்டும் வற்புறுத்தினாள்.

''இன்று வாங்க முடியாது.''

''ஏனப்பா?''

''காசில்லை.''

''ஏனப்பா காசில்லை.''

''வேலையில்லை, எப்படிக் காசு வரும்''— தந்தை சொன்னார்.

''ஏனப்பா வேலையில்லை''

''ஆலையில் உற்பத்தி செய்த துணிகளெல்லாம் விற்க முடியாது தேங்கிக் கிடக்கிறதாம். ஆண்டு போனசும் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆலையையே மூடி விட்டார்கள்.''

''அப்போது என்னப்பா செய்யப் போறீங்க.''

www.padippakam.com



''இன்று தொழிலாளர் ஊர்வலம், கூட்டம் போடுகிறோம். ஆலையை மூடிய முதலாளித்துவத்தை ஒழிக்கப் போகிறோம்.''

இச்சிறுகதைச் சம்பவம் அனுபவமானது; பகுத்தறிவானது. உற்பத்தி உறவுக்கும் உற்பத்தி முறைக்குமுள்ள முரண்பாடான பிரதான முரண்பாட்டைக் கூறுகிறது.

உற்பத்தி செய்த பண்டத்திற்கு உற்பத்தி செய்த பாட்டாளியேஅந்நியமாவதைத்தெரிவிக்கிறது. பாட்டாளியே உற்பத்தி செய்த பண்டம் விற்பனையின்றித் தேங்கியுள்ள போது அவனது பிள்ளைக்கே மாற்றிக் கட்ட உடுப்பில்லை.

பரவலான பாட்டாளியின் பிரச்சனையைக் கதை கொண்டுள்ளது. அனைத்துப் பாட்டாளிகளையும் பிரதிபலிப்பதாக, வகை மாதிரியான பாத்திரங்களை வகை மாதிரியான நிகழ்ச்சியில் கொணர்ந்துள்ளது.

இந்தியாவில் நூற்றுக்கணக்கான ஆலைகள் இன்றுமூடிக் கிடக்கின்றன. அதீதக் கற்பனை ஏதுமில்லை. நடைமுறைக்குச் சாத்தியமானதே.

தன் பிரச்சனைக்குக் கற்பனையான கடவுளைப் பாட்டாளி அழைக்கவில்லை. தொழிற்சங்கம், போராட்டம் மூலமே தன் பிரச்சனையை, சமூகப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என நம்புகிறான்.

உள்ளடக்கமே அதற்கு வேண்டிய உருவமாக உரையாடல் மூலம் கதையைக் கூறுகிறது. இது எதுகை மோனை உடைய கவிதை வடிவமல்ல.

இயங்கியல் பொருள் முதல் வாதத்தின் இலக்கணங்களான பொருள் முதல் வாதம், சமூகமாற்றம் வேண்டும் நடைமுறை; பகைமை உறவைக் கொண்ட பிரதான

முரண்பாடு, பாட்டாளியின் கண்ணோட்டம் யாவையும் தொட்டுக் காட்டியுள்ளது.

இன்று குவிந்துவரும் கலை, இலக்கியங்களையெல்லாம் நீ படிக்க வேண்டாம்; பார்க்க வேண்டாம் என நான் வற்புறுத்தவில்லை. இயங்கியல் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தில் அவற்றை விமர்சித்துப் பார். அப் பொழுதே அவை அரிசி உள்ள நெல் மணியா அல்லது வெறும் பதரா என்பதை அறிவாய். அவற்றிடையுள்ள முரண்பாடுகளையும் அறிந்து கொள்வாய்.

அன்பான,

அப்பா

## 19. இயற்கையும் மனிதனும்

அன்பு மகனே,

மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பு பற்றி மேலும் அறிய விரும்புவதாக எழுதினாய்.

மனிதன் இயற்கையின் உற்பத்தி எனக் கூறின் உனக்கு வியப்பாயிருக்கலாம். அவன் இயற்கையின் காற்றைச் சுவாசிக்காமல் ஒரு நிமிடம்கூட வாழ முடியாது. இயற்கையிலுள்ள நீரைப் பருகி, உணவைப் பெற்று உண்டு உயிர் வாழ்கிறான். இயற்கையின் பூமியில், தரையில் வாழ்கிறான். இயற்கையின் தட்ப, வெட்பங்களுடனேயே வாழ நேருகிறது. இயற்கையின் சீற்றங்களான வெள்ளம், வரட்சி, பூமியதிர்ச்சி ஆகியவற்றின் பாதிப்புடனேயே வாழ்கிறான்.

இயற்கையின் உற்பத்தியில் மனிதனே அனைத்திலும் உயர்ந்தவன் என நீ எண்ணின் அதுவும் தவறே. நிலத்திலும்

www.padippakam.com



நீரிலும் வாழத்தக்க உயிரினங்கள் பல உள்ளன. பகலிலும் இரவிலும் பார்க்கத் தக்க பறவைகள், மிருகங்கள் பல வாழ்கின்றன. நாயினுடைய கேட்கும் சக்தி, முகரும் சக்தி மனிதனிடமில்லை. சிறுத்தையைப் போல் வேகமாக மனிதனால் ஓட முடியாது.

இத்தனைக் குறைபாடுகளுக்கு மேலாக மனிதனது தனிச்சிறப்பு அவனது மூளையின் வளர்ச்சியே. அவனது உறுப்புகளில் பெருவிரலின் பங்கு பற்றி முன்னரும் கண்டோம்.

மனிதன் இயற்கையில் வாழ்ந்த போதும் அதைச் சிறிது சிறிதாக மாற்றி அமைத்து வளர்ந்தான். மனிதனின் மற்றொரு தனிச் சிறப்பு உழைப்பு. இதன் மூலமே இயற்கையைத் தொடர்ந்து மாற்றி அமைத்து வருகிறான்.

இவ்வாறான மனித வளர்ச்சிப் போக்கில் இருபெரும் முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பதை இதுவரையில் நீ அறிந்திருப்பாய். ஒன்று மனிதனுக்கும் இயற்கைக்குமிடையில் ஏற்படும் முரண்பாடு. மற்றது மனிதனுக்கும் மனிதனுக்கு மிடையில் ஏற்படும் முரண்பாடு.

இவை பற்றி முன்னரும் கூறினேன். மனிதன் தன் உழைப்புடன் இயற்கையுடன் போரிடுவதன் மூலமே இன்றைய சமுதாய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவை உற்பத்தி மூலமே மனிதன் அறிந்து கொள்கிறான்.

உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியை ஒட்டி, ஆரம்ப நிலையிலிருந்து உயர்மட்ட நிலைக்குப் படிமுறையாகச் சமுதாயம் வளர்ந்து வந்தது. அத்தோடு இயற்கை, சமூகம் பற்றியும் மனித அறிவு படிமுறையாக வளர்ச்சியடைந்து அகலமாகவும் ஆழமாகவும் படிமுறையாக மேம்பட்டு வந்தது.

www.padippakam.com



ஆரம்பக் காலத்தில் உற்பத்தி குறைவாக இருந்தது போல மானிடக் கண்ணோட்டமும் குறுகியே இருந்தது. பண்ட உற்பத்தி யந்திர உற்பத்தியோடு பெருகியதோடு பாட்டாளியின் சமூக வளர்ச்சியும் மனித வரலாறு பற்றிய அறிவும் விரிவடைந்தது. மார்க்சும் ஏங்கெல்சும் வரலாற்றை விஞ்ஞான மயப்படுத்திப் பாட்டாளிக்கு மேலும் அறிவூட்டினர்.

நீ சுற்றிவரக் காணும் கட்டிடங்கள், கார்கள், விமானங்கள், பயிர்கள், டிவி, ரேடியோ, சினிமா அனைத்தும் மனிதனால் இயற்கையிலிருந்து பெறப்பட்டவையே. வேறு கோளத்திலிருந்து எதுவும் வரவில்லை. அனைத்தும் இயற்கையிலிருந்த பொருட்களால் ஆனவையே. பொருள் தவிர பூமிக் கோளத்தில் வேறு எதுவுமில்லை.

செயற்கைப் பொருட்கள் யாவும் மனிதனால் ஆக்கப்பட்டவை; இயற்கையில் மனிதன் கண்ட பொருட்களின் திரிபே இவை. ஆனால் இவற்றை ஒருசிலர் உரிமை கொண்டாடுவதே வியப்பானது; விந்தையானது. வானத்திலுள்ள 'கடவுள்' தமக்காக, தம் பரம்பரைக்காக, பூர்வபுண்ணியத்திற்காகத்தந்தவை என வாய்ப்பாக வாழ்பவர் கூறி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். இவர்கள் சிறுபான்மையினரே. பெரும்பான்மையினர் உழைப்பவர், பாட்டாளிகளே. அதற்குத்துணையாக இச்சிறுபான்மையினர் தம் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட அரசும் வன்முறை ஆயுதங்களும் அவர்களுக்குச் சார்பாக உள்ளன.

முதலாளித்துவத்தில் பாட்டாளி உற்பத்தி செய்த பண்டம் அவனுக்குக் கிடையாது, அப்பொருளுக்கு அந்நியப்படுகிறான் என முன்னரும் கூறினேன். இதனால் பாட்டாளி தன் ஆத்மாவையே இழக்கிறான். மூலதனம் உலக மக்களுக்கில்லை. உழைக்கும் பலனும் அவர்களுக்கில்லை.

சி. கு—12

படிப்பகம்

www.padippakam.com



இயற்கை வளங்களைப் பறித்தெடுப்பதில், சூறையாடுவதில் மக்களிடையே, தேசங்களிடையே போட்டி ஏற்பட்டது. இப்போட்டியில் வன்முறை ஆயுதங்களில் முன்னேறிய சிறுபான்மையினர் பெரும்பான்மையினரான பாட்டாளிகளை அடக்கி ஒடுக்கி உழைக்கச் செய்து மேலும் மேலும் வளம் பெற்றனர்; பெறுகின்றனர்.

இன்று உலகம் பல தேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதை அறிவாய். வன்முறை வடிவமான அரசுகளால் பாதுகாப்புப் பெற்று, உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்ட வர்க்கத்தவரால் இத்தேசங்கள் ஆளப்படுகின்றன,

ஏகாதிபத்திய வல்லரசுகள் சமனற்ற வளர்ச்சி கொண்ட மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டி மேலும் வாய்ப்பாக வாழுகின்றன. இத்தகைய சமனற்ற வளர்ச்சிப் போக்கு நிலைக்கப் போவதில்லை. உடமை வர்க்கத்தவருக்கும் உழைப்பவர்களுக்குமுள்ள முரண்பாடு கூர்மையடைந்து சுரண்டலற்ற சமுதாய அமைப்பை நோக்கி வளர்ச்சி யடையவே செய்யும் இத்தவிர்க்க முடியாத இயங்கியல் போக்கைப் பற்றியே தொடர்ந்து கற்று வருகிறோம்.

இவ்வாறு மனிதன் மனிதனைச் சுரண்டுவது ஒழிக்கப் படும் போது வன்முறையான சமூக முரண்பாடுகள் ஏற்படா- புதிய வேகமான அபிவிருத்திக்கும் விநியோகத்திற்கும் உந்து சக்தியாக விமர்சனமும் சுயவிமர்சனமும் உதவும்.

அன்பான,

அப்பா

படிப்பகம்

# 20. விமர்சனம் சுயவிமர்சனம்

அன்புள்ள மகனுக்கு,

'சமுதாயம் எப்படியப்பா இத்தனை வேகமாக வளர்ந்து வந்துள்ளது; இன்னும் துரித வேகத்தில் வளர்ச்சியடையும் வாய்ப்புள்ளதா?' என்று வினவி எழுதினாய். நல்ல வினாவே முதலாளித்துவமே வேகமான பண்ட உற்பத்தியை ஏற்படுத்தி வருவது, அதன் விஞ்ஞான பரிசோதனை, கருவிகளின் வளர்ச்சியே காரணம்.

ஆயினும் முதலாளித்துவம் சமுதாயத்தில் சமனற்ற வளர்ச்சியையே ஏற்படுத்தி வருகிறது. அதன் உச்சக்கட்ட மான ஏகாதிபத்தியம் உலகில் சமனற்ற வளர்ச்சியை நிலை நாட்டி வருவதையும் காணலாம்.

இருபது மாடிக்கட்டிடங்களின் அருகே வெற்றுக் குடிசை களைக் காணலாம். இவையே ஏராளம். பாதி மக்கள் ஒரு வேளை மட்டும் உண்டு உயிரைக் காப்பாற்றும் வேளை நாட்டிற்கு மூன்று மாதத்திற்குத் தேவையான ஒருகோடி டன் தானியம் இருப்பில் இருப்பதாக அரசு அறிக்கை விடுவதைக் காணலாம். ஆகவே அரசே நீ கருதும் சமனற்ற வேக வளர்ச்சியை வரவேற்பதைக் காண்பாய்.

இதற்கு மாற்று என்ன என்று கேட்கிறாயா? அதற் காகவே இயங்கியல் பொருள் முதல்வாத சித்தாந்தத்தையும் நீ நன்கு கற்கவேண்டும் என விரும்புகிறேன்.

தவிர்க்க முடியாத நியதியாக முரண்பாடுகளாலேயே சமுதாய வளர்ச்சி ஏற்படுகிறது என முன்னரும் எழுதியதை மறந்துவிடாதே.

மார்க்சியம் ஓர் ஆக்கலாற்றலுள்ள விஞ்ஞானம்; அது புதிய சூழல்களுக்கேற்ப, நடைமுறையிலும் மனித சமுதாயம் தொடர்ந்து முன்னேறவேண்டும். மனித இனமேம்பாட்டிற்கு

www.padippakam.com



இயற்கையை சிறப்புற மாற்றியமைக்கும் நிலை சோஷலிசப் புரட்சியின் பின்னரே ஏற்பட முடியும்.

உற்பத்தி பெருக மக்கள் தேவைகள் பூர்த்தியடைந்து வரும். கிராமத்திற்கும் நகரத்திற்கும், விவசாயிக்கும் யந்திர உற்பத்தித் தொழிலாளிக்கும், உடலுழைப்பாளருக்கும் மூளை உழைப்பாளருக்கும் இடையில் இன்று நிலவும் வேறுபாடுகள் களையப்படும்.

பண்டங்களின் தேவை என்ற கட்டுப்பாட்டுள் அடங்கியிருந்த மனித இனம் உண்மையான சுதந்திரம் என்ற நிலைப்பாட்டைச் சோஷலிசம் முற்றுப்பெறும் கம்யூனிச சமுதாயத்திலேயே அடைய முடியும்.

கோட்பாடும் நடைமுறையும் மார்க்சின் இயங்கியலின் பிரதான அம்சங்களாகும். நடைமுறை கோட்பாட்டுடன் இணைந்து வருகிறதா என்று அடிக்கடிப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். அதுபோலவே கோட்பாடு நடைமுறையுடன் இணைகிறதா என்றும் சரி பார்க்க வேண்டும். இவ்விரு துறைகளிலும் விமர்சனமும் சுயவிமர்சனமும் கையாளப்பட வேண்டும்.

காலங்கடந்த வழக்கங்களையும் முறைகளையும் தொடர்ந்து இறுகக் கடைப்பிடிப்பதனாலேயே தவறுகள் பெரும்பாலும் ஏற்படுகின்றன. தவறுகள் விமர்சிக்கப்படும் போது இப்போக்கைப் பெரும்பாலும் காணலாம்.

நேர்மையான புரட்சிகரமான விமர்சனம் மூலமே மனித சமுதாயம் முன்னேற்றமடைய முடியும்.

''சமூக இயக்கங்களைப் பொறுத்தளவில் புரட்சி வேண்டும் கருத்துக்கள், கோட்பாடுகள்; திட்டங்களில் தவறு காணின் தம்மைத் திருத்திக்கொள்ள வேண்டும். வளர்ச்சி உயர்மட்டத்திற்குச் செல்லும்போது அதை முன் வைத்தே புதிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். புரட்சிக்கால கட்டங்களில் மாற்றங்கள் பாய்ச்சலாக வேகமடையும். அதற்கேற்ப தமது கருத்துக்கள்,

படிப்பகம்

www.padippakam.com



திட்டங்களை மாற்றத்தவறின் புரட்சியை வெற்றிக்குக் கொண்டு செல்ல முடியாது போகலாம்'' என மாஓ கூறி யுள்ளார்.

தவறுகள், பிழைகள் இயல்பானவை. தவிர்க்க முடியாதவை. ஒரு காலகட்டத்தில் சரியாகப்பட்டது, பின்னர் விமர்சிக்கப்பட்டு தவறாகக் கொள்ளப்படுகிறது. விஞ்ஞான உண்மைகள் என ஒரு காலத்தில் கருதப்பட்டவை பின்னர் ஏற்பட்ட பரிசோதனையின் பின் திருத்தப்படுகின்றன.

மற்றொருவரது அல்லது குழுவினரது செயலை சமூதாய மேம்பாட்டுக் கோட்பாடுகளோடு விமர்சனம் செய்து குறைகளைக் களைந்து மேலும் முன்னேற்றமடையும் வழிகளைச் காண்பதற்கு நாம் உரிமையுடையவர்கள். அதே போல தனி மனிதர்களது நேர்மையான சுயவிமர்சனங்களும் சமுதாய வளர்ச்சிக்குத் துணைபுரியும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பிறர் செயலை விமர்சிக்கும் உரிமையுடைய நாம், நமது நடைமுறைகளையும் பிறர் விமர்சிக்க உரிமை உடையவரே என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். சுயவிமர்சனம் மூலம் சமூக வளர்ச்சி மேலும் சிறப்புறும்.

விமர்சனம் என்பது தோல்வி, கண்டிப்பல்ல. சிறப்புகள் பாராட்டுக்குரியன, தோல்விகள் திருத்தலுக்கு உரியன.

'கம்யூனிஸ்டு கட்சிக்குள் நிலவும் முரண்பாடு விமர்சனப், சுய விமர்சனம் என்ற முறையால் தீர்க்கப்பட வேண்டும். சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் இடையிலுள்ள முரண்பாடு உற்பத்திச் சக்திகளை விருத்தியாக்குவதால் தீர்க்கப்படவேண்டும்; பழைய போக்குகளும் முரண்பாடுகளும் மாற புதியவை தோன்றுகின்றன. அவற்றிற்கேற்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் முறைகளும் வேறுபடுகின்றன...' என மாஓ முரண்பாடுகள் பற்றிக் கூறுவார்.

அன்பான.

அப்பா

www.padippakam.com

# 21. அனுபவ அறிவும் பகுத்தறிவும்

அன்பு மகனுக்கு,

'அனுபவ வாதம் என்றால் என்னப்பா? நீங்களெல்லாம் அனுபவ அறிவைக் கூட எதிர்ப்பது போலிருக்கிறது' என எழுதியிருந்தாய். நீ எண்ணியது தவறு.

ஆரம்பக் கடிதத்திலேயே உலோகாயதம் என்பதை விளக்கும்போது பொருளை நாம் புலனறிவு மூலமே அறிகிறோம் என்று குறிப்பிட்டேன்.

'புற உலகு பற்றிய அறிவு அனைத்தும் மனிதரது புலன்கள் மூலமே ஆரம்பமாகிறது; இத்தகைய புலனறிவை மறுப்பவர் நேரடி அனுபவத்தை மறுப்பவராவர். நடைமுறையின் மூலம் யதார்த்த நிலையை மாற்றுவதற்கு நேரடிப் பங்கு பற்றுதலை மறுப்பவராவர். இவர் பொருள் முதல்வாதிகள் அல்லர்' என மாஓ நடைமுறை பற்றிய தனது கோட்பாட்டை விளக்கும்போது கூறியுள்ளார்.

சமூக நடைமுறையிலிருந்தே அறிவு ஆரம்பமாகிறது. அனுபவம் அதற்கு முதன்மையானது. கண்ணால், காதால், மூக்கால், உடலால் அனுபவ அறிவை நாம் பெறுகிறோம். கண்களையும் காதுகளையும் மூடிவிட்டு வீட்டுக்குள் இருப்பவர்கள் கண்ணை மூடிய பூனைபோல, புறஉலகையோ, அறிவையோ பெறமுடியாது.

ஒருவன் அனைத்து அனுபவங்களிலும் நேரிடையாகப் பங்குபற்ற முடியாது. நமது மூதாதையர், பிறநாட்டவரது அறிவை, நாம் மறைமுகமாகவே பெறுகிறோம் ஒருவரது நேரடி அனுபவம் மற்றவரது மறைமுக அனுபவமாகிறது.

ஆனால் அறிவை ஆழமாக்குவதற்கு அனுபவ அறிவு பகுத்தறிவுக்கு எடுத்துச் செல்லப்படல்வேண்டும். ஏன்,

www.padippakam.com



எப்படி என்ற காரண, காரிய விசாரணையுடன் தர்க்க முறையில் ஆராயவேண்டும்.

'பகுத்தறிவு இன்றி புலனனுபவமே அறிவு எனக் கொள்வதே, 'அனுபவவாதம்' என்ற வரலாற்றுத் தவறுக்கு இட்டுச் செல்லும்' என மாஓ எச்சரித்தார்.

அனுபவ அறிவு, பகுத்தறிவு பற்றி முதலில் விரிவாகக் கூறிவிட்டு. இயங்கியல் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்திற்கும் இவற்றிற்கும் உள்ள வேறு பாட்டைக் காண்போம்.

சென்னை நகரை முதன் முதலாக நீ சுற்றிப் பார்க்கிறாய் என் வைத்துக் கொள்வோம். இங்கு சேர்ந்ததும் முதல் நாள் பல்லவன் பஸ்ஸில் ஏறி நகரைச் சுற்றிப் பார்க்கிறாய்.

தெருக்கள், கட்டிடங்கள், வேகமாக ஓடும் வாகனங்கள், அவசர மக்கள் கூட்டம், மியூசியம், கல்லூரிகள், கடற்கரை, சினிமாத் தியேட்டர்கள், ஓட்டல்கள், குடிசைகள், போஸ்டர்கள், நாறும் கூவம் நதி ஆகியவற்றைப் பார்க்கிறாய். காலை, மாலைத் தினப்பத்திரிகைகளைப் படிக்கலாம்; சிலருடன் பேசலாம். சிலவற்றை அறிந்து கொள்ளலாம்.

மறுநாள் மேலும் சிறிது ஆர்வத்தோடு சுற்றிவரின் ஊர்வலங்கள், கூட்டங்கள், தொழிலாளரின் உண்ணாவிரதங்கள், வேலை நிறுத்தங்கள், போலிஸ் படையினரைக் கூட நீ பார்க்கலாம். இவற்றின் மூலம் நகரைப் பற்றிய ஒருவித எண்ணம் ஏற்படமுடியும். இது புலனறிவே. அறிவின் முதல் கட்டம் இதுவே.

அடுத்த கட்டமாக நகரைப்பற்றிய பிற விபரங்களையும் புள்ளி விபரங்களையும் கன்னிமாரா நூலகம் அல்லது பல்

www.padippakam.com



கலைக் கழக நூலகம் சென்று சேகரிக்கலாம். அப்போது உனது அறிவில் குணவேறுபாடு ஏற்படுவதைக் காணலாம்.

நகரின் குடித்தொகை, பிரதான உற்பத்திகள், வருமானம், வாழ்க்கைத் தரம், வீடுகள், குடிசைகள், பாடசாலைகள், கல்லூரிகள், கல்வி அறிவு, வேலையற்றோர், மருத்துவ வசதிகள், பிறப்பு, மரணம்; பிரசவ, சிசு மரண விகிதம் முதலிய புள்ளி விபரங்களைத் திரட்டலாம்.

இப்புள்ளி விபரங்களைத் திரட்டி இந்திய நகரங்கள், கிராமப்புறங்களுடன் ஒப்பிட்டும் பிறநாட்டு விபரங்களுடன் சமன்படுத்தியும் கற்கலாம்.

அவ்வேளை புலனறிவால் அறிய முடியாத பல உண்மைகளை அறிந்து கொள்வாய். குடித்தொகையில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் சதுர்ப்பு நிலங்களில், குடிசைகளில் வாழ்கின்றனர். 45 சதவீத மக்கள் வறுமைக் கோட்டின் கீழே வாழ்கின்றனர். படிப்பறிவுள்ளவரும் ஏறக்குறைய 45 சதவீதத்தினரே ஆவர். பிரசவ, சிசு மரண விகிதங்கள் கேரளத்திலும் பார்க்க அதிகமாக உள்ளன.

இவ்வாறாகவும், ஏன்? எப்படி? என்ற வினாக்கள் எழுப்பி தர்க்கீக முறையில் சென்னை நகரம் பற்றிய சில தீர்மானங்களை, முடிவுகளை நீ எடுக்கலாம். கொள்கைகளை வகுக்கலாம். கண்ணால் கண்டதும் பொய் காதால் கேட்டதும் பொய் தீர விசாரித்து அறிவதே மெய் என்பர். இதுவும் பகுத்தறிவிற்கு வழி காட்டுவதே.

அறிவின் இரண்டாவது கட்டமாகிய பகுத்தறிவை இவ்வாறு பெற்றுக் கொள்ளலாம். இவ்வறிவு சில கொள்கைகளை வகுக்க உதவலாம். ஆயினும் புலனறிவும் பகுத்தறிவும் இயங்கியல் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தில் முழுமையான, சரியான அறிவல்ல என்பதை நன்கு அறிந்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



மார்க்சின் சித்தாந்தம் புற உலக விதிகளை அறிவது, அவற்றிற்கு மற்றச் சித்தாந்திகள் போல விளக்கம் கூறுவ தல்ல; உலகை மாற்றி அமைப்பதற்கு அறிவின் விதிகளை எவ்வாறு செயற்படுத்துவது என்பதே ஆகும்.

ஆகவே நடைமுறையில் பரீட்சிக்கப் பட்டதே சரியான அறிவாகும். அதுவே கோட்பாட்டுக்கு இட்டுச் செல்லும். கோட்பாட்டு அறிவு நடைமுறையிலேயே பெற்று மீண்டும் நடைமுறைக்கே திரும்பும். அறிவும் செயலும் ஐக்கியப் படுவதே கோட்பாடு.

உலகை மாற்றி அமைக்க புரட்சிகர நடைமுறை வேண்டும். 'புரட்சிகர கோட்பாடின்றி புரட்சிகர நடை முறை கிடையாது' என அறிவை நடைமுறையில் பரீட்சித்து வெற்றி கண்ட லெனின் கூறினார்.

வர்க்கப் போராட்டத்தின் மூலமே உலகை மாற்றி அமைக்க முடியும் எனக் கூறி அதற்குரிய கோட்பாடுகளை மார்க்ஸ், ஏங்கெல்ஸ் வகுத்தனர். லெனின், மாஓ நடை முறைப்படுத்தி புரட்சியில் வெற்றி கண்டு கோட்பாட்டை நிரூபித்தனர்.

விஞ்ஞானப் பாடத்தில் சில கோட்பாடுகளை முன் வைத்தே விடைகாணும் கணிப்புகளைச் செய்கிறோம். ஏனெனில் அக்கோட்பாடுகள் பரீட்சித்து உலகளாவியதாக ஏற்றுக்கொள்ளப்பட்டனதாகும்.

ஆப்பிள் பழம் நிலத்தில் விழும் அனுபவ உண்மையை நியூட்டன் கண்டார். ஏன் மேலே செல்லாது கீழே விழுகிறது என பகுத்தறிவு வினா எழுப்பியே பின்னர் உலகின் ஈர்ப்புத் தன்மை என்ற மிகப்பெரிய விஞ்ஞான உண்மையைக் கண்டு பிடித்தது மட்டுமல்ல, அளக்கும் கணிதத்தையும் கணித்துத் தந்தார்.

இன்று, புவியின் ஈர்ப்புத் தன்மையை 'g' எனவும், கீழே விழும் பொருளின் திணிவு 'm' எனவும் கொள்ளின்

www.padippakam.com



அப்பொருள் ஏற்படுத்தும் தாக்கத்தை mg எனக் கணக்கிடு வாய். (f=mg) இதன் வளர்ச்சிப் போக்கே ஐன்ஸ்டீன் கண்ட சார்பு வேகக்கொள்கையாகும். ($E=mc^2$) E-சக்தி; c-ஒளிவேகம். இக்கண்டுபிடிப்பு மூலமே உலகைச் சுற்றும் கோள்களை அனுப்புவது மட்டுமல்ல சந்திரனிலும் மனித னால் காலடி வைக்க முடிந்தது.

பரம்பரை அனுபவங்கள், பகுத்தறிவு மூலம் விஞ்ஞானத் தேடலுக்கும் மானிட நலனுக்கும் எவ்வாறு இட்டுச் செல் கிறது என்பதற்கு நல்லதோர் உதாரணத்தை நினைவு படுத்த விரும்புகிறேன்.

இரு நூற்றாண்டின் முன் எட்வேட் ஜென்னர் என்ற பிரிட்டிஷ் டாக்டர் வீட்டுக்கு ஒரு சிறுமி பால் எடுத்துச் செல்வாளாம். அக்காலத்தில் பெரியம்மை பயங்கர நோயாகக் கருதபபட்டிருந்தது. கிராமத்தில் பெரியம்மை பரவுவதைச் சொல்லி டாக்டர் அச்சிறுமியை எச்சரித் தாராம்.

'எனக்குப் பெரியம்மை வரமாட்டாது'—சிறுமி சொன் னாளாம்.

''ஏன்?' டாக்டர் வியப்போடு கேட்டார்.

'எங்க பசுவுக்கு முன்னர் அம்மை வந்தது. ஆனபடியால் எனக்கு வராது' சிறுமி நம்பிக்கையோடு கூறினாளாம். டாக்டர் சிந்திக்கத் தொடங்கினார்.

அதன் பின்னரே டாக்டர் பசுவுக்கு வரும் அம்மைக் கிருமி மூலம் நோய் எதிர்ப்புச் சக்தியை சிறுமி பெற்றிருக்க லாம் என எண்ணினார். பசுவின் அம்மையிலிருந்து பெற்ற வைரஸ் துளிகளை பிறருக்கு அம்மைப் பால் கட்டுவது போல உடலில் செலுத்திப் பரிட்சித்து வெற்றி பெற்றார். அதன் தொடர்ச்சியாகவே உலகின் பயங்கரநோயாகக் கருதப்பட்ட பெரியம்மை இன்று உலகெங்கும் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டது. அம்மனின் கிருபையாலல்ல. சிறுமியின் அனுபவக்

படிப்பகம்

www.padippakam.com



கூற்றும் டாக்டரின் பகுத்தறிவுமே துணை செய்து விஞ்ஞானத் தடுப்பு முறைக்கு இட்டுச் சென்றது.

நடைமுறையின் மூலமே அனைத்து விஞ்ஞான உண்மைகளும் பரீட்சிக்கப்பட்டு கோட்பாடுகளாகின்றன. இரண்டு பங்கு ஹைதரசனும் ஒரு பங்கு ஒட்சிசனும் சேர்ந்து $H^{2}0$ என நீராகிறது என ஏற்றுக் கொள்வாய். உலகளாவிய உண்மை. பரீட்சிக்கப் படவேண்டியதில்லை என்பாய். அது போலவே சமுதாய மாற்றங்கள் பற்றிய கோட்பாடுகளும் உள. அவையே மார்க்சிய லெனினிசக் கோட்பாடுகள்.

சமுதாய நிலைமைகள் உலகெங்கும் வேறுபடுவதால் இக்கோட்பாடுகளும் புரட்சி நடைமுறையில் பரீட்சிக்கப் பட்டே சமுதாயம் முன்னேறுகிறது. ஐன்ஸ்டீன், நியூட்டனைத் திருத்தியதுபோல கோட்பாடும் திருத்தப்படலாம்,

அறிய முடியாத அனைத்தையும் கடவுள் என ஒருவரைப் படைத்து அவர் தலையில் கட்டினோம். அவை இன்று பகுத்தறிவு, விஞ்ஞான அறிவு மூலம் தெளிவு படுத்தப்பட்டு வருகின்றன. விஷ்ணுவாலும் பிரம்மாவாலும் அளந்தறிய முடியாத பூமியையும் வானத்தையும் இன்று நாம் அளந்தறியக் கற்றுக் கொண்டோம்.

படி முறை வளர்ச்சியடைந்த மிருகத்தின் உணர்வு; பரபரப்பு, குறியீடு மட்டுமே. நீ பிறந்தபோதும் இதே நிலையிலேயே இருந்தாய். பின்னர் வளர்ச்சியடைந்து புலனுணர்வு மட்டுமன்றி மொழியையும் சிறிது சிறிதாகக் கற்றுக் கொண்டாய். இவ்வாறு வளர்ச்சியடைந்து பகுத்தறிவு பெற்ற பின்னரே புளியமரத்தின் முனியைக் கேட்டுச் சிரிக்கத் தொடங்கினாய்.

மனிதரின் சமூக நடைமுறையிலும் இருந்தே அறிவு கட்டி எழுப்பப்படுகிறது. மொழி சமூக உற்பத்தி உறவின் வெளிப்பாடாகிறது. சமூகத்தின் பொதுவுடைமையாகிறது.

அன்பான,

அப்பா

www.padippakam.com

# 22. நடைமுறையும் அறிவின் உற்பத்தியும்

அன்பு மகனே,

'எல்லாம் எழுதினீர்கள் அப்பா சரி. இத்தனை அறிவை யெல்லாம் எங்கு பெற்றீர்கள்?' என்று கேட்டு எழுதியிருந் தாய். நல்ல வினாவே.

திருவள்ளுவர் அத்தனை அறிவையும் எங்கு பெற்றார் என்றும் கேட்கலாம் தானே. அனைவரும் அறிவு பற்றி எடுத்துக்காட்டாகக் கூறும் குறளை தற்போது முதலாக நினைவூட்ட உள்ளேன்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு. (423)

பொருட்பால் அரசியலின் கீழ் வரும் அறிவுடைமை அதிகாரத்தின் மூன்றாம் குறள் இது. எப்பொருளை யார், யாரிடமிருந்து கேட்டாலும் அது சரியானது என உடனே ஏற்றுக் கொள்ளாது அப்பொருளின் மெய்யான, உண்மை யான பொருளைக் காண்பதே அறிவாகும் என்பதே இக் குறளின் கருத்தாகும்.

தமிழில் பொருள் என்பது கருத்து, அர்த்தம் எனவும் பொருள்படும். பொருள் முதல் வாதத்தில் நாம் கற்றது போல அனைத்தும் பொருள் மயம் என வள்ளுவர் எண்ணி யிருந்தாரோ தெரியவில்லை. பொருளாகிய முன்னேறிய மூளையிலேயே கருத்தும் தோன்றுகிறது.

மெய்ப்பொருள் காண்பதென்பது அனுபவ அறிவை மட்டும் அப்படியே நம்பாது வினா எழுப்பி பகுத்தறிவைக் காணவேண்டும் என அவர் கருதியிருக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



'கண்டதும் பொய் கேட்டதும் பொய் தீரவிசாரித் தறிவதே மெய்' என பகுத்தறிவு வேண்டும் பழமொழியும் நம்மிடமுண்டு.

அறிவு, தானே சிந்தனைக்கு வானத்திலிருந்துவருவ தில்லை. தானே மூளையில் தோன்றிவிடுவதில்லை. நடை முறையிலிருந்தே அறிவு தோன்றுகிறது. ஆகவே 'மெய்ப் பொருள்' என்பது நடைமுறையில் பரீட்சித்துப் பார்க்கப்படு வதாகும்.

அறிவு நடைமுறை... மேலதிக அறிவு... மேலும் நடை முறை...இவ்வாறான தொடர்ந்த பயணத்தின் மூலமே நாம் அறிவைப் படிப்படியாக, உயர்த்தி வளர்த்து வரு கிறோம். முடிவற்ற சுற்று, உயர்மட்ட அறிவுக்கு வழி வகுக்கும். ஒவ்வொரு சுற்றுவட்டமும் மேலும் ஒரு படி உயர்த்தி மேன்மேலும் திடமாக்குகிறது. சுருள் விசைபோல, ஸ்பீரிங் போலப் பலமாக்குகிறது.

'சமூக நடைமுறை பண்ட உற்பத்திக்குள் மட்டும் அடங்கிவிடுவதில்லை. வர்க்கப் போராட்டம், பொருளியல் வாழ்வு, விஞ்ஞானம், முயற்சி, கலை உணர்வு ஈடுபாடு என சமூகத்தின் அனைத்து நடைமுறை வாழ்க்கையிலும் ஈடுபடுத்துகிறது' என மாஓ கூறியுள்ளார்.

பூமி தட்டையானது; வான மண்டலத்தில் பூமியே பெரிய கோளம். சூரியனும் பூமியையே சுற்றி வருகிறது. இவ்வாறான கருத்து சில நூற்றாண்டுகள் வரை நிலவி வந்தது. சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைகிறான், எனவே இன்றும் கூறிவரப்படுகிறது. சந்திரனைப் பற்றிய காதல் கதைகள், கவிதைகள் இன்றும் கவிதையாகப் பாடப்படுகின்றன. சந்திரனில் காலடி வைத்து பற்பல விஞ்ஞான உண்மைகளை அறிந்தோம். இன்னும் இரகசியங் கள் கற்றறிய இயற்கையில் ஏராளமாக உள்ளன. கற்றது கைமண்ணளவே.

www.padippakam.com



சமூக நடைமுறைகள், செயற்பாடுகளே அறிவின் வேர்கள். அனுபவங்களும் பகுத்தறிவுக் கருத்துகளும் சமூகத்தில் பரீட்சிக்கப்படுகின்றன. அதனால் தனிமனிதரின் அறிவிலும் பார்க்க, சமூகத்தின் அறிவு பெரியது.

சமூகம் அறிவைப் பெற்றுப் பேணுகிறது; சேமிக்கிறது. சேமிக்கும் அறிவைக் கருவிகள் மூலமும் எழுத்து மூலமும் இன்று எலெக்ரோனிக் மூலமும் சேகரிக்கிறது. தொலைபேசித் தொகுப்பு நூலைப் பார்த்திருப்பாய். அனைத்துப் பெயர், முகவரி, எண்களையும் நாம் நினைவில் வைத்திருக்க முடியாதல்லவா. ஆகவே சமூகத்திற்குப் பயன்பட, தொகுப்பாக வெளியிடப்படுகிறது.

உணவும் பொருள் உற்பத்தியும் மனித வாழ்விற்கு தவிர்க்க முடியாத புறநிலைச் செயல்கள். இந்நடைமுறைச் செயற்பாடே அறிவு உற்பத்திக்கும் மூலகாரணமாகிறது, விழிப்பு நிலையில் நடைமுறை மூலமே அறிவு கிரகிக்கப்படுகிறது. தூக்கத்தில் கனவு மூலம் காண்பவை அறிவல்ல. மந்திரத்தால் மாங்காய் விழும் என்பது ஏமாற்று. விதிவிலக்கான சில நிகழ்வுகளை எதிர்க்க முடியாது. விதிவிலக்குகள் விதி ஆகா. 'பகுதி முழுமைக்கு பூரணானால் பகுதியைத் துற' என லெனின் கூறினார்.

'மனிதனின் சமூக நடைமுறையிலிருந்தே புற உலகு பற்றிய அறிவின் உண்மைநிலை அறியப்படுகிறது. சமூக உற்பத்தி என்பது பொருள் உற்பத்தி, வர்க்கப் போராட்டம், விஞ்ஞான பரிசோதனை ஆகும். இயங்கியல் பொருள் முதல்வாத அறிவுக் கோட்பாட்டின் முதலாவது அம்சம்; மனித அறிவை நடைமுறையிலிருந்து பிரிக்க முடியாது' என மாஓ அறிவு பற்றிக் கூறியுள்ளார்.

கூர்நோக்கு, கவனிப்பு மூலம் சமூக நிகழ்வுகளைக் கண்காணித்தும் அறிவை வளர்க்கிறோம். பொருட்களின் குணங்கள், அசைவுகள், உறவுகள், அசைவுவிதிகள்,

www.padippakam.com



சேர்வைகள், காரண காரியங்களைக் கொண்டும் அறிவை மேம்படுத்துகிறோம்.

'நீரில் இறங்காது நீந்தக் கற்றுக் கொள்ள முடியுமா?' என்பர். நீந்தும் அறிவை நடைமுறை மூலமே கற்க முடியும். நீந்துவது பற்றிய விதிகளைப் பிறர் மூலம் கற்றுக்கொள்ளப் லாம். அதேபோல யுத்தம் பற்றிய விதிகளை அறியாது யுத்தத்தில் ஈடுபடின் ஆரம்பத்தில் தோல்வியையே தழுவ நேரும். பின்னர் யுத்த இழப்புகளின் அனுபவ மூலமே விதிகளை, கோட்பாடுகளை வகுக்க முடியும்' எனவும் மாஓ நடைமுறை பற்றி விளக்கியுள்ளார்.

அறிவுக்கு முற்றுமுடிவான கட்டுப்பாடுகளோ எல்லைகளோ கிடையா. அறிய முடியாதது என்று எதுவும் கிடையாது. உலகைப் பற்றிய மயக்கமோ, இரகசியமோ எதுவுமே கிடையாது.

முரண்பாடுகளைக் கையாள்வதன் மூலமே அறிவு வளர்ச்சியடைகிறது. உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும், பொருளாதாரத்திற்கும் மேல்மட்ட அமைப்புகளுக்கும் (அரசியல், சட்டம், கருத்தியல்), நடைமுறைக்கும் கோட்பாடுகளுக்குமிடையில் முரண்பாடுகள் எழுந்து கொண்டேயிருக்கும்.

இவற்றில் உற்பத்தி உறவுகளில் மாற்றமின்றி உற்பத்தி சக்திகள் வளர்ச்சியடையா; அரசியல், கருத்தியல் மாற்றமின்றி பொருளாதாரம் வளர்ச்சியடையாது.

புரட்சிகர சித்தாந்தமுமின்றி புரட்சிகர இயக்கம், நடைமுறை இருக்க முடியாது. புரட்சி பற்றிய கோட்பாடு, நடைமுறைகளை அறிய வேண்டுமாயின் புரட்சியில் பங்கு பற்ற வேண்டும். மாம்பழத்தின் ருசியை அறிய வேண்டுமாயின் உண்பதன் மூலம் அதன் உருவத்தை மாற்ற வேண்டும்.

இயக்கவியலின் விதிகள் இவையே. மானிட அறிவை எவ்வாறு அளவிடுவது என்று கேட்டு எழுதினாய். மனித

www.padippakam.com



அறிவைச் சமூக உற்பத்தி முறையில் அடைந்த வெற்றி மூலமே அளவிடமுடியும்.

சமூக முரண்பாடுகள் எவ்வாறு கையாளப்படுகின்றன, தீர்க்கப்படுகின்றன என்பதைக் கூர்ந்து நோக்குவது சமூக வளர்ச்சி பற்றிய அறிவை வளர்க்கப் பயன்படும். 'கோட்பாட்டு அறிவிலும் நடைமுறையே உயர்ந்தது' என லெனின் கூறினார்.

முரண்பாடுகளைக் கையாள்வது, சமூக வளர்ச்சிப் போக்கில் தீர்ப்பது ஆகியவற்றின் மூலம் நீயும் உன் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என எதிர் பார்க்கிறேன்.

அதற்குப் பயன்படக்கூடிய, ஒருங்கிணைந்தும் அதே வேளை தனித்துவ ஒழுங்குமுறைகளைக் கொண்டதுமான இரு மார்க்சிச சாரங்களையும் தொடர்ந்து கற்பதை விட்டுவிடாதே. ஒன்று, மனித வரலாற்றை விஞ்ஞான மயப்படுத்திய வரலாற்றுப் பொருள் முதல்வாதம். மற்றது, உலகை மாற்றி அமைக்கும் நடைமுறை கொண்ட சித்தாந்த மாகிய இயங்கியல் பொருள் முதல் வாதம்.

இக்கடிதங்கள் மூலம் இயங்கியல் பொருள் முதல் வாதத்தைப் பற்றி ஓரளவு கற்றறிந்திருக்கலாம். மேலும் தொடர்ந்து கற்க வேண்டும். அது மட்டுமல்ல. நடை முறையிலும் ஈடுபட வேண்டும். அப்பொழுதே முழுமையாகக் கற்றுக் கொள்ள முடியும்.

அன்பான,

அப்பா.

★

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

அன்பு மகனுக்கு

# அறிவுக் கடிதங்கள்

செ.கணேசலிங்கன்

படிப்பகம்